winmeen.com

# NOTES

# QUESTIONS

## 10ஆம் வகுப்பு தமிழ்
## பாடக்குறிப்புகள்
## (வினாக்கள் வடிவில்)



திருவாசகம்
- மாணிக்கவாசகர்

## பத்தாம் வகுப்பு - பொதுத்தமிழ் பாடக்குறிப்புகள் பகுதி - 1

**1] மெய்தான் அரும்பி விதிர்விதிர்த் துன்விரை யார்கழற்கென் கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பி உள்ளம் - என்ற பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

1] ஏலாதி, கணிமேதாவியார்

2] நான்மணிக்கடிகை, விளம்பி நாகனார்

3] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

**4] திருவாசகம், மாணிக்கவாசகர்**

**2] பொய்தான் தவிர்ந் துன்னைப் போற்றி சயசய போற்றி என்னும் கைதான் நெகிழ விடேன்உடை யாய்என்னைக் கண்டுகொள்ளே. - என்ற பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

1] ஏலாதி, கணிமேதாவியார்

2] நான்மணிக்கடிகை, விளம்பி நாகனார்

3] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

**4] திருவாசகம், மாணிக்கவாசகர்**

**3] பொருந்தாதது எது? சொற்பொருள் :**

1] மெய் - உடல்

2] விதிர்விதிர்த்து - உடல் சிலிர்த்து

**3] விரை - குணம்**

4] நெகிழ - தளர

**குறிப்பு** :- விரை என்பதன் சரியான சொற்பொருள் மணம்.

**4] பொருந்தாதது எது? சொற்பொருள் :**

**1] ததும்பி - குறைந்து**

2] கழல் - ஆண்கள் காலில் அணியும் அணிகலன் (இங்கு ஆகுபெயராய் இறைவனின் திருவடியைக் குறித்தது)

3] சயசய - வெல்க வெல்க

4] குருதி - இரத்தம்

**குறிப்பு** :- ததும்பி என்பதன் சரியான சொற்பொருள் பெருகி.

**5] விடுபட்டதை நிரப்புக. பகுபத உறுப்பிலக்கணம்.**

போற்றி - போற்று + இ. போற்று - பகுதி, இ - என்பது என்ன?

1] ஆண்பால் வினைமுற்று விகுதி

2] பெயரெச்ச விகுதி

**3] வினையெச்ச விகுதி**

4] இவற்றில் ஏதுமில்லை

**6] பொருந்தாதது எது? இலக்கணக்குறிப்பு :-**

1] விடேன் - தன்மை ஒருமை வினைமுற்று

**2] ஒழுக்கம் - பண்புப்பெயர்**

3] படும் - செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று

4] காக்க - வியங்கோள் வினைமுற்று

**குறிப்பு** :- ஒழுக்கம் என்பதன் சரியான இலக்கணக்குறிப்பு தொழிற்பெயர்.

**7] கீழ்க்கண்டவர்களுள், சைவ சமயக்குரவர் நால்வருள் ஒருவர் உள்ளார். அவர் யார்?**

1] இராமானுஜர்

2] பிள்ளை லோகாச்சாரியர்

3] வேதாந்த தேசிகர்

**4] மாணிக்கவாசகர்**

**8] மாணிக்கவாசகர் ------------ இல் பிறந்தவர். இவ்வூர், மதுரைக்கு அருகில் உள்ளது.**

1] தேரழுந்தூர்

**2] திருவாதவூர்**

3] சாத்தூர்

4] வடுவூர்

**9] --------------- என்பவர் அரிமர்த்தன பாண்டியனிடம் தலைமையமைச்சராகப் பணியாற்றினார்.**

1] இராமானுஜர்

2] பிள்ளை லோகாச்சாரியர்

3] வேதாந்த தேசிகர்

**4] மாணிக்கவாசகர்**

**10] பாண்டியனுக்காகக் குதிரை வாங்கச் சென்றபோது, திருபெருந்துறை இறைவன் திருவருளால் ஆட்கொள்ளப் பெற்றவர், யார்?**

1] இராமானுஜர்

2] பிள்ளை லோகாச்சாரியர்

3] வேதாந்த தேசிகர்

**4] மாணிக்கவாசகர்**

**11] திருபெருந்துறை இறைவனை, மெய்யுருகப் பாடிக் கசிந்து கண்ணீர் மல்க அழுது தொழுதவர். இதனால் ------------ என்பவரை, "அழுது அடியடைந்த அன்பர்" என்பர்.**

1] இராமானுஜர்

**2] மாணிக்கவாசகர்**

3] திருநாவுக்கரசர்

4] சுந்தரர்

**12] திருவாசகமும் திருக்கோவையாரும் -------------- என்பவர் எழுதிய நூல்.**

1] இராமானுஜர்

**2] மாணிக்கவாசகர்**

3] திருநாவுக்கரசர்

4] சுந்தரர்

**13] இவர் எழுப்பிய கோவில், தற்பொழுது ஆவுடையார்கோவில் என வழங்கப்படும், திருப்பெருந்துறையில் (புதுக்கோட்டை மாவட்டம்) உள்ளது.**

1] இராமானுஜர்

**2] மாணிக்கவாசகர்**

3] திருநாவுக்கரசர்

4] சுந்தரர்

**14] மாணிக்கவாசகர் - அவர்களின் காலம்?**

1] கி.பி. பத்தாம் நூற்றாண்டு

2] கி.பி. இரண்டாம் நூற்றாண்டு

3] கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு

**4] கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு**

**15] சைவத்திருமுறைகள் பன்னிரண்டனுள் --------------- திருமுறையில் திருவாசகமும் திருக்கோவையாரும் உள்ளன.**

1] ஏழாம்

**2] எட்டாம்**

3] ஒன்பதாம்

4] பத்தாம்

**16] திருவாசகத்தில் ----------- பாடல்கள் இடம் பெற்றுள்ளன.**

1] 1330

2] 431

3] 501

**4] 658**

**17] ---------- கல்நெஞ்சையும் கசிந்துருகச் செய்யுமாதலால், "---------- உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்" என்னும் தொடர் வழங்கலாயிற்று.**

1] மணிமேகலை

2] திருக்குறள்

**3] திருவாசகம்**

4] கம்பராமாயணம்

**18] திருவாசகத்தின் சிறப்பை உணர்ந்த ------------- என்பவர் இதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.**

1] கால்டுவெல்

2] கெப்ளிங்

**3] ஜி.யு. போப்**

4] வீரமாமுனிவர்

**19] திரு என்பது, நூலின் சிறப்பை உணர்த்த வந்த அடைமொழி; சதகம் என்பது, --------- பாடல்களைக் கொண்ட நூலைக் குறிக்கும்.**

1] பத்து **2] நூறு** 3] ஆயிரம் 4] பத்தாயிரம்

**20] மாணிக்கவாசகர் பாடல்கள் --------- திருமுறையில் இடம்பெற்றுள்ளன.**

1] ஏழாம்

**2] எட்டாம்**

3] ஒன்பதாம்

4] பத்தாம்

**21] உலக வரலாற்றிலேயே மேதையான மாணிக்கவாசகரைவிடப் புலமை, உழைப்பு, துன்பத்தைப்பொறுத்தல், இடையறா நிலையான பக்தி ஆகியவற்றுடன் நம் மனத்தைக் கவர்கின்றவர் யாரும் இல்லை - என்று கூறியவர் யார்?**

1] கால்டுவெல்

2] கெப்ளிங்

**3] ஜி.யு. போப்**

4] வீரமாமுனிவர்

**22] விடுபட்டதை நிரப்புக.**

**ஒழுக்கம் விழுப்பம் தரலான், ஒழுக்கம்**

------- --------- ---------

1] பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்

2] இழிந்த பிறப்பாய் விடும்

3] தேரினும் அஃதே துணை

**4] உயிரினும் ஓம்பப் படும்**

**23] விடுபட்டதை நிரப்புக.**

**மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்**

--------- ----------- -----------

**1] பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்**

2] இழிந்த பிறப்பாய் விடும்

3] தேரினும் அஃதே துணை

4] உயிரினும் ஓம்பப் படும்

**24] விடுபட்டதை நிரப்புக.**

**ஒழுக்க முடைமை குடிமை இழுக்கம்**

------------ ------------- ----------

1] பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்

**2] இழிந்த பிறப்பாய் விடும்**

3] தேரினும் அஃதே துணை

4] உயிரினும் ஓம்பப் படும்

**25] விடுபட்டதை நிரப்புக.**

**பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்**

------------ ------------- ----------

1] பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்

2] இழிந்த பிறப்பாய் விடும்

**3] தேரினும் அஃதே துணை**

4] உயிரினும் ஓம்பப் படும்

**26] விடுபட்டதை நிரப்புக.**

**அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன் றில்லை**

---------- ------------- -----------

**1] ஒழுக்கம் இலான்கண் உயர்வு**

2] ஏதம் படுபாக் கறிந்து

3] எய்துவர் எய்தாப் பழி

4] என்றும் இடும்பை தரும்

**27] விடுபட்டதை நிரப்புக.**

**ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்**

---------- ------------ ----------

1] ஒழுக்கம் இலான்கண் உயர்வு

**2] ஏதம் படுபாக் கறிந்து**

3] எய்துவர் எய்தாப் பழி

4] என்றும் இடும்பை தரும்

**28] விடுபட்டதை நிரப்புக.**

**ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்**

---------- ------------ ----------

1] ஒழுக்கம் இலான்கண் உயர்வு

2] ஏதம் படுபாக் கறிந்து

**3] எய்துவர் எய்தாப் பழி**

4] என்றும் இடும்பை தரும்

**29] விடுபட்டதை நிரப்புக.**

**நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்**

---------- ------------ ----------

1] ஒழுக்கம் இலான்கண் உயர்வு

2] ஏதம் படுபாக் கறிந்து

3] எய்துவர் எய்தாப் பழி

**4] என்றும் இடும்பை தரும்**

**30] விடுபட்டதை நிரப்புக.**

**ஒழுக்கம் உடையவர்க் கொல்லாவே தீய**

--------- ------------ ----------

1] ஒழுக்கம் இலான்கண் உயர்வு

2] ஏதம் படுபாக் கறிந்து

**3] வழுக்கியும் வாயாற் சொலல்**

4] என்றும் இடும்பை தரும்

**31] விடுபட்டதை நிரப்புக.**

**உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றும்**

--------- ------------ ----------

1] ஒழுக்கம் இலான்கண் உயர்வு

2] ஏதம் படுபாக் கறிந்து

**3] கல்லார் அறிவிலா தார்**

4] என்றும் இடும்பை தரும்

**32] பொருந்தாதது எது? சொற்பொருள் :-**

1] விழுப்பம் - சிறப்பு

2] ஓம்பப்படும் - காத்தல்வேண்டும்

**3] பரிந்து - வெறுத்தல்**

4] தேரினும் - ஆராய்ந்து பார்த்தாலும்

**குறிப்பு** :- பரிந்து என்பதன் சரியான சொற்பொருள் விரும்பி.

**33] பொருந்தாதது எது? சொற்பொருள் :-**

1] குடிமை - உயர்குடி

2] இழுக்கம் - ஒழுக்கம் இல்லாதவர்

3] அழுக்காறு - பொறாமை

**4] ஆக்கம் - கோபம்**

**குறிப்பு** :- ஆக்கம் என்பதன் சரியான சொற்பொருள் செல்வம்.

**34] பொருந்தாதது எது? சொற்பொருள் :-**

1] ஒல்கார் - விலகமாட்டார்

2] உரவோர் - மனவலிமையுடையோர்

**3] ஏதம் - உதவுதல்**

4] எய்துவர் - அடைவர்

**குறிப்பு** :- ஏதம் என்பதன் சரியான சொற்பொருள் குற்றம்.

**35] பொருந்தாதது எது? சொற்பொருள் :-**

**1] இடும்பை - இன்பம்**

2] வித்து - விதை

3] ஒல்லாவே - இயலாவே

4] கேழல் - பன்றி

**குறிப்பு** :- இடும்பை என்பதன் சரியான சொற்பொருள் துன்பம்.

**36] பொருந்தாதது எது? சொற்பொருள் :-**

1] உலகம் - உயர்ந்தோர்

2] ஒட்ட - பொருந்த

3] ஒழுகல் - நடத்தல், வாழ்தல்

**4] வணங்கி - வாழ்த்துதல்**

**குறிப்பு** :- வணங்கி என்பதன் சரியான சொற்பொருள் பணிந்து.

**37] பொருந்தாதது எது? இலக்கணக்குறிப்பு :**

1] ஒழுக்கம் - தொழிற்பெயர்

2] படும் - செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று

3] காக்க - வியங்கோள் வினைமுற்று

**4] பரிந்து, தெரிந்து - பெயரெச்சங்கள்**

**குறிப்பு** :- பரிந்து, தெரிந்து என்பதன் சரியான இலக்கணக்குறிப்பு வினையெச்சம்.

**38] பொருந்தாதது எது? இலக்கணக்குறிப்பு :**

**1] இழிந்த பிறப்பு - வினையெச்சம்**

2] கெடும் - செய்யும் என்னும் வாய்ப்பாட்டு வினைமுற்று

3] கொளல் - அல் ஈற்றுத் தொழிற்பெயர்

4] உடையான் - வினையாலணையும் பெயர்

**குறிப்பு** :- இழிந்த பிறப்பு என்பதன் சரியான இலக்கணக்குறிப்பு பெயரெச்சம்.

**39] பொருந்தாதது எது? இலக்கணக்குறிப்பு :**

**1] உரவோர் - வினைமுற்று**

2] எய்தாப் பழி - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

3] எய்துவர் - பலர்பால் வினைமுற்று

4] நல்லொழுக்கம், தீயொழுக்கம் - பண்புத்தொகைகள்

**குறிப்பு** :- உரவோர் என்பதன் சரியான இலக்கணக்குறிப்பு வினையாலணையும் பெயர்.

**40] பொருந்தாதது எது? இலக்கணக்குறிப்பு :**

**1] சொலல் - சொல்லல் என்பதன் இடைக்குறை**

2] அருவினை - பண்புத்தொகை

3] அறிந்து - வினையெச்சம்

4] கலங்காது - எதிர்மறை வினையெச்சம்

**குறிப்பு** :- சொலல் என்பதன் சரியான இலக்கணக்குறிப்பு தொழிற்பெயர்.

**41] பொருந்தாதது எது? சொற்பொருள்:-**

**1] கூம்பும் - வாய்ப்புள்ள**

2] சீர்த்த இடம் - உரிய காலம்

3] எய்தற்கு - கிடைத்தற்கு

4] இயைந்தக்கால் - கிடைத்தபொழுது

**குறிப்பு** :- கூம்பும் என்பதன் சரியான சொற்பொருள் வாய்ப்பற்ற.

**42] பொருந்தாதது எது? சொற்பொருள்:-**

**1] செறுநர் - நண்பர்**

2] சுமக்க - பணிக

3] இறுவரை - முடிவுக்காலம்

4] கிழக்காந்தலை - தலைகீழ் (மாற்றம்)

**குறிப்பு** :- செறுநர் என்பதன் சரியான சொற்பொருள் பகைவர்.

**43] பொருந்தாதது எது? சொற்பொருள்:-**

**1] பொள்ளென - மெதுவாக**

2] புறம்வேரார் - வெளிப்படுத்தமாட்டார்

3] உள்வேர்ப்பர் - மனத்தினுள் மறைத்து வைத்திருப்பர்

4] ஒள்ளியவர் - அறிவுடையார்

**குறிப்பு** :- பொள்ளென என்பதன் சரியான சொற்பொருள் உடனே.

**44] பொருந்தாதது எது? சொற்பொருள்:-**

1] ஒடுக்கம் - அடங்கியிருப்பது

2] பொருதகர் - ஆட்டுக்கடா

3] பேருந்தகைத்து - பின் வாங்கும் தன்மையது

**4] ஞாலம் - அறிவு**

**குறிப்பு** :- ஞாலம் என்பதன் சரியான சொற்பொருள் உலகம்.

**45] பொருந்தாதது எது? சொற்பொருள்:-**

1] அருவினை - செய்தற்கரிய செயல்

2] திரு - செல்வம்

**3] தீராமை - நீங்குதல்**

4] கூகை - கோட்டான்

**குறிப்பு** :- தீராமை என்பதன் சரியான சொற்பொருள் நீங்காமை

**46] இகல் என்பதன் சொற்பொருள் என்ன?**

1] நட்பு **2] பகை** 3] உணவு 4] அறிவு

**47] அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன் றில்லை**

**ஒழுக்கம் இலான்கண் உயர்வு - இந்த குறளில் பயின்று வந்துள்ள அணி?**

1] பிறிது மொழிதல் அணி

2] உருவக அணி

**3] உவமையணி**

4] வேற்றுமை அணி

**48] ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருதகர்**

**தாக்கற்குப் பேருந் தகைத்து - இந்த குறளில் பயின்று வந்துள்ள அணி?**

1] பிறிது மொழிதல் அணி

2] உருவக அணி

**3] உவமையணி**

4] வேற்றுமை அணி

**49] கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்**

**குத்தொக்க சீர்த்த இடத்து - இந்த குறளில் பயின்று வந்துள்ள அணி?**

1] பிறிது மொழிதல் அணி

2] உருவக அணி

**3] உவமையணி**

4] வேற்றுமை அணி

**50] விடுபட்டதை நிரப்புக.**

**பகல்வெல்லும் கூகையைக் காக்கை, இகல்வெல்லும்**

--------- ------------- ------------

1] கருதி இடத்தாற் செயின்

2] காலம் அறிந்து செயின்

3] தீராமை யார்க்குங் கயிறு

**4] வேந்தர்க்கு வேண்டும் பொழுது**

**51] விடுபட்டதை நிரப்புக.**

**ஞாலம் கருதினுங் கைகூடும் காலம்**

--------- ------------- ------------

**1] கருதி இடத்தாற் செயின்**

2] காலம் அறிந்து செயின்

3] தீராமை யார்க்குங் கயிறு

4] வேந்தர்க்கு வேண்டும் பொழுது

**52] விடுபட்டதை நிரப்புக.**

**அருவினை என்ப உளவோ, கருவியாற்**

--------- ------------- ------------

1] கருதி இடத்தாற் செயின்

**2] காலம் அறிந்து செயின்**

3] தீராமை யார்க்குங் கயிறு

4] வேந்தர்க்கு வேண்டும் பொழுது

**53] விடுபட்டதை நிரப்புக.**

**பருவத்தோ டொட்ட ஒழுகல் திருவினைத்**

--------- ------------- ------------

1] கருதி இடத்தாற் செயின்

2] காலம் அறிந்து செயின்

**3] தீராமை யார்க்குங் கயிறு**

4] வேந்தர்க்கு வேண்டும் பொழுது

**54] விடுபட்டதை நிரப்புக.**

**காலம் கருதி இருப்பர் கலங்காது**

---------- -------------- -------------

1] கருதி இடத்தாற் செயின்

2] காலம் அறிந்து செயின்

**3] ஞாலம் கருது பவர்**

4] வேந்தர்க்கு வேண்டும் பொழுது

**55] விடுபட்டதை நிரப்புக.**

**ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருதகர்**

---------- -------------- -------------

1] கருதி இடத்தாற் செயின்

2] காலம் அறிந்து செயின்

3] தீராமை யார்க்குங் கயிறு

**4] தாக்கற்குப் பேருந் தகைத்து**

**56] விடுபட்டதை நிரப்புக.**

**பொள்ளென ஆங்கே புறம்வேரார் காலம்பார்த்**

---------- -------------- -------------

**1] துள்வேர்ப்பர் ஒள்ளி யவர்**

2] காலம் அறிந்து செயின்

3] தீராமை யார்க்குங் கயிறு

4] வேந்தர்க்கு வேண்டும் பொழுது

**57] விடுபட்டதை நிரப்புக.**

**செறுநரைக் காணின் சுமக்க இறுவரை**

**-------- ------------ -----------**

1] கருதி இடத்தாற் செயின்

**2] காணின் கிழக்காம் தலை**

3] தீராமை யார்க்குங் கயிறு

4] வேந்தர்க்கு வேண்டும் பொழுது

**58] விடுபட்டதை நிரப்புக.**

**எய்தற் கரிய தியைந்தக்கால் அந்நிலையே**

**-------- ------------ -----------**

1] கருதி இடத்தாற் செயின்

2] காலம் அறிந்து செயின்

**3] செய்தற் கரிய செயல்**

4] வேந்தர்க்கு வேண்டும் பொழுது

**59] விடுபட்டதை நிரப்புக.**

**கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்**

**-------- ------------ -----------**

1] கருதி இடத்தாற் செயின்

2] காலம் அறிந்து செயின்

**3] குத்தொக்க சீர்த்த இடத்து**

4] வேந்தர்க்கு வேண்டும் பொழுது

**60] ஊக்கம் உடையவன் காலத்தை எதிர்பார்த்து அடங்கியிருப்பதானது, -------- பகையைத் தாக்குவதற்குப் பின்வாங்கும் தன்மையைப் போன்றது.**

1] புலி

2] சிங்கம்

3] ஆந்தை

**4] ஆட்டுக்கடா**

**61] தமிழுலகம் இவரை முதற்பாவலர், தெய்வப்புலவர், செந்நாப்போதார், பொய்யில்புலவர், பெருநாவலர் முதலிய பெயர்களால் போற்றுகின்றது.**

1] பாரதியார்

2] தொல்காப்பியர்

3] கம்பர்

**4] திருவள்ளுவர்**

**62] பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்னும் பொதுநெறி காட்டியவர் --------.**

1] பாரதியார்

2] தொல்காப்பியர்

3] கம்பர்

**4] திருவள்ளுவர்**

**63] திருவள்ளுவர், ---------- இல் பிறந்தவர் என அறிஞரால் உறுதி செய்யப்பட்டுத் திருவள்ளுவர் ஆண்டு கணக்கிடப்படுகிறது.**

1] கி.மு 27

**2] கி.மு 31**

3] கி.பி 27

4] கி.பி. 31

**64] தமிழக அரசு, தைத் திங்கள் ---------------- நாளைத் திருவள்ளுவர் நாளாக அறிவித்துக் கொண்டாடி வருகின்றது.**

1] பதிமூன்றாம்

**2] இரண்டாம்**

3] நான்காம்

4] முப்பத்தி ஒன்றாம்

**65] -------- என்னும் இந்நூல் நாடு, மொழி, இனம், மதம், காலம் ஆகியவற்றைக் கடந்து நிற்கிறது.**

1] மணிமேகலை

2] கம்பராமாயணம்

3] சிலப்பதிகாரம்

**4] திருக்குறள்**

**66] உலகப் பொதுமறை எனப் போற்றப்படும் நூல் எது?**

1] மணிமேகலை

2] கம்பராமாயணம்

3] சிலப்பதிகாரம்

**4] திருக்குறள்**

**67] திருக்குறள் ---------- நூல்களுள் ஒன்று.**

1] ஐம்பெரும் காப்பியம்

2] ஐஞ்சிறும் காப்பியம்

3] பதினெண் மேற்கணக்கு

**4] பதினெண்கீழ்க்கணக்கு**

**68] இஃது அறம், பொருள், இன்பம் என முப்பாலாகப் பகுக்கப்பட்டுள்ளது. ஒன்பது இயல்களையும் நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்களையும், ஆயிரத்து முந்நூற்று முப்பது குறட்பாக்களையும் கொண்டு விளங்குகிறது.**

1] மணிமேகலை

2] கம்பராமாயணம்

3] சிலப்பதிகாரம்

**4] திருக்குறள்**

**69] ஆங்கிலம், கிரேக்கம், இலத்தீன் முதலிய உலகமொழிகள் பலவற்றிலும் இந்நூல் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.**

1] மணிமேகலை

2] கம்பராமாயணம்

3] சிலப்பதிகாரம்

**4] திருக்குறள்**

**70] திருக்குறளுக்குப் பலர் உரை எழுதியுள்ளனர். தமிழ்ச் சான்றோர் பலரால் இயற்றப்பட்ட ---------, திருக்குறளின் பெருமைகளைப் போற்றிப் புகழ்கிறது.**

**1] திருவள்ளுவமாலை**

2] ஆத்திச்சூடி

3] நாலடியார்

4] கம்பராமாயணம்

**71] "வள்ளுவனைப் பெற்றதால் பெற்றதே புகழ் வையகமே" என்றும், "இணையில்லை முப்பாலுக்கு இந்நிலத்தே" என்றும், -------------- என்பவர் திருக்குறளைப் போற்றி புகழ்ந்துள்ளார்.**

1] பாரதியார்

2] இளங்கோவடிகள்

**3] பாரதிதாசன்**

4] நாமக்கல் கவிஞர்

**72] வெல்லாத தில்லை திருவள்ளு வன்வாய் விளைத்த வற்றுள், பொல்லாத தில்லை புரைதீர்ந்த வாழ்வினிலே அழைத்துச் - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] பாரதியார்

2] இளங்கோவடிகள்

**3] பாரதிதாசன்**

4] நாமக்கல் கவிஞர்

**73] செல்லாத தில்லை பொதுமறை யான திருக்குறளில் இல்லாத தில்லை இணையில்லை முப்பாலுக்கிந் நிலத்தே - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] பாரதியார்

2] இளங்கோவடிகள்

**3] பாரதிதாசன்**

4] நாமக்கல் கவிஞர்

**74] மலையத்துவசன் மகன் ஞானப்பிரகாசம் --------- இல் திருக்குறளை முதன் முதலில் பதிப்பித்துத் தஞ்சையில் வெளியிட்டார்.**

1] 1912 **2] 1812** 3] 1857 4] 1957

**75] திருக்குறளைப் போற்றிப் பாடும் நூல்**

1] நால்வர் நான்மணிமாலை

**2] திருவள்ளுவமாலை**

3] இரட்டைமணிமாலை

4] இவற்றில் ஏதுமில்லை

**76] திருக்குறள் --------- வெண்பாக்களால் ஆன நூலாகும்.**

1] சிந்தியல்

**2] குறள்**

3] நேரிசை

4] இவற்றில் ஏதுமில்லை

**77] 'இணையில்லை முப்பாலுக்கு இந்நிலத்தே' எனப் பாடியவர்**

1] பாரதியார்

2] சுரதா

**3] பாரதிதாசன்**

4] வாணிதாசன்

**78] வணங்கி வழியொழுகி மாண்டார்சொல் கொண்டு; நுணங்கிநூல் நோக்கி நுழையா - இணங்கிய - இந்த பாடல் இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

1] கம்பராமாயணம், கம்பர்

**2] ஏலாதி, கணிமேதாவியார்**

3] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

4] சிறுபஞ்சமூலம், காரியாசான்

**79] பால்நோக்கி வாழ்வான் பழியில்லா மன்னனாய்; நூல்நோக்கி வாழ்வான் நுனித்து - இந்த பாடல் இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

1] கம்பராமாயணம், கம்பர்

**2] ஏலாதி, கணிமேதாவியார்**

3] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

4] சிறுபஞ்சமூலம், காரியாசான்

**80] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] வணங்கி - பணிந்து

**2] மாண்டார் - பகைவர்**

3] நுணங்கிய நூல் - நுண்ணறிவு நூல்கள்

4] நோக்கி - ஆராய்ந்து

**குறிப்பு** :- மாண்டார் என்பதன் சரியான சொற்பொருள் மாண்புடைய சான்றோர்.

**81] இலக்கணக்குறிப்பு தருக? நூல்நோக்கி.**

**1] இரண்டாம் வேற்றுமைத்தொகை**

2] மூன்றாம் வேற்றுமைத்தொகை

3] வியங்கோள் வினைமுற்று

4] வினைத்தொகை

**82] இலக்கணக்குறிப்பு தருக? பழியில்லா மன்னன்.**

**1] ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்**

2] மூன்றாம் வேற்றுமைத்தொகை

3] வியங்கோள் வினைமுற்று

4] வினைத்தொகை

**83] விடுபட்டதை நிரப்புக. பகுபத உறுப்பிலக்கணம் :- நோக்கி - நோக்கு + இ. ( நோக்கு - பகுதி, இ - ------------? ) இ - என்பது என்ன?**

1] ஆண்பால் வினைமுற்று விகுதி

2] பெயரெச்ச விகுதி

**3] வினையெச்ச விகுதி**

4] இவற்றில் ஏதுமில்லை

**84] விடுபட்டதை நிரப்புக. பகுபத உறுப்பிலக்கணம் :- வாழ்வான் - வாழ் + வ் + ஆன். வாழ் - பகுதி, வ் - --------?, ஆன் - ஆண்பால் வினைமுற்று விகுதி . இங்கு வ் - என்பது என்ன?**

1] இறந்தகால இடைநிலை

2] நிகழ்கால இடைநிலை

**3] எதிர்கால இடைநிலை**

4] இவற்றில் ஏதுமில்லை

**85] விடுபட்டதை நிரப்புக. பகுபத உறுப்பிலக்கணம் :- நுனித்து - நுனி + த் + த் + உ. நுனி - பகுதி, த் - சந்தி, த் - இறந்தகால இடைநிலை, உ - ------------?**

1] ஆண்பால் வினைமுற்று விகுதி

2] பெயரெச்ச விகுதி

**3] வினையெச்ச விகுதி**

4] இவற்றில் ஏதுமில்லை

**86] ஏலாதியை இயற்றியவர் -------------?**

1] காரியாசன்

**2] கணிமேதாவியார்**

3] விளம்பி நாகனார்

4] முன்றுறை அரையனார்

**87] கணிமேதாவியார் அவர்களுக்கு ---------- என்னும் மற்றொரு பெயருமுண்டு.**

1] கனி இன்சொல்லர்

2] கணிவாக்கியர்

**3] கணிமேதையர்**

4] இவற்றில் ஏதுமில்லை

**88] கணிமேதாவியார் ---------- சமயத்தவர் என்பர்.**

1] புத்த

**2] சமண**

3] இந்து

4] ஜொராஷ்ட்ரியம்

**89] -------- என்பவர், சமண சமயத்திற்கே உரிய கொல்லாமை முதலான உயரிய அறக்கருத்துகளை ஏலாதியில் வலியுறுத்திக் கூறுகிறார்.**

1] காரியாசன்

**2] கணிமேதாவியார்**

3] விளம்பி நாகனார்

4] முன்றுறை அரையனார்

**90] கணிமேதாவியார் அவர்களின் காலம் --------?**

**1] கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு**

2] கி.பி. ஆறாம் நூற்றாண்டு

3] கி.பி. ஏழாம் நூற்றாண்டு

4] கி.பி. எட்டாம் நூற்றாண்டு

**91] --------- என்னும் இவர், திணைமாலை நூற்றைம்பது என்னும் நூலையும் இயற்றியுள்ளார்.**

1] காரியாசன்

**2] கணிமேதாவியார்**

3] விளம்பி நாகனார்

4] முன்றுறை அரையனார்

**92] ஏலாதி ---------------- நூல்களுள் ஒன்று.**

1] பதினெண்மேற்கணக்கு

**2] பதினெண்கீழ்க்கணக்கு**

3] ஐஞ்சிறும் காப்பியங்கள்

4] ஐம்பெருங் காப்பியங்கள்

**93] --------- என்னும், இந்நூல் சிறப்புப் பாயிரம், தற்சிறப்புப் பாயிரம் உட்பட எண்பத்தொரு வெண்பாக்களைக் கொண்டுள்ளது.**

1] முதுமொழிக்காஞ்சி

2] இனியவை நாற்பது

3] நாலடியார்

**4] ஏலாதி**

**94] ------------ என்னும் இந்நூல், நான்கடிகளில் ஆறு அருங்கருத்துகளை நவில்கிறது. இந்நூல் தமிழருக்கு அருமருந்து போன்றது.**

1] முதுமொழிக்காஞ்சி

2] இனியவை நாற்பது

3] நாலடியார்

**4] ஏலாதி**

**95] ஏலம் என்னும் மருந்துப்பொருளை முதன்மையாகக் கொண்டு இலவங்கம், சிறுநாவற்பூ, சுக்கு, மிளகு, திப்பிலி ஆகியவற்றினால் ஆன மருந்துப் பொருளுக்கு ---------- என்பது பெயர்.**

1] திரிகடுகம்

2] இனியவை நாற்பது

3] நாலடியார்

**4] ஏலாதி**

**96] வணங்கி வழியொழுகி மாண்டார்சொல் கொண்டு; நுணங்கிநூல் நோக்கி நுழையா - இணங்கிய; பால்நோக்கி வாழ்வான் பழியில்லா மன்னனாய்; நூல்நோக்கி வாழ்வான் நுனித்து - இந்த பாடல் ஏலாதி நூலில் எத்தனையாவது பாடலாக அமைந்துள்ளது?**

1] 39 2] 49 **3] 59** 4] 69

**97] மருந்துப் பொருள்களின் பெயரில் அமைந்த இரு நூல்கள்**

1] திருக்குறள், நன்னூல்

**2] திரிகடுகம், ஏலாதி**

3] நற்றிணை, அகநானூறு

4] இவற்றில் ஏதுமில்லை

**98] வீறுடை செம்மொழி தமிழ்மொழி உலகம் வேரூன்றிய நாள்முதல் உயிர்மொழி - என்று தமிழின் பெருமையைப் பறைசாற்றியவர் யார்?**

1] திரு.வி.க

**2] பாவலரேறு பெருஞ்சித்திரனார்**

3] அண்ணா

4] மபொ.சிவஞானம்

**99] திருந்திய பண்பும், சீர்த்த நாகரிகமும் பொருந்திய தூய்மொழி தமிழ்ச் செம்மொழியாம் - என்று --------- என்பவர் செம்மொழிக்கு இலக்கணம் வகுத்துள்ளார்.**

1] திரு.வி.க

2] பாவலரேறு பெருஞ்சித்திரனார்

3] அண்ணா

**4] பரிதிமாற்கலைஞர்**

**100] "தொன்மை, முன்மை, நுண்மை, திண்மை, எண்மை, ஒண்மை, இனிமை, தனிமை, இளமை, வளமை, தாய்மை, தூய்மை, மும்மை, செம்மை, இயன்மை, வியன்மை என வரும் பதினாறு செவ்வியல் தன்மைகளைக் கொண்டது செம்மொழி. அதுவே நம்மொழி" என்பார் ----------?**

1] பாவலரேறு பெருஞ்சித்திரனார்

2] அண்ணா

3] பரிதிமாற்கலைஞர்

**4] பாவாணர்**

**101] ஈராயிரமாண்டுகட்கும் மேற்பட்ட வரலாற்றுத் தொன்மையுடைய மொழிகள் சிலவே. அவை தமிழ், சீனம், சமற்கிருதம், இலத்தீன், ஈப்ரு, கிரேக்கம் ஆகியன. இவற்றுள் ---------, ---------- வழக்கிழந்து போயின.**

1] சீனம், சமற்கிருதம்

**2] இலத்தீன், ஈப்ரு**

3] ஈப்ரு, கிரேக்கம்

4] சீனம், ஈப்ரு

**102] செம்மொழித் தகுதிப்பாடுகள் : 1.தொன்மை, 2.பிறமொழித் தாக்கமின்மை, 3.தாய்மை, 4.தனித்தன்மை, 5.இலக்கிய வளம், இலக்கணச் சிறப்பு, 6.பொதுமைப் பண்பு, 7.நடுவுநிலைமை, 8.பண்பாடு, கலை பட்டறிவு வெளிப்பாடு, 9.உயர் சிந்தனை, 10.கலை இலக்கியத் தனித்தன்மை வெளிப்பாடு, 11.மொழிக் கோட்பாடு எனப் பதினொரு தகுதிக் கோட்பாடுகளை அறிவியல் தமிழறிஞர் ------------ என்பவரும், மொழிவல்லுனர்களும் வரையறுத்துள்ளார்கள்.**

1] பாவாணர்

2] பரிதிமாற்கலைஞர்

3] பெருஞ்சித்திரனார்

**4] முஸ்தபா**

**103] முதல் மாந்தன் தோன்றிய இடம் ------------.**

**1] குமரிக் கண்டம்**

2] ஐரோவாசியா

3] யூரேசியா

4] ஓசியானியா

**104] உலகம் தோன்றியபோதே தோன்றிய தமிழை அதன் தொன்மையைக் கருதி 'என்றுமுள தென்தமிழ்' என்பார் --------.**

1] பாவாணர்

2] பரிதிமாற்கலைஞர்

3] பெருஞ்சித்திரனார்

**4] கம்பர்**

**105] கீழ்க்கண்ட கூற்று எந்த மொழியைப்பற்றிய கூற்று?**

**பிறமொழிச் சொற்களை நீக்கினால் பல மொழிகள் இயங்கா. ஆனால், --------- ஒன்றே பிறமொழிச் சொற்களை நீக்கினாலும் இனிதின் இயங்கவல்லது. மிகுதியான வேர்ச்சொற்களைக் கொண்ட மொழி, -----------. அவ்வேர்ச்சொற்களைக் கொண்டே புத்தம் புது கலைச்சொற்களைத் ---------- மொழியால் உருவாக்கிக் கொள்ளவியலும்.**

1] சீனம்

2] கிரேக்கம்

3] சமற்கிருதம்

**4] தமிழ்**

**106] தமிழ்மொழியானது திராவிடமொழிகளான கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளுவம் முதலிய மொழிகளுக்குத் தாய்மொழியாகத் திகழ்கிறது. அது பிராகுயி முதலிய வடபுல மொழிகளுக்கும் தாயாக விளங்குகிறது என்பார் -----------.**

1] ஜி.யு.போப்

2] வீரமாமுனிவர்

3] கெல்லட்

**4] கால்டுவெல்**

**107] ஆயிரத்தெண்ணூறு மொழிகளுக்கு வேர்ச்சொற்களையும், நூற்றெண்பது மொழிகளுக்கு உறவுப்பெயர்களையும் தந்துள்ளது --------- மொழி.**

1] சமற்கிருதம்

2] வடமொழி

**3] தமிழ்**

4] இலத்தீன்

**108] கீழ்க்கண்ட கூற்று எந்த மொழி மற்றும் இனத்தவர் பற்றிய கூற்று?**

**இயல், இசை, நாடகம் எனும் முப்பெரும் பிரிவுகளைக் கொண்டது ---------. --------- அகம், புறம் என வாழ்வியலுக்கு இலக்கணம் வகுத்தனர்.**

1] வடமொழி, வட நாட்டினர்

2] சீனம், சீனர்

**3] தமிழ், தமிழர்**

4] அரபு, அரேபியர்

**109] ---------- நூல்,மாந்தர் இனத்திற்கே வாழ்வியல் நெறிமுறைகளை வகுத்தளித்தது.**

1] சிலப்பதிகாரம்

2] கம்பராமாயணம்

**3] திருக்குறள்**

4] ஆத்திச்சூடி

**110] உலக இலக்கியங்களுள் முதன்மை பெற்றுள்ளவை சங்க இலக்கியங்கள். இவற்றின் மொத்த அடிகள் ---------. அக்காலத்தே இவ்வளவிற்கு விரிவாக உருவாக்கப்பட்ட இலக்கியங்கள், உலகில் வேறு எம்மொழியிலும் இல்லை என்பது உலக இலக்கியங்களை ஆய்ந்த ------------ என்னும் செக் நாட்டு மொழியியல் பேரறிஞரின் முடிவு.**

1] 2990, மாக்சு முல்லர்

2] 1555, யரோசுலவ் வசேக்

**3] 26,350, கமில்சுவலபில்**

4] 1330, கெல்லட்

**111] -------- என்னும் மொழி நூலறிஞரே தமிழே மிகவும் பண்பட்ட மொழியென்றும், அது தனக்கே உரிய இலக்கியச் செல்வங்களைப் பெற்றிருக்கும் மொழியென்றும் பாராட்டியிருக்கின்றார்.**

1] கெல்லட்

2] கமில் சுவலபில்

**3] மாக்சுமுல்லர்**

4] கால்டுவெல்

**112] சங்க இலக்கியங்களை ----------- எனலாம்.**

1] உலக இலக்கியம்

2] நாட்டு இலக்கியம்

**3] மக்கள் இலக்கியம்**

4] தெய்வ இலக்கியம்

**113] தமிழ் இலக்கணம் படிக்கப்படிக்க விருப்பத்தை உண்டாக்குவது என்பார் ------------.**

1] மாக்சு முல்லர்

2] கமில் சுவலபில்

**3] கெல்லட்**

4] கால்டுவெல்

**114] நமக்குக் கிடைத்த இலக்கண நூல்களுள் மிகப் பழைமையானது --------------. இஃது எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்றனுக்கும் இலக்கணம் கூறுகின்றது.**

1] புறப்பொருள் வெண்பாமாலை

2] அவிநயம்

**3] தொல்காப்பியம்**

4] வீரசோழியம்

**115] தொல்காப்பியரின் ஆசிரியர் பெயர் என்ன?**

1] சீத்தலைச் சாத்தனார்

2] ஔவையார்

3] காக்கைப் பாடியனார்

**4] அகத்தியர்**

**116] தொல்காப்பியரின் ஆசிரியராகிய அகத்தியர் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்து இலக்கணங்களையும் எழுதினார். அந்நூலுக்கு -------- என்று பெயர்.**

1] அறிவியல் இலக்கண நூல்

2] ஐம்பொருள் இலக்கண நூல்

3] ஔடதம்

**4] அகத்தியம்**

**117] சரியான வரிசையில் உள்ள வாக்கியத்தை தேர்வு செய்க.**

1] கொண்டனர் அன்புள்ளம் செம்புலப் பெயல் நீர்போல

2] நீர்போல அன்புள்ளம் செம்புலப் பெயல் கொண்டனர்

3] அன்புள்ளம் செம்புலப் பெயல்நீர்போல கொண்டனர்

**4] செம்புலப் பெயல்நீர்போல அன்புள்ளம் கொண்டனர்**

winmeen

**118] யாதும் ஊரே, யாவரும் கேளிர் என உலக மக்களை ஒன்றிணைத்து உறவுகளாக்கிய உயர்சிந்தனை மிக்கது ---------. அஃது உரிமைக்கு உறவுகோல் ஊன்றுவது.**

1] திருக்குறள்

2] அகநானூறு

**3] புறநானூறு**

4] திரிகடுகம்

**119] பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்று ------------- உலகுக்கு எடுத்துரைக்கிறது. அது மக்கட் பண்பில்லதாரை மரம் எனப் பழிக்கிறது.**

**1] திருக்குறள்**

2] அகநானூறு

3] புறநானூறு

4] திரிகடுகம்

**120] எளிய குடிமகனையும் குடிமகளையும் காப்பியத் தலைவர்களாக்கிக் காப்பியம் படைத்தனர். குடிமக்கள் காப்பியமான ------------ அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் என்னும் அறநெறியை உலகாள்வோர்க்கு உணர்த்துகிறது.**

1] கம்பராமாயணம்

2] மகாபாரதம்

3] மணிமேகலை

**4] சிலப்பதிகாரம்**

**121] கீழ்க்கண்டவர்களுள் எழுத்துப் பிறப்பு முறைகள் பற்றி கூறியவர்?**

1] திருவள்ளுவர்

**2] தொல்காப்பியர்**

3] ஔவையார்

4] வீரமாமுனிவர்

**122] தொல்காப்பியர் கூறும் எழுத்துப் பிறப்பு முறைகள் மொழி நூலாரையே வியப்பில் ஆழ்த்துகின்றன. 'இன்றைய மொழியியல் வல்லுநர்கள் பேணிப்**

**பின்பற்றத்தக்க வழிமுறைகளைத் தொல்காப்பியம் கூறுகின்றது' என்பார், முனைவர் ------------.**

1] ஜி.யு.போப்

2] கெல்லட்

3] கமில்சுவலபில்

**4] எமினோ**

**123] ஒருமொழிக்கு முப்பத்து மூன்று ஒலிகள் இருந்தாலேபோதும் என்பர். ஆனால், தமிழோ ----------- ஒலிகளைக் கொண்டுள்ளது.**

1] முந்நூறு

2] நாநூறு

**3] ஐந்நூறு**

4] அறுநூறு

**124] தமிழைச் செம்மொழி என அறிவித்தல் வேண்டும் என்ற முயற்சி ---------- இல் தொடங்கி -------- வரை தொடர்ந்தது.**

**1] 1901, 2004**

2] 1910, 2010

3] 1900, 2000

4] 1899, 2009

**125] நடுவணரசு -------------- ஆம் ஆண்டு அக்டோபரில் தமிழைச் செம்மொழியாக ஏற்பளித்தது.**

1] 2001

2] 2002

3] 2003

**4] 2004**

**126] இன்றைய மதுரையில் ---------- தமிழ்ச்சங்கம் இருந்தது.**

1] முதலாம்

2] இரண்டாம்

**3] மூன்றாம்**

4] இவற்றில் ஏதுமில்லை

**127] --------- ஆம் ஆண்டு மதுரைத் தமிழ்ச்சங்க இதழான செந்தமிழில் பரிதிமாற் கலைஞரின் உயர்தனிச் செம்மொழி என்னும் கட்டுரை வெளியிடப்பட்டது.**

1] 1899 2] 1900 **3] 1901** 4] 1902

**128] ---------- ஆம் ஆண்டு மேலைச்சிவபுரிச் சன்மார்க்க சபை, தமிழைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டித் தீர்மானம் நிறைவேற்றி, அதை இந்திய அரசுக்கும் இந்தியப் பல்கலைக்கழகங்களுக்கும் அனுப்பி வற்புறுத்தியது.**

1] 1915 2] 1916 3] 1917 **4] 1918**

**129] -------------- ஆம் ஆண்டு சைவ சித்தாந்த, மாநாட்டில் தமிழைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டுமெனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

1] 1915 2] 1916 3] 1917 **4] 1918**

**130] -------------- ஆம் ஆண்டு கரந்தைத் தமிழ்ச்சங்கம் தமிழைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டுமெனத் தீர்மானம் நிறைவேற்றியது.**

1] 1916 2] 1917 3] 1918 **4] 1919**

**131] ---------- ஆம் ஆண்டு உயர்தனிச் செம்மொழி என்னும் ஆங்கில நூல் தேவநேயப்பாவாணரால் எழுதி வெளியிடப்பட்டது.**

**1] 1966** 2] 1976 3] 1986 4] 1996

**132] ---------- ஆம் ஆண்டு நடுவணரசு தமிழைச் செம்மொழியாக அறிவித்தது.**

1] 2001 2] 2002 3] 2003 **4] 2004**

**133] பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் தமிழுக்குத் தொண்டாற்றியவர்களுள் குறிப்பிடத்தக்கவர் -----------.**

1] அருணகிரிநாதர்

2] வில்லிபுத்தூரார்

3] பகழிக் கூத்தர்

**4] பரிதிமாற்கலைஞர்**

**134] பரிதிமாற்கலைஞர் அவர்களின் இயற்பெயர் என்ன?**

1] சங்கரேஸ்வரன்

2] விஷ்னுவர்தன்

**3] சூரிய நாராயண சாஸ்திரியார்**

4] இவற்றில் ஏதுமில்லை

**135] பரிதிமாற்கலைஞர் அவர்கள் பிறந்த ஊர் எது?**

**1] மதுரையை அடுத்த விளாச்சேரி**

2] நெற்குன்றம் அடுத்த மதுரவாயல்

3] தஞ்சையை அடுத்த கும்பகோணம்

4] சிவகங்கை அடுத்த காரைக்குடி

**136] பரிதிமாற்கலைஞர் அவர்கள் பெற்றோர் பெயர்?**

**1] கோவிந்த சிவனார் - இலட்சுமி அம்மாள்**

2] வெங்கட்ராமன் - அம்மணி அம்மாள்

3] துளசிதாசன் - ராக்காயி

4] சாத்தப்பன் - விசாலாட்சி

**137] பரிதிமாற்கலைஞர் அவர்கள் தம் பெற்றோருக்கு மூன்றாவது மகனாக, ------------- ஆம் ஆண்டு சூலைத் திங்கள் ஆறாம் நாள் பிறந்தார்.**

1] 1865 **2] 1870** 3] 1875 4] 1880

**138] கீழ்க்கண்டகூற்று யாருடன் தொடர்புடையது?**

**-------------------- என்னும் இவர், தந்தை கோவிந்த சிவனாரிடம் வடமொழியும், மகாவித்துவான் சபாபதியாரிடம் தமிழும் பயின்றார்.**

1] பாவாணர்

2] பெருஞ்சித்திரனார்

3] பாரதியார்

**4] பரிதிமாற்கலைஞர்**

**139] கீழ்க்கண்டகூற்று யாருடன் தொடர்புடையது?**

**சென்னை கிறிஸ்துவக் கல்லூரியில் இளங்கலை (பி.ஏ.) பயின்றார். இளங்கலை தேர்வில் தமிழிலும் தத்துவத்திலும் பல்கலைக்கழகத்தில் முதல் மாணவராக தேர்ச்சி பெற்றார். தாம் பயின்ற கல்லூரியில் தத்துவத்துறை ஆசிரியர் பணி வழங்கப்பட்டதை ஏற்காது, தமிழ்த்துறைப் பணியை விரும்பிக் கேட்டு ஏற்றார். அவருக்கு ஆக்சுபோர்டு பல்கலைக்கழகம் பேராசிரியர் பணி வழங்க முன்வந்தது. ஆனால், அவர் ஏற்கவில்லை.**

1] பாவாணர்

2] பெருஞ்சித்திரனார்

3] பாரதியார்

**4] பரிதிமாற்கலைஞர்**

**140] தமிழ் பயிலும் ஆர்வம் மிக்க மாணவர்களுக்குத் தம்முடைய இல்லத்திலேயே தமிழ் கற்பித்ததுடன், அவர்களை "இயற்றமிழ் மாணவர்" எனப் பெயரிட்டு அழைத்தவர் யார்?**

1] பாவாணர்

2] பெருஞ்சித்திரனார்

3] மீனாட்சி சுந்தரனார்

**4] பரிதிமாற்கலைஞர்**

**141] மதுரையில் நான்காம் தமிழ்ச்சங்கம் நிறுவ முயன்றவர்களுள் இவரும் ஒருவர்.**

1] ரா.பி.சேதுப்பிள்ளை

2] பெருஞ்சித்திரனார்

3] மீனாட்சி சுந்தரனார்

**4] பரிதிமாற்கலைஞர்**

**142] பாசுகரசேதுபதி தலைமையில் பாண்டித்துரை தேவர் மேற்பார்வையில் ---------------, உ.வே. சாமிநாதர், ராகவனார் ஆகிய பேராசிரியர்களின் துணையோடு மதுரைத் தமிழ்ச்சங்கம் நிறுவப்பட்டது.**

1] ரா.பி.சேதுப்பிள்ளை

2] பெருஞ்சித்திரனார்

3] மீனாட்சி சுந்தரனார்

**4] பரிதிமாற்கலைஞர்**

**143] யாழ்ப்பாணம் சி.வை.தாமோதரனார், பரிதிமாற்கலைஞரின் தமிழ்ப் புலமையையும் கவிபாடும் திறனையும் கண்டு "---------------" என்னும் சிறப்புப் பட்டத்தை வழங்கினார்.**

1] திராவிட சிசு

2] கவியரசு

3] தமிழ்த்தென்றல்

**4] திராவிட சாஸ்திரி**

**144] பரிதிமாற்கலைஞர், தாம் இயற்றிய "------------------" என்னும் நூலில் பெற்றோர் இட்ட சூரியநாராயண சாஸ்திரி என்ற வடமொழிப் பெயரை மாற்றிப் பரிதிமாற்கலைஞர் எனத் தனித்தமிழ் பெயரைச் சூடிக்கொண்டார்.**

1] நாடகவியல்

2] கலாவதி

3] ரூபாவதி

**4] தனிப்பாசுரத்தொகை**

**145] பரிதிமாற்கலைஞர் இயற்றிய 'தனிப்பாசுரத்தொகை' என்னும் நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் யார்?**

1] வீரமாமுனிவர்

2] கால்டுவெல்

3] கமில்சுவலபில்

**4] ஜி.யு. போப்**

**146] பரிதிமாற்கலைஞர் சென்னைக் கிறிஸ்துவ கல்லூரியில் படித்தபோது கல்லூரி முதல்வராக இருந்தவர் யார்?**

**1] ஸ்காட்லாந்து நாட்டைச் சேர்ந்த வில்லியம் மில்லர்**

2] ஸ்காட்லாந்து நாட்டைச் சேர்ந்த டேவிட் மில்லர்

3] ஸ்காட்லாந்து நாட்டைச் சேர்ந்த ஜான் மில்லர்

4] ஸ்காட்லாந்து நாட்டைச் சேர்ந்த நாதன் மில்லர்

**147] கல்லூரி முதல்வரும் ஆங்கிலப் பேராசிரியருமான வில்லியம் மில்லர் என்பவர் டென்னிசன் இயற்றிய "ஆர்தரின் இறுதி" என்னும் நூலில் இருந்து ஒரு பாடலில் படகின் துடுப்பு அன்னப்பறவைக்கு உவமையாக கூறப்பட்டது. தமிழில் இது போன்ற உவமைகள் உண்டா என அவர் கேட்க, --------- கம்பராமாயண குகப்படலத்தில் உள்ள "விடுநனி கடிது" என்னும் பாடலை பாடி பொருள் கூறினார்.**

1] ரா.பி.சேதுப்பிள்ளை

2] பெருஞ்சித்திரனார்

3] மீனாட்சி சுந்தரனார்

**4] பரிதிமாற்கலைஞர்**

**148] தமிழ்ச்சொற்களோடு வடமொழிச்சொற்களைக் கலந்து எழுதுதல், மணியும் பவளமும் கலந்து கோத்த மாலைபோலாகும் எனத் தமிழின் அருமை உணராதோர் கூறினர். ஆனால், அது தமிழ்மணியோடு பவளத்தைப் போலச் செந்நிறம் உடையான மிளகாய்ப் பழம் கலந்தது போன்ற பயனையே தந்தது என்பது ----------- என்பவரின் கருத்து.**

1] ரா.பி.சேதுப்பிள்ளை

2] பெருஞ்சித்திரனார்

3] மீனாட்சி சுந்தரனார்

**4] பரிதிமாற்கலைஞர்**

**149] பல்கலைக்கழகப் பாடத்திட்டத்தில் பட்டவகுப்புகளில் தமிழை விலக்கி, வடமொழியைக் கொண்டுவரப் பல்கலைக்கழகத்தாரால் முடிவு எடுக்கப்பட்டது. ஆனால், 1902 ஆம் ஆண்டில் --------------- என்பவரின் உறுதியான எதிர்ப்பால் அம்முடிவைப் பல்கலைக்கழகம் கைவிட்டது.**

1] ரா.பி.சேதுப்பிள்ளை

2] உ.வே.சா

3] மீனாட்சி சுந்தரனார்

**4] பரிதிமாற்கலைஞர்**

**150] ---------- என்பவர் ரூபாவதி, கலாவதி முதலிய நற்றமிழ் நாடகங்களை இயற்றினார். அவர் ரூபாவதி, கலாவதி என்னும் பெண்பால் வேடங்களும் புனைந்து நடித்து நாடகக்கலை வளர்ச்சிக்குத் துணை புரிந்தார்.**

1] ரா.பி.சேதுப்பிள்ளை

2] உ.வே.சா

3] மீனாட்சி சுந்தரனார்

**4] பரிதிமாற்கலைஞர்**

**151] -------------- என்பவர் "சித்திரக்கவி" எழுதும் ஆற்றல் பெற்றிருந்ததால், "சித்திரக்கவி" என்னும் நூலை எழுதினார்.**

1] ரா.பி.சேதுப்பிள்ளை

2] உ.வே.சா

3] மீனாட்சி சுந்தரனார்

**4] பரிதிமாற்கலைஞர்**

**152] குமரகுருபரரின் நீதிநெறிவிளக்கத்தின் 51 பாடல்களுக்கு உரையெழுதி உரையாசிரியராகவும் விளங்கியவர் ----------------.?**

1] ரா.பி.சேதுப்பிள்ளை

2] உ.வே.சா

3] மீனாட்சி சுந்தரனார்

**4] பரிதிமாற்கலைஞர்**

**153] -------------- அவர்கள் தொடங்கி வைத்த "ஞானபோதினி" என்னும் இதழைப் பரிதிமாற்கலைஞர் நடத்தினார்.**

**1] மு.சி. பூர்ணலிங்கம்**

2] ரா.பி.சேதுப்பிள்ளை

3] உ.வே.சா

4] மீனாட்சி சுந்தரனார்

**154] கீழ்க்கண்ட கூற்று யாருடன் தொடர்புடையது?**

**இவர், தமிழ், ஆங்கிலம், சமற்கிருதம் ஆகிய மொழிகளில் புலமை பெற்றிருந்தார். மாணவப் பருவத்திலேயே ஆங்கிலப்பாடல்களைத் தமிழில் மொழிபெயர்த்தார். பிற்காலத்தில் வடமொழி நூல்களையும் தமிழில் மொழிபெயர்த்தார். மதுரைத் தமிழ்ச்சங்கத்தாரின் 'செந்தமிழ்' இதழில் 'உயர்தனிச் செம்மொழி' என்னும் தலைப்பில் தமிழின் அருமை பெருமைகளை விளக்கி அரியதொரு கட்டுரை வரைந்தார். தமிழ்மொழி உயர்தனிச்செம்மொழி என முதன்முதலாக நிலைநாட்டினார்.**

1] ரா.பி.சேதுப்பிள்ளை

2] உ.வே.சா

3] மீனாட்சி சுந்தரனார்

**4] பரிதிமாற்கலைஞர்**

**155] தமிழ் உள்ளங்கொண்டு அயராது தமிழ்த் தொண்டாற்றிய பரிதிமாற்கலைஞர் தமது --------- ஆம் அகவையில் (02.11.1903) இயற்கை எய்தினார்.**

1] 44 **2] 33** 3] 66 4] 55

**156] கீழ்க்கண்ட கூற்று யாருடன் தொடர்புடையது?**

**நடுவணரசு --------------- என்னும் இவருக்கு அஞ்சல்தலை வெளியிட்டுச் சிறப்புச் சேர்த்துள்ளது. நற்றமிழில் பெயர் சூட்டவும், நற்றமிழின் தனிப்பெருமையைக்**

**காக்கவும் உறுதி கொள்வதே --------------- என்னும் இவரின் தொண்டுக்கு நாம் காட்டும் நன்றிக்கடனாகும்.**

1] ரா.பி.சேதுப்பிள்ளை

2] உ.வே.சா

3] மீனாட்சி சுந்தரனார்

**4] பரிதிமாற்கலைஞர்**

**157] பொருந்தாதது எது?**

**1] Aesthetic - இயற்கை அறிவு**

2] Biology - உயிர்நூல்

3] Classical Language - உயர்தனிச் செம்மொழி

4] Green Rooms - பாசறை

**குறிப்பு** :- Aesthetic என்பதன் சரியான தமிழ்ச்சொல் இயற்கை வனப்பு.

**158] பொருந்தாதது எது?**

**Instinct - செயற்கை அறிவு**

Order of Nature - இயற்கை ஒழுங்கு

Snacks - சிற்றுணா

Green Rooms - பாசறை

**குறிப்பு** :- Instinct என்பதன் சரியான தமிழ்ச்சொல் இயற்கை அறிவு.

**159] 'ஐ' என்னும் நெட்டெழுத்தைத் தனியாக ஒலித்துப் பாருங்கள். அது, தனக்குரிய ------------ மாத்திரை அளவிலிருந்து குறையாமல் ஒலிக்கும்.**

1] அரை 2] ஒன்று **3] இரண்டு** 4] மூன்று

**160] ஐம்பது - 'ஐ' என்னும் நெட்டெழுத்து சொல்லுக்கு முதலில் வந்து ------------- மாத்திரையாகக் குறைந்தது.**

1] அரை 2] ஒன்று 3] இரண்டு **4] ஒன்றரை**

**161] தலைவன் - 'ஐ' என்னும் நெட்டெழுத்து சொல்லுக்கு இடையில் வந்து --------------- மாத்திரையாகக் குறைந்தது .**

1] அரை **2] ஒரு** 3] இரண்டு 4] ஒன்றரை

**162] கடலை - 'ஐ' என்னும் நெட்டெழுத்து சொல்லுக்கு ஈற்றில் வந்து ------------ மாத்திரையாகக் குறைந்தது.**

1] அரை **2] ஒரு** 3] இரண்டு 4] ஒன்றரை

**163] ஔ என்னும் நெடில் எழுத்தும், ஐ என்னும் நெட்டெழுத்தைப் போலவே தனியாக ஒலிக்கும்போது, இரண்டு மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒலிப்பதில்லை. ஆனால், சொல்லுக்கு முதலில் மட்டுமே வரும் ஔகாரம் ---------------- மாத்திரை அளவினதாய்க் குறைந்து ஒலிக்கும். அதுவே ஔகாரக்குறுக்கம் எனப்படும்.**

1] அரை 2] ஒரு 3] இரண்டு **4] ஒன்றரை**

**குறிப்பு :-** (எ.கா.) : ஔவை, வௌவால் - ஒன்றரை மாத்திரையாகக் குறைந்தது. சொல்லுக்கு இடையிலும் இறுதியிலும் ஔகாரம் வாராது.

**164] 'ம்' என்னும் மெய்யெழுத்து தன் மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒலித்தல் மகரக்குறுக்கம் எனப்படும். அதாவது, 'ம்' என்னும் மெய்யெழுத்து,**

**செய்யுளில் தனக்குரிய --------------- மாத்திரை அளவிலிருந்து, ---------------- மாத்திரை அளவாகக் குறைந்து ஒலிக்கும்.**

1] ஒன்று, அரை

2] இரண்டு, ஒன்று

3] ஒன்றரை, ஒன்று

**4] அரை, கால்**

**குறிப்பு :- (எ. கா.) : அ) போலும் - போல்ம் - போன்ம்.**

[ அ) செய்யுளில் இடம்பெறும் போலும், மருளும் ஆகிய மகர ஈற்றுச் சொற்கள், ஈற்றயல் உகரங் கெட்டு, போல்ம், மருள்ம் என்றாகிப் பின் போன்ம், மருண்ம் எனத் திரியும். இவ்வாறு திரியும் னகர, ணகரங்களின் முன்னுள்ள மகரம், தன் அரை மாத்திரை அளவிலிருந்து குறைந்து கால் மாத்திரை அளவில் ஒலிக்கும். ]

**ஆ] மருளும் - மருள்ம் - மருண்ம்.**

[ ஆ] மகர ஈற்றுச்சொல் முன் வகர (வ்) முதல்மொழி வந்து சேரும்போது, நிலைமொழி மகரம் குறைந்து ஒலிக்கும். (எ.கா.) : வரும் + வண்டி = வரும்வண்டி. 'ம்' தன் அரை மாத்திரையிலிருந்து குறைந்து கால் மாத்திரையாக ஒலிக்கும் (வரும் - இது மகர ஈற்று நிலைமொழி. வண்டி இது 'வ்' என்னும் வகர முதல் மொழி.) இவ்விரண்டு இடங்களிலும் குறைந்து ஒலிக்கும் மகரமே மகரக்குறுக்கம் எனப்படும். ]

**165] ஆய்தம் + குறுக்கம் = ஆய்தக்குறுக்கம் ('ஃ' என்னும் எழுத்து குறைந்து ஒலிப்பது.) நிலைமொழியில் தனிக்குறிலை அடுத்து வரும் லகர, ளகரங்கள் வருமொழியிலுள்ள தகரத்தோடு (த்) சேரும்போது ஆய்தமாகத் திரியும். இவ்வாறு திரிந்த ஆய்தம் தன் ---------- மாத்திரை அளவிலிருந்து குறைந்து --------------- மாத்திரை அளவாக ஒலிக்கும். அதுவே ஆய்தக்குறுக்கம் எனப்படும். பிறகு, வருமொழியிலுள்ள தகரம் (த்) நிலைமொழிக்கேற்ப றகரமாக (ற்) வும், டகரமாகவும் (ட்) மாறிப் புணரும்.**

1] ஒன்று, அரை

2] இரண்டு, ஒன்று

3] ஒன்றரை, ஒன்று

**4] அரை, கால்**

**குறிப்பு** :- (எ.கா.) : கல் + தீது = கஃறீது. முள் + தீது = முஃடீது.

**166] குறுக்கங்கள் ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம் என ---------------- வகைப்படும்.**

**1] நான்கு** 2] ஐந்து 3] ஆறு 4] ஏழு

**167] பல் + தீது என்பது ---------------- எனப் புணரும்.**

1] பல்தீது 2] பஃதீது **3] பஃறீது** 4] இவற்றில் ஏதுமில்லை

**168] ஈற்றில் ஐகாரம் குறைந்து வந்த சொல் -------------- ஆகும்.**

**1] திண்ணை** 2] வளையல் 3] ஐந்து 4] இவற்றில் ஏதுமில்லை

**169] பொருந்தாதது எது?**

1] ஐகாரக் குறுக்கம் - தலைவன்

2] ஔகாரக் குறுக்கம் - வௌவால்

3] ஆய்தக் குறுக்கம் - முஃடீது

**4] மகரக் குறுக்கம் - பஃறீது**

**குறிப்பு** :- மகரக் குறுக்கம் - போன்ம்

**170] ஒரு கருத்தினைச் செய்தியாகத் தெரிவிப்பது ------------ எனப்படும்.**

1] வினாத்தொடர்

2] உணர்ச்சித்தொடர்

3] கட்டளைத்தொடர்

**4] செய்தித்தொடர்**

**விளக்கம்** :- அ) பரிதிமாற் கலைஞர் மதுரைக்கருகில் உள்ள விளாச்சேரியில் பிறந்தார்.

ஆ) திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார். - இவ்விரு தொடர்களும் செய்திகளைத் தெளிவாக எடுத்துக் கூறுகின்றன. இவ்வாறு, ஒரு கருத்தினைச் செய்தியாகத் தெரிவிப்பது செய்தித்தொடர் எனப்படும்.

**171] அன்பரசி, நேற்று நீ ஏன் பள்ளிக்கு வரவில்லை? - இது எந்த தொடருக்கான எடுத்துக்காட்டு?**

**1] வினாத்தொடர்**

2] உணர்ச்சித்தொடர்

3] கட்டளைத்தொடர்

4] செய்தித்தொடர்

**விளக்கம்** :- வினாத்தொடர் :

அ) எழில், என்ன சாப்பிட்டாய்?

ஆ) அன்பரசி, நேற்று நீ ஏன் பள்ளிக்கு வரவில்லை?

இ) எங்கே செல்கிறாய்?

இவ்வாறு வினாப்பொருளைத் தரும் தொடர், வினாத்தொடர் எனப்படும். என்ன? ஏன்? எங்கே? எப்படி? முதலிய வினாச்சொற்கள் வினாத்தொடரில் அமையும்.

**172] மகிழ்ச்சி, வியப்பு, துன்பம் முதலிய உணர்ச்சிகள் வெளிப்படுமாறு அமைவது - ------------------------?**

1] வினாத்தொடர்

**2] உணர்ச்சித்தொடர்**

3] கட்டளைத்தொடர்

4] செய்தித்தொடர்

**விளக்கம்** :- நாம் பேசும் செய்திகள் உணர்ச்சியை வெளிப்படுத்தும் தொடர்களாக அமைந்தால், அவற்றை உணர்ச்சித் தொடர்கள் என்கிறோம். மகிழ்ச்சி, வியப்பு, துன்பம் முதலிய உணர்ச்சிகள் வெளிப்படுமாறு அமைவது உணர்ச்சித் தொடர். என்னே என்னும் சொல்லை வியப்புக் குறித்தும், அந்தோ என்னும் சொல்லைத் துன்பம் குறித்தும் சொற்றொடர்களில் அமைத்துக் காட்டலாம்.

**(எ.கா.)** : 1] என்னே, இமயமலையின் உயரம்!

2] அந்தோ, நாய் வண்டியில் அடிபட்டுவிட்டதே!

3] "அடேயப்பா! எவ்வளவு பெரிய ஏரி!"

4] "ஐயோ, முள் குத்திவிட்டதே!"

**173] பார்த்துப் போ, கவனமாகப் படி - இது எந்த தொடருக்கான எடுத்துக்காட்டு?**

1] வினாத்தொடர்

2] உணர்ச்சித்தொடர்

**3] கட்டளைத்தொடர்**

4] செய்தித்தொடர்

**விளக்கம்** :- கட்டளைத்தொடர் : நீ பள்ளிக்குப் புறப்படும்போது, உன்னிடம் அம்மா கூறுவது என்ன? பார்த்துப் போ, கவனமாகப் படி என்றுதானே. இவ்வாறு ஒரு செயல் அல்லது சில செயல்களைப் பின்பற்றும்படி ஆணையிட்டுக் கூறுவது, கட்டளைத்தொடர்.

**174] ஓர் எழுவாய் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட எழுவாய்கள் ஒரு பயனிலையைக் கொண்டுமுடிவது, ---------------?**

1] வினாத்தொடர்

2] உணர்ச்சித்தொடர்

3] கட்டளைத்தொடர்

**4] தனிநிலைத்தொடர்**

**விளக்கம்** :- தனிநிலைத்தொடர் :- 1 . அழகன் பாடம் எழுதுகிறான். 2 . மா, பலா, வாழை ஆகியன முக்கனிகள். இத்தொடர்களில் முதல் தொடரில் அழகன் என்பது எழுவாய். இரண்டாம் தொடரில் மா, பலா, வாழை என்பன எழுவாய்கள். இவ்வாறாக, ஓர் எழுவாய் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட எழுவாய்கள் ஒரு பயனிலையைக் கொண்டுமுடிவது, தனிநிலைத்தொடர்.

**175] --------------- அதனால், ஆகையால், ஏனெனில் முதலிய இணைப்புச்சொற்களைப் பெற்று வரும்.**

**1] தொடர்நிலைத் தொடர்**

2] உணர்ச்சித்தொடர்

3] கட்டளைத்தொடர்

4] தனிநிலைத்தொடர்

**விளக்கம்** :- தொடர்நிலைத்தொடர் :- கார்மேகம் கடுமையாக உழைத்தார். அதனால், வாழ்வில் உயர்ந்தார். **நேற்று மழை பெய்தது. அதனால், ஏரி குளங்கள் நிரம்பின**. இவ்வாறு, ஓர் எழுவாய் பல பயனிலைகளைக்கொண்டு முடிவது தொடர்நிலைத்தொடர். தொடர்நிலைத்தொடர்கள் அதனால், ஆகையால், ஏனெனில் முதலிய இணைப்புச்சொற்களைப் பெற்று வரும்.

**176] ஓர் எழுவாய் பல பயனிலைகளைக்கொண்டு முடிவது -------------------.**

**1] தொடர்நிலைத் தொடர்**

2] உணர்ச்சித்தொடர்

3] கட்டளைத்தொடர்

4] தனிநிலைத்தொடர்

**177] ஒரு தனிச்சொற்றொடர் ஒன்று அல்லது அதற்குமேற்பட்ட துணைத் தொடர்களுடன் கலந்து வருவது ----------**

1] தொடர்நிலைத் தொடர்

2] தனிநிலைத்தொடர்

3] கட்டளைத்தொடர்

**4] கலவைத்தொடர்**

**விளக்கம்** :- கலவைத்தொடர் :- 1 . நேற்று புயல் வீசியதால், பள்ளிக்கு விடுமுறை. 2. முருகன், இரவும் பகலும் அயராது படித்ததால் கூடுதல் மதிப்பெண்கள் பெற்றான். இவ்வாறு, ஒரு தனிச்சொற்றொடர் ஒன்று அல்லது அதற்குமேற்பட்ட துணைத் தொடர்களுடன் கலந்து வருவது, கலவைத்தொடர்.

**178] நேற்று புயல் வீசியதால், பள்ளிக்கு விடுமுறை - இது எந்த தொடருக்கான சரியான எடுத்துக்காட்டு?**

1] தொடர்நிலைத் தொடர்

2] தனிநிலைத்தொடர்

3] கட்டளைத்தொடர்

**4] கலவைத்தொடர்**

**179] எழுவாய் செய்யும் வினையைக் கொண்டு முடியும் தொடர் --------------- எனப்படும்.**

**1] செய்வினைத் தொடர்**

2] செயப்பாட்டு வினைத்தொடர்

3] தன்வினைத்தொடர்

4] கலவைத்தொடர்

**விளக்கம்** :- செய்வினைத்தொடர் :- "குடியரசுத் தலைவர் உலகத் தமிழ் மாநாட்டைத்தொடங்கிவைத்தார்" . இத்தொடரில், குடியரசுத் தலைவர் - எழுவாய்; உலகத்தமிழ் மாநாடு - செயப்படுபொருள்; தொடங்கிவைத்தார் - பயனிலை; இவ்வாறாக எழுவாய் செய்யும் வினையைக் கொண்டு முடியும் தொடர் செய்வினைத் தொடர் எனப்படும். செயப்படுபொருளோடு இரண்டாம் வேற்றுமை உருபு (ஐ) வெளிப்பட்டு வரும். சில தொடர்களில் மறைந்தும் வரும்.

**(எ.கா.) : மாவட்ட ஆட்சியர் கொடி ஏற்றினார்.**

**180] மாவட்ட ஆட்சியர் கொடி ஏற்றினார் - இது எந்த தொடருக்கான சரியான எடுத்துக்காட்டு?**

**1] செய்வினைத் தொடர்**

2] செயப்பாட்டு வினைத்தொடர்

3] தன்வினைத்தொடர்

4] கலவைத்தொடர்

**181] செயப்படுபொருள் வினைச்சொல்லைக் கொண்டு முடிவது --------------------?**

1] செய்வினைத் தொடர்

**2] செயப்பாட்டு வினைத்தொடர்**

3] தன்வினைத்தொடர்

4] பிறவினைத்தொடர்

**விளக்கம்** :- செயப்பாட்டு வினைத்தொடர் : (செயப்படுபொருள் வினைச்சொல்லைக் கொண்டு முடிவது). உலகத்தமிழ் மாநாடு குடியரசுத் தலைவரால் தொடங்கி வைக்கப் பெற்றது. இத்தொடரில் சொற்கள் செயப்படுபொருள். எழுவாய், பயனிலை என்னும் வரிசையில் அமைந்துள்ளன. எழுவாயோடு "ஆல்" என்னும் மூன்றாம் வேற்றுமை உருபும் உள்ளது. இவ்வகைத் தொடர்களில் பயனிலையோடு படு, பட்டது, பெறு, பெற்றது என்னும் துணைவினைகளுள் ஒன்று சேர்ந்து வரும்.

**182] ------------- வகைத் தொடர்களில் பயனிலையோடு படு, பட்டது, பெறு, பெற்றது என்னும் துணைவினைகளுள் ஒன்று சேர்ந்து வரும்.**

1] செய்வினைத் தொடர்

**2] செயப்பாட்டு வினைத்தொடர்**

3] தன்வினைத்தொடர்

4] பிறவினைத்தொடர்

**183] உலகத்தமிழ் மாநாடு குடியரசுத் தலைவரால் தொடங்கி வைக்கப் பெற்றது. - இந்த வாக்கியம் எந்த வினைத்தொடர் உடன் தொடர்புடையது?**

1] செய்வினைத் தொடர்

**2] செயப்பாட்டு வினைத்தொடர்**

3] தன்வினைத்தொடர்

4] பிறவினைத்தொடர்

**184] எழுவாய், தானே செய்யும் தொழிலை உணர்த்துவது -----------?**

1] செய்வினைத் தொடர்

2] செயப்பாட்டு வினைத்தொடர்

**3] தன்வினைத்தொடர்**

4] பிறவினைத்தொடர்

**விளக்கம்** :- தன்வினைத்தொடர் : (எழுவாய், தானே செய்யும் தொழிலை உணர்த்துவது) பாத்திமா திருக்குறள் கற்றாள். இத்தொடரிலுள்ள பாத்திமா என்னும் எழுவாய், ஒரு செயலைத் தானே செய்வதனால், இது தன்வினைத்தொடராகும்.

**185] எழுவாய், ஒரு செயலைப் பிறரைக்கொண்டு செய்விப்பது ---------?**

1] செய்வினைத் தொடர்

2] செயப்பாட்டு வினைத்தொடர்

3] தன்வினைத்தொடர்

**4] பிறவினைத்தொடர்**

**விளக்கம்** :- பிறவினைத்தொடர் : (எழுவாய், ஒரு செயலைப் பிறரைக்கொண்டு செய்விப்பது) பாத்திமா திருக்குறள் கற்பித்தாள். இது பிறவினைத்தொடர், பாத்திமா என்னும் எழுவாய், அச்செயலைப் பிறரைக் கொண்டு செய்விப்பதனால், இது பிறவினைத்தொடராகும்.

**186] ஒருவர் பேசுவதை, அவர் பேசியபடியே கூறுவது -------------?**

1] செய்வினைத் தொடர்

2] செயப்பாட்டு வினைத்தொடர்

**3] நேர்கூற்றுத்தொடர்**

4] அயற்கூற்றுத்தொடர்

**விளக்கம்** :- நேர்கூற்றுத்தொடர் : (ஒருவர் பேசுவதை, அவர் பேசியபடியே கூறுவது) ஆசிரியர், "மாணவர்களே, நாளை ஒழுக்கமுடைமையில் குறள்கள் ஐந்தனைப் படித்து வருக" , என்றார். இவ்வாறு ஆசிரியர், மாணவர்களிடம் கூறிய இத்தொடர் நேர்கூற்றுத் தொடராகும். இதில் மேற்கோள் குறிகள் இடம்பெறும். தன்மை, முன்னிலைப் பெயர்கள் இடம்பெறும். இங்கு, இப்போது, இவை, எனச் சுட்டுப்பெயர்கள் வரும். நேற்று, இன்று, நாளை எனக் காலப்பெயர்களும் வரும்.

**(எ.கா.) : தேன்மொழி பொன்னியிடம், "நான், நாளை மதுரைக்குச் செல்வேன்" என்றாள்.**

**187] தேன்மொழி பொன்னியிடம், "நான், நாளை மதுரைக்குச் செல்வேன்" என்றாள் - இந்த வாக்கியம் எந்த தொடர் உடன் தொடர்புடையது?**

1] செய்வினைத் தொடர்

2] செயப்பாட்டு வினைத்தொடர்

**3] நேர்கூற்றுத்தொடர்**

4] அயற்கூற்றுத்தொடர்

**188] இதில் மேற்கோள் குறிகள் இடம்பெறும். தன்மை, முன்னிலைப் பெயர்கள் இடம்பெறும். இங்கு, இப்போது, இவை, எனச் சுட்டுப்பெயர்கள் வரும். நேற்று, இன்று, நாளை எனக் காலப்பெயர்களும் வரும். - இது கீழ்க்கண்ட எந்த தொடருடன் தொடர்புடையது?**

1] செய்வினைத் தொடர்

2] செயப்பாட்டு வினைத்தொடர்

**3] நேர்கூற்றுத்தொடர்**

4] அயற்கூற்றுத்தொடர்

**189] ஒருவர் அல்லது பலரின் உரையாடல்களை அயலார் கூறுவதுபோல் அமைப்பது -------------?**

1] செய்வினைத் தொடர்

2] செயப்பாட்டு வினைத்தொடர்

3] நேர்கூற்றுத்தொடர்

**4] அயற்கூற்றுத்தொடர்**

**விளக்கம்** :- அயற்கூற்றுத்தொடர் :- ஒருவர் அல்லது பலரின் உரையாடல்களை அயலார் கூறுவதுபோல் அமைப்பது அயற்கூற்றுத்தொடர். **பொன்னியிடம் தேன்மொழி, தான் மறுநாள் மதுரைக்குச் செல்வதாகக் கூறினாள்.** அயற்கூற்றில் மேற்கோள் குறிகள் வாரா. இக்கூற்றில் தன்மை, முன்னிலைப் பெயர்கள், படர்க்கைப் பெயர்களாக மாறும். சுட்டுபெயர்கள் அது, அவை, அங்கே என மாறும். காலப்பெயர்கள் அந்நாள், மறுநாள் என மாறும். என்று, ஆக என்னும் இணைப்புச் சொற்களும் இடம்பெறும்.

190] --------------- **கூற்றில் மேற்கோள் குறிகள் வாரா. இக்கூற்றில் தன்மை, முன்னிலைப் பெயர்கள், படர்க்கைப் பெயர்களாக மாறும். சுட்டுபெயர்கள் அது, அவை, அங்கே என மாறும். காலப்பெயர்கள் அந்நாள், மறுநாள் என மாறும். என்று, ஆக என்னும் இணைப்புச் சொற்களும் இடம்பெறும்.**

1] செய்வினைத் தொடர்

2] செயப்பாட்டு வினைத்தொடர்

3] நேர்கூற்றுத்தொடர்

**4] அயற்கூற்றுத்தொடர்**

**191] செயல் அல்லது தொழில் நிகழ்வதை நேர்மறையாக உணர்த்துவது ---------- ?**

1] எதிர்மறைத்தொடர்

**2] உடன்பாட்டுத்தொடர்**

3] நேர்கூற்றுத்தொடர்

4] அயற்கூற்றுத்தொடர்

**விளக்கம்** :- உடன்பாட்டுத்தொடர்:- செயல் அல்லது தொழில் நிகழ்வதை நேர்மறையாக உணர்த்துவது, உடன்பாட்டுத்தொடர். கலைச்செல்வி கட்டுரை எழுதினாள்.

**192] கலைச்செல்வி கட்டுரை எழுதினாள் - இது எந்த தொடருடன் தொடர்புடையது?**

1] எதிர்மறைத்தொடர்

**2] உடன்பாட்டுத்தொடர்**

3] நேர்கூற்றுத்தொடர்

4] அயற்கூற்றுத்தொடர்

**193] கலைச்செல்வி கட்டுரை எழுதிலள் இத்தொடரில், கலைச்செல்வி கட்டுரை எழுதவில்லை எனச் செயல் நிகழாமையைக் கூறுவதனால், இஃது ---------------?**

**1] எதிர்மறைத்தொடர்**

2] உடன்பாட்டுத்தொடர்

3] நேர்கூற்றுத்தொடர்

4] அயற்கூற்றுத்தொடர்

**விளக்கம்** :- எதிர்மறைத்தொடர் :- கலைச்செல்வி கட்டுரை எழுதிலள். இத்தொடரில், கலைச்செல்வி கட்டுரை எழுதவில்லை எனச் செயல் நிகழாமையைக் கூறுவதனால், இஃது எதிர்மறைத்தொடர்.

**194] கலைச்செல்வி கட்டுரை எழுதாமல் இராள் - என்னும் தொடர் --------------------?.**

1] எதிர்மறைத்தொடர்

**2] பொருள்மாறா எதிர்மறைத்தொடர்**

3] நேர்கூற்றுத்தொடர்

4] அயற்கூற்றுத்தொடர்

**விளக்கம்** :- பொருள்மாறா எதிர்மறைத்தொடர் :- கலைச்செல்வி கட்டுரை எழுதாமல் இராள். கலைச்செல்வி கட்டுரை எழுதினாள் என்னும் தொடர் உடன்பாட்டுத்தொடர். கலைச்செல்வி கட்டுரை எழுதவில்லை என்பது இதற்கான எதிர்மறைத்தொடர். மேலே உள்ள உடன்பாட்டுத் தொடரை பொருள்மாறா எதிர்மறைத் தொடராக மாற்ற வேண்டுமானால், அதனை இரண்டு எதிர்மறைகளைக் கொண்ட தொடராகக், கலைச்செல்வி கட்டுரை எழுதாமல் இராள் என மாற்றுதல்வேண்டும். இதற்குக் கலைச்செல்வி கட்டுரை எழுதினாள் என்பதே பொருள் என்பதனால், இது பொருள்மாறா எதிர்மறைத்தொடர் எனப்படுகிறது. இரண்டு எதிர்மறைச்சொற்கள் சேர்ந்து வந்தால், அ்ஃது உடன்பாட்டுப் பொருளைத் தரும்.

**195] சந்திப்பிழையற்ற தொடர் எது?**

1] கயிறுக் கட்டிலில் தன்னை மறந்து உறங்கினான்

**2] கயிற்றுக் கட்டிலில் தன்னை மறந்து உறங்கினான்**

3] கயிறு கட்டிலில் தன்னை மறந்து உறங்கினான்

4] கயிற்று கட்டிலில் தன்னை மறந்து உறங்கினான்

**196] ஒருமை பன்மைப் பிழையற்ற தொடர் எது?**

1] அவன் கவிஞன் அல்லர்

2] அவன் கவிஞன் அன்று

**3] அவன் கவிஞன் அல்லன்**

4] அவன் அல்லன் கவிஞன்

**197] பிறமொழிச் சொல்லற்ற தொடர் எது?**

1] அவர்களிருவருக்கும் இடையே கான்வர்கேசன் நடந்தது

2] அவர்களிருவருக்கும் இடையே விவாதம் நடந்தது

**3] அவர்களிருவருக்கும் இடையே உரையாடல் நடந்தது**

4] அவர்களிருவருக்கும் இடையே ஸ்பீச் நடந்தது

**198] வழுவுச் சொல்லற்ற தொடர் எது?**

1] வலதுபக்கம் சுவறில் எழுதாதே

**2] வலப்பக்கச் சுவரில் எழுதாதே**

3] வலப்பக்கம் சுவற்றில் எழுதாதே

4] வலபக்கம் சுவரில் எழுதாதே

**199] தனித்தமிழ் இயக்கம் தோற்றுவித்த தமிழறிஞர் ---------?**

1] பரிதிமாற்கலைஞர்

2] திரு.வி.க

3] பாவாணர்

**4] மறைமலையடிகள்**

**200] வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை; நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே; தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்தென்; ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

**1] வள்ளலார்**

2] திரு.வி.க

3] பாவாணர்

4] மறைமலையடிகள்

**201] “ஒரு நாட்டில் பிறந்த மக்களுக்கு வேண்டப்படும் பற்றுகளுள் தலையாய பற்று மொழிப் பற்றே. மொழிப்பற்று இல்லாதாரிடத்துத் தேசப்பற்றும் இராது என்பது உறுதி. தேசம் என்பது மொழியை அடிப்படையாகக் கொண்டு. இயங்குவது” . ஆதலால், தமிழர்களுக்குத் தாய்மொழிப் பற்றுப் பெருக வேண்டும் என்பது எனது பிரார்த்தனை - என்று கூறியவர் யார்?**

1] அண்ணா

**2] பெரியார்**

3] முத்துராமலிங்க தேவர்

4] திரு.வி.க

**202] health is wealth - என்பதன் தமிழாக்கம் எது?**

1] அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு

**2] நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்**

3] உழைப்பின்றி ஊதியமில்லை

4] பதறாத காரியம் சிதறாது

**203] Too much of anything is good for nothing - என்பதன் தமிழாக்கம் எது?**

**1] அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு**

2] நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

3] உழைப்பின்றி ஊதியமில்லை

4] பதறாத காரியம் சிதறாது

**204] No pain No gain - என்பதன் தமிழாக்கம் எது?**

1] அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு

2] நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

**3] உழைப்பின்றி ஊதியமில்லை**

4] பதறாத காரியம் சிதறாது

**205] Haste makes waste - என்பதன் தமிழாக்கம் எது?**

1] அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு

2] நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

3] உழைப்பின்றி ஊதியமில்லை

**4] பதறாத காரியம் சிதறாது**

**206] Knowledge is power - என்பதன் தமிழாக்கம் எது?**

**1] அறிவே ஆற்றல்**

2] நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

3] உழைப்பின்றி ஊதியமில்லை

4] பதறாத காரியம் சிதறாது

**207] இந்தியாவின் மிக உயர்ந்த பதவியில் இருந்த அவர், நாளொன்றுக்குப் பதினெட்டு மணி நேரம் முதல் இருபது மணி நேரம் வரை கடுமையாக உழைப்பார். சில நாள் வீடு திரும்ப நள்ளிரவுக்கு மேல் ஆகிவிடும். ஒரு நாள் அவர், நள்ளிரவுக்கு மேல் வெளிநாட்டு நண்பர் ஒருவருடன் வீடு திரும்பினார். நெடுங்காலமாக அவரிடம் வேலை பார்த்து வரும் காவலர், அன்று களைப்பு**

**மிகுதியால் உறங்கிக் கொண்டிருந்தார். அவருடன் வந்த மற்றவர்கள், அந்தக் காவலரை எழுப்பச் சென்றார்கள். அவர்களைத் தடுத்தி நிறுத்தி, 'பாவம் வயதானவர், அவரை எழுப்பாதீர்கள், அவர் தூங்கட்டும்' என்று கூறியவாறே தாமே அறையின் திறவுகோலை எடுத்துச் சென்று அறையைத் திறந்தார். அவரோடு வந்த வெளிநாட்டு நண்பர் தமது கட்டுரை ஒன்றில், அவரின் மனிதநேயத்திற்கு எடுத்துக்காட்டாய் இந்நிகழ்வைக் குறிப்பிடுகிறார். அவர்தாம் இந்தியாவின் முதன்மையமைச்சராக இருந்த ----------------.**

1] வாஜ்பாய்

**2] நேரு**

3] மன்மோகன் சிங்

4] இந்திரா காந்தி

## பத்தாம் வகுப்பு - பொதுத்தமிழ் பாடக்குறிப்புகள் பகுதி - 2

**1] காவிரிப்பூம்பட்டினத்துப் பெருவணிகன் மாசாத்துவானின் மகன் -------- ?**

1] கவுந்தியடிகள்

2] இளங்கோவடிகள்

3] ராஜசிம்மன்

**4] கோவலன்**

**குறிப்பு** :- காவிரிப்பூம்பட்டினத்துப் பெருவணிகன் மாசாத்துவானின் மகன் கோவலன். இவன், கலையுணவும் வறியோர்க்கு உதவும் நற்பண்பும் மிக்கவன்.

**2] காவிரிப்பூம்பட்டினத்துப் பெருவணிகன் ------- என்பவரின் மகள் கண்ணகி.**

1] குகன்

2] கவுந்தியடிகள்

**3] மாநாய்கன்**

4] சேரன் செங்குட்டுவன்

**குறிப்பு** :- கண்ணகி, திருமகள் போன்ற அழகும் பெண்கள் போற்றும் பெருங்குணச் சிறப்பும் கற்புத்திறமும் மிக்கவள்.

**3] கோவலன், ஆடலரசி ---------- என்பவரை விரும்பிக் கண்ணகியை விட்டு பிரிந்தான்.**

1] மணிமேகலை

2] ஆதிரை

**3] மாதவி**

4] இவர்களில் யாருமில்லை

**4] மாதவி, ------------ விழாவில் கானல்வரிப் பாடலைப் பாடினாள். பாடலின் பொருளைத் தவறாகப் புரிந்துகொண்ட கோவலன், மாதவியை விட்டுப் பிரிந்தான்.**

1] காவிரி விழா

2] மூதூர் விழா

**3] இந்திர விழா**

4] இவற்றில் ஏதுமில்லை

**5] கோவலன், வாணிகம் செய்தற்பொருட்டுக் கண்ணகியுடன் ------------- க்குச் சென்றான்.**

1] கருநாடகா

2] ஒடிசா

**3] மதுரை**

4] கேரளா

**6] வாணிகம் செய்தற்பொருட்டுக் கண்ணகியுடன் மதுரைக்குச் சென்றான். அவர்களுக்கு வழித்துணையாகக் கவுந்தியடிகள் என்னும் ------------ துறவி சென்றார்.**

1] புத்த

**2] சமண**

3] ஜொராஸ்டிரியம்

4] சீக்கியம்

**7] கவுந்தியடிகள், மதுரை நகர்ப்புறத்தில் --------- என்னும் இடைக்குல மூதாட்டியிடம், அவ்விருவரையும் (கோவலன், கண்ணகி) அடைக்கலப்படுத்தினார்.**

1] ஆதிரை

2] குந்தவை

**3] மாதரி**

4] செம்பா

**8] கோவலன் --------- விற்று வர மதுரை நகரக் கடை வீதிக்குச் சென்றான்.**

1] ஒட்டியானம்

2] சதங்கை

3] கடுக்கன்

**4] சிலம்பு**

**9] விலை மதிப்பற்ற காற்சிலம்பு ஒன்றனைக் கோவலன் விற்பதைப் பாண்டிய மன்னனின் --------------- அறிந்தான்.**

1] பாதுகாவலன்

2] அவைக்கலப்புலவர்

**3] பொற்கொல்லன்**

4] ஒற்றன்

**10] பாண்டிமாதேவியின் காற்சிலம்பைக் களவாடிய பொற்கொல்லன், பொய்யான பழியைக் ------------ என்பவரின் மேல் சுமத்தினான்.**

1] மாதரி

**2] கோவலன்**

3] கவுந்தியடிகள்

4] கண்ணகி

**11] கோவலன் கொலை செய்யப்பட்ட செய்தியை --------- மூலம் அறிந்த கண்ணகி, பெருந்துயருற்றாள்.**

1] கவுந்தியடிகள்

2] அப்பூதியடிகள்

**3] மாதரி**

4] பாண்டிய மன்னனின் பொற்கொல்லன்

**12] 'தன் கணவன் கள்வன் அல்லன்' - இது யாருடைய கூற்று?**

1] கோப்பெருந்தேவி

2] மாதரி

3] மணிமேகலை

**4] கண்ணகி**

**13] வாழியெம் கொற்கை வேந்தே வாழி; தென்னம் பொருப்பின் தலைவ வாழி; செழிய வாழி தென்னவ வாழி; பழியொடு படராப் பஞ்சவ வாழி; அடர்த்தெழு குருதி யடங்காப் பசுந்துணிப் - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

1] சீவக சிந்தாமணி, திருத்தக்கதேவர்

2] மணிமேகலை, சீத்தலைச் சாத்தனார்

3] பாஞ்சாலி சபதம், பாரதியார்

**4] சிலப்பதிகாரம், இளங்கோவடிகள்**

**14] பிடர்த்தலைப் பீடம் ஏறிய மடக்கொடி; வெற்றிவேல் தடக்கைக் கொற்றவை அல்லள்; அறுவர்க் கிளைய நங்கை இறைவனை; ஆடல்கண் டருளிய அணங்கு சூருடைக்; கானகம் உகந்த காளி தாருகன் - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

1] சீவக சிந்தாமணி, திருத்தக்கதேவர்

2] மணிமேகலை, சீத்தலைச் சாத்தனார்

3] பாஞ்சாலி சபதம், பாரதியார்

**4] சிலப்பதிகாரம், இளங்கோவடிகள்**

**15] பேருரங் கிழித்த பெண்ணு மல்லள்; செற்றனள் போலும் செயிர்த்தனள் போலும்; பொற்றொழிற் சிலம்பொன் றேந்திய கையள்; கணவனை இழந்தாள் கடையகத் தாளே, என; வருக மற்றவள் தருக ஈங்கென - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

1] சீவக சிந்தாமணி, திருத்தக்கதேவர்

2] மணிமேகலை, சீத்தலைச் சாத்தனார்

3] பாஞ்சாலி சபதம், பாரதியார்

**4] சிலப்பதிகாரம், இளங்கோவடிகள்**

**16] வாயில் வந்து கோயில் காட்டக்; கோயில் மன்னனைக் குறுகினள் சென்றுழி; நீர்வார் கண்ணை எம்முன் வந்தோய்; யாரை யோநீ மடக்கொடி யோய்எனத்; தேரா மன்னா செப்புவ துடையேன்; - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

1] சீவக சிந்தாமணி, திருத்தக்கதேவர்

2] மணிமேகலை, சீத்தலைச் சாத்தனார்

3] பாஞ்சாலி சபதம், பாரதியார்

**4] சிலப்பதிகாரம், இளங்கோவடிகள்**

**17] எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப்; புள்ளுறு புன்கண் தீர்த்தோன் அன்றியும்; வாயிற் கடைமணி நடுநா நடுங்க; ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சு சுடத் தான்தன்; அரும்பெறல் புதல்வனை ஆழியின் மடித்தோன்; - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

1] சீவக சிந்தாமணி, திருத்தக்கதேவர்

2] மணிமேகலை, சீத்தலைச் சாத்தனார்

3] பாஞ்சாலி சபதம், பாரதியார்

**4] சிலப்பதிகாரம், இளங்கோவடிகள்**

**18] பெரும்பெயர்ப் புகாரென் பதியே அவ்வூர்; ஏசாச் சிறப்பின் இசைவிளங்கு பெருங்குடி; மாசத்து வாணிகன் மகனை யாகி; வாழ்தல் வேண்டி ஊழ்வினை துரப்பச்; சூழ்கழல் மன்னா நின்னகர்ப் புகுந்தீங்; - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

1] சீவக சிந்தாமணி, திருத்தக்கதேவர்

2] மணிமேகலை, சீத்தலைச் சாத்தனார்

3] பாஞ்சாலி சபதம், பாரதியார்

**4] சிலப்பதிகாரம், இளங்கோவடிகள்**

**19] கென்காற் சிலம்புபகர்தல் வேண்டி நின்பாற்; கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி; கண்ணகி யென்பதன் பெயரேயெனப், பெண்ணணங்கே; கள்வனைக்**

**கோறல் கடுங்கோ லன்று; வெள்வேற் கொற்றங் காண்என ஒள்ளிழை; - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

1] சீவக சிந்தாமணி, திருத்தக்கதேவர்

2] மணிமேகலை, சீத்தலைச் சாத்தனார்

3] பாஞ்சாலி சபதம், பாரதியார்

**4] சிலப்பதிகாரம், இளங்கோவடிகள்**

**20] நற்றிறம் படராக் கொற்கை வேந்தே; என்காற் சிலம்பு மணியுடை அரியே, எனத்; தேமொழி யுரைத்தது செவ்வை நன்மொழி; யாமுடைச் சிலம்பு முத்துடை அரியே; தருகெனத் தந்து தான்முன் வைப்பக்; - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

1] சீவக சிந்தாமணி, திருத்தக்கதேவர்

2] மணிமேகலை, சீத்தலைச் சாத்தனார்

3] பாஞ்சாலி சபதம், பாரதியார்

**4] சிலப்பதிகாரம், இளங்கோவடிகள்**

**21] கண்ணகி அணிமணிக் காற்சிலம் புடைப்ப; மன்னவன், வாய்முதல் தெறித்தது மணியே, மணிகண்டு; தாழ்ந்த குடையன் தளர்ந்தசெங் கோலன்; பொன்செய் கொல்லன் தன்சொல் கேட்ட; யானோ அரசன் யானே கள்வன்; - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

1] சீவக சிந்தாமணி, திருத்தக்கதேவர்

2] மணிமேகலை, சீத்தலைச் சாத்தனார்

3] பாஞ்சாலி சபதம், பாரதியார்

**4] சிலப்பதிகாரம், இளங்கோவடிகள்**

**22] மன்பதை காக்குந் தென்புலங் காவல்; என்முதற் பிழைத்தது கெடுகவென் ஆயுளென; மன்னவன் மயங்கிவீழ்ந் தனனே தென்னவன்; கோப்பெருந் தேவி குலைந்தனள் நடுங்கிக்; கணவனை இழந்தோர்க்குக் காட்டுவ தில்லென்று; இணையடி தொழுதுவீழ்ந் தனளே மடமொழி; - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

1] சீவக சிந்தாமணி, திருத்தக்கதேவர்

2] மணிமேகலை, சீத்தலைச் சாத்தனார்

3] பாஞ்சாலி சபதம், பாரதியார்

**4] சிலப்பதிகாரம், இளங்கோவடிகள்**

**23] கொற்கை என்னும் துறைமுகத்தை உடைய மன்னன்?**

1] சேரன் 2] சோழன் **3] பாண்டியன்** 4] பல்லவன்

**24] தெற்குப் பகுதியில் உள்ள பொதியமலைக்குத் தலைவன்?**

1] சேரன் 2] சோழன் **3] பாண்டியன்** 4] பல்லவன்

**25] வெற்றிதரும் வேலினைத் தன்பெரிய கையில் ஏந்தி, "பீறிட்டு எழும் குருதி ஒழுகும் பிடர்த்தலை பீடத்தில் ஏறிய இளங்கொடி யார்?**

**1] கொற்றவை**

2] பிடாரி

3] பத்ரகாளி

4] காளி

**26] கன்னியர் எழுவருள் இளையவள் யார்?**

1] கொற்றவை

**2] பிடாரி**

3] பத்ரகாளி

4] காளி

**27] இறைவனை நடனமாடச் செய்தவர் யார்?**

1] கொற்றவை

2] பிடாரி

**3] பத்ரகாளி**

4] காளி

**28] அச்சம் தரும் காட்டைத் தான் விரும்பு இடமாகக் கொண்டவர் யார்?**

1] கொற்றவை

2] பிடாரி

3] பத்ரகாளி

**4] காளி**

**29] தாருகன் என்ற அசுரனின் பரந்த மார்பைப் பிளந்தவர் யார்?**

1] கொற்றவை

2] பிடாரி

3] பத்ரகாளி

**4] துர்க்கை**

**30] ‘இளமையான கொடி போன்றவளே! நீரொழுகும் கண்களுடன் எம்முன் வந்து நிற்கும் நீ, யார்? என வினவியவர் யார்?**

1] கவுந்தியடிகள்

2] அரண்மனை வாயிற் காவலன்

3] கோப்பெருந்தேவி

**4] மன்னன்**

**31] “ஆராய்ந்து அறிந்து நீதி வழங்காத மன்னனே! உன்னிடம் கூறுவது ஒன்றுண்டு " - இவ்வாறு கூறியவர் யார்?**

1] கோவலன்

**2] கண்ணகி**

3] கவுந்தியடிகள்

4] மாதரி

**32] புறாவின் துன்பத்தைப் போக்கிய மன்னன்?**

1] பேகன்

2] ஓரி

**3] சிபி**

4] செங்குட்டுவன்

**33] தன் அரண்மனை மணி ஒலித்ததைக் கேட்டுப் பசுவின் துயரை அறிந்து, தன் ஒப்பற்ற மகனையே தேர்ச்சக்கரத்திலிட்டுக் கொன்ற மன்னன்?**

1] கரிகாலன்

2] ராஜராஜன்

**3] மனுநீதிச்சோழன்**

4] முதலாம் ராஜேந்திரன்

**34] கண்ணகி பிறந்த ஊர்?**

1] காஞ்சி

**2] புகார்**

3] மதுரை

4] இவற்றில் ஏதுமில்லை

**35] "கள்வனைக் கொலை செய்தல் கொடுங்கோலன்று, அதுவே அரசு நீதி" என்று கூறியவர்?**

1] கோப்பெருந்தேவி

2] அரண்மனை வாயிற் காவலன்

3] அவைக்கலப் புலவர்

**4] பாண்டிய மன்னன்**

**36] கண்ணகி "அறநெறியில் செல்லாத அரசனே! என் காற்சிலம்பு ---------------- பரல்களைக் கொண்டது" என்றாள்.**

1] வைரம்

2] வைடூரியம்

3] முத்து

**4] மாணிக்கம்**

**37] அரசன், “நீ கூறியது நல்லதே! எம்முடைச் சிலம்பின் பரல்கள் ---------” என்றான்.**

1] வைரம்

2] வைடூரியம்

**3] முத்து**

4] மாணிக்கம்

**38] சிலம்பினைக் கண்ணகி எடுத்து ஓங்கி உடைத்தாள். அதிலிருந்து வெளிப்பட்ட --------------- ஒன்று பாண்டிய மன்னனின் உதட்டில்பட்டுத் தெறித்தது.**

1] வைரப் பரல்

2] முத்துப் பரல்

**3] மாணிக்கப்பரல்**

4] கோமேதகப் பரல்

**39] “கணவனை இழந்த மகளிர்க்கு, எவ்விதத்திலும் ஆறுதல் கூற இயலாது” என்று கூறியவர்?**

**1] கோப்பெருந்தேவி**

2] கண்ணகி

3] மாதரி

4] இவர்களில் யாருமில்லை

**40] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

**1] கொற்கை - சோழ நாட்டின் துறைமுகம்**

2] தென்னம் பொருப்பு - தென் பகுதியில் உள்ள பொதிகைமலை

3] பழியொடு படரா - மறநெறியில் செல்லாத

4] பசுந்துணி - பசிய துண்டம்

**குறிப்பு** :- கொற்கை என்பதன் சரியான சொற்பொருள் பாண்டிய நாட்டின் துறைமுகம்.

**41] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக**

1] தடக்கை - நீண்ட கைகள்

**2] அறுவர்க்கு இளைய நங்கை - ஆறு கன்னியருள் இளையவளாகிய பிடாரி**

3] இறைவனை ஆடல் கண்டருளிய அணங்கு - இறைவனை நடனமாடச் செய்த காளி

4] சூருடை கானகம் - அச்சம் தரும் காடு

**குறிப்பு** :- அறுவர்க்கு இளைய நங்கை என்பதன் சரியான சொற்பொருள் ஏழு கன்னியருள் இளையவளாகிய பிடாரி.

**42] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக**

1] உகந்த - விரும்பிய

**2] தாருகன் - தெய்வம்**

3] செற்றம் - கறுவு

4] செயிர்த்தனள் - சினமுற்றவள்

**குறிப்பு** :- தாருகன் என்பதன் சரியான சொற்பொருள் அரக்கன்.

**43] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக**

1] பேர்உரம் கிழித்த பெண் - அகன்ற மார்பினைப் பிளந்த துர்க்கை

2] பொற்றொழில் சிலம்பு - வேலைப்பாடுமிக்க பொற்சிலம்பு

3] நீர்வார்கண் - நீரொழுகும் கண்கள்

**4] தேரா - அறிவில் சிறந்த**

**குறிப்பு** :- தேரா என்பதன் சரியான சொற்பொருள் ஆராயாத.

**44] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக**

1] கடையகத்தாள் - வாயிலின் முன்னிடத்தாள்

2] எள்ளறு - சிறப்பு மிக்க.

3] இமையவர் - தேவர்

4] புள் - பறவை (புறா)

**குறிப்பு** :- எள்ளறு என்பதன் சரியான சொற்பொருள் இகழ்ச்சி இல்லாத.

**45] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக**

**1] புன்கண் - இன்பம்**

2] கடைமணி - அரண்மனை வாயில்மணி

3] ஆழி - தேர்ச்சக்கரம்

4] ஏசா - பழியில்லா

**குறிப்பு** :- புன்கண் என்பதன் சரியான சொற்பொருள் துன்பம்.

**46] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக**

**1] கோறல் - சொல்லுதல்**

2] கொற்றம் - அரச நீதி

3] நற்றியம் - அறநெறி

4] படரா - செல்லாத

**குறிப்பு** :- கோறல் என்பதன் சரியான சொற்பொருள் கொல்லுதல்.

**47] மடக்கொடி - இலக்கணக்குறிப்பு தருக?**

**1] அன்மொழித்தொகை**

2] ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

3] உரிச்சொற்றொடர்

4] பண்புத்தொகை

**48] படராப் பஞ்சவ, அடங்காப் பசுந்துணி, தேரா மன்னா, ஏசாச் சிறப்பின் - இலக்கணக்குறிப்பு தருக?**

1] அன்மொழித்தொகை

**2] ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்**

3] உரிச்சொற்றொடர்

4] பண்புத்தொகை

**49] தடக்கை - இலக்கணக்குறிப்பு தருக?**

1] அன்மொழித்தொகை

2] ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

**3] உரிச்சொற்றொடர்**

4] பண்புத்தொகை

**50] புன்கண், பெரும்பெயர், அரும்பெறல், பெருங்குடி, கடுங்கோல், செங்கோலன், நன்மொழி - இலக்கணக்குறிப்பு தருக?**

1] உரிச்சொற்றொடர்

**2] பண்புத்தொகை**

3] அன்மொழித்தொகை

4] ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

**51] உகுநீர், சூழ்கழல், செய்கொல்லன் - இலக்கணக்குறிப்பு தருக?**

1] தொழிற்பெயர்

2] ஆறாம் வேற்றுமைத்தொகை

3] வினையெச்சம்

**4] வினைத்தொகை**

**52] அவ்வூர் - இலக்கணக்குறிப்பு தருக?**

1] பண்புத்தொகை

**2] சேய்மைச்சுட்டு**

3] வினையெச்சம்

4] வினைத்தொகை

**53] வாழ்தல் - இலக்கணக்குறிப்பு தருக?**

**1] தொழிற்பெயர்**

2] வியங்கோள் வினைமுற்று

3] வினையெச்சம்

4] பண்புத்தொகை

**54] என்கால், என்பெயர், நின்னகர், என்பதி - இலக்கணக்குறிப்பு தருக?**

**1] ஆறாம் வேற்றுமைத்தொகை**

2] வியங்கோள் வினைமுற்று

3] வினையெச்சம்

4] பண்புத்தொகை

**55] புகுந்து - இலக்கணக்குறிப்பு தருக?**

1] ஆறாம் வேற்றுமைத்தொகை

2] வியங்கோள் வினைமுற்று

**3] வினையெச்சம்**

4] பண்புத்தொகை

**56] தாழ்ந்த, தளர்ந்த - இலக்கணக்குறிப்பு தருக?**

1] ஆறாம் வேற்றுமைத்தொகை

**2] பெயரெச்சம்**

3] வினையெச்சம்

4] பண்புத்தொகை

**57] வருக, தருக, கெடுக - இலக்கணக்குறிப்பு தருக?**

**1] வியங்கோள் வினைமுற்று**

2] பெயரெச்சம்

3] வினையெச்சம்

4] பண்புத்தொகை

**58] பொருந்தாதது எது? பிரித்தறிதல்.**

**1] எள்ளறு = எள்ள + று**

2] புள்ளறு = புள் + உறு

3] அரும்பெறல் = அருமை + பெறல்

4] பெரும்பெயர் = பெரும் + பெயர்

**குறிப்பு** :- எள்ளறு என்பதன் சரியான பிரித்தறிதல் எள் + அறு.

**59] பொருந்தாதது எது? பிரித்தறிதல்.**

**1] அவ்வூர் = அவ் + ஊர்**

2] பெருங்குடி = பெருமை + குடி

3] புகுந்தீங்கு = புகுந்து + ஈங்கு

4] பெண்ணணங்கு = பெண் + அணங்கு

**குறிப்பு** :- அவ்வூர் என்பதன் சரியான பிரித்தறிதல் அ + ஊர்.

**60] பொருந்தாதது எது? பிரித்தறிதல்.**

**நற்றிறம் = நற் + திறம்**

காற்சிலம்பு = கால் + சிலம்பு

செங்கோல் = செம்மை + கோல்

பைந்தமிழ் = பசுமை + தமிழ்

**குறிப்பு** :- நற்றிறம் என்பதன் சரியான பிரித்தறிதல் நன்மை + திறம்.

**61] இளங்கோவடிகள் -------- மரபினர்.**

**1] சேர** 2] சோழ 3] பாண்டிய 4] பல்லவ

**62] இளங்கோவடிகளின் தந்தை இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், தாய் நற்சோணை. இவர்தம் தமையன் --------------------.**

1] பெருஞ்சேரலாதன்

2] கோப்பெருஞ்சேரல் இரும்பொறை

3] கணைக்கால் இரும்பொறை

**4] சேரன் செங்குட்டுவன்**

**63] இளையவரான இளங்கோவே நாடாள்வார் என்று ---------- கூறிய கருத்தைப் பொய்ப்பிக்கும்பொருட்டு, இளங்கோ இளமையிலேயே துறவுபூண்டு குணவாயிற் கோட்டத்தில் தங்கினார்.**

1] மணியன்

2] செழியன்

3] விழியன்

**4] கணியன்**

**64] கீழ்க்கண்ட கூற்று யாரைப் பற்றியது?**

**இவர், அரசியல் வேறுபாடு கருதாதவர். சமய வேறுபாடற்ற துறவி, இவர் காலம் கி.பி இரண்டாம் நூற்றாண்டு. இவரின், சிறப்புணர்ந்த பாரதியார், "யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல் வள்ளுவர்போல் இளங்கோவைப்போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை, உண்மை வெறும் புகழ்ச்சியில்லை" எனப் புகழ்கிறார்.**

1] திருவள்ளுவர்

2] கம்பன்

**3] இளங்கோவடிகள்**

4] இவர்களில் யாருமில்லை

**65] இளங்கோவடிகள் அவர்களின் காலம் ?**

1] கி.பி ஒன்றாம் நூற்றாண்டு

**2] கி.பி இரண்டாம் நூற்றாண்டு**

3] கி.பி பதினொன்றாம் நூற்றாண்டு

4] கி.பி பன்னிரண்டாம் நூற்றாண்டு

**66] சிலப்பதிகாரம் = ?**

1] சிலப்பதி + காரம்

2] சில + அதிகாரம்

**3] சிலம்பு + அதிகாரம்**

4] இவற்றில் ஏதுமில்லை

**67] ---------- என்பவரின் சிலம்பால் விளைந்த கதையை முதன்மையாகக் கொண்டது. ஆதலின், சிலப்பதிகாரமயிற்று.**

1] கோவலன்

**2] கண்ணகி**

3] மாதவி

4] மாதரி

**68] சிலப்பதிகாரம் என்னும் செந்தமிழ்க் காப்பியம் புகார்க்காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்டம் என்னும் முப்பெருங் காண்டங்களையும் ----------- காதைகளையும் உடையது.**

1] இருபது

**2] முப்பது**

3] நாற்பது

4] ஐம்பது

**69] சிலப்பதிகாரத்தில் ---------- காண்டங்களும், ------------- காதைகளும் உள்ளன.**

1] 2, 20

**2] 3, 30**

3] 4, 40

4] 5, 50

**70] புகார்க்காண்டம் ------------- காதைகளையும், மதுரைக்காண்டம் ----------- காதைகளையும், வஞ்சிக்காண்டம் -------- காதைகளையும் கொண்டுள்ளது.**

1] 7, 13, 10

2] 7, 10, 13

3] 10, 7, 13

**4] 10, 13, 7**

**71] இந்நூல் "உரையிடையிட்ட பாட்டுடைச்செய்யுள்" எனவும் வழங்கப்பெறும்.**

1] மணிமேகலை

2] சீவக சிந்தாமணி

**3] சிலப்பதிகாரம்**

4] வளையாபதி

**72] முதற் காப்பியம், முத்தமிழ்க் காப்பியம், குடிமக்கள் காப்பியம், ஒற்றுமைக் காப்பியம், நாடகக் காப்பியம் என --------- நூலைப் போற்றிப் புகழ்வர்.**

1] மணிமேகலை

2] சீவக சிந்தாமணி

**3] சிலப்பதிகாரம்**

4] வளையாபதி

**73] " நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணியாரம் படைத்த தமிழ்நாடு" என --------- என்னும் கவிஞர் சிலப்பதிகாரம் நூலைப் பாராட்டியுள்ளார்.**

1] பாரதிதாசன்

2] வாணிதாசன்

**3] பாரதியார்**

4] திரு.வி.க

**74] மதுரைக்காண்டத்தின் பத்தாவது காதை ---------.**

1] நாடுகாண் காதை

**2] வழக்குரை காதை**

3] கட்டுரைக் காதை

4] வரந்தருகாதை

**75] சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி ஆகியன தமிழில் உள்ள ஐம்பெருங்காப்பியங்கள். இவற்றுள் முதன்மையானது சிலப்பதிகாரம். காலத்தாலும் கதைத்தொடர்பாலும் பாவகையாலும் ஒன்றுபட்ட ------------------------, -------------- நூல்களை இரட்டைக்காப்பியம் என வழங்குவர்.**

1] சிலப்பதிகாரம், குண்டலகேசி

2] சிலப்பதிகாரம், வளையாபதி

**3] சிலப்பதிகாரம், மணிமேகலை**

4] சிலப்பதிகாரம், சீவசிந்தாமணி

**76] சேரன் செங்குட்டுவன், ------------ மற்றும் இளங்கோவடிகளோடும் மலைவளம் காணச் சென்றான்.**

1] ஔவையார்

**2] சீத்தலைச்சாத்தனார்**

3] கம்பர்

4] புகழேந்திப் புலவர்

**77] மலைவாழ் மக்கள், "வேங்கை மரத்தின் கீழ் ஒரு பெண்தெய்வத்தைப் பார்த்தோம்" என்று கூற, உடனிருந்த பெரும்புலவர் ------------------,**

**“அப்பெண்ணின் வரலாற்றை யானறிவேன்” என்று கோவலன் கண்ணகி வரலாற்றைச் சுருக்கமாகக் கூறினார்.**

1] ஔவையார்

**2] சீத்தலைச்சாத்தனார்**

3] கம்பர்

4] புகழேந்திப் புலவர்

**78] “இக்கதையைச் சிலப்பதிகாரம் என்னும் பெயரால் யாம் இயற்றுவோம்” என்று கூறியவர் யார்?**

1] ஔவையார்

2] சீத்தலைச்சாத்தனார்

3] கம்பர்

**4] இளங்கோவடிகள்**

**79] “இக்கதையைச் சிலப்பதிகாரம் என்னும் பெயரால் யாம் இயற்றுவோம்” என்று இளங்கோவடிகள் கூறினார். அதற்கு ---------- என்ற புலவரும், “அடிகள் நீரே அருளுக” என்றார். இவ்வாறே சிலப்பதிகாரம் உருவாயிற்று.**

1] ஔவையார்

**2] சீத்தலைச்சாத்தனார்**

3] கம்பர்

4] இளங்கோவடிகள்

**80] “அரசியல் பிழைத்தோர்க்கு அறங் கூற்றாகும், உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர், ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும்” என்னும் முப்பெரும் உண்மைகளைச் --------- நூல் உணர்த்துகிறது.**

1] மணிமேகலை

2] சீவக சிந்தாமணி

**3] சிலப்பதிகாரம்**

4] வளையாபதி

**81] எளியநடை யில்தமிழ்நூல் எழுதிடவும் வேண்டும் இலக்கணநூல் புதிதாக இயற்றுதலும் வேண்டும் வெளியுலகில் சிந்தனையில் புதிதுபுதி தாக விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்களெலாங் கண்டு - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] பாரதியார்

**2] பாரதிதாசன்**

3] வாணிதாசன்

4] நாமக்கல் கவிஞர்

**82] தெளிவுறுத்தும் படங்களொடு சுவடியெலாம் செய்து செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதுவும் வேண்டும் எளிமையினால் ஒருதமிழன் படிப்பில்லை யென்றால் இங்குள்ள எல்லாரும் நாணிடவும் வேண்டும். - - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] பாரதியார்

**2] பாரதிதாசன்**

3] வாணிதாசன்

4] நாமக்கல் கவிஞர்

**83] உலகியலின் அடங்கலுக்கும் துறைதோறும் நூற்கள் ஒருத்தர்தயை இல்லாமல் ஊறறியும் தமிழில் சலசலவென எவ்விடத்தும் பாய்ச்சிவிட வேண்டும் தமிழொளியை மதங்களிலே சாய்க்காமை வேண்டும் - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] பாரதியார்

**2] பாரதிதாசன்**

3] வாணிதாசன்

4] நாமக்கல் கவிஞர்

**84] இலவச நூற் கழகங்கள் எவ்விடத்தும் வேண்டும் எங்கள் தமிழ் உயர்வென்று நாம்சொல்லிச் சொல்லித் தலைமுறைகள் பலகழித்தோம் ; குறைகளைந்தோமில்லை தகத்தகாயத் தமிழைத் தாபிப்போம் வாரீர். - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] பாரதியார்

**2] பாரதிதாசன்**

3] வாணிதாசன்

4] நாமக்கல் கவிஞர்

**85] தமிழ் நூல்களை எளிய நடையில் எழுதுதல்வேண்டும். இலக்கண நூல்களைப் புதிதாகப் படைத்தல் வேண்டும். உலகின் புதிய ஆய்வுச் சிந்தனைகளைத் தமிழ்ப்படுத்தி விளக்க படங்களுடன் நூல்களாக்கிச் செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்தல் வேண்டும். - என்று கூறியவர் யார்?**

1] பாரதியார்

**2] பாரதிதாசன்**

3] வாணிதாசன்

4] நாமக்கல் கவிஞர்

**86] வறுமையினால் தமிழன் ஒருவன் கல்லாத நிலை ஏற்படுமானால், இங்குள்ளோர் நாணம் அடைதல் வேண்டும். பல்வேறு துறை நூல்களைப் பிறர் துணையின்றி எல்லாரும் படித்தறிந்து கொள்ளும் வகையில், தமிழில் வெளியிடல் வேண்டும். - என்று கூறியவர் யார்?**

1] பாரதியார்

**2] பாரதிதாசன்**

3] வாணிதாசன்

4] நாமக்கல் கவிஞர்

**87] தமிழறிவை மதங்களுக்குள் அடக்காமை வேண்டும். இலவச நூல்நிலையங்கள் ஊர்தோறும் ஏற்படுத்தல் வேண்டும். - என்று கூறியவர் யார்?**

1] பாரதியார்

**2] பாரதிதாசன்**

3] வாணிதாசன்

4] நாமக்கல் கவிஞர்

**88] தமிழின் பெருமைகளைக் கூறுவதிலேயே காலம் கழித்தோம். குறைகளை நீக்கிப் புதுமைகளைப் படைத்தோமில்லை. உலகின் ஒளிமிக்க மொழியாகத் தமிழை வளர்ப்போம், வாரீர் - என்று கூறியவர் யார்?**

1] பாரதியார்

**2] பாரதிதாசன்**

3] வாணிதாசன்

4] நாமக்கல் கவிஞர்

**89] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] தெளிவுறுத்தும் - விளக்கமாய் காட்டும்

2] சுவடி - நூல்

**3] எளிமை - செல்வம் மிகுந்த**

4] நாணிடவும் - வெட்கப்படவும்

**குறிப்பு** :- எளிமை என்பதன் சரியான சொற்பொருள் வறுமை.

**90] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] உலகியலின் அடங்கலுக்கும் - வாழ்வியல் முழுமைக்கும்

2] தகத்தகாய - ஒளிமிகுந்த (சிறப்பு மிகுந்த)

**3] சாய்க்காமை - புரியாதிருத்தல்**

4] நூற்கழகங்கள் - நூலகங்கள்

**குறிப்பு** :- சாய்க்காமை என்பதன் சரியான சொற்பொருள் அழிக்காமை.

**91] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

**1] களைந்தோம் - சேர்த்தோம்**

2] தாபிப்போம் - நிலைநிறுத்துவோம்

3] கேழல் - பன்றி

4] நவ்வி - மான்

**குறிப்பு** :- களைந்தோம் என்பதன் சரியான சொற்பொருள் நீக்கினோம்.

**92] புதிது புதிது, சொல்லிச் சொல்லி - இலக்கணக்குறிப்பு தருக.**

1] இரட்டைக்கிளவி

2] ஒரு பொருட்பன்மொழி

**3] அடுக்குத்தொடர்**

4] வியங்கோள் வினைமுற்று

**93] செந்தமிழ் - இலக்கணக்குறிப்பு தருக.**

**1] பண்புத்தொகை**

2] வினைத்தொகை

3] வினையெச்சம்

4] வியங்கோள் வினைமுற்று

**94] சலசல - இலக்கணக்குறிப்பு தருக.**

**1] இரட்டைக்கிளவி**

2] ஒரு பொருட்பன்மொழி

3] அடுக்குத்தொடர்

4] வியங்கோள் வினைமுற்று

**95] விடுபட்டதை நிரப்புக. பகுபத உறுப்பிலக்கணம் :-**

**கழித்தோம் = கழி + த் + த் + ஓம். கழி - பகுதி; த் - சந்தி; த் - இறந்தகால இடைநிலை; ஓம் ------------------?.**

1] முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி

2] பெண்பால் வினைமுற்று விகுதி

3] ஆண்பால் வினைமுற்று விகுதி

**4] தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி**

**96] விடுபட்டதை நிரப்புக. பகுபத உறுப்பிலக்கணம் :-**

**களைந்தோம் = களை + த்(ந்) + த் + ஓம். களை - பகுதி; த் - சந்தி; த் - ந் ஆனது விகாரம்; த் -----------; ஓம் - தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி.**

1] நிகழ்கால இடைநிலை

**2] இறந்தகால இடைநிலை**

3] எதிர்கால இடைநிலை

4] இவற்றில் ஏதுமில்லை

**97] பொருந்தாதது எது? பிரித்தறிதல்**

1] வெளியுலகில் = வெளி + உலகில்

**2] செந்தமிழ் = செந் + தமிழ்**

3] ஊரறியும் = ஊர் + அறியும்

4] எவ்விடம் = எ + இடம்

**குறிப்பு** :- செந்தமிழ் என்பதன் சரியான பிரித்தறிதல் செம்மை + தமிழ்.

**98] பாவேந்தர் பாரதிதாசனின் இயற்பெயர் ----------?**

1] துரை மாணிக்கம்

2] உ.வே.சா

3] அய்யாக்கண்ணு

**4] சுப்புரத்தினம்**

**99] பாவேந்தர் பாரதிதாசன் -------- ஆம் ஆண்டு ஏப்பிரல் 29 ஆம் நாள் புதுவையில் பிறந்தார்.**

1] 1851 2] 1871 **3] 1891** 4] 1911

**100] பாவேந்தர் பாரதிதாசனின் பெற்றோர் பெயர்?**

1] வெங்கட்ராமன் - அம்மணி அம்மாள்

2] சாத்தப்பன் - விசாலட்சுமி

3] ஆண்டித்துரை - செல்லம்மாள்

**4] கனகசபை - இலக்குமி**

**101] ------------- என்பவரின் மேல் கொண்ட பற்றால் தம்பெயரைப் பாரதிதாசன் என மாற்றிக்கொண்டார்.**

1] சுத்தானந்த பாரதி

2] மறைமலையடிகள்

**3] பாரதியார்**

4] ந.மு.வேங்கடசாமி

**102] கீழ்க்கண்ட கூற்று யாரைப் பற்றியது?**

**இவர் பாவேந்தர், புரட்சிக்கவிஞர் ஆகிய சிறப்புப் பெயரால் வழங்கப்படுகிறார். குடும்பவிளக்கு, இருண்டவீடு, தமிழியக்கம், பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு முதலியன இவர்தம் படைப்புகளாம். ---------------- பரம்பரை என்றொரு கவிஞர்**

**பரம்பரையே அவர் காலத்தில் உருவானது. தமிழக அரசு, பாவேந்தர் படைப்புகளை நாட்டுடைமையாக்கியுள்ளது. ஆண்டு தோறும் சிறந்த கவிஞர்களுக்குப் பாவேந்தர் விருது வழங்கி வருகிறது.**

1] பாரதியார்

**2] பாரதிதாசன்**

3] வாணிதாசன்

4] நாமக்கல் கவிஞர்

**103] ---------- என்ற இடத்தில் பாரதிதாசன் பெயரில் பல்கலைக்கழகம் அமைத்துச் சிறப்புச் சேர்த்துள்ளது அரசு.**

1] மதுரை

2] தூத்துக்குடி

**3] திருச்சி**

4] சென்னை

**104] பாரதிதாசனார் ------------ என அழைக்கப்படுகிறார்?**

**1] புரட்சிக்கவிஞர்**

2] தேசியக்கவிஞர்

3] உவமைக்கவிஞர்

4] இவற்றில் ஏதுமில்லை

**105] குடும்ப விளக்கு ----------- படைப்புகளுள் ஒன்று.**

1] பாரதியார்

**2] பாரதிதாசன்**

3] வாணிதாசன்

4] நாமக்கல் கவிஞர்

**106] தொண்டு செய்து பழுத்த பழம், தூயதாடி மார்பில் விழும், மண்டைச் சுரப்பை உலகு தொழும். மனக்குகையில் சிறுத்தை எழும் - இந்த பாடல் வரிகள் பெரியாரைப் பற்றியது. இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] பாரதியார்

**2] பாரதிதாசன்**

3] வாணிதாசன்

4] நாமக்கல் கவிஞர்

**107] நாட்டு விடுதலைக்குப் போராடிய --------------- என்பவர், பெண்களின் சமூக விடுதலைக்கும் போராடினார்.**

1] அண்ணா

2] மபொ சிவஞானம்

3] மு.வரதராசனார்

**4] பெரியார்**

**108] இந்த கூற்று யாருடன் தொடர்புடையது?**

**பெண் விடுதலைச் சிந்தனை இரண்டு வகை ஆகும். ஒன்று அடிப்படைத் தேவைகள், பிறிதொன்று அகற்றப்பட வேண்டியவை. அடிப்படைத் தேவைகள் :- பெண்கல்வி, பெண்ணுரிமை, சொத்துரிமை, அரசுப்பணி அகற்றப்பட வேண்டியவை :- குழந்தைத் திருமணம், மணக்கொடை, கைம்மை வாழ்வு.**

1] அண்ணா

2] காந்தியடிகள்

3] மு.வரதராசனார்

**4] பெரியார்**

**109] பெண்கள் முன்னேற்றத்திற்குப் பெருந்தடை, வீட்டில் அவர்களை முடக்கி வைத்ததே. இது நாட்டு நடப்பை அறியவிடாமல் அவர்களின் அறிவை மறைக்கச் செய்வதாகும். `நமது சமுதாயத்தில் பெண்கள் சார்ந்த தலைகீழான ஒரு புரட்சி ஏற்பட்டாலொழிய, பெரிய மாறுதல்களைக் கொண்டு வரவியலாது. அப்படி மாறுதல்கள் ஏற்பட்டாலும் அதனால் பயனொன்றும் விளையாது. - இது யாருடைய கூற்று?**

1] அண்ணா

2] காந்தியடிகள்

3] மு.வரதராசனார்

**4] பெரியார்**

**110] பெண்கள் மனிதப் பிறவிகளாக நடமாட வேண்டுமானால், முதலில் அடுப்பங்கரையை விட்டு அவர்களை வெளியேற்ற வேண்டும். பெண்கள் கல்வி பெறுவது அவர்கள் உரிமை மட்டுமன்று; சமூக மாற்றத்திற்கு மிக இன்றியமையாததும் ஆகும். பெண்கள் கல்வி கற்றாலொழிய சமூக மாற்றங்கள் ஏற்படாது' - இது யாருடைய கூற்று?**

1] அண்ணா

2] காந்தியடிகள்

3] மு.வரதராசனார்

**4] பெரியார்**

**111] "ஆண்கள் பெண்களைப் படிக்க வைக்க வேண்டும். அவர்களுக்கு உலகப் படிப்பும், ஆராய்ச்சிப் படிப்பும் தாராளமாய்க் கொடுக்கவேண்டும். நாட்டிலுள்ள கேடுகளில் எல்லாம் பெருங்கேடு பெண்களைப் பகுத்தறிவற்ற சீவன்களாய் வைத்திருக்கும் கொடுமை; இவ்விழிநிலை ஒழிக்கப்பட வேண்டும்" - இது யாருடைய கூற்று?**

1] அண்ணா

2] காந்தியடிகள்

3] மு.வரதராசனார்

**4] பெரியார்**

**112] பெண்கள் உரிமை பெற்றுப் புது உலகைப் படைக்கவேண்டும் என்று விரும்பியவர் இவர். அதற்காக இவர், அவர்களை ஆயத்தப்படுத்தும் முறையே தனியானது. ` ஆணுக்குப் பெண் இளைப்பில்லை' என்று சிந்தித்தவர் இவர். ` பெண்கள் தத்தம் கணவனுக்கு மட்டுமே உழைக்கும் அடிமையாக இராமல், மனிதசமுதாயத்திற்குத் தொண்டாற்றும் புகழ் பெற்ற பெண்மணிகளாக விளக்கவேண்டும்' என்று வலியுறுத்தியவர் இவர். - இது யாருடைய கூற்று?**

1] அண்ணா

2] காந்தியடிகள்

3] மு.வரதராசனார்

**4] பெரியார்**

**113] ------------- என்பவர், பெண்ணுரிமை மறுப்புக்கான காரணங்களை நன்கு ஆராய்ந்தார். பெண்களுக்கு வழிவழிவரும் சொத்துரிமை மறுக்கப்பட்டமையே அவர்களின் அடிமை வாழ்வுக்கு அடிகோலியது என்று உணர்ந்தார். அதற்காக, அவர்கள் போராடவும் கிளர்ச்சி செய்யவும் வேண்டுமெனக் கூறினார்.**

1] அண்ணா

2] காந்தியடிகள்

3] மு.வரதராசனார்

**4] பெரியார்**

**114] "பெண்களுக்குச் சொத்துரிமை கொடுத்துவிட்டால், அவர்களுக்கு இருக்கும் எல்லா வகையான அடிமைத்தனங்களும் ஒழிந்துபோகும். பெண்ணடிமை என்பதற்குள்ள காரணங்கள் பலவற்றில் சொத்துரிமை இல்லாதது என்பதே முதன்மையான காரணம். ஆதலால், பெண்கள் தாராளமாகவும் துணிவுடனும் முன்வந்து சொத்துரிமைக்குக் கிளர்ச்சி செய்யவேண்டியது மிகவும் இன்றியமையாத உடனடிச் செயலாகும்' ' - இது யாருடைய கூற்று?**

1] அண்ணா

2] காந்தியடிகள்

3] மு.வரதராசனார்

**4] பெரியார்**

**115] அனைத்துத் துறைகளிலும் ஆண்களைப்போலவே பெண்களும் அரசுப்பணியைப் பெறவேண்டும். அரசாங்கத்தின் அனைத்துத் துறைகளிலும் பெண்கள் பணியாற்றும்போது, நம் சமுதாயத்தில் புரட்சி ஏற்படும். - என்று கூறியவர் யார்?**

1] அண்ணா

2] காந்தியடிகள்

3] மு.வரதராசனார்

**4] பெரியார்**

**116] விடுதலைக்கு முன்னிருந்த பெருங்கொடுமைகளுள் குழந்தை மணமும் ஒன்று. ஆளும் அறிவும் வளர்வதற்கு முன்பாக வாழ்க்கைப் பயணமா ? இது, சிற்றில் சிதைத்து விளையாடும் பருவத்தில் பெற்றோர் செய்த வேதனை விளையாட்டு எனக்கூறி அதனை நீக்கப் பாடுபட்டவர் யார்?**

1] அண்ணா

2] காந்தியடிகள்

3] மு.வரதராசனார்

**4] பெரியார்**

**117] தமிழர்களிடம் இன்று பரவியுள்ள பெருநோய் ஒன்று உண்டு. அதுவே மணக்கொடை. பெற்றோர் பலர், தம் மகனின் கல்விக்காகப் பணம், செலவழிப்பதனைத் தங்கள் கடமையைச் சேர்ந்தது எனக் கருதாது, அதை ஏதோ ஒரு தொழிலில் போட்ட முதலீடாகவே கருதுகின்றனர். அந்த முதலீட்டை வட்டியுடன் சேர்த்தே, அவனுக்கு வரப்போகின்ற மனைவிமூலம் மணக்கொடையாய்ப் பெற்றுவிட வேண்டுமென்று துடிக்கின்றனர். - என்று கூறியவர் யார்?**

1] அண்ணா

2] காந்தியடிகள்

3] மு.வரதராசனார்

**4] பெரியார்**

**118] சமுதாயத்தில் முறையான ஒழுக்கமும் அன்புமும் தியாக உணர்ச்சியும் ஏற்பட்டால்தான், இம்மாதிரியான தீமைகளை ஒழிக்க இயலும். தமிழ்நாட்டு இளைஞர்கள், மாணவர்கள், பட்டதாரிகள் ஆகியோர் செக்குமாடுகளாக இல்லாமல், பந்தயக்குதிரைகளாக மாறவேண்டும். என்று கூறியவர் யார்?**

1] அண்ணா

2] காந்தியடிகள்

3] மு.வரதராசனார்

**4] பெரியார்**

**119] "தாமே பாடுபட்டு உழைத்து முன்னேறவேண்டும் என்னும் உயர்ந்த எண்ணம், நம் இளைஞர்களிடையே வளரவேண்டும்" என்றும், கணவனை இழந்தோர் மறுமணம் செய்துகொள்வதில் தீங்கில்லை என்றும் கூறியவர் யார்?**

1] அண்ணா

2] காந்தியடிகள்

3] மு.வரதராசனார்

**4] பெரியார்**

**120] ஒரு நாடு வளத்துடன் இருக்கவேண்டுமானால், அந்நாட்டு மக்கள் அனைவரும் ஒத்த ஒழுக்கமுடையவர்களாக இருக்கவேண்டும். ஒழுக்கமென்பதும் கற்பென்பதும் பெண்களுக்கு மட்டும் என்றில்லாமல் ஆண், பெண் இருபாலர்க்கும் பொதுவாகும் என்பது - யாருடைய கூற்று?**

1] அண்ணா

2] காந்தியடிகள்

3] மு.வரதராசனார்

**4] பெரியார்**

**121] --------------- என்பவர், சமூக முரண்களை எதிர்த்தவர்; மூடக்கருத்துகளை முட்டறுத்தவர்; தொலைநோக்குப் பார்வையுடையவர்; பகுத்தறிவுக்குப் பொருந்தாதவற்றை அறுத்து எறிந்தவர்; சமூகமாற்றத்தை விரும்பியவர்.**

1] அண்ணா

2] காந்தியடிகள்

3] மு.வரதராசனார்

**4] பெரியார்**

**122] பெண் அடிமை ஆனதற்கு உரிய காரணங்களுள் ஒன்று ---------- இல்லாமை.**

1] வாக்குரிமை

2] பேச்சுரிமை

3] எழுத்துரிமை

**4] சொத்துரிமை**

**123] மெல்ல மெல்ல மற - என்ற கதையின் ஆசிரியர் யார்?**

1] சோபனா

2] கல்கி

**3] இலட்சுமி**

4] ராஜம் கிருஷ்ணன்

**124] ஓர் எழுத்து தனித்து நின்றோ, பல எழுத்துகள் தொடர்ந்து நின்றோ, பொருள் தருவது --------- எனப்படும்.**

1] மொழி

**2] சொல்**

3] வழு

4] இலக்கணம்

**குறிப்பு** :- பதம், மொழி, கிளவி என்பன ஒரு பொருள் தரும் பல சொற்கள்.

125] **பதம் எத்தனை வகைப்படும்?**

**1] 2** 2] 3 3] 4 4] 5

**குறிப்பு** :- பதம் - பகுபதம் (பகுக்கவியலும் பதம்). பகாப்பதம் (பகுக்கவியலாப் பதம்.)

126] **மொழி எத்தனை வகைப்படும்?**

1] 2 **2] 3** 3] 4 4] 5

**குறிப்பு** :- மொழி - தனிமொழி, தொடர்மொழி, பொதுமொழி.

**மூவகை மொழிகள்** :- மொழி தனிமொழி, தொடர்மொழி, பொதுமொழி என மூவகைப்படும்.

1 . **தனிமொழி** :

ஒரு சொல் தனித்து நின்று பொருளை உணர்த்துவது, தனிமொழி.

(எ.கா.) : வா, கண், செய்தான்.

2 . **தொடர்மொழி** :

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சொற்கள் தொடர்ந்து வந்து பொருளை உணர்த்துவது தொடர்மொழி.

(எ.கா.) : 1. படம் பார்த்தாள்.

2. பசுவும் கன்றும் தோட்டத்தில் மேய்ந்து கொண்டிருக்கின்றன.

3 . **பொதுமொழி** :- ஒரு சொல் தனித்து நின்று ஒரு பொருளையும், அச் சொல்லே பிற சொற்களுடன் தொடர்ந்து நின்று வேறு பொருளையும் தந்து, தனிமொழிக்கும் தொடர்மொழிக்கும் பொதுவாய் அமைவது, பொதுமொழி.

(எ.கா.) : அந்தமான். - 'அந்தமான்' என்பது ஒரு தீவையும், அச்சொல்லே அந்த + மான் எனப் பிரிந்து நின்று, அந்த மான் (விலங்கு) என வேறுபொருளையும் தருகின்றது.

- இதேபோல், பலகை, வைகை, தாமரை, வேங்கை முதலியன தனிமொழியாகவும் பொதுமொழியாகவும் வருவதை அறிக.

**ஒருமொழி ஒருபொருள னவாம் தொடர்மொழி**

**பலபொரு ளனபொது இருமையும் ஏற்பன - நன்னூல்.**

**127] எழுவாய் செய்யும் செயல் அல்லது தொழிலைக் குறிக்கும் சொற்கள் ---------- ?**

1] வினைமுற்று

**2] வினைச்சொற்கள்**

3] தொழிற்பெயர்

4] வினையெச்சம்

**விளக்கம் :- வினைச்சொல் :-**

இராமன் வந்தான். கண்ணன் நடந்தான். இத்தொடர்களில் இராமன், கண்ணன் என்பன பெயர்ச்சொற்கள். அவையே எழுவாய்களாகவும் உள்ளன. வந்தான், நடந்தான் ஆகிய சொற்கள் வருவதும், நடப்பதும் ஆகிய செயல்களைக் குறிப்பதால், இவை வினைச்சொற்கள். இவையே பயனிலைகளாகவும் (முடிக்கும் சொற்களாகவும்) உள்ளன. இவ்வாறு, எழுவாய் செய்யும் செயல் அல்லது தொழிலைக் குறிக்கும் சொற்கள் வினைச்சொற்கள்.

**128] தன்பொருளில், முற்றுப்பெற்று வந்துள்ள வினைச்சொற்களை ------------ என்பர்.**

**1] வினைமுற்று**

2] வினைச்சொற்கள்

3] தொழிற்பெயர்

4] வினையெச்சம்

**குறிப்பு** :- வினைமுற்று :- அருளரசு வந்தான். வளவன் நடந்தான்.

இத்தொடர்களில் வந்தான், நடந்தான் என்னும் வினைச்சொற்களின் பொருள் முற்றுப்பெற்று வந்துள்ளன. இவ்வாறு தன்பொருளில் முற்றுப்பெற்று வந்துள்ள வினைச்சொற்களை வினைமுற்றுகள் என்பர். இது முற்றுவினை எனவும் வழங்கப்படும்.

"வந்தான், நடந்தான்" என்னும் வினைமுற்றுகள் "ஆன்" என்னும் விகுதி பெற்றுள்ளதால், உயர்திணையையும், ஆண்பாலையும், ஒருமை என்ற எண்ணையும், படர்க்கை இடத்தையும், உணர்த்துகின்றன. 'த்' என்ற இடைநிலை வந்துள்ளதால் (நட + த் (ந்) + த் + ஆன்). (வா (வ) + த் (ந்) + த் + ஆன்) இஃது இறந்த காலத்தையும் உணர்த்துகிறது. வினைமுற்று எழுவாய்க்குப் பயனிலையாய் அமையும். முக்காலங்களில் ஒன்றை உணர்த்தும். திணை, பால், எண், இடங்களைக் காட்டும். இவ்வினைமுற்று தெரிநிலை வினைமுற்று, குறிப்பு வினைமுற்று என இருவகைப்படும்.

**129] செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் என்னும் ஆறனையும் தெரிவித்துக் காலத்தை வெளிப்படையாகக் காட்டுவது ------------------------?**

1] குறிப்பு வினைமுற்று

**2] தெரிநிலை வினைமுற்று**

3] வினையெச்சம்

4] வினைத்தொகை

**விளக்கம்** :- தெரிநிலைவினைமுற்று :- செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் என்னும் ஆறனையும் தெரிவித்துக் காலத்தை வெளிப்படையாகக் காட்டுவது தெரிநிலை வினைமுற்று.

(எ.கா.) : உழுதான்.

செய்பவன் - உழவன்.

கருவி - கலப்பை.

நிலம் - வயல்.

செயல் - உழுதல்.

காலம் - இறந்தகாலம்.

செயப்பொருள் - நெல்.

**செய்பவன் கருவி நிலம் செயல் காலம்**

**செய்பொருள் ஆறும் தருவது வினையே - நன்னூல்**

130] **பொருள்முதல் ஆறனையும் அடிப்படையாகக் கொண்டு, முன் சொல்லப்பட்ட செய்பவன் முதலான ஆறனுள் கருத்தா ஒன்றனை மட்டும் தெரிவித்துக் காலத்தைக் குறிப்பாகக் காட்டும் வினைமுற்று, ———————— எனப்படும்.**

1] **குறிப்பு வினைமுற்று**

2] தெரிநிலை வினைமுற்று

3] வினையெச்சம்

4] வினைத்தொகை

**விளக்கம்** :- குறிப்பு வினைமுற்று :- பொருள்முதல் ஆறனையும் அடிப்படையாகக் கொண்டு, முன் சொல்லப்பட்ட செய்பவன் முதலான ஆறனுள் கருத்தா ஒன்றனை மட்டும் தெரிவித்துக் காலத்தைக் குறிப்பாகக் காட்டும் வினைமுற்று, குறிப்பு வினைமுற்று எனப்படும்.

அவன் பொன்னன் - பொன்னை உடையவன் - பொருள்.

அவன் விழுப்புரத்தான் - விழுப்புரத்தில் வாழ்பவன் - இடம்.

அவன் சித்திரையான் - சித்திரையில் பிறந்தவன் - காலம்.

அவன் கண்ணன் - கண்களை உடையவன் - சினை.

அவன் நல்லன் - நல்ல இயல்புகளை உடையவன் - குணம்.

அவன் உழவன் - உழுதலைச் செய்பவன் - தொழில்.

- அவன் என்னும் எழுவாய்க்குப் பயனிலையாய் வந்த "பொன்னன்" . என்பதே குறிப்பு வினை ஆகும். பொன்னை உடையவனாய் இருந்தான், இருக்கின்றான், இருப்பான் எனப் பொன்னன் என்பது முக்காலத்தையும் குறிப்பாக உணர்த்துகிறது.

**131] வினைமுற்றின், விகுதி குறைந்து நிற்கும் சொல்லே -------- எனப்படும்.**

**1] எச்சம்**

2] வினைமுற்று

3] வினைத்தொகை

4] தொழிற்பெயர்

**விளக்கம்** :- கயல்விழி படித்தாள். கோதை சென்றாள். இத்தொடர்களில் படித்தாள், சென்றாள் என்பன வினைமுற்றுகள். இவ்வினைமுற்றுகள் சில இடங்களில் ஆள், என்னும் விகுதி, குறைந்து படித்த, சென்ற எனவும், படித்து, சென்று எனவும் வரும். இச்சொற்கள் பொருளில் முற்றுப்பெறாத முழுமையடையாத வினைச்சொற்கள். ஆதலால், எச்சம் எனப்படும். அல்லது வினைமுற்றின் (ஆள்) விகுதி குறைந்து நிற்கும் சொல்லே எச்சம் எனப்படும்.

**132] ஓர் எச்சவினை ( வந்த, நடந்த ) பெயரைக்கொண்டு முடிந்தால், அது ------------ எனப்படும்.**

**1] பெயரெச்சம்**

2] வினைமுற்று

3] வினைத்தொகை

4] தொழிற்பெயர்

**விளக்கம்:-** பெயரெச்சம்:- படித்த கயல்விழி. சென்ற கோதை,

படித்த, சென்ற என்னும் முற்றுப்பெறாத எச்சவினைகள் கயல்விழி, கோதை எனப் பெயரைக்கொண்டு முடிந்ததால் அவை பெயரெச்சங்கள் எனப்படும். அதாவது, ஓர் எச்சவினை ( வந்த, நடந்த ) பெயரைக்கொண்டு முடிந்தால், அது பெயரெச்சம் எனப்படும்.

இப்பெயரெச்சம் காலவகையால் மூவகைப்படும்.

இறந்தகாலப் பெயரெச்சம் - படித்த கயல்விழி, சென்ற கோதை

நிகழ்காலப் பெயரெச்சம் - படிக்கின்ற கயல்விழி, செல்கின்ற கோதை

எதிர்காலப் பெயரெச்சம் - படிக்கும் கயல்விழி, செல்லும் கோதை

இது தெரிநிலைப் பெயரெச்சம், குறிப்புப் பெயரெச்சம் என இருவகைப்படும்.

**133] பெயரெச்சம் எத்தனை வகைப்படும்?**

**1] 2** 2] 3 3] 4 4] 5

**விளக்கம்** :- [1] **தெரிநிலைப் பெயரெச்சம்**

வந்த பையனைப் பார்த்துக் கண்ணன் நின்றான்.

இத்தொடரில் வந்த என்பது பையன் என்னும் பெயரைக்கொண்டு முடிவதால், பெயரெச்சம் எனப்படும். செய்த, செய்கின்ற, செய்யும் என்பன முறையே முக்காலத்திற்கும் உரிய பெயரெச்ச வாய்பாடுகள்.

இவை முக்காலத்தையும் செயலையும் வெளிப்படையாகக் காட்டிச் செய்பவன் முதலான ஆறும் எஞ்சி நிற்கும். இவை உடன்பாட்டிலும் எதிர்மறையிலும் வரும்.

(எ-டு)

உண்ட இளங்கோவன்.

செய்பவன் - இளங்கோவன்

கருவி - கலம்

நிலம் - வீடு

செயல் - உண்ணுதல்

காலம் - இறந்த காலம்

செய்பொருள் - சோறு

உண்கின்ற இளங்கோவன், உண்ணும் இளங்கோவன் என நிகழ்காலம், எதிர்காலம் காட்டும் பெயரெச்சங்களையும் மேற்கண்டவாறே பொருத்திக் காணலாம்.

**[2] குறிப்புப் பெயரெச்சம்:-**

காலத்தையோ செயலையோ உணர்த்தாமல் பண்பினை மட்டும் உணர்த்தி நின்று, பெயர்ச்சொல்லைக்கொண்டு முடியும் எச்சம், குறிப்புப் பெயரெச்சம் எனப்படும்.

**(எ-டு) நல்ல பையன்**

இத்தொடரில் நல்ல என்னும் சொல் காலத்தையோ செயலையோ உணர்த்தாமல், பண்பினை மட்டும் உணர்த்தி நின்று, பெயர்ச்சொல்லைக்கொண்டு முடிந்துள்ளது.

இது காலத்தைக் (இன்று நல்ல பையன், நேற்று நல்ல பையன், நாளை நல்ல பையன்) குறிப்பால் உணர்த்தும்.

உடன்பாடு - எதிர்மறை

(எ-டு) நல்ல மாணவன் - தீய மாணவன்

**134] முற்றுப்பெறாத வினைச்சொற்கள் (எச்சங்கள்) வேறொரு வினைமுற்றைக்கொண்டு முடிந்தால், அது ---------- எனப்படும்.**

**1] வினையெச்சம்**

2] வினைமுற்று

3] வினைத்தொகை

4] தொழிற்பெயர்

**விளக்கம் :- வினையெச்சம்:-**

முற்றுப்பெறாத வினைச்சொற்கள் (எச்சங்கள்) வேறொரு வினைமுற்றைக்கொண்டு முடிந்தால், அது வினையெச்சம் எனப்படும்.

(எ-டு) படித்து வந்தான், பாடக் கேட்டான், ஓடிச் சென்றான், போய்ப் பார்த்தான்.

-அதாவது, ஓர் எச்சவினை, வினையக்கொண்டு முடிந்தால், அது வினையெச்சம் எனப்படும். இவ்வினையெச்சம் காலவகையால் மூவகைப்படும்.

**இறந்தகால வினையெச்சம் - படித்து வந்தான், ஓடிச் சென்றான்.**

**நிகழ்கால வினையெச்சம் - படித்து வருகின்றான் ஓடிச்செல்கின்றான்**

**எதிர்கால வினையெச்சம் - படித்து வருவான், ஓடிச் செல்வான்.**

இவ்வினையெச்சமும் தெரிநிலை வினையெச்சம், குறிப்பு வினையெச்சம் என இருவகைப்படும். பெயரெச்சத்தில் எச்சங்கள் மட்டுமே செய்த, செய்கின்ற, செய்யும் எனக் காலத்துக்கேற்ப மாறும்; பெயர்கள் மாறா. வினையெச்சத்தில் எச்சங்கள் மாறா. அவை முக்கால வினைமுற்றுகளையும் பெற்றுவரும்.

(1) **தெரிநிலை வினையெச்சம்:-**

படித்துத் தேறினான். படிக்கச் செல்கின்றான்

இத்தொடர்களில் படித்து, படிக்க என்னும் சொற்கள் எச்ச வினையாய் நின்று காலத்தைக் காட்டித் தேறினான், செல்கின்றான்; ஆகிய வினைமுற்றுகளைக் கொண்டு பொருள் முடிவு பெறுகின்றன. இவ்வாறு காலத்தையும், செயலையும் உணர்த்தி வினைமுற்றைக் கொண்டு முடியும் எச்சவினை, தெரிநிலை வினையெச்சம் எனப்படும்.

(2) **குறிப்பு வினையெச்சம்**

மெல்லப் பேசினான். கண்ணன் நோயின்றி வாழ்ந்தான்.

இவ்விரு தொடர்களிலும் உள்ள மெல்ல, இன்றி என்னும் எச்ச வினைச்சொற்கள் காலத்தை வெளிப்படையாக உணர்த்தாமல், பண்பினை உணர்த்தி நின்று, வினைமுற்றைக் கொண்டு முடிந்துள்ளன. ஆகையால், இவை குறிப்பு வினையெச்சம் எனப்படும்.

(3) **முற்றெச்சம்:-**

மைதிலி வந்தனள் பாடினள். முருகன் படித்தனன் தேறினன்.

இத்தொடர்களில், வந்தனள், படித்தனன் என்னும் வினைமுற்றுகள் வந்து, படித்து என்னும் வினையெச்சப் பொருள்களில் நின்று, வேறு வினைமுற்றுகளைக் கொண்டு முடிந்துள்ளன. இவ்வாறு ஒரு வினைமுற்றுச் சொல், எச்சப்பொருளில் வந்து, மற்றொரு வினைமுற்றைக் கொணடு முடிவதே முற்றெச்சம் எனப்படும்.

**135] நான்மாடக்கூடலில் நிற்கின்றேன்; நானிலம் போற்றிடும் தனிச் சிறப்பினைப் பெற்றுத் தமிழகத்தின் அறிவுக் கோட்டமாய்த் திகழ்ந்தது இம் மதுரையம்பதி என்ற எண்ணம் தந்திடும் எழுச்சி பொங்கிடும் நிலையில் நிற்கின்றேன். பட்டம் பெற்றிடுகின்றீர்! - இது யாருடைய கூற்று?**

1] ஈ.வே.ரா

**2] அண்ணா**

3] திரு.வி.க

4] பெரியார்

**136] பல்கலையில் வல்லுநர் ஆகிடுகின்றீர்! பல்கலைக்கழகம் ஈன்றெடுத்த நன்மணிகளாகின்றீர்! ஆம்! ஆயின் இஃது முடிவா, தொடக்கமா? அஃதே கேள்வி ! பட்டம் பெற்றுள்ளீர்! பாராட்டுக்குரியீர், ஐயமில்லை. - இது யாருடைய கூற்று?**

1] ஈ.வே.ரா

**2] அண்ணா**

3] திரு.வி.க

4] பெரியார்

**137] ஆயின் பட்டம் எதற்கு ? காட்டிக் களித்திடவா? அன்றிப் பணி செய்திடக் கிடைத்திட்ட ஆணையெனக் கொண்டிடவா? நுமக்கா ? நாட்டுக்கா? பொருள் ஈட்டிடவா? நாட்டுப் பெருமையினைக் காத்திடவா? எதற்கு இப்பட்டம் பயன்பட**

**இருக்கிறது? அஃதே கேள்வி! விழாத் தந்திடும் மகிழ்ச்சியுடன் இழைந்து நம் செவி வீழ்ந்திடும் கேள்வி! - இது யாருடைய கூற்று?**

1] ஈ.வே.ரா

**2] அண்ணா**

3] திரு.வி.க

4] பெரியார்

**138] தான் உண்ட நீரதனைப் பன்மடங்கு பெருக்கிப் பார் மகிழத் தருவதற்கே, சூல்கொண்டு உலவுவது மேகம்; அறிகிறோம். தன் தோகைதனை விரித்துக் கலாப மயில் ஆடுவது, தானே கண்டுகளித்திடவா? பிறர் காண்; பிறர் மகிழ! ஒளிதனை உமிழ்ந்திடும் திருவிளக்கு எதற்காக? இருளிலுள்ளோர் இடர் நீக்க! பட்டம் பெற்றிடும் சிறப்புடையீர்! நீவிர் திருவிளக்கு - புள்ளிக் கலாப மயில் - கார்மேகம். - இது யாருடைய கூற்று?**

1] ஈ.வே.ரா

**2] அண்ணா**

3] திரு.வி.க

4] பெரியார்

**139] மோசிகீரனார் என்னும் புலவரின் உறக்கம் கலையாதவாறு மெதுவாக அவருக்குக் கவரி வீசிக்கொண்டு நின்ற மன்னன் ?**

1] சேரன் செங்குட்டுவன்

2] இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்

**3] சேரமான் இரும்பொறை**

4] பல்யானைச் செல்கெழுகுட்டுவன்

140] Charity begins at home - **இணையான தமிழ்ப் பழமொழி ?**

**1] தனக்கு மிஞ்சியே தானமும் தருமமும்**

2] பேராசை பெருநட்டம்

3] முள்ளை முள்ளால் எடு

4] எலி வளையானாலும் தனி வளையே சிறந்தது

141] Covet all lose all - **இணையான தமிழ்ப் பழமொழி ?**

1] தனக்கு மிஞ்சியே தானமும் தருமமும்

**2] பேராசை பெருநட்டம்**

3] முள்ளை முள்ளால் எடு

4] எலி வளையானாலும் தனி வளையே சிறந்தது

142] Diamonds Cut diamonds - **இணையான தமிழ்ப் பழமொழி ?**

1] தனக்கு மிஞ்சியே தானமும் தருமமும்

2] பேராசை பெருநட்டம்

**3] முள்ளை முள்ளால் எடு**

4] எலி வளையானாலும் தனி வளையே சிறந்தது

143] East or west, home is the best - **இணையான தமிழ்ப் பழமொழி ?**

1] தனக்கு மிஞ்சியே தானமும் தருமமும்

2] பேராசை பெருநட்டம்

3] முள்ளை முள்ளால் எடு

**4] எலி வளையானாலும் தனி வளையே சிறந்தது**

**144] Empty vessels make the greatest sound - இணையான தமிழ்ப் பழமொழி ?**

1] தனக்கு மிஞ்சியே தானமும் தருமமும்

2] பேராசை பெருநட்டம்

3] முள்ளை முள்ளால் எடு

**4] குறை குடம் கூத்தாடும்**

## பத்தாம் வகுப்பு - பொதுத்தமிழ் பாடக்குறிப்புகள் பகுதி - 3

**1] அயோத்தி நாட்டு மன்னன் தசரதனுக்கு மக்கள் -----------.**

1] மூவர்

**2] நால்வர்**

3] ஐவர்

4] ஆறு

**2] தசரதன், தன் மூத்த மகன் -------------- என்பவருக்கு முடிசூட்ட விழைந்தான்**

1] இலட்சுமணன்

2] சத்துருக்கனன்

**3] இராமன்**

4] பரதன்

**3] தசரதன் மனைவி கைகேயி; அவள் தோழி ---------------. இராமன் முடிசூடுவதனை விரும்பவில்லை.**

1] சுதமதி

2] மாதரி

**3] மந்தரை**

4] ஆதிரை

**4] கைகேயி, தசரதனிடம் எத்தனை வரங்களைப் பெற்றார்?**

**1] 2** 2] 3 3] 4 4] 5

**குறிப்பு** :- தசரதன் மனைவி கைகேயி; அவள் தோழி மந்தரை, இராமன் முடிசூடுவதனை விரும்பவில்லை. எனவே, கைகேயியின் மனத்தை மந்தரை வஞ்சக உரைகளால் மாற்றினாள். மனம் மாறிய கைகேயி, தசரதனிடம் தான் பெற்ற இரு வரங்களைப் பயன்படுத்தி, இராமன் காடு செல்லவும், தன் மகன் பரதன் நாடாளவும் வேண்டுமெனக் கூறினாள்.

**5] மணிமுடி சூடப் புறப்பட்டு வந்த இராமனிடம் கைகேயி, "நீ ------------- ஆண்டுகள் காடு செல்ல வேண்டும். இது மன்னன் ஆணை" என்றாள்.**

1] பன்னிரண்டு

2] பதின்மூன்று

**3] பதினான்கு**

4] பதினைந்து

**6] இராமன் தன் மனைவி சீதையுடனும் தம்பி இலக்குவனுடனும் காட்டிற்குச் சென்றான். செல்லும் வழியில் --------- கரையை அடைந்தான்.**

1] மகாநதி

2] பிரம்மபுத்திரா

3] காவிரி

**4] கங்கை**

**7] கங்கைக் கரையில், அன்பே வடிவான வேட்டுவத் தலைவன் ----------- என்பவன், இராமனைச் சந்தித்தான்.**

1] கண்ணபிரான்

2] மதன்

3] இந்திரன்

**4] குகன்**

**8] ஆய காலையின் ஆயிரம் அம்பிக்கு; நாய கன்போர்க் குகன் எனும் நாமத்தான்; தூய கங்கைத் துறை விடும் தொன்மையான்; காயும் வில்லினன் கல்திரள் தோளினான் - என்ற பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] சிலப்பதிகாரம், இளங்கோவடிகள்

2] மணிமேகலை, சீத்தலைச் சாத்தனார்

3] பாஞ்சாலி சபதம், பாரதியார்

**4] கம்பராமாயணம், கம்பர்**

**9] துடியன், நாயினன், தோல் செருப்பு ஆர்த்தபேர்; அடியன், அல்செறிந் தன்ன நிறத்தினான்; நெடிய தானை நெருங்கலின் நீர்முகில்; இடியி னோடுஎழுந் தாலன்ன ஈட்டினான் - என்ற பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] சிலப்பதிகாரம், இளங்கோவடிகள்

2] மணிமேகலை, சீத்தலைச் சாத்தனார்

3] பாஞ்சாலி சபதம், பாரதியார்

**4] கம்பராமாயணம், கம்பர்**

**10] சிருங்கி பேரம் எனத்திரைக் கங்கையின்; மருங்கு தோன்றும் நகருறை வாழ்க்கையன்; ஒருங்கு தேனொடு மீன் உப காரத்தன்; இருந்த வள்ளலைக் காணவந் தெய்தினான் - என்ற பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] சிலப்பதிகாரம், இளங்கோவடிகள்

2] மணிமேகலை, சீத்தலைச் சாத்தனார்

3] பாஞ்சாலி சபதம், பாரதியார்

**4] கம்பராமாயணம், கம்பர்**

**11] கூவா முன்னம் இளையோன் குறுகிநீ; ஆவான் யார் என அன்பின் இறைஞ்சினான்; தேவா நின்கழல் சேவிக்க வந்தனென்; நாவாய் வேட்டுவன் நாய் அடியேன் என்றான் - என்ற பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] சிலப்பதிகாரம், இளங்கோவடிகள்

2] மணிமேகலை, சீத்தலைச் சாத்தனார்

3] பாஞ்சாலி சபதம், பாரதியார்

**4] கம்பராமாயணம், கம்பர்**

**12] நிற்றி ஈண்டு என்றுபுக்கு நெடியவன் தொழுது தம்பி; கொற்றவ! நின்னைக் காணக் குறுகினன் நிமிர்ந்த கூட்டச்; சுற்றமும், தானும்; உள்ளம் தூயவன்; தாயின் நல்லான்; எற்றுநீர்க் கங்கை நாவாய்க்கு இறை;குகன் ஒருவன் என்றான் - என்ற பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] சிலப்பதிகாரம், இளங்கோவடிகள்

2] மணிமேகலை, சீத்தலைச் சாத்தனார்

3] பாஞ்சாலி சபதம், பாரதியார்

**4] கம்பராமாயணம், கம்பர்**

**13] அண்ணலும் விரும்பி என்பால் அழைத்தி நீ அவனை என்றான்; பண்ணவன் வருக என்னப் பரிவினன் விரைவில் புக்கான்; கண்ணனைக் கண்ணின் நோக்கிக் கனிந்தனன் இருண்ட குஞ்சி; மண்ணுறப் பணிந்து மேனி வளைத்துவாய் புதைத்து நின்றான். - என்ற பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] சிலப்பதிகாரம், இளங்கோவடிகள்

2] மணிமேகலை, சீத்தலைச் சாத்தனார்

3] பாஞ்சாலி சபதம், பாரதியார்

**4] கம்பராமாயணம், கம்பர்**

**14] இருத்தி ஈண்டு என்னலோடும் இருந்திலன், எல்லை நீத்த; அருத்தியன், தேனும் மீனும் அமுதினுக்கு அமைவ தாகத்; திருத்தினன் கொணர்ந்தேன் என்கொல் திருவுளம் என்ன வீரன்; விருத்தமா தவரை நோக்கி முறுவலன் விளம்ப லுற்றான் - என்ற பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] சிலப்பதிகாரம், இளங்கோவடிகள்

2] மணிமேகலை, சீத்தலைச் சாத்தனார்

3] பாஞ்சாலி சபதம், பாரதியார்

**4] கம்பராமாயணம், கம்பர்**

**15] அரியதாம் உவப்ப உள்ளத் தன்பினால் அமைந்த காதல்; தெரிதரக் கொணர்ந்த என்றால் அமிழ்தினும் சீர்த்த வன்றே; பரிவினில் தழீஇய என்னில் பவித்திரம் எம்ம னோர்க்கும்; உரியன இனிதின் நாமும் உண்டனெம் அன்றோ என்றான் - என்ற பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] சிலப்பதிகாரம், இளங்கோவடிகள்

2] மணிமேகலை, சீத்தலைச் சாத்தனார்

3] பாஞ்சாலி சபதம், பாரதியார்

**4] கம்பராமாயணம், கம்பர்**

**16] கார்குலாம் நிறத்தான் கூறக் காதலன் உணர்த்து வான்; இப்பார்குலாம் செல்வ நின்னை இங்ஙனம் பார்த்த கண்ணை; ஈர்கிலாக் கள்வ னேன்யான் இன்னலின்**

**இருக்கை நோக்கித்; தீர்கிலேன் ஆன தைய செய்குவென் அடிமை என்றான் - என்ற பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] சிலப்பதிகாரம், இளங்கோவடிகள்

2] மணிமேகலை, சீத்தலைச் சாத்தனார்

3] பாஞ்சாலி சபதம், பாரதியார்

**4] கம்பராமாயணம், கம்பர்**

**17] கோதைவில் குரிசில் அன்னான் கூறிய கொள்கை கேட்டான்; சீதையை நோக்கித் தம்பி திருமுகம் நோக்கித் தீராக்; காதல னாகும் என்று கருணையின் மலர்ந்த கண்ணன்; யாதினும் இனிய நண்ப இருத்திஈண்டு எம்மொ டென்றான் - என்ற பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] சிலப்பதிகாரம், இளங்கோவடிகள்

2] மணிமேகலை, சீத்தலைச் சாத்தனார்

3] பாஞ்சாலி சபதம், பாரதியார்

**4] கம்பராமாயணம், கம்பர்**

**18] சிந்தனை உணர்கிற்பான் சென்றனன் விரைவோடும்; தந்தனன் நெடுநாவாய் தாமரை நயனத்தான்; அந்தணர் தமையெல்லாம் அருளுதிர் விடைஎன்னா; இந்துவின் நுதலாளோடு இளவலொ டினிதேறா - என்ற பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] சிலப்பதிகாரம், இளங்கோவடிகள்

2] மணிமேகலை, சீத்தலைச் சாத்தனார்

3] பாஞ்சாலி சபதம், பாரதியார்

**4] கம்பராமாயணம், கம்பர்**

**19] விடுநனி கடிதென்றான் மெய்உயிர் அனையானும்; முடுகினன் நெடுநாவாய் முரிதிரை நெடுநீர்வாய்க்; கடிதினில் மடஅன்னக் கதியது செலநின்றார்; இடர்உற மறையோரும் எரியுறு மெழுகானார் - என்ற பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] சிலப்பதிகாரம், இளங்கோவடிகள்

2] மணிமேகலை, சீத்தலைச் சாத்தனார்

3] பாஞ்சாலி சபதம், பாரதியார்

**4] கம்பராமாயணம், கம்பர்**

**20] அன்னவன் உரைகேளா அமலனும் உரைநேர்வான்; என்னுயிர் அனையாய் நீ, இளவல்உன் இளையான்,இந்; நன்னுத லவள்நின்கேள், நளிர்கடல் நிலமெல்லாம்; உன்னுடை யது,நான்உன் தொழில்உரி மையின்உள்ளேன் - என்ற பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] சிலப்பதிகாரம், இளங்கோவடிகள்

2] மணிமேகலை, சீத்தலைச் சாத்தனார்

3] பாஞ்சாலி சபதம், பாரதியார்

**4] கம்பராமாயணம், கம்பர்**

**21] பொருந்தாதது எது? சொற்பொருள்**

1] ஆயகாலை - அந்த நேரத்தில்

**2] அம்பி - நண்பன்**

3] நாயகன் - தலைவன்

4] நாமம் - பெயர்

**குறிப்பு** : அம்பி என்பதன் சரியான சொற்பொருள் படகு.

**22] பொருந்தாதது எது? சொற்பொருள்**

1] துறை - தோணித்துறை

2] தொன்மை - தொன்றுதொட்டு

**3] கல் - மணல்**

4] திரள் - திரட்சி

**குறிப்பு** :- கல் என்பதன் சரியான சொற்பொருள் மலை.

**23] பொருந்தாதது எது? சொற்பொருள்**

1] துடி - பறை

**2] அல் - இருள்**

3] சிருங்கி பேரம் - கங்கைக் கரையோர நகரம்

4] திரை - அலை

**குறிப்பு** :- அல் என்பதன் சரியான சொற்பொருள் இருள்

**24] பொருந்தாதது எது? சொற்பொருள்**

**1] மருங்கு - தூரம்**

2] உபகாரத்தன் - பயன் கருதாது உதவுபவன்

3] கூவா முன்னர் - அழைக்கும் முன்னர்

4] குறுகி - நெருங்கி

**குறிப்பு** :- மருங்கு என்பதன் சரியான சொற்பொருள் பக்கம்

**25] பொருந்தாதது எது? சொற்பொருள்**

1] இறைஞ்சி - வணங்கி

2] சேவிக்க - வணங்க

**3] நாவாய் - கடல்**

4] நெடியவன் - உயர்ந்தவனாகிய இராமன்

**குறிப்பு** :- நாவாய் என்பதன் சரியான சொற்பொருள் படகு

**26] பொருந்தாதது எது? சொற்பொருள்**

1] குறுகினன் - வந்துள்ளான்

2] இறை - தலைவன்

**3] பண்ணவன் - நற்குணங்கள் பல உடைய இராமன்**

4] பரிவு - இரக்கம்

**குறிப்பு** :- பண்ணவன் என்பதன் சரியான சொற்பொருள் நற்குணங்கள் பல உடைய இலக்குவன்

**27] பொருந்தாதது எது? சொற்பொருள்**

1] குஞ்சி - தலைமுடி

2] மேனி - உடல்

3] அருத்தியன் - அன்பு உடையவன்

**4] மாதவர் - முனிவர்**

**குறிப்பு** :- மாதவர் என்பதன் சரியான சொற்பொருள் முனிவர்

**28] பொருந்தாதது எது? சொற்பொருள்**

**1] முறுவல் - கோபம்**

2] விளம்பல் - கூறுதல்

3] சீர்த்த - சிறந்த

4] பவித்திரம் - தூய்மையானது

**குறிப்பு** :- முறுவல் என்பதன் சரியான சொற்பொருள் புன்னகை

**29] பொருந்தாதது எது? சொற்பொருள்**

1] கார்குலாம் - மேகக்கூட்டம்

2] பார்குலாம் - உலகம் முழுதும்

**3] இன்னல் - இன்பம்**

4] ஈர்கிலா - எடுக்க இயலாத

**குறிப்பு** :- இன்னல் என்பதன் சரியான சொற்பொருள் துன்பம்

**30] பொருந்தாதது எது? சொற்பொருள்**

1] தீர்கிலேன் - நீங்கமாட்டேன்

2] அடிமைசெய்குவென் - பணிசெய்வேன்

**3] குரிசில் - படகு**

4] இருத்தி - இருப்பாயாக

**குறிப்பு** : குரிசில் என்பதன் சரியான சொற்பொருள் தலைவன்

**31] பொருந்தாதது எது? சொற்பொருள்**

1] நயனம் - கண்கள்

2] இந்து - நிலவு

**3] நுதல் - கால்**

4] கடிது - விரைவாக

**குறிப்பு** :- நுதல் என்பதன் சரியான சொற்பொருள் நெற்றி

**32] பொருந்தாதது எது? சொற்பொருள்**

1] முடுகினன் - செலுத்தினன்

2] முரிதிரை - மடங்கிவிழும்அலை

**3] இடர் - இன்பம்**

4] அமலன் - குற்றமற்றவன்

**குறிப்பு** :- இடர் என்பதன் சரியான சொற்பொருள் துன்பம்

**33] பொருந்தாதது எது? சொற்பொருள்**

1] நுதல் - நெற்றி

2] இளவல் - தம்பி

**3] மருங்கு - தூரம்**

4] கேழல் - பன்றி

**குறிப்பு** :- மருங்கு என்பதன் சரியான சொற்பொருள் பக்கம்.

**34] பொருந்தாதது எது? இலக்கணக் குறிப்பு தருக.**

1] போர்க்குகன் - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை

2] கல்திரள்தோள் - உவமைத்தொகை

3] இருந்த வள்ளல் - பெயரெச்சம்

**4] வந்து எய்தினான் - வினைத்தொகை**

**குறிப்பு** :- வந்து எய்தினான் என்பதன் சரியான இலக்கணக் குறிப்பு வினையெச்சம்.

**35] திரைக்கங்கை - இலக்கணக் குறிப்பு தருக.**

1] உவமைத்தொகை

2] பெயரெச்சம்

3] வினைத்தொகை

**4] இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை**

**36] நீர்முகில் - இலக்கணக் குறிப்பு தருக.**

1] உவமைத்தொகை

2] பெயரெச்சம்

3] வினைத்தொகை

**4] இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை**

**37] பொருந்தாதது எது? இலக்கணக் குறிப்பு தருக.**

1] கூவா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

**2] குறுகி, சேவிக்க - பெயரெச்சம்**

3] கழல் - தானியாகுபெயர்

4] வந்தனென் - தன்மை ஒருமை வினைமுற்று

**குறிப்பு** :- குறுகி, சேவிக்க என்பதன் சரியான இலக்கணக் குறிப்பு வினையெச்சம்.

**38] பொருந்தாதது எது? இலக்கணக் குறிப்பு தருக.**

1] அழைத்தி (அழைப்பாய்), இருத்தி - முன்னிலை ஒருமை வினைமுற்று

2] வருக - வியங்கோள் வினைமுற்று

3] பணிந்து, வளைத்து, - வினையெச்சம்

**4] தேனும் மீனும் - உயர்வு சிறப்பும்மை**

**குறிப்பு** :- தேனும் மீனும் - என்பதன் சரியான இலக்கணக் குறிப்பு எண்ணும்மை.

**39] பொருந்தாதது எது? இலக்கணக் குறிப்பு தருக.**

1] மாதவர் - உரிச்சொற்றொடர்

**2] அமைந்த காதல் - வினையெச்சம்**

3] சீர்த்த - ஒன்றன்பால் வினைமுற்று

4] தழீஇய (தழுவிய) - சொல்லிசை அளபெடை

**குறிப்பு** :- அமைந்த காதல் என்பதன் சரியான இலக்கணக் குறிப்பு பெயரெச்சம்.

**40] பொருந்தாதது எது? இலக்கணக் குறிப்பு தருக.**

1] கார்குலாம் (காரது குலாம்) - ஆறாம் வேற்றுமைத்தொகை

2] உணர்த்துவான் - வினையாலணையும் பெயர்

**3] பார்த்த கண்ணை - வினையெச்சம்**

4] தீர்கிலேன், செய்குவேன் - தன்மை ஒருமை வினைமுற்று.

**குறிப்பு** :- பார்த்தகண்ணை என்பதன் சரியான இலக்கணக் குறிப்பு பெயரெச்சம்.

**41] பொருந்தாதது எது? இலக்கணக் குறிப்பு தருக.**

1] தீராக்காதலன் - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

2] மலர்ந்த கண்ணன் - பெயரெச்சம்

3] இனிய நண்ப - குறிப்புப் பெயரெச்சம்

**4] நெடுநாவாய் - வினைத்தொகை**

**குறிப்பு** :- நெடுநாவாய் என்பதன் சரியான இலக்கணக் குறிப்பு பண்புத்தொகை

**42] பொருந்தாதது எது? இலக்கணக் குறிப்பு தருக.**

1] தாமரை நயனம் - உவமைத் தொகை

2] நனி கடிது - உரிச்சொற்றொடர்

**3] நெடுநீர் - வினைத்தொகை**

4] என்னுயிர் - ஆறாம் வேற்றுமைத்தொகை

**குறிப்பு** :- நெடுநீர் என்பதன் சரியான இலக்கணக் குறிப்பு பண்புத்தொகை.

**43] நன்னுதல் - இலக்கணக் குறிப்பு தருக.**

**1] பண்புத்தொகை**

2] உவமைத் தொகை

3] வினைத்தொகை

4] ஆறாம் வேற்றுமைத்தொகை

**44] நின்கேள் - இலக்கணக் குறிப்பு தருக.**

**1] நான்காம் வேற்றுமைத்தொகை**

2] உவமைத் தொகை

3] வினைத்தொகை

4] ஆறாம் வேற்றுமைத்தொகை

**45] கம்பர் தேரழுந்தூரில் பிறந்தார். இவ்வூர் ----------- மாவட்டத்தில் மயிலாடுதுறைக்கு அருகில் உள்ளது.**

1] தேனி

2] ராமநாதபுரம்

**3] நாகப்பட்டினம்**

4] விருதுநகர்

**46] கம்பரின் தந்தையார் -----------.**

1] ராஜசிம்மன்

**2] ஆதித்தன்**

3] செங்கணான்

4] இவர்களில் யாருமில்லை

**47] கம்பர் ----------- காலத்தில் வாழ்ந்தவர்.**

1] கரிகாலன்

2] ராஜேந்திரன்

3] ராஜராஜன்

**4] இரண்டாம் குலோத்துங்கன்**

**48] ---------- என்பவரை திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளல் ஆதரித்தார்.**

1] ஔவையார்

2] புகழேந்திப் புலவர்

**3] கம்பர்**

4] சீத்தலைச் சாத்தனார்

**49] கம்பர் காலம் ------------ நூற்றாண்டு.**

1] கி.பி. பத்தாம்

2] கி.பி. பதினொன்றாம்

**3] கி.பி. பன்னிரண்டாம்**

4] கி.பி. பதிமூன்றாம்

**50] கம்பர் செய்நன்றி மறவா இயல்பினர். தம்மை ஆதரித்த வள்ளல் சடையப்பரை ------------------ பாடல்களுக்கு ஒரு பாடல் வீதம் பாடிச் சிறப்பித்துள்ளார்.**

1] பத்து

2] நூறு

**3] ஆயிரம்**

4] பத்தாயிரம்

**51] சடகோபரந்தாதி, ஏரெழுபது, சரசுவதி அந்தாதி, திருக்கை வழக்கம், சிலையெழுபது ஆகியன ---------- இயற்றிய நூல்கள்.**

1] ஔவையார்

2] புகழேந்திப் புலவர்

**3] கம்பர்**

4] சீத்தலைச் சாத்தனார்

**52] ----------------- வீட்டு கட்டுத்தறியும் கவிபாடும். விருத்தமெனும் ஒண்பாவிற்கு உயர் -----------. கல்வியிற் பெரியவர் ---------.என்னும் தொடர்களால் ---------- என்பவரைப் பற்றி அறியலாம்.**

1] ஔவையார்

2] புகழேந்திப் புலவர்

**3] கம்பர்**

4] சீத்தலைச் சாத்தனார்

**53] யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல் என்று ------------ கம்பரைப் புகழ்ந்து பாடியுள்ளார்.**

**1] பாரதியார்**

2] பாரதிதாசன்

3] வாணிதாசன்

4] உ.வே.சா

**54] கீழ்க்கண்ட கூற்றில் தவறானது எது?**

1] இராமனது வரலாற்றைக் கூறும் நூல் இராமாயணம் எனப்பட்டது.

**2] அகத்திய முனிவர் வடமொழியில் எழுதிய இராமாயணத்தைத் தழுவிக் கம்பர் அதனைத் தமிழில் இயற்றினார்.**

3] கம்பர் இயற்றிய இராமாயணம் கம்பராமாயணம் எனப்பட்டது.

4] கம்பர் தாம் இயற்றிய நூலுக்கு இராமவதாரம் எனப் பெயரிட்டார்.

**குறிப்பு** :- வான்மீகி முனிவர் வடமொழியில் எழுதிய இராமாயணத்தைத் தழுவிக் கம்பர் அதனைத் தமிழில் இயற்றினார்.

**55] கீழ்க்கண்ட கூற்றில் தவறானது எது?**

1] கம்பராமாயணத்தில் ஆறு காண்டங்கள் உள்ளன. அவை 1.பாலகாண்டம், 2.அயோத்தியா காண்டம், 3.ஆரண்ய காண்டம், 4.கிட்கிந்தா காண்டம், 5.சுந்தர காண்டம், 6.யுத்த காண்டம்.

2] காண்டம் என்பது பெரும்பிரிவையும் படலம் என்பது அதன் உட்பிரிவையும் குறிக்கும்.

3] தமிழிலக்கியத்தில் காப்பிய வளர்ச்சி கம்பர் படைப்பினால் உச்சநிலையை அடைந்தது.

**4] இந்நூலின் சிறப்புக் கருதியும் திருவாசகத்தின் பெருமை கருதியும் இவ்விரு நூல்களையும் தமிழுக்குக் கதி என்பர் பெரியோர்.**

**குறிப்பு** :- இந்நூலின் சிறப்புக் கருதியும் திருக்குறளின் பெருமை கருதியும் இவ்விரு நூல்களையும் தமிழுக்குக் கதி என்பர் பெரியோர்.

**56] கீழ்க்கண்ட கூற்றில் தவறானது எது?**

1] கம்பராமாயணம் பெருங்காப்பியத்திற்குரிய இலக்கணங்களை முழுமையாகப் பெற்றது. பொருள், அணி, நடை ஆகியவற்றால் சிறந்தது. கற்போர்க்கு இனிமை தரும் கவிச்சுவை நிறைந்தது. சொற்சுவையும் பொருட்சுவையும் தமிழ்ப் பண்பாடும் மிளிர்ந்துள்ளது.

2] கம்பராமாயணத்தில் அயோத்தியா காண்டம் இரண்டாம் காண்டமாகும்.

**3] அயோத்தியா காண்டத்தில் பன்னிரண்டு படலங்கள் உள்ளன.**

4] குகப்படலம் ஏழாம் படலமாகும். இதனைக் கங்கைப் படலம் எனவும் கூறுவர்.

**குறிப்பு** :- அயோத்தியா காண்டத்தில் பதின்மூன்று படலங்கள் உள்ளன.

**57] வடசொல் கிளவி வடஎழுத் தொரீஇ**

**எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்மே - என்று கூறும் நூல்?**

**1] தொல்காப்பியம் (எச்சவியல்)**

2] திருக்குறள்

3] திருவாசகம்

4] இனியவை நாற்பது

**58] தொல்காப்பிய நெறி நின்றவர் -----------?**

1] திருவள்ளுவர்

**2] கம்பர்**

3] ஔவையார்

4] புகழேந்திப் புலவர்

**59] வடசொல்லைப் பயன்படுத்தும் போது வடஎழுத்தை நீக்கித் தமிழ்ப்படுத்த வேண்டும் என்னும் தொல்காப்பிய இலக்கணப்படி ராமன், ஹனுமன், லஷ்மணன், விபீஷணன் என்னும் பெயர்களை இராமன், அனுமன், இலக்குவன், வீடணன் என நெறிப்படுத்திய தமிழ் வேந்தர் -----------. வடமொழி எழுத்தையும் பிறமொழிக் கலப்பையும் தடுத்தவர் இவரே.**

1] திருவள்ளுவர்

**2] கம்பர்**

3] ஔவையார்

4] புகழேந்திப் புலவர்

**60] உலகினில் நாகரிகம் முற்றும் அழிந்துவிட்டாலும் திருக்குறளும், கம்பன் காவியமும் இருந்தால் போதும்; மீண்டும் அதனைப் புதுப்பித்துவிடாலாம் - என்று கூறியவர் யார்?**

1] ஜி.யு.போப்

**2] கால்டுவெல்**

3] வீரமாமுனிவர்

4] கமில் சுவலபில்

**61] மராட்டிய --------- மாவட்டத்தில் தபோலி என்னும் சிற்றூர் உள்ளது.**

1] அமராவதி

**2] கொங்கண்**

3] அவுரங்காபாத்

4] நாக்பூர்

**62] கீழ்க்கண்ட கூற்று யாரைப்பற்றியது?**

**அவர் சமுதாய மறுமலர்ச்சியின் முன்னோடி; சமத்துவக் காவலர்; உலகச் சாதனையாளர் வரிசையில் முன்னிற்பவர்; அரசியல் சட்டமேதை; தேசியத் தலைவராகவும் திகழ்ந்தவர்; பல்வேறு மத இன மொழி சமூகப் பழக்க வழக்கங்கள் கொண்ட இந்நாட்டை இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தால் ஒருங்கிணைத்தவர்.**

1] அண்ணா

2] பெரியார்

3] காந்தி

**4] அம்பேத்கர்**

**63] மராட்டிய மாநிலத்தில் கொங்கண் மாவட்டத்தில் உள்ள அம்பவாடே என்னும் சிற்றூரில் 1891ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்கள் பதினான்காம் நாள் (14.04.1891) ------------ என்பவர் பிறந்தார்.**

1] அண்ணா

2] பெரியார்

3] காந்தி

**4] அம்பேத்கர்**

**64] கீழ்க்கண்ட கூற்று யாரைப்பற்றியது?**

**அவர்தம் தந்தையார் இராம்ஜி சக்பால், தாயார் பீமாபாய். செல்வம் நிறைந்த குடும்பத்தில் பதினான்காவது பிள்ளையாகப் பிறந்தார் அவர். ------------------ இயற்பெயர் பீமாராவ் ராம்ஜி. மகாபாரதப் பீமனைப் போலவே தன் மகனும் எவருமே அசைக்க முடியாத வீரனாக வருங்காலத்தில் வரவேண்டும் என்ற எண்ணத்தில் பீம் எனப் பெயர் சூட்டினார் தந்தை இராம்ஜி சக்பால்.**

1] அண்ணா

2] பெரியார்

3] காந்தி

**4] அம்பேத்கர்**

**65] பீமாராவின் ஆசிரியர் பெயர்?**

1] சிவாஜிராவ்

2] ராமராவ்

**3] அம்பேத்கர்**

4] இவர்களில் யாருமில்லை

**குறிப்பு** :- ஆசிரியர் என்பவர் அறிவுக்கடலாக மட்டுமன்றி அறத்தின் ஆழியாகவும் விளங்க வேண்டும். சாதி மதங்களைப் பாரோம் - உயர் சென்மம் இத்தேசத்தில் எய்தினர் ஆயின் வேதியர் ஆயினும் ஒன்றே - அன்றி | வேறு குலத்தினர் ஆயினும் ஒன்றே என்னும் உயரிய நோக்குடன் செயல்பட்டவர் பீமாராவின் ஆசிரியர் அம்பேத்கர்.காலத்தினால் செய்த இவ்வுதவியை ஞாலத்தினும் பெரிதெனக் கருதினார் பீமாராவ். அவ்வாசிரியர் பெயரையே தம்பெயராகக் கொண்டார்.

**66] அம்பேத்கர் ---------- ஆம் ஆண்டு எல்பின்ஸ்டன் பள்ளியில் தம்முடைய உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்தார்.**

**1] 1908** 2] 1918 3] 1905 4] 1915

**67] பரோடா மன்னர் பொருளுதவியுடன் ------------- ஆம் ஆண்டு பம்பாய் எல்பின்ஸ்டன் கல்லூரியில் இளங்கலைப் பட்டம் பெற்றார், அம்பேத்கர்.**

**1] 1912** 2] 1918 3] 1905 4] 1915

**68] அமெரிக்காவில் கொலம்பியா பல்கலைக்கழகத்தில் ----------- ஆம் ஆண்டு முதுகலைப் பட்டம் பெற்றார், அம்பேத்கர்.**

1] 1912 2] 1918 3] 1905 **4] 1915**

**69] ----------- ஆம் ஆண்டு இலண்டனில் பொருளாதாரத்தில் முனைவர் பட்டமும் பெற்றார், அம்பேத்கர்.**

1] 1912 **2] 1916** 3] 1905 4] 1915

**70] மும்பையில் சிறிது காலம் ---------- பேராசிரியராகப் பணியாற்றினார், அம்பேத்கர்.**

1] அரசியல் அறிவியல்

2] வணிகவியல்

**3] பொருளியல்**

4] கணிதம்

**71] அம்பேத்கர், மீண்டும் ------------- சென்று அறிவியல் முதுகலைப் பட்டமும் பாரிஸ்டர் பட்டமும் பெற்றார்.**

1] பாரிசு

2] ஜப்பான்

**3] இலண்டன்**

4] தென் ஆப்பிரிக்கா

**72] கீழ்க்கண்ட கூற்று யாரைப்பற்றியது?**

**---------------------- என்பவர், இந்தியா திரும்பியபின் வழக்கறிஞர் தொழிலை மேற்கொண்டார்; கட்டணமின்றி ஏழைகளுக்கு வழக்காடி நீதியைப் பெற்றுத் தந்தார். அவர் அரசியல், சட்டம், சமூகம், பொருளாதாரம், தத்துவம், வரலாறு, வாணிகம், கல்வி, சமயம் என அனைத்துத் துறைகளிலும் நிகரற்ற அறிஞராகத் திகழ்ந்தார்; ஒரு நாளில் பதினெட்டு மணி நேரத்தைக் கல்வி கற்பதற்காகவே செலவழித்தார்; நூலகத்தில் காலையில் முதல் ஆளாக நுழைவார்; மாலையில் இறுதி ஆளாக வெளியேறுவார்.**

1] அண்ணா

2] பெரியார்

3] காந்தி

**4] அம்பேத்கர்**

**73] தந்தை பெரியார் ------------------ ஆம் ஆண்டு கேரளாவில் வைக்கத்தில் நடத்திய ஒடுக்கப்பட்டோர் ஆலய நுழைவு முயற்சியும், --------------- ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் இருபதாம் நாள் அம்பேத்கர் மராட்டியத்தில் மகாத்துக் குளத்தில் நடத்திய தண்ணீர் எடுக்கும் போராட்டமும் மனித உரிமைக்காக முதலில் நடத்தப் பெற்ற போராட்டங்கள் எனலாம்.**

**1] 1924, 1927**

2] 1922, 1928

3] 1925, 1929

4] 1923, 1926

**74] 'இங்கிலாந்து சொல்வதற்கெல்லாம் இந்தியா தலையசைக்கும் என்பது தவறு; இந்தநிலை எப்போதோ மாறிவிட்டது; இந்திய மக்களின் எண்ணங்களை நீங்கள் ஈடேற்றவேண்டும்' என ஆங்கிலேயரிடம் அச்சமின்றி ஆணித்தரமாகக் கூறியவர் யார்?**

1] அண்ணா

2] பெரியார்

3] காந்தி

**4] அம்பேத்கர்**

**75] வட்டமேசை மாநாடு 1930ஆம் ஆண்டு நடைபெற்றது. அம்மாநாட்டில் -------------- கலந்துகொண்டார். அம்மாநாட்டில் "அரைவயிற்றுக் கஞ்சிக்கு அல்லற்படும் ஊமைகளின் உறுப்பினனாக நான் பேசுகிறேன்" என்று, தனது கருத்தைத் தொடங்கினார். - இவர் யார்?**

1] அண்ணா

2] பெரியார்

3] காந்தி

**4] அம்பேத்கர்**

**76] மாற்றார் ஆதிக்கத்தை நீக்கி, மக்களால் ஆளப்படும் மக்களாட்சியையே நாங்கள் விரும்புகிறோம்; வெறும் எஜமான மாற்றத்தை நாங்கள் விரும்பவில்லை; எங்கள் கைகளில் அரசியல் அதிகாரம் வந்தாலொழிய, எங்கள் குறைகள் நீங்கா என மொழிந்தவர் யார்?**

1] அண்ணா

2] பெரியார்

3] காந்தி

**4] அம்பேத்கர்**

**77] விடுதலைக்குப் பிறகு இந்திய அமைச்சரவையில் அண்ணல் அம்பேத்கரையும் இடம்பெறச் செய்ய வேண்டுமென்று பெரிதும் விரும்பியவர் யார்?**

1] அண்ணா

2] ராஜாஜி

3] காந்தி

4] நேரு

**78] கீழ்க்கண்ட கூற்று யாரைப் பற்றியது?**

**இவர், சட்ட அமைச்சராகப் பொறுப்பேற்றார். இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் வகுக்க எழுவர் கொண்ட குழு அமைக்கப்பட்டது. பலரும் செயல்படாமல் விலகினர். இறுதியில், இவர் ஒருவரே அந்த ஒப்பற்ற பணியைச் செய்து முடித்தார். 1950ஆம் ஆண்டு சனவரித் திங்கள் இருபத்தாறாம் நாள், இந்தியா முழுமையான குடியரசு நாடாகத் தன்னை அறிவித்துக் கொண்டது.**

1] அண்ணா

2] ராஜாஜி

3] காந்தி

**4] அம்பேத்கர்**

**79] கீழ்க்கண்ட கூற்று யாருடையது?**

**அறியாமைதான் அனைத்திற்கும் மூலகாரணம் என்பதை இவர், நன்குணர்ந்தார். எனவே, "ஒவ்வொருவரும் முழுமனித நிலையை அடைய கல்வி, செல்வம்,உழைப்பு ஆகிய மூன்றும் தேவைப்படுகிறது. செல்வமும் உழைப்பும் இல்லாத கல்வி களர்நிலம். உழைப்பும் கல்வியும் அற்ற செல்வம் மிருகத்தனம்" என்றார்.**

1] அண்ணா

**2] அம்பேத்கர்**

3] காந்தி

4] நேரு

**80] 'கற்பித்தல், அறிவியல் முறைக்கு உகந்ததாக இருத்தல் வேண்டும்; விருப்பு வெறுப்பற்ற முறையில் கற்பித்தல் நிகழ்தல் வேண்டும். மாணவனுக்குள் தகவல்களைத் திணிப்பதாகக் கல்வி இருத்தல்கூடாது; அஃது, அவனது ஊக்கத்தைத் தூண்டுவதுடன் தனித்தன்மையை வெளிக்கொணர்வதாக இருத்தல் வேண்டும்' என்றும் கற்றல், கற்பித்தலின் உயர்ந்த குறிக்கோள் பற்றி கூறியவர் யார்?**

1] அண்ணா

**2] அம்பேத்கர்**

3] காந்தி

4] நேரு

**81] ---------- ஆம் ஆண்டு, மக்கள் கல்விக்கழகத்தைத் தோற்றுவித்தார், அம்பேத்கர்.**

1] 1940 2] 1943 **3] 1946** 4] 1949

**82] மும்பையில், ------------------- என்பவரின் அரிய முயற்சியால் உருவான சித்தார்த்தா உயர்கல்வி நிலையத்தில் இன்றைய அறிவு வளர்ச்சிக்கு வேண்டிய அனைத்துப் பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன.**

1] அண்ணா

**2] அம்பேத்கர்**

3] காந்தி

4] நேரு

**83] 'இந்தியாவின் தேசியப் பங்குவீதம்' என்னும் நூலின் ஆசிரியர் ?**

1] அண்ணா

**2] அம்பேத்கர்**

3] காந்தி

4] நேரு

**84] புதியன சிந்திப்பதும் படைப்பதுமே புத்துலகம் சமைக்கும் சிற்பிகளின் நோக்கம். இந்திய நாட்டின் சாதி என்னும் இருளை அகற்ற வந்த அறிவுக்கதிர் ----------------.**

1] அண்ணா

**2] அம்பேத்கர்**

3] காந்தி

4] நேரு

**85] சாதி என்பது எல்லாம் வல்ல ஒருவன் கட்டளையால் தோன்றியதன்று. குறிப்பிட்ட சில சூழ்நிலைக்கு ஆட்பட்ட மனித சமூக வாழ்வில் தானாகவே வேரூன்றி விட்ட வளர்ச்சியாகும். சாதி களையப்பட வேண்டிய களை என்று அவர் கருதியவர் யார்?**

1] அண்ணா

**2] அம்பேத்கர்**

3] காந்தி

4] நேரு

**86] சமூகத்தின் மாற்றத்திற்குச் சிந்தனை விதைகளைத் தூவுகின்ற புரட்சியாளர்களாலேயே இந்த வையகம் வாழ்கிறது என்று கூறியவர்?**

1] அண்ணா

**2] அம்பேத்கர்**

3] காந்தி

4] நேரு

**87] 'இந்தியப் பொருளாதார மேம்பாட்டிற்குச் சாதி என்பது, நன்மை தராது; இந்தியர்களின் நலத்திற்கும் மகிழ்ச்சிக்கும் சாதி என்னும் நோய் தீங்கு விளைவிக்கின்றது; அது மக்களிடையே ஒருமைப்பாட்டைச் சீர்குலைத்து விட்டது. இதனை அவர்கள் உணரும்படி செய்துவிட்டால் போதும்; அதுவே எனக்கு நிறைவு தரும்' - என்று கூறியவர்?**

1] அண்ணா

**2] அம்பேத்கர்**

3] காந்தி

4] நேரு

**88] “ஓர் இலட்சிய சமூகம்சுதந்தரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது” - என்று கூறியவர்?**

1] அண்ணா

**2] அம்பேத்கர்**

3] காந்தி

4] நேரு

**89] "சனநாயகத்தின் மறுபெயர்தான் சகோதரத்துவம்; சுதந்தரம் என்பது சுயேச்சையாக நடமாடும் உரிமை; உயிரையும் உடைமையையும் பாதுகாக்கும் உரிமை அது. எல்லாருக்கும் எல்லாம் கிடைக்கும் வகையில் எல்லா மனிதர்களையும் ஒரே மாதிரியாக நடத்துவதே சமத்துவமாகும்” என்று, சனநாயகத்திற்கு அரியதொரு விளக்கம் தந்தவர் யார்?**

1] அண்ணா

**2] அம்பேத்கர்**

3] காந்தி

4] நேரு

**90] சமத்துவத்தின் மறுபெயரே மனிதநேயம்; எங்கே சமத்துவம் மறுக்கப்படுகின்றதோ, அங்கே மனிதப் பண்பு மறைந்து விடுவதை அவர் அனைவருக்கும் உணர்த்தினார். - இவர் யார்?**

1] அண்ணா

**2] அம்பேத்கர்**

3] காந்தி

4] பெரியார்

**91] அம்பேத்கர் ஓர் அறிவுச் சுரங்கம். இவர், அறியாமைக்கு எதிராக ஆற்றிய மகத்தான பணி சான்றோர் நெஞ்சில் நிலைக்கச் செய்தது. "அம்பேத்கர் உலகத் தலைவர்களுள்ஒருவர், பகுத்தறிவுச் செம்மல், ஆராய்ச்சியின் சிகரம், மக்களின் மாபெரும் வழிகாட்டி,அப்பெருந்தலைவரைப் போல வேறு யாரையும் நாம் காணமுடியாது" என்று ----------- என்பவர் புகழாரம் சூட்டினார்.**

1] அண்ணா

2] அம்பேத்கர்

3] காந்தி

**4] பெரியார்**

**92] "பகுத்தறிவுத் துறையில் அவருக்கு இணை அவரே. ஆசியக் கண்டத்திலேயே மிகப்பெரிய தனியாள் நூலகத்தை அமைத்த பெருமை இவரையே சாரும்" என்று அம்பேத்கரை ---------------- என்பவர் புகழ்ந்துரைத்தார்.**

1] அண்ணா

2] அம்பேத்கர்

3] காந்தி

**4] நேரு**

**93] "அண்ணல் அம்பேத்கர் தன்னலமற்றவர், மிகவும் ஆர்வத்துடனும் விரைந்தும் தன்னந் தனியனாகச் செயல்பட்டவர். தமக்குக் கொடுக்கப்பட்ட பணியில் கருமமே கண்ணாக இருந்தவர்" என்று ------------ என்பவர் பாராட்டியுள்ளார்.**

1] பெரியார்

2] ராஜாஜி

3] இந்திரா காந்தி

**4] இராசேந்திர பிரசாத்**

**94] நாட்டிற்காக அயராது உழைத்த அண்ணல் அம்பேத்கர் --------------- ஆம் ஆண்டு திசம்பர் திங்கள் ஆறாம் நாள் புகழுடம்பு எய்தினார்.**

**1] 1956** 2] 1957 3] 1958 4] 1959

**95] இந்திய அரசு, பாரத ரத்னா (இந்திய மாமணி) என்னும் உயரிய விருதை அண்ணல் அம்பேத்கருக்கு -------- ஆம் ஆண்டு வழங்கிப் பெருமைப்படுத்தியது.**

1] 1989 **2] 1990** 3] 1991 4] 1992

**96] --------------- என்பவர், இந்திய நாட்டின் ஒளிமிகுந்த எதிர்காலத்தைப் பற்றிக் கனவு கண்ட இலட்சிய மனிதர். தாம் கண்ட இலட்சியக் கனவுகளை அறிவுத் திறத்தினால் உறுதிப்படுத்தியவர். அவர், உயரிய ஆளுமைத் திறனைக் கொண்டவர், கூர்த்த அறிவுவன்மை உடையவர், மனித உரிமைக்காக உழைத்தவர்.**

1] அண்ணா

**2] அம்பேத்கர்**

3] காந்தி

4] நேரு

**97] சமுதாயமெனும் மரத்தின் வேரைச் சாதிப் புழுக்கள் அரித்து விடாமல் தடுத்த நச்சுக்கொல்லி மருந்து அவர். கல்வி அறிவின்றி நாடு முன்னேற முடியாது என்று**

**உரைத்தவர். அவர், சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்ட மக்களுக்காகத் தம்மை முழுயாக அர்ப்பணித்துக் கொண்டவர். - இவர் யார்?**

1] அண்ணா

**2] அம்பேத்கர்**

3] காந்தி

4] நேரு

**98] இருபெருந் தலைவர்கள் - இந்தியாவில் இருந்தார்கள். வடக்கே இருந்து ------------------- என்பவரும், தெற்கேயிருந்து --------------- என்பவரும் இடைவிடாது உழைத்ததனால் சாதி என்னும் பாறை உடைந்து சுக்கு நூறானது.**

**1] அம்பேத்கர், பெரியார்**

2] பகத் சிங், வ.உ.சி

3] நேதாஜி, காமராஜர்

4] நேரு, முத்துராமலிங்கம்

**99] ஒருமை பன்மைப் பிழை நீக்கி எழுதுக?**

1] இப்போது அவர் கையில் கோப்புகள் இருந்தது

**2] இப்போது அவர் கையில் கோப்புகள் இருந்தன**

3] இப்போது அவர்கள் கையில் கோப்புகள் இருந்தன

4] இப்போது அவரின் கையில் கோப்புகள் இருந்தது

**100] ஒருமை பன்மைப் பிழை நீக்கி எழுதுக?**

1] வயது வந்தோர்க்கும் பெண்களுக்கும் வாக்குரிமை கொடுக்கப்பட வேண்டும் என அம்பேத்கர் கூறியதை நாளேடுகள் புகழ்ந்தது

**2] வயது வந்தோர்க்கும் பெண்களுக்கும் வாக்குரிமை கொடுக்கப்பட வேண்டும் என அம்பேத்கர் கூறியதை நாளேடுகள் புகழ்ந்தன**

3] வயது வந்தோர் பெண்களுக்கும் வாக்குரிமை கொடுக்கப்பட வேண்டும் என அம்பேத்கர் கூறியதை நாளேடுகள் புகழ்ந்தது

4] வயது வந்தோர்க்கும் பெண்கள் வாக்குரிமை கொடுக்கப்பட வேண்டும் என அம்பேத்கர் கூறியதை நாளேடுகள் புகழ்ந்தன

**101] சந்திப் பிழை நீக்கி எழுதுக.**

1] ஆசிரியர் பெயரை தம் பெயருடன் சேர்த்துப் பீமாராவ் அம்பேத்கராக மாறினார்

2] ஆசிரியர் பெயரைத் தம் பெயருடன் சேர்த்துப் பீமாராவ் அம்பேத்கராக மாறினார்

**3] ஆசிரியர் பெயரைத் தம் பெயருடன் சேர்த்து பீமாராவ் அம்பேத்கராக மாறினார்**

4] ஆசிரியர்ப் பெயரை தம் பெயருடன் சேர்த்து பீமாராவ் அம்பேத்கராக மாறினார்

**102] சந்திப் பிழையை நீக்கி எழுதுக**

1] ஏழைகளுக்கு பொருள் பெறாமல் வாதாடி நீதி பெற்றுத் தந்தார்

**2] ஏழைகளுக்குப் பொருள் பெறாமல் வாதாடி நீதி பெற்றுத் தந்தார்**

3] ஏழைகளுக்குப் பொருள் பெறாமல் வாதாடி நீதிப் பெற்றுத் தந்தார்

4] ஏழைகளுக்குப் பொருள்ப் பெறாமல் வாதாடி நீதி பெற்று தந்தார்

**103] சந்திப்பிழை நீக்கி எழுதுக**

1] ஆண்களைப் போலவே பெண்களுக்கும் அரசுப் பணி அனைத்து துறைகளிலும் கொடுக்கவ் வேண்டும்

2] ஆண்களைப் போலவேப் பெண்களுக்கும் அரசு பணி அனைத்துத் துறைகளிலும் கொடுக்க வேண்டும்

3] ஆண்களை போலவே பெண்களுக்கும் அரசுப் பணி அனைத்துத் துறைகளிலும் கொடுக்க வேண்டும்

**4] ஆண்களைப் போலவே பெண்களுக்கும் அரசுப் பணி அனைத்துத் துறைகளிலும் கொடுக்க வேண்டும்**

**104] சந்திப்பிழை நீக்கி எழுதுக**

1] ஆளும் அறிவும் வளர்வதற்கும் முன்பாக வாழ்க்கை பயணமாம்

**2] ஆளும் அறிவும் வளர்வதற்கு முன்பாக வாழ்க்கைப் பயணமாம்**

3] ஆளும் அறிவும் வளர்வதற்கு முன்பாகவ் வாழ்க்கை பயணமாம்

4] ஆளும் அறிவும் வளர்வதற்கு முன்பாக வாழ்க்கை பயணமாம்

**105] ஒருமைப் பன்மைப் பிழை நீக்கி எழுதுக**

**1] கல்வி நலம்பெற்ற பெண்பாற் புலவருக்கு மன்னரும் பணிந்தார்**

2] கல்வி நலம்பெற்ற பெண்பாற் புலவருக்கு மன்னரும் பணிந்தனர்

3] கல்வி நலம்பெற்ற பெண்பாற் புலவருக்கு மன்னரும் பணிந்தார்கள்

4] கல்வி நலம்பெற்ற பெண்பாற் புலவருக்கு மன்னரும் பணிந்தனர்கள்

**106] ஒருமைப் பன்மைப் பிழை நீக்கி எழுதுக**

1] பெண்கள் பெற வேண்டியது பெண் கல்வி, பெண்ணுரிமை, சொத்துரிமை

2] பெண்கள் பெற வேண்டியன பெண் கல்வி, பெண்ணுரிமை, சொத்துரிமை

**3] பெண்கள் பெற வேண்டியவை பெண் கல்வி, பெண்ணுரிமை, சொத்துரிமை**

4] பெண்கள் பெற வேண்டும் பெண் கல்வி, பெண்ணுரிமை, சொத்துரிமை

**107] சட்டம் என்பதற்குச் ------------ என்பது பொருள்.**

1] சான்று

**2] செம்மை**

3] ஆதாரம்

4] உரிமை

**விளக்கம்** :- செம்மை என்னும் சொல் நடுவுநிலை என்னும் பொருளிலும் இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளது.

**108] அரசன், கொலைத்தொழில் புரியும் கொடியவர்களுக்கு மரண தண்டனை அளித்தல் குற்றமன்று, அது பயிருடன் வளர்ந்த களைகளை நீக்குதல் போன்றதாகும் எனக் கூறியவர்?**

1] பாரதியார்

2] திரு.வி.க

**3] வள்ளுவர்**

4] நாமக்கல் கவிஞர்

**குறிப்பு** :- கொலையில் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்

களைகட் டதனொடு நேர் - குறள் 550.

**109] தண்டனை வழங்குவது பற்றிக் கூறிய ----------- என்பவரே, அச்சட்டங்கள் மனிதநேய அடிப்படையில் நெகிழ்வுத்தன்மை உடையனவாகவும் அமைதல் வேண்டும் என்கிறார்.**

1] பாரதியார்

2] திரு.வி.க

**3] வள்ளுவர்**

4] நாமக்கல் கவிஞர்

**குறிப்பு** :- கடிதோச்சி மெல்ல எறிக நெடிதாக்கம்

நீங்காமை வேண்டு பவர் - குறள், 562.

**110] தமிழ்நாட்டில் வேளாண்மைக் கடன் நிவாரணச் சட்டம், கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம், உள்ளாட்சித் துறைச் சட்டம், முதலியன எதற்கு சான்றாகும்?**

1] அனைத்து நாட்டு சட்டம்

2] விவசாய சட்டம்

3] இந்தியச் சட்டம்

**4] மாநில தனிச்சட்டங்கள்**

**111] கீழ்க்கண்ட கூற்றில் தவறானது எது?**

1] இந்தியாவில் அவரவர் பின்பற்றிய சமயத்திற்கேற்ற சட்டங்களும் உள்ளன

2] இந்துச் சமயத்தைச் சார்ந்தோருக்கு இந்துச் சட்டம் உள்ளது

3] இசுலாமியர்களுக்கான இசுலாமியர் சட்டம் உள்ளது. கிறித்தவர்களுக்கான சட்டம் உள்ளது

**4] பௌத்தர்களுக்கும் சமணர்களுக்கும் தனியான மதச் சட்டங்களென தனித் தனிச் சட்டங்கள் உள்ளன.**

**குறிப்பு** :- பௌத்தர்களுக்கும் சமணர்களுக்கும் தனியான மதச் சட்டங்களென எவையுமில்லை. இந்துச்சமயச் சட்டங்களே அவர்களுக்கும் பொருந்தும்.

**112] குற்றங்கள் --------- வகைப்படும்.**

**1] 2** 2] 3 3] 4 4] 5

**குறிப்பு** :- குற்றங்கள் இரு வகைப்படும். ஒன்று, சட்டம் செய்யக்கூடாது என்று வலியுறுத்திச் சொன்னதைச் செய்தல்; மற்றொன்று, சட்டம் செய்ய வேண்டும் என்று வலியுறுத்துவதைச் செய்யாமல் இருத்தல்.

**113] அரசியல் சாசனத்தின் --------------- பிரிவின் படி குடிமக்கள் ஒவ்வொருவருக்கும் முழுமையான பேச்சுரிமை, எழுத்துரிமை, உண்டு.**

**1] 19 (1) ஆவது**

2] 20 (1) ஆவது

3] 21 (1) ஆவது

4] 22 (1) ஆவது

**114] இந்தியக் குடிமக்கள் தனியாகவோ ஓர் அமைப்பின் மூலமாகவோ தகவல் அறியும் உரிமைச் சட்டம் ------------------- தகவல் பெறலாம்.**

**1] 2005 பிரிவு 6 இன்படி**

2] 2006 பிரிவு 6 இன்படி

3] 2011 பிரிவு 6 இன்படி

4] 2012 பிரிவு 6 இன்படி

**115] தகவல் உரிமைச் சட்டத்தின் படி மாநில, மைய அரசு சார்ந்த அதிகார அமைப்பிடமிருந்து தகவல் பெறுவதற்குப் --------- உரூபாயை விண்ணப்பிக்க கட்டணமாகச் செலுத்துதல் வேண்டும்.**

**1] 10** 2] 15 3] 20 4] 25

**குறிப்பு** :- வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்பவராக இருந்தால், தகவல் பெறுவதற்கு எந்தக் கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை.

**116] 'ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான்' - என்று கூறும் நூல்?**

1] ஆத்திச்சூடி

2] பழமொழி நானூறு

**3] திருக்குறள்**

4] தொல்காப்பியம்

**117] எழுத்திலக்கணம் சொல்லிலக்கணம் ஆகிய இரண்டிலும் கூறப்படாத பொதுவான செய்திகள் சொல்லப்படுவது ----------- ஆகும்.**

1] வழு

2] ஆகுபெயர்

**3] பொது**

4] இவற்றில் ஏதுமில்லை

**118] வெளிப்படையாகத் தன்பொருளை உணர்த்தும் சொல் -------------- எனவும், ஒரு தொடர் முன்னும் பின்னும் வருகின்ற சொற்கள் உணர்த்தும் குறிப்பால் ஒரு பொருளைத் தருவது -------- எனவும் கூறுவர்.**

**1] வெளிப்படை, குறிப்பு**

2] பொது, ஆகுபெயர்

3] பொருள்கோள், வழாநிலை

4] இவற்றில் ஏதுமில்லை

**119] உயர்திணை அஃறிணை ஆகிய இரண்டிலும் பொதுவான சொற்கள் உண்டு. ஒரு சொல், தொடரில் முன்னும், பின்னும் வரும் சொற்களின் தொடர்பாலும்,**

**குறிப்பாலும் ஒரு பாலை நீக்கி மற்றொரு பாலைச் சுட்டும். அதற்கு ------------ என்பது பெயர்.**

1] பொருள்கோள்

2] ஆகுபெயர்

3] **ஒன்றொழி பொதுச்சொல்**

4] இவற்றில் ஏதுமில்லை

**குறிப்பு** :- **ஒன்றொழி பொதுச்சொல்**:-

உயர்திணை அஃறிணை ஆகிய இரண்டிலும் பொதுவான சொற்கள் உண்டு. ஒரு சொல், தொடரில் முன்னும், பின்னும் வரும் சொற்களின் தொடர்பாலும், குறிப்பாலும் ஒரு பாலை நீக்கி மற்றொரு பாலைச் சுட்டும். அதற்கு ஒன்றொழி பொதுச்சொல் என்பது பெயர்.

**உயர்திணையில், (எ.கா.)** :

1 . வீட்டின் முன் ஐவர் கோலமிட்டனர்.

2 . நாட்டைக் காக்க ஐவர் போர்க்களம் சென்றனர்.

-முதல் தொடரில் வந்துள்ள ஐவர் என்னும் பொதுச் சொல் கோலமிட்டனர் என்னும் குறிப்பால் ஆண்பாலை நீக்கிப் பெண்பாலை உணர்த்தி நின்றது. இரண்டாம் தொடரிலுள்ள ஐவர் என்னும் பொதுச் சொல் போர்க்களம் என்னும் சொல்லின் குறிப்பால் பெண்பாலை விடுத்து, ஆண்பாலை மட்டும் உணர்த்தி நின்றது.

**அஃறிணையில், (எ.கா.)** :

1 . இம்மாடு வயலில் உழுகிறது.

2 . இம்மாடு பால் கறக்கிறது.

- முதல் தொடரில் வந்துள்ள 'மாடு' என்னும் பொதுச் சொல் உழுகிறது என்னும் வினைக்குறிப்பால் காளைமாட்டையும், இரண்டாவது தொடரில் வரும் 'மாடு' என்னும் பொதுச்சொல் கறக்கிறது என்னும் வினைக்குறிப்பால், பசுமாட்டையும் குறிப்பிடுகின்றது. இவ்வாறு, ஒரு பொதுச்சொல் முன்பின் சேர்ந்து வரும் சொல்லின்

குறிப்பால் ஆண்பாலையோ பெண்பாலையோ உணர்த்தி வருவது ஒன்றொழி பொதுசொல் எனப்படும்.

**ஒன்றொழி பொதுச்சொல் விகாரம் தகுதி**

**ஆகு பெயர்அன் மொழிவினைக் குறிப்பே**

**முதல்தொகை குறிப்போ டின்ன பிறவும்**

**குறிப்பின் தருமொழி அல்லன வெளிப்படை – நன்னூல்.**

120] **ஒருசொல் தன் பொருளையும் குறித்துத் தனக்கு இனமான பொருளையும் குறித்து வருவது ---------- எனப்படும்.**

1] **இனங்குறித்தல்**

2] ஆகுபெயர்

3] ஒன்றொழி பொதுச்சொல்

4] இவற்றில் ஏதுமில்லை

**விளக்கம்** :- **இனங்குறித்தல்** :-

கதிர்வேல் வெற்றிலை தின்றான்.

இத்தொடர் கதிர்வேல் வெற்றிலை மட்டுமா தின்றான். வெற்றிலையோடு அதற்கு இனமான பாக்கு, சுண்ணாம்பு முதலானவற்றையும் சேர்த்துத் தின்றான் எனப் பொருள்படுகிறது. இவ்வாறு ஒருசொல், தன்பொருளையும் குறித்துத் தனக்கு இனமான பொருளையும் குறித்து வருவது இனங்குறித்தல் எனப்படும்.

**ஒருமொழி ஒழிதன் இனங்கொளற் குரித்தே – நன்னூல் 359.**

121] **அசைநிலைக்கும், விரைவு, சினம், மகிழ்ச்சி, அச்சம், துன்பம் முதலிய பொருள் நிலைக்கும், செய்யுளில் இசையை நிறைவு செய்வதற்கும் இரண்டு மூன்று நான்குமுறை அடுக்கி வருவது --------- எனப்படும்.**

1] இரட்டைக்கிளவி

2] ஆகுபெயர்

3] பொருள்கோள்

**4] அடுக்குத்தொடர்**

விளக்கம் :- அடுக்குத்தொடர் :

அசைநிலைக்கும், விரைவு சினம் மகிழ்ச்சி அச்சம் துன்பம் முதலிய பொருள் நிலைக்கும், செய்யுளில் இசையை நிறைவு செய்வதற்கும் இரண்டு மூன்று நான்குமுறை அடுக்கி வருவது அடுக்குத்தொடர் எனப்படும்.

(எ.கா.) : 1 . அன்றே அன்றே - அசைநிலை.

2 . போ போ - விரைவு.

3 . எறி எறி - சினம்.

4 . வருக வருக - மகிழ்ச்சி.

5 . தீ தீ தீ - அச்சம்.

6 . நொந்தேன் நொந்தேன் - துன்பம்.

7 . கோடி கோடி கோடி கோடியே - இசை நிறை.

**அசைநிலை பொருள்நிலை இசைநிறைக் கொருசொல்**

**இரண்டு மூன்று நான் கெல்லை முறை அடுக்கும். – நன்னூல்** 395.

**122] இரட்டித்து நின்று பொருள் உணர்த்தும் சொற்கள் இரட்டித்தே வரும். பிரித்தால் பொருள் தராது. இதனை ---------- என்பர்.**

**1] இரட்டைக்கிளவி**

2] ஆகுபெயர்

3] பொருள்கோள்

4] அடுக்குத்தொடர்

**குறிப்பு :- இரட்டைக்கிளவி:-** இரட்டித்து நின்று பொருள் உணர்த்தும் சொற்கள் இரட்டித்தே வரும். பிரித்தால் பொருள் தராது. இதனை இரட்டைகிளவி என்பர். (கிளவி - சொல்) இரட்டைக் கிளவி இரண்டு சொல்.

**(எ.கா) :-**

1 . பாவை படபடவெனப் பேசினாள்.

2 . கலா கலகலவெனச் சிரித்தாள்.

இரட்டைக் கிளவி இரட்டிற் பிரிந்திசையா – நன்னூல் 396.

**அடுக்குத்தொடருக்கும் இரட்டைக்கிளவிக்கும் உள்ள வேறுபாடு:-**

அடுக்குத்தொடர் : சொற்கள் தனித்தனியே நிற்கும்.

இரட்டைக்கிளவி : சொற்கள் ஒன்றுபட்டு நிற்கும்.

அடுக்குத்தொடர் : பிரித்தால் பொருள் தரும்.

இரட்டைக்கிளவி : பிரித்தால் பொருள் தராது.

அடுக்குத்தொடர் : இரண்டு மூன்று நான்கு முறை அடுக்கி வரும்.

இரட்டைக்கிளவி : இரட்டித்தே வரும்.

அடுக்குத்தொடர் : விரைவு, அச்சம், வெகுளி, மகிழ்ச்சி.

இரட்டைக்கிளவி : இசை குறிப்பு , பண்பு பற்றி வரும்.

**123] இளவழகன் வந்தான். இது --- தொடர்.**

**1] வெளிப்படை**

2] இனம்குறித்தில்

3] குறிப்பு

4] இவற்றில் ஏதுமில்லை

**124] மாடு என்னும் சொல் ---------------.**

**1] அஃறிணைப் பொதுப்பெயர்**

2] உயர்திணைப் பொதுப்பெயர்

3] விரவுப் பெயர்

4] இவற்றில் ஏதுமில்லை

**125] ஷேத்திரங்கள் தோறும் சென்று விக்கிரகங்களை வழிபடுக - இத்தொடரில் காணும் பிறமொழிச் சொற்களுக்குரிய தமிழ்ச்சொற்கள் அமைந்த தொடரைக் கண்டறிக.**

1] திருத்தலங்கள் தோறும் சென்று விக்கிரகங்களை வழிபடுக

2] ஊர்கள்தோறும் சென்று விக்கிரகங்களை வழிபடுக

**3] புண்ணியத்தலந்தோறும் சென்று கடவுள் சிலைகளை வழிபடுக**

4] சிற்றூர்கள் தோறும் சென்று இறைவனை வழிபடுக

**126] பொருந்தாதது எது? பிறமொழிச் சொற்களுக்குரிய தமிழ்ச்சொற்கள் அமையாத தொடரைக் கண்டறிக.**

1] இம்மார்க்கத்தில் யாத்திரை செல்லுங்கள் - இவ்வழியே புண்ணியப் பயணம் செல்லுங்கள்

2] இந்த சர்ட் மிகவும் காஸ்ட்லியானது - இந்த மேலாடை மிகுந்த விலை மதிப்புள்ளது

3] நாளை நடக்கவிருக்கும் மேட்சில் இந்தியா கண்டிப்பாய் வின் செய்யும் - நாளை நடக்கவிருக்கும் போட்டியில் இந்தியா உறுதியாய் வெற்றி பெறும்

**4] நான் இந்தக் காலேஜின் ஓல்ட் ஸ்டுடென்ட் - நான் இந்த கல்லூரியின் ஓல்ட் மாணவன்**

**குறிப்பு** :- நான் இந்தக் காலேஜின் ஓல்ட் ஸ்டுடென்ட் - நான் இந்த கல்லூரியின் மேனாள் மாணவன்.

**127] இணையான தமிழ்ப்பழமொழி - money makes many things.**

**1] பணம் பத்தும் செய்யும்**

2] புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது

3] காலம் பொன் போன்றது

4] வருமுன் காப்பதே சிறந்தது

**128] இணையான தமிழ்ப்பழமொழி - Eagles dont catch flies.**

1] பணம் பத்தும் செய்யும்

**2] புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது**

3] காலம் பொன் போன்றது

4] வருமுன் காப்பதே சிறந்தது

**129] இணையான தமிழ்ப்பழமொழி - old is gold.**

1] பணம் பத்தும் செய்யும்

2] புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது

**3] காலம் பொன் போன்றது**

4] வருமுன் காப்பதே சிறந்தது

**130] இணையான தமிழ்ப்பழமொழி - Prevention is better than cure.**

1] பணம் பத்தும் செய்யும்

2] புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது

3] காலம் பொன் போன்றது

**4] வருமுன் காப்பதே சிறந்தது**

**131] இணையான தமிழ்ப்பழமொழி - slow and steady wins the race.**

**1] முயற்சி திருவினையாக்கும்**

2] புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது

3] காலம் பொன் போன்றது

4] வருமுன் காப்பதே சிறந்தது

## பத்தாம் வகுப்பு - பொதுத்தமிழ் பாடக்குறிப்புகள் பகுதி - 4

**1] அரிகால் மாறிய அங்கண் அகல்வயல்; மறுகால் உழுத ஈரச் செறுவின்; வித்தொடு சென்ற வட்டி பற்பல - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] ஔவையார், புறநானூறு

2] மதுரைக்காஞ்சி, மாங்குடி மருதனார்

3] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

**4] நற்றிணை, மிளைகிழான் நல்வேட்டனார்**

**2] மீனொடு பெயரும் யாணர் ஊர; நெடிய மொழிதலும் கடிய ஊர்தலும்; செல்வம் அன்றுதன் செய்வினைப் பயனே - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] ஔவையார், புறநானூறு

2] மதுரைக்காஞ்சி, மாங்குடி மருதனார்

3] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

**4] நற்றிணை, மிளைகிழான் நல்வேட்டனார்**

**3] சான்றோர் செல்வம் என்பது சேர்ந்தார்; புன்கண் அஞ்சும் பண்பின்; மென்கண் செல்வம் செல்வமென் பதுவே - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] ஔவையார், புறநானூறு

2] மதுரைக்காஞ்சி, மாங்குடி மருதனார்

3] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

**4] நற்றிணை, மிளைகிழான் நல்வேட்டனார்**

**4] உழவர், நெற்கதிர்களை அறுவடை செய்த பின்னர், அகன்ற அழகிய; வயலை மறுபடியும் பயிர் செய்ய உழுதனர். பனையோலைப்; பெட்டியில் விதை கொண்டு சென்று ஈரமுள்ள அந்நிலத்தில் விதைத்தனர். பின்னர் அவர்கள் அங்குள்ள நீர்நிலைகளில் பல்வகை மீன்களைப் பிடித்து அப்பெட்டியில் கொண்டு வருகின்ற புதுவருவாயினை உடைய மருத நிலத் தலைவனே - இது எந்த நூலில் இருந்து எடுக்கப்பட்டுள்ள கருத்து?**

1] ஔவையார், புறநானூறு

2] மதுரைக்காஞ்சி, மாங்குடி மருதனார்

3] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

**4] நற்றிணை, மிளைகிழான் நல்வேட்டனார்**

**5] அரசால் சிறப்புச் செய்யப் பெறுதலும், யானை, தேர், குதிரை; முதலிய ஊர்திகளில் அவ்வரசர் முன்னிலையில் விரைந்து; செல்லுதலும் செல்வச் சிறப்பன்று. அஃது அவரவர்தம் முன்வினைப்; பயனே. தன்பால் புகலிடம் தேடிவந்த எளியோரைக் கைவிடாமல்; காக்கும் மென்மையான பண்பே செல்வமெனச் சான்றோர் கூறுவர் - இது எந்த நூலில் இருந்து எடுக்கப்பட்டுள்ள கருத்து?**

1] ஔவையார், புறநானூறு

2] மதுரைக்காஞ்சி, மாங்குடி மருதனார்

3] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

**4] நற்றிணை, மிளைகிழான் நல்வேட்டனார்**

**6] பொருந்தாதது எது? சொற்பொருள்.**

1] அரி - நெற்கதிர்

**2] செறு - மலை**

3] யாணர் - புதுவருவாய்

4] வட்டி - பனையோலைப்பெட்டி

**குறிப்பு** :- செறு என்பதன் சரியான சொற்பொருள் வயல்.

**7] சென்ற வட்டி - இலக்கணக்குறிப்பு தருக.**

**1] பெயரெச்சம்**

2] வினைத்தொகை

3] பண்புத்தொகை

4] விளித்தொடர்

**8] செய்வினை - இலக்கணக்குறிப்பு தருக.**

1] பெயரெச்சம்

**2] வினைத்தொகை**

3] பண்புத்தொகை

4] விளித்தொடர்

**9] புன்கண், மென்கண் - இலக்கணக்குறிப்பு தருக.**

1] பெயரெச்சம்

2] வினைத்தொகை

**3] பண்புத்தொகை**

4] விளித்தொடர்

**10] ஊர (ஊரனே) - இலக்கணக்குறிப்பு தருக.**

1] பெயரெச்சம்

2] வினைத்தொகை

3] பண்புத்தொகை

**4] விளித்தொடர்**

**11] பொருந்தாதது எது? பிரித்தறிதல்.**

1] அங்கண் - அம் + கண்

**2] பற்பல - பற் + பல**

3] புன்கண் - புன்மை + கண்

4] மென்கண் - மென்மை + கண்

**குறிப்பு** :- பற்பல என்பதன் சரியான பிரித்தறிதல் பல + பல.

**12] கீழ்க்கண்ட கூற்று யாரைப்பற்றியது?**

**மிளை என்னும் ஊரில் பிறந்தவராதலால், -------------- என்னும் பெயர் பெற்றார். இவர் ஐந்திணைகளைப் பற்றியும் பாடல் இயற்றியுள்ளார். இவர் பாடியனவாக நற்றிணையில் நான்கு பாடலும் குறுந்தொகையில் ஒன்றுமாக ஐந்து பாடல் உள்ளன. இவர் சங்ககாலத்தவர்.**

1] மிளை செல்வனார்

2] ஔவையார்

3] கண்ணகனார்

**4] மிளைகிழான் நல்வேட்டனார்**

**13] கீழ்க்கண்ட கூற்று எந்த நூலைப் பற்றியது?**

**பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் சங்க நூல்கள் எனப் போற்றப்படுவன. எட்டுத்தொகை நூல்களுள் முதலாவதாக வைத்து எண்ணப்படுவதும், "நல்" என்று அடைமொழி கொடுத்துப் போற்றப்படுவதும் இந்நூலே. இஃது அகத்திணை நூலாகும்.**

1] நன்னூல்

2] சிலப்பதிகாரம்

3] நான்மணிக்கடிகை

**4] நற்றிணை**

**14] கீழ்க்கண்ட கூற்று எந்த நூலைப் பற்றியது?**

**ஓரறிவு உயிர்களையும் விரும்பும் உயரிய பண்பு, விருந்தோம்பல், அறவழியில் பொருளீட்டல் முதலிய தமிழர்தம் உயர் பண்புகளைத் தெள்ளத் தெளிவாக எடுத்தியம்பும் நூலிது. இதில் ஐந்திணைக்குமான பாடல்கள் உள்ளன.**

1] நன்னூல்

2] சிலப்பதிகாரம்

3] நான்மணிக்கடிகை

**4] நற்றிணை**

**15] ஒன்பது அடிச் சிற்றெல்லையும் பன்னிரண்டு அடிப் பேரெல்லையும் கொண்ட நூல்?**

1] நன்னூல்

2] சிலப்பதிகாரம்

3] நான்மணிக்கடிகை

**4] நற்றிணை**

**16] நற்றிணைப் பாடல்களைத் தொகுப்பித்தவர் யார்?**

1] பூரிக்கோ

2] சேரல் இரும்பொறை

**3] பன்னாடு தந்த மாறன் வழுதி**

4] இவர்களில் யாருமில்லை

**17] நற்றிணையில் ---------- பாடல்கள் உள்ளன.**

1] 100 2] 200 3] 300 **4] 400**

**18] நற்றிணை பாடல்களை பாடினோர் எத்தனை பேர்?**

1] 225 2] 250 **3] 275** 4] 300

**19] நற்றிணை ----------- நூல்களைச் சார்ந்தது?**

1] பத்துப்பாட்டு

**2] எட்டுத்தொகை**

3] பதினெண்கீழ்க்கணக்கு

4] பதினெண்மேல்கணக்கு

**20] பொன்னும் துகிரும் முத்தும் மன்னிய; மாமலை பயந்த காமரு மணியும்; இடைப்படச் சேய ஆயினும் தொடை புணர்ந்து - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] புறநானூறு, கண்ணகனார்

2] மதுரைக்காஞ்சி, மாங்குடி மருதனார்

3] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

**4] நற்றிணை, மிளைகிழான் நல்வேட்டனார்**

**21] அருவிலை நன்கலம் அமைக்கும் காலை; ஒருவழித் தோன்றி யாங்கு என்றும் சான்றோர்; சான்றோர் பாலர் ஆப சாலார் சாலார் பாலர் ஆகுபவே - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] கண்ணகனார், புறநானூறு.

2] மதுரைக்காஞ்சி, மாங்குடி மருதனார்

3] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

**4] நற்றிணை, மிளைகிழான் நல்வேட்டனார்**

**22] பொருந்தாதது எது? சொற்பொருள்.**

1] துகிர் - பவளம்

2] மன்னிய - நிலைபெற்ற

**3] சேய - அருகாமையில்**

4] தொடை - மாலை

**குறிப்பு:-** சேய என்பதன் சரியான சொற்பொருள் தொலைவு

**23] கலம் என்பதன் சொற்பொருள்?**

1] பவளம்

2] நிலைபெற்ற

3] மாலை

**4] அணி**

**24] பொன்னும் துகிரும் முத்தும் பவளமும் மணியும் - இலக்கணக்குறிப்பு தருக.**

1] முற்றும்மை

2] உயர்வு சிறப்பும்மை

**3] எண்ணும்மை**

4] இவற்றில் ஏதுமில்லை

**25] மாமலை - இலக்கணக்குறிப்பு தருக.**

1] பண்புத்தொகை

2] ஆகுபெயர்

**3] உரிச்சொல் தொடர்**

4] எண்ணும்மை

**26] அருவிலை, நன்கலம் - இலக்கணக்குறிப்பு தருக.**

**1] பண்புத்தொகை**

2] ஆகுபெயர்

3] உரிச்சொல் தொடர்

4] எண்ணும்மை

**27] ------------ என்பவர், கோப்பெருஞ்சோழனின் அவைக்களப் புலவர்களுள் ஒருவர்.**

1] கம்பர்

2] ஔவையார்

**3] கண்ணகனார்**

4] புகழேந்திப் புலவர்

**28] கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்தபொழுது, --------------- வருகைக்காகக் காத்திருந்தான். அப்போது, அவருடன் இருந்தவர் கண்ணகனார்.**

**1] பிசிராந்தையார்**

2] சடையப்ப வள்ளல்

3] அபுல் காசிம் மரைக்காயர்

4] இவர்களில் யாருமில்லை

**29] புறநானூறு -------- நூல்களுள் ஒன்று.**

1] ஐம்பெரும் காப்பியங்கள்

2] ஐஞ்சிறும் காப்பியங்கள்

3] பத்துப்பாட்டு

**4] எட்டுத்தொகை**

**30] புறநானூறு -------- பாடல்களைக் கொண்டுள்ளது.**

1] 355 **2] 400** 3] 450 4] 500

**31] பொன்னும் துகிரும் முத்தும் மன்னிய; மாமலை பயந்த காமரு மணியும்; இடைப்படச் சேய ஆயினும் தொடை புணர்ந்து; அருவிலை நன்கலம் அமைக்கும் காலை; ஒருவழித் தோன்றி யாங்கு என்றும் சான்றோர்; சான்றோர் பாலர் ஆப சாலார் சாலார் பாலர் ஆகுபவே - இந்த பாடல் புறநானூற்றின் எத்தனையாவது பாடல்?**

1] 200 **2] 218** 3] 300 4] 318

**32] பொன்னும் துகிரும் முத்தும் மன்னிய; மாமலை பயந்த காமரு மணியும்; இடைப்படச் சேய ஆயினும் தொடை புணர்ந்து; அருவிலை நன்கலம் அமைக்கும் காலை; ஒருவழித் தோன்றி யாங்கு என்றும் சான்றோர்; சான்றோர் பாலர் ஆப சாலார் சாலார் பாலர் ஆகுபவே - ----------- என்பவர் உயிர் துறந்த பொழுது மிகவும் வருந்திய கண்ணகனார் இந்த பாடலை பாடினார்.**

1] சேரல் இரும்பொறை

**2] கோப்பெருஞ்சோழன்**

3] பிசிராந்தையார்

4] இவர்களில் யாருமில்லை

winmeen

**33] ஆய கலைகள் ---------- ஆகும்.**

1] 86 2] 73 **3] 64** 4] 55

**34] மேடைப்பேச்சுக்குக் ------- உயிர்நாடி.**

1] மொழி

2] சொல்

**3] கருத்துகள்**

4] இவற்றில் ஏதுமில்லை

**35] மின்சாரம் பாயக் கம்பி கருவியாக இருப்பதுபோலக், கருத்தை விளக்க --------- கருவியாக உள்ளது.**

**1] மொழி**

2] சொல்

3] கருத்துகள்

4] இவற்றில் ஏதுமில்லை

**36] பேசும்பொருளை ஒழுங்குமுறைக்குக் கட்டுப்படுத்தித் தொடக்கம், இடைப்பகுதி, முடிவு எனப் பகுத்துப் பேசுவதனையே பேச்சுமுறை என்கிறோம். இதனை ------------, ----------, --------------- எனவும் கூறலாம்.**

1] முதல் , இடை, கடை

2] ஆரம்பம், நடுநிலை, இறுதிநிலை

**3] எடுத்தல், தொடுத்தல், முடித்தல்**

4] இவற்றில் ஏதுமில்லை

**37] பேச்சைத் தொடங்குவது ------------?**

1] ஆரம்ப நிலை

**2] எடுப்பு**

3] தொடுத்தல்

4] இவற்றில் ஏதுமில்லை

**38] தொடக்கவுரைக்குப் பிறகு, பொருளை விவரித்துப் பேசும்முறை ----------- எனப்படும்.**

1] ஆரம்ப நிலை

2] எடுப்பு

**3] தொடுத்தல்**

4] இவற்றில் ஏதுமில்லை

**39] இடையிடையே சுவைமிக்க சொற்களும் குணமிக்க கருத்துகளும் பிணைத்துப் பேசுவதே --------- எனப்படும்.**

1] ஆரம்ப நிலை

2] எடுப்பு

**3] தொடுத்தல்**

4] இவற்றில் ஏதுமில்லை

**40] இலக்கியக் கூறுகள் என்பவை மருந்தின் மேலிட்ட ----------- போன்றவை.**

1] காரம்

**2] இனிப்பு**

3] துவர்ப்பு

4] கசப்பு

**41] எண்ணங்களைச் சொல்லும் முறையால் அழகுபடுத்துவதே -------- எனப்படும்.**

1] இலக்கணம்

**2] அணி**

3] வழு

4] ஆகுபெயர்

**42] நுண்ணிய நூல் பல கற்றவர்க்கே அமைந்த அரிய கலை -------?**

1] ஓவியக்கலை

2] இசைக்கலை

**3] பேச்சுக்கலை**

4] இவற்றில் ஏதுமில்லை

**43] மேடைப் பேச்சில் மக்களை ஈர்த்தவர் ------?**

1] அண்ணா

2] ஈ.வே.ரா

3] வரதராசனார்

**4] திரு.வி.க**

**44] ஒருமை பன்மைப் பிழை நீக்கி எழுதுக.**

1] புலவர்கள் பொங்கற்புதுநாளின் மாண்பினை உணர்ந்து கொண்டாடினர்

2] புலவர்கள் பொங்கற்புதுநாளின் மாண்பினை உணர்ந்து கொண்டாடுவர்

**3] புலவர்கள் பொங்கற்புதுநாளின் மாண்பினை உணர்ந்து கொண்டாடினார்கள்**

4] புலவர்கள் பொங்கற்புதுநாளின் மாண்பினை உணர்ந்து கொண்டாடுவார்கள்

**45] ஒருமை பன்மைப் பிழை நீக்கி எழுதுக.**

1] மேடைப் பேச்சுக்குக் கருத்துகளே உயிர்நாடி போன்றதாகும்

**2] மேடைப் பேச்சுக்குக் கருத்துகளே உயிர்நாடி போன்றவை**

3] மேடைப் பேச்சுக்குக் கருத்துகளே உயிர்நாடி போன்றன

4] மேடைப் பேச்சுக்குக் கருத்துகளே உயிர்நாடி போன்றது

**46] சந்திப்பிழை நீக்கி எழுதுக**

1] மேடைப் பேச்சு மிகுந்தப் பயனைத் தரவல்லது

2] மேடை பேச்சு மிகுந்த பயனைத் தரவல்லது

**3] மேடைப் பேச்சு மிகுந்த பயனைத் தரவல்லது**

4] மேடைப் பேச்சு மிகுந்தப் பயனை தரவல்லது

**47] சந்திப்பிழை நீக்கி எழுதுக.**

**1] மக்களை இலட்சியப் பாதையிலே அழைத்துச் செல்லும் வன்மையுடையதே மேடைப் பேச்சு**

2] மக்களை இலட்சியப் பாதையிலே அழைத்துச் செல்லும் வன்மையுடையதே மேடை பேச்சு

3] மக்களை இலட்சிய பாதையிலே அழைத்துச் செல்லும் வன்மையுடையதே மேடைப் பேச்சு

4] மக்களை இலட்சியப் பாதையிலே அழைத்து செல்லும் வன்மையுடையதே மேடைப் பேச்சு

**48] ஒன்று நாம் உணர்கின்றோம் தம்பி! எத்தனை இன்னலுக்கிடையிலே. தள்ளப்பட்டிருப்பினும், இந்தப் பொங்கற் புதுநாளில் மட்டும் நமக்கு ஒரு மகிழ்வு,. நாட்டுக்கு ஒரு பொலிவு வந்து சேர்ந்துவிடத்தான் செய்கிறது - என்று கூறியவர்?**

1] மு.வரதராசனார்

2] எம்.ஜி.ஆர்

**3] அண்ணா**

4] திரு.வி.க

**49] நலிந்தோரும் கூட இந்நாளில் புதுத்தெம்பு வரக் காண்கின்றனர். இந்நாளில் மட்டுமே உழைப்பின் பெருமையை உணர்ந்து உரையாடி மகிழ்ந்திட வாய்ப்புக் கிடைக்கின்றது. இந்நாளே அந்நாளில் தமிழர் வாழ்ந்த நேர்த்தி பற்றிய நினைவு எழுகிறது - என்று கூறியவர்?**

1] மு.வரதராசனார்

2] எம்.ஜி.ஆர்

**3] அண்ணா**

4] திரு.வி.க

**50] நமக்கெல்லாம் எழுச்சி தரத்தக்க முறையிலும் அளவிலும் நம்மைச் சுற்றிக் காணும் பொருள் யாவும் நிலமடந்தை தந்தனள் பரிவுடன். ஆயின், பாலூட்டும் தாயும் சேயுடன் விளையாட்டுக்காட்டி, முடியாது - பிறகு - விடு - அடிப்பேன் என்று கொஞ்சுவதில்லையா, அதுபோல,நிலமடந்தையும் தன் மக்களுக்கு வளம் அளிக்கும் முன்பு, விளையாட்டுக் காட்டுவான்வேண்டி, "உழைத்துப் பெறு! உரிய நேரத்தில் பெறு! முயற்சி செய்து பெறு!" என்று அன்பு ஆணையிடுகிறாள். - என்று கூறியவர்?**

1] மு.வரதராசனார்

2] எம்.ஜி.ஆர்

**3] அண்ணா**

4] திரு.வி.க

**51] "தமிழர் திருநாள் தை முதல் நாளாம் அமிழ்தென இனிக்கும் பொங்கல் திருநாள்" - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] பாரதியார்

2] பாரதிதாசன்

3] வாணிதாசன்

**4] முடியரசன்**

**52] "உழைப்பின் உயர்வை உணர்த்தும் பெருநாள் சளைப்பிலா முயற்சிதரு பயன்பெற்றுப் புதுமை இன்பம் பூணும் நன்னாள்" - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] பாரதியார்

2] பாரதிதாசன்

3] வாணிதாசன்

**4] முடியரசன்**

**53] பொங்கல் திருநாளன்று -------------- இதழ் மூலம் பேரறிஞர் அண்ணா கருத்து விருந்து அளித்துள்ளார்.**

1] மதராஸ்

2] இந்திய ஒப்பீனியன்

**3] காஞ்சி**

4] தினமலர்

**54] என்ன? எப்படி? எங்கு? ஏன்? என வினாமேல் வினா கேட்டு விடையறிய விரும்புகின்றவனே சிறந்த அறிவாளியாக ஆகமுடியும் என்று சாக்கரடிசும், ------------------ கூறுவர்.**

1] அண்ணா

**2] பெரியார்**

3] திரு.வி.க

4] ராஜாஜி

**55] வினா ------ வகைப்படும்.**

1] 4 2] 5 **3] 6** 4] 7

**விளக்கம்** :- அறிவினா, அறியா வினா, ஐய வினா, கொளல் வினா, கொடை வினா, ஏவல் வினா.

**56] தான் ஒரு பொருளை நன்கறிந்திருந்தும் அப்பொருள் பிறர்க்குத் தெரியுமா என்பதை அறியும் பொருட்டு வினாவப்படும் வினா --------- எனப்படும்.**

**1] அறி வினா**

2] அறியா வினா

3] ஐய வினா

4] கொளல் வினா

**விளக்கம்** :- (எ-டு) திருக்குறளை இயற்றியவர் யார்? என ஆசிரியர் மாணவனிடம் வினவுவது.

**57] தான் அறியாத ஒரு பொருளை அறிந்து கொள்வதற்காகப் பிறரிடம் வினவுவது ------------?**

1] அறி வினா

**2] அறியா வினா**

3] ஐய வினா

4] கொளல் வினா

**விளக்கம்** :- எட்டுத்தொகை நூல்களுள் புறம் பற்றியன எவை? என மாணவன் ஆசிரியரிடம் வினவுவது.

**58] தனக்கு ஐயமாக இருக்கின்ற ஒருபொருள் குறித்து, ஐயத்தைப் போக்கிக் கொள்வதற்காக வினவப்படும் வினா ---------?**

1] அறி வினா

2] அறியா வினா

**3] ஐய வினா**

4] கொளல் வினா

**விளக்கம்** :- ஐயவினா:- (எ-டு) அங்கே கிடப்பது பாம்போ? கயிறோ?

**59] தான் ஒரு பொருளை வாங்கிக் கொள்ளும் பொருட்டுக் கடைக்காரரிடம் வினவும் வினா -------------?**

1] அறி வினா

2] அறியா வினா

3] ஐய வினா

**4] கொளல் வினா**

**விளக்கம்** :- கொளல்வினா:- (எ-டு) பருப்பு உள்ளதா? என வணிகரிடம் வினவும் வினா.

**60] தான் ஒரு பொருளைக் கொடுப்பதற்காக, அப்பொருள் இருத்தலைப் பற்றிப் பிறரிடம் வினவுவது ------------?**

**1] கொடை வினா**

2] ஏவல் வினா

3] ஐய வினா

4] கொளல் வினா

**விளக்கம்** :- கொடைவினா:- (எ-டு) மாணவர்களே! உங்களுக்குச் சீருடை இல்லையோ?

**61] ஒரு தொழிலைச் செய்யும்படி ஏவும் வினா ----------?**

1] கொடை வினா

**2] ஏவல் வினா**

3] ஐய வினா

4] கொளல் வினா

**விளக்கம்** :- ஏவல் வினா:- (எ-டு) மனப்பாடச் செய்யுளைப் படித்தாயா? முருகா சாப்பிட்டாயா? ( இவை படி, சாப்பிடு என்று ஏவல் பொருளைத் தருகின்றன.)

**62] அறிவு, அறியாமை, ஐயுறல், கொளல், கொடை,ஏவல் தரும் வினா, ஆறும் இழுக்கார். - என்று கூறும் நூல் ?**

1] திருக்குறள்

**2] நன்னூல்**

3] நாலடியார்

4] ஆத்திச்சூடி

**63] திருக்குறளை இயற்றியவர் யார்? என ஆசிரியர் மாணவனிடம் வினவுவது. - இந்த எடுத்துக்காட்டு எந்த வினாவுடன் தொடர்புடையது?**

**1] அறி வினா**

2] அறியா வினா

3] ஐய வினா

4] கொளல் வினா

**64] எட்டுத்தொகை நூல்களுள் புறம் பற்றியன எவை? என மாணவன் ஆசிரியரிடம் வினவுவது. - இந்த எடுத்துக்காட்டு எந்த வினாவுடன் தொடர்புடையது?**

1] அறி வினா

**2] அறியா வினா**

3] ஐய வினா

4] கொளல் வினா

**65] அங்கே கிடப்பது பாம்போ? கயிறோ? - இந்த எடுத்துக்காட்டு எந்த வினாவுடன் தொடர்புடையது?**

1] அறி வினா

2] அறியா வினா

**3] ஐய வினா**

4] கொளல் வினா

**66] பருப்பு உள்ளதா? என வணிகரிடம் வினவும் வினா. - இந்த எடுத்துக்காட்டு எந்த வினாவுடன் தொடர்புடையது?**

1] அறி வினா

2] அறியா வினா

3] ஐய வினா

**4] கொளல் வினா**

**67] மாணவர்களே! உங்களுக்குச் சீருடை இல்லையோ? - இந்த எடுத்துக்காட்டு எந்த வினாவுடன் தொடர்புடையது?**

**1] கொடை வினா**

2] ஏவல் வினா

3] ஐய வினா

4] கொளல் வினா

**68] மனப்பாடச் செய்யுளைப் படித்தாயா? முருகா சாப்பிட்டாயா? - இந்த எடுத்துக்காட்டு எந்த வினாவுடன் தொடர்புடையது?**

1] கொடை வினா

**2] ஏவல் வினா**

3] ஐய வினா

4] கொளல் வினா

**69] இறை, செப்பு, பதில் என்பன ---------- இன் வேறுபெயர்கள்.**

1] வினா

**2] விடை**

3] கடவுள்

4] சொல்

**70] விடை -------- வகைப்படும்?**

1] 5 2] 6 3] 7 **4] 8**

**விளக்கம்** :- சுட்டு, மறை, நேர், ஏவல், வினா எதிர் வினாதல், உற்றதுரைத்தல், உறுவது கூறல், இனமொழி என்பன.

**71] "சென்னைக்கு வழி யாது?' என்று வினவினால், இது என்பது போலச் சுட்டிக் கூறும் விடை ------------?**

**1] சுட்டு விடை**

2] மறை விடை

3] நேர் விடை

4] ஏவல் விடை

**72] "இது செய்வாயா?" என்று வினவிய போது, செய்யேன் என்பது போல எதிர் மறுத்துக் கூறும் விடை ---------?**

1] சுட்டு விடை

**2] மறை விடை (எதிர்மறுத்துக் கூறல் விடை)**

3] நேர் விடை

4] ஏவல் விடை

**73] " இது செய்வாயா?" என்று வினவிய போது, செய்வேன் என்று உடன் பட்டுக் கூறும் விடை -----------?**

1] சுட்டு விடை

2] மறை விடை

**3] நேர் விடை (உடன்பட்டுக் கூறுதல்)**

4] ஏவல் விடை

**74] " இது செய்வாயா?" என்று வினவிய போது நீயே செய் என்று ஏவிக் கூறுவது -----------------?**

1] சுட்டு விடை

2] மறை விடை

3] நேர் விடை

**4] ஏவல் விடை**

**75] " இது செய்வாயா?" என்று வினவிய போது, செய்யாமலிருப்பேனோ? என்று வினாவையே விடையாகக் கூறுவது ---------------?**

**1] வினாஎதிர் வினாதல் விடை**

2] உற்றதுரைத்தல் விடை

3] உறுவது கூறல் விடை

4] இனமொழி விடை

**76] "இது செய்வாயா?" என்று வினவிய போது, உடம்பு நொந்தது என்று தனக்கு உற்றதை விடையாகக் கூறுவது ----------?**

1] வினாஎதிர் வினாதல் விடை

**2] உற்றதுரைத்தல் விடை**

3] உறுவது கூறல் விடை

4] இனமொழி விடை

**77] "செய்வாயா?" என்னும் வினாவிற்குக் கை வலிக்கும் எனத் தனக்கு வரப்போவதை விடையாகக் கூறுவது ------------?**

1] வினாஎதிர் வினாதல் விடை

2] உற்றதுரைத்தல் விடை

**3] உறுவது கூறல் விடை**

4] இனமொழி விடை

**78] "ஆடுவாயா?" என்று வினவிய போது, பாடுவேன் என ஆடுவதற்கு இனமான பாடுவதை விடையாகக் கூறுவது ---------?**

1] வினாஎதிர் வினாதல் விடை

2] உற்றதுரைத்தல் விடை

3] உறுவது கூறல் விடை

**4] இனமொழி விடை**

**79] சுட்டு, மறை, நேர், ஏவல் வினாதல்,உற்றது உரைத்தல், உறுவதுகூறல்,இனமொழி, எனும்எண் இறையுள் இறுதிநிலவிய ஐந்தும்அப் பொருண்மையின் நேர்பு.- என்று கூறும் நூல் எது?**

**1] நன்னூல்**

2] நற்றிணை

3] இனியவை நாற்பது

4] திரிகடுகம்

**விளக்கம்** :- சுட்டு, மறை, நேர் ஆகிய மூன்றும் வெளிப்படை ஏவல், வினாஎதிர் வினாதல், உற்றது, உரைத்தல், உறுவதுகூறல், இனமொழி ஆகிய ஐந்தும் வினாக்களுக்கு உரிய விடையைக் குறிப்பால் உணர்த்துவன.

**80] உயர்ந்தோங்கி - இந்த சொல் கீழ்க்கண்ட எவற்றின் மிகச் சிறந்த எடுத்துக்காட்டு?**

1] அடுக்குத்தொடர்

2] இரட்டைக்கிளவி

**3] ஒருபொருட் பன்மொழி**

4] உரிச்சொல் தொடர்

**81] குழிந்தாழ்ந்து - இந்த சொல் கீழ்க்கண்ட எவற்றின் மிகச் சிறந்த எடுத்துக்காட்டு?**

1] அடுக்குத்தொடர்

2] இரட்டைக்கிளவி

**3] ஒருபொருட் பன்மொழி**

4] உரிச்சொல் தொடர்

**82] ஒரு பொருளையே தரும் பல சொற்கள் தொடர்வது, -------------?**

1] அடுக்குத்தொடர்

2] இரட்டைக்கிளவி

**3] ஒருபொருட் பன்மொழி**

4] உரிச்சொல் தொடர்

**83] நடுமையம், மீமிசை ஞாயிறு ஆகியவை கீழ்க்கண்ட எவற்றின் மிகச் சிறந்த எடுத்துக்காட்டு?**

1] அடுக்குத்தொடர்

2] இரட்டைக்கிளவி

**3] ஒருபொருட் பன்மொழி**

4] உரிச்சொல் தொடர்

**விளக்கம் :- ஒருபொருட் பன்மொழி:-**

1. திருமால் குன்றம் உயர்ந்தோங்கி நிற்கிறது.

2. அந்த ஏழைக் குழந்தையின் கண்கள் குழிந்தாழ்ந்து காணப்படுகின்றன.

இவ்விரு தொடர்களிலும் ஒரு பொருள் குறித்துத் தொடர்ந்து வரும் இரு சொற்கள் உள்ளன. அவை உயர்ந்தோங்கிய, குழிந்தாழ்ந்து என்பவை. உயர்ந்து, ஓங்கிய ஆகிய இரு சொற்களும், உயர்ந்த என்னும் ஒரே பொருளிலும், குழிந்து, ஆழ்ந்து என்பவை குழிந்து என்னும் ஒரே பொருளிலும் வருகின்றன. ஒரு பொருளையே தரும் பல சொற்கள் தொடர்வது ஒருபொருட் பன்மொழியாகும்.

(எ-டு) 1.நடுமையம், 2.மீமிசை ஞாயிறு. எனும் தொடர்களில் நடுப்பகுதி எனும் ஒரே பொருளை உணர்த்தும் நடு, மையம் எனும் இருசொற்களும், மேற்பகுதி எனும் பொருளைத் தரும் மீ, மிசை எனும்இருசொற்களும் இணைந்து வந்து ஒரே பொருளை உணர்த்தியுள்ளன.

**84] ஒருபொருட் பன்மொழி சிறப்பி னின்வழா - என்று கூறும் நூல்?**

**1] நன்னூல்**

2] திரிகடுகம்

3] ஆத்திச்சூடி

4] திருக்குறள்

**85] First deserve, then desire - இணையான தமிழ்ப் பழமொழிகளை எழுதுக.**

**1] முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படலாமா?**

2] அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்

3] யானைக்கும் பானைக்கும் சரி

4] செய்யும் தொழிலே தெய்வம்

86] Little strokes fell great oaks - **இணையான தமிழ்ப் பழமொழிகளை எழுதுக.**

1] முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்படலாமா?

**2] அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்**

3] யானைக்கும் பானைக்கும் சரி

4] செய்யும் தொழிலே தெய்வம்

87] Tit for tat - **இணையான தமிழ்ப் பழமொழிகளை எழுதுக.**

1] முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்படலாமா?

2] அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்

**3] யானைக்கும் பானைக்கும் சரி**

4] செய்யும் தொழிலே தெய்வம்

88] Work is worship - **இணையான தமிழ்ப் பழமொழிகளை எழுதுக.**

1] முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்படலாமா?

2] அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்

3] யானைக்கும் பானைக்கும் சரி

**4] செய்யும் தொழிலே தெய்வம்**

89] Time is Gold - **இணையான தமிழ்ப் பழமொழிகளை எழுதுக.**

1] முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்படலாமா?

2] அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்

3] யானைக்கும் பானைக்கும் சரி

**4] காலம் பொன் போன்றது**

**90] 151 - என்பதன் தமிழ் எண்?**

**1] க ரு க**

2] க கூ க

3] க எ க

4] க அ க

**91] 161 - என்பதன் தமிழ் எண்?**

1] க ரு க

**2] க கூ க**

3] க எ க

4] க அ க

**92] 171 - என்பதன் தமிழ் எண்?**

1] க ரு க

2] க கூ க

**3] க எ க**

4] க அ க

93] 181 - **என்பதன் தமிழ் எண்?**

1] க ரு க

2] க கூ க

3] க எ க

**4] க அ க**

94] 191 - **என்பதன் தமிழ் எண்?**

1] க ரு க

2] க கூ க

3] க எ க

**4] க கூ க**

95] 200 - **என்பதன் தமிழ் எண்?**

1] க ரு க

2] க கூ க

3] க எ க

**4] உ 00**

96] **வாட் ஹேப்பண்ட் - என்பதன் தூய தமிழ்ச்சொல் ?**

1] இது சரிதானா

2] யார் கூறியது

**3] என்ன நிகழ்ந்தது**

4] இவற்றில் ஏதுமில்லை

**97] டிராபிக் ஜாம் - என்பதன் தூய தமிழ்ச்சொல் ?**

1] பேருந்தில் கூட்டம்

**2] போக்குவரத்து நெரிசல்**

3] சாலை மறியல்

4] இவற்றில் ஏதுமில்லை

**98] கேழல் என்பதன் பொருள்?**

1] மான்

2] சிங்கம்

3] யானை

**4] பன்றி**

**99] நவ்வி என்பதன் பொருள்?**

**1] மான்**

2] சிங்கம்

3] யானை

4] பன்றி

**100] கேண்மை என்பதன் எதிர்சொல் தருக.**

1] நட்பு

2] உறவு

**3] பகைவர்**

4] இவற்றில் ஏதுமில்லை

winmeen

## பத்தாம் வகுப்பு - பொதுத்தமிழ் பாடக்குறிப்புகள் பகுதி - 5

**1] அப்பூதியடிகள் -------------- இல் தோன்றியவர்.**

1] மங்களூர்

**2] திங்களூர்**

3] நங்க நல்லூர்

4] திருவெண்ணெய் நல்லூர்

**2] கீழ்க்கண்டவர்களுள் யார், திருநாவுக்கரசரிடம் பேரன்புடையவர்?**

1] அறவண அடிகள்

**2] அப்பூதியடிகள்**

3] சடையப்பர்

4] இவர்களில் யாருமில்லை

**3] அன்புக்கு அறிகுறியாகத் தம்மக்கள், அளவை, நிறைகோல், பசு, தாம் வைத்த தண்ணீர்ப்பந்தல் ஆகிய அனைத்திற்கும் திருநாவுக்கரசு என்னும் பெயரையே சூட்டி மகிழ்ந்தவர் யார்?**

1] அறவண அடிகள்

**2] அப்பூதியடிகள்**

3] சடையப்பர்

4] இவர்களில் யாருமில்லை

**4] திருநாவுக்கரசருக்கு, திருவமுது படைப்பதற்காக வாழைக்குருத்து அரியச் சென்றவர் யார்?**

1] அப்பூதியடிகள்

**2] அப்பூதியடிகளின் மூத்த மகன்**

3] அப்பூதியடிகளின் இளைய மகன்

4] அப்பூதியடிகளின் மனைவி

**5] திருநாவுக்கரசருக்கு, திருவமுது படைப்பதற்காக வாழைக்குருத்து அரியச் சென்ற அப்பூதியடிகளின் மூத்த மகன், பாம்பு தீண்டியதால் இறந்தான். திருநாவுக்கரசு இதனையறிந்து, "ஒன்றுகொலாம்" என்னும் ------------ பாடி, இறந்த பிள்ளையை எழுப்பித் திருவமுது செய்தருளினார்.**

1] திருவருட்பா

2] கந்த சஷ்டி கவசம்

3] திரிகடுகம்

**4] திருப்பதிகம்**

**6] களவு, பொய், காமம், கோபம் முதலிய குற்றம் காய்ந்தார்; வளமிகு மனையின் வாழ்க்கை நிலையினார் மனைப்பால் உள்ள; அளவைகள், நிறைகோல், மக்கள், ஆவொடு மேதி மற்றும்; உளஎலாம் அரசின் நாமம் சாற்றும்அவ் வொழுக லாற்றார் - இந்த பாடல் இடம் பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர்?**

1] கம்பராமாயணம், கம்பர்

2] சிலப்பதிகாரம், இளங்கோவடிகள்

**3] பெரிய புராணம், சேக்கிழார்**

4] மணிமேகலை, சீத்தலைச் சாத்தனார்

**7] அளவில்சனம் செலவொழியா வழிக்கரையில் அருளுடையார்; உளமனைய தண்ணளித்தாய் உறுவேனில் பரிவகற்றிக்; குளம்நிறைந்த நீர்த்தடம்போல்**

**குளிர்தூங்கும் பரப்பினதாய் ; வளம்மருவும் நிழல்தருதண் ணீர்ப்பந்தர் வந்தணைந்தார் - இந்த பாடல் இடம் பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர்?**

1] கம்பராமாயணம், கம்பர்

2] சிலப்பதிகாரம், இளங்கோவடிகள்

**3] பெரிய புராணம், சேக்கிழார்**

4] மணிமேகலை, சீத்தலைச் சாத்தனார்

**8] வந்தணைந்த வாகீசர் மந்தமா ருதசீதப்; பந்தருடன் அமுதமாம் தண்ணீரும் பார்த்தருளிச்; சிந்தைவியப் புறவருவார் திருநாவுக் கரசெனும்பேர்; சந்தமுற வரைந்ததனை எம்மருங்கும் தாங்கண்டார்; - இந்த பாடல் இடம் பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர்?**

1] கம்பராமாயணம், கம்பர்

2] சிலப்பதிகாரம், இளங்கோவடிகள்

**3] பெரிய புராணம், சேக்கிழார்**

4] மணிமேகலை, சீத்தலைச் சாத்தனார்

**9] ஆறணியும் சடைமுடியார் அடியார்க்கு நீர்வைத்த; ஈறில்பெருந் தண்ணீர்ப்பந் தரில்நும்பேர் எழுதாதே; வேறொருபேர் முன்னெழுத வேண்டியகா ரணம்என்கொல்; கூறுமென எதிர்மொழிந்தார் கோதில்மொழிக் கொற்றவனார் - இந்த பாடல் இடம் பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர்?**

1] கம்பராமாயணம், கம்பர்

2] சிலப்பதிகாரம், இளங்கோவடிகள்

**3] பெரிய புராணம், சேக்கிழார்**

4] மணிமேகலை, சீத்தலைச் சாத்தனார்

**10] பொங்குகடல் கல்மிதப்பிற் போந்தேறும் அவர் பெருமை; அங்கணர்தம் புவனத்தில் அறியாதார் யாருளரே; மங்கலமாம் திருவேடத் துடனின்றிவ் வகைமொழிந்தீர்; எங்குறைவீர் நீர்தாம்யார் இயம்புமென இயம்பினார் - இந்த பாடல் இடம் பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர்?**

1] கம்பராமாயணம், கம்பர்

2] சிலப்பதிகாரம், இளங்கோவடிகள்

**3] பெரிய புராணம், சேக்கிழார்**

4] மணிமேகலை, சீத்தலைச் சாத்தனார்

**11] திருமறையோர் அதுமொழியத் திருநாவுக் கரசர்அவர்; பெருமையறிந் துரைசெய்வார் பிறதுறையி னின்றேற அருளுபெருஞ் சூலையினால் ஆட்கொள்ள அடைந்துய்ந்த தெருளும்உணர் வில்லாத சிறுமையேன் யான்என்றார் - இந்த பாடல் இடம் பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர்?**

1] கம்பராமாயணம், கம்பர்

2] சிலப்பதிகாரம், இளங்கோவடிகள்

**3] பெரிய புராணம், சேக்கிழார்**

4] மணிமேகலை, சீத்தலைச் சாத்தனார்

**12] அரசறிய உரைசெய்ய அப்பூதி அடிகள்தாம்; கரகமலம் மிசைகுவியக் கண்ணருவி பொழிந்திழிய; உரைகுழறி உடம்பெல்லாம் உரோமபுள கம்பொலியத்; தரையின்மிசை வீழ்ந்தவர்தம் சரண கமலம் பூண்டார் - இந்த பாடல் இடம் பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர்?**

1] கம்பராமாயணம், கம்பர்

2] சிலப்பதிகாரம், இளங்கோவடிகள்

**3] பெரிய புராணம், சேக்கிழார்**

4] மணிமேகலை, சீத்தலைச் சாத்தனார்

**13] ஆசனத்தில் பூசனைகள் அமர்வித்து விருப்பினுடன்; வாசம்நிறை திருநீற்றுக் காப்பேந்தி மனந்தழைப்பத்; தேசமுய்ய வந்தவரைக் திருவமுது செய்விக்கும் ; நேசமுற விண்ணப்பம் செயஅவரும் அதுநேர்ந்தார் - இந்த பாடல் இடம் பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர்?**

1] கம்பராமாயணம், கம்பர்

2] சிலப்பதிகாரம், இளங்கோவடிகள்

**3] பெரிய புராணம், சேக்கிழார்**

4] மணிமேகலை, சீத்தலைச் சாத்தனார்

**14] தூயநற் கறிக ளான அறுவகைச் சுவையால் ஆக்கி; ஆயஇன் னமுதும் ஆக்கி அமுதுசெய் தருளத் தங்கள் ; சேயவர் தம்மில் மூத்த திருநாவுக் கரசை வாழை; மேயபொற் குருத்துக் கொண்டு வாஎன விரைந்து விட்டார் - இந்த பாடல் இடம் பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர்?**

1] கம்பராமாயணம், கம்பர்

2] சிலப்பதிகாரம், இளங்கோவடிகள்

**3] பெரிய புராணம், சேக்கிழார்**

4] மணிமேகலை, சீத்தலைச் சாத்தனார்

**15] நல்லதாய் தந்தைஏவ நானிது செயப்பெற் றேனென்று; ஒல்லையில் விரைந்து தோட்டத் துள்புக்குப் பெரியவாழை; மல்லலம் குருத்தை ஈரும் பொழுதினில் வாள ராவொன்று; அல்லலுற் றழுங்கிச் சோர அங்கையில் தீண்டிற் றன்றே - இந்த பாடல் இடம் பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர்?**

1] கம்பராமாயணம், கம்பர்

2] சிலப்பதிகாரம், இளங்கோவடிகள்

**3] பெரிய புராணம், சேக்கிழார்**

4] மணிமேகலை, சீத்தலைச் சாத்தனார்

**16] தளர்ந்துவீழ் மகனைக் கண்டு தாயரும் தந்தை யாரும் ; உளம்பதைத்து உற்று நோக்கி உதிரம்சேர் வடிவும் மேனி; விளங்கிய குறியும் கண்டு விடத்தினால் வீந்தான் என்று; துளங்குதல் இன்றித் தொண்டர் அமுதுசெய் வதற்குச் சூழ்வார் - இந்த பாடல் இடம் பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர்?**

1] கம்பராமாயணம், கம்பர்

2] சிலப்பதிகாரம், இளங்கோவடிகள்

**3] பெரிய புராணம், சேக்கிழார்**

4] மணிமேகலை, சீத்தலைச் சாத்தனார்

**17] ஆதிநான் மறைநூல் வாய்மை அப்பூதி யாரை நோக்கிக்; காதலர் இவர்க்கு மூத்த சேயையும் காட்டும் முன்னே; மேதகு பூதி சாத்த என்றலும் விளைந்த தன்மை ; யாதும்ஒன் றுரையார் இப்போது இங்கவன் உதவான் என்றார் - இந்த பாடல் இடம் பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர்?**

1] கம்பராமாயணம், கம்பர்

2] சிலப்பதிகாரம், இளங்கோவடிகள்

**3] பெரிய புராணம், சேக்கிழார்**

4] மணிமேகலை, சீத்தலைச் சாத்தனார்

**18] அவ்வுரை கேட்ட போதே அங்கணர் அருளால் அன்பர் ; செவ்விய திருவுள் ளத்தோர் தடுமாற்றஞ் சேர நோக்கி; இவ்வுரை பொறாதென் உள்ளம்,**

**என்செய்தான் இதற்கொன் றுண்டால்; மெய்விரித் துரையும் என்ன விளம்புவார் விதிர்ப்புற் றஞ்சி - இந்த பாடல் இடம் பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர்?**

1] கம்பராமாயணம், கம்பர்

2] சிலப்பதிகாரம், இளங்கோவடிகள்

**3] பெரிய புராணம், சேக்கிழார்**

4] மணிமேகலை, சீத்தலைச் சாத்தனார்

**19] நாவினுக் கரசர் கேளா நன்றுநீர் புரிந்த வண்ணம்; யாவரித் தன்மை செய்வார் என்றுமுன் எழுந்து சென்றே ; ஆவிதீர் சவத்தை நோக்கி அண்ணலார் அருளும் வண்ணம் ; பாவிசைப் பதிகம் பாடிப் பணிவிடம் பாற்று வித்தார் - இந்த பாடல் இடம் பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர்?**

1] கம்பராமாயணம், கம்பர்

2] சிலப்பதிகாரம், இளங்கோவடிகள்

**3] பெரிய புராணம், சேக்கிழார்**

4] மணிமேகலை, சீத்தலைச் சாத்தனார்

winmeen

**20] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] காய்ந்தார் - நீக்கினார்

2] ஆ - பசு

**3] மேதி - பன்றி**

4] நிறைகோல் - துலாக்கோல் (தராசு)

**குறிப்பு** :- மேதி என்பதன் சரியான சொற்பொருள் எருமை.

**21] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] மனை - வீடு

2] தண்ணளித்தாய் - குளிர்ச்சி நிறைந்த

3] தடம் - தடாகம்

**4] நவ்வி - யானை**

**குறிப்பு** :- நவ்வி என்பதன் சரியான சொற்பொருள் மான்

**22] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] மந்தமாருதசீதம் - குளிர்ந்த இளந்தென்றல் காற்றுடன் கூடிய குளிர்ந்த நீர்

2] சந்தம் - அழகு

**3] ஈறு - உடம்பு**

4] புவனம் - உலகம்

**குறிப்பு** :- ஈறு என்பதன் சரியான சொற்பொருள் எல்லை.

**23] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] சூலை - கொடிய வயிற்றுநோய்

2] கரம் - கை

3] கமலம் - தாமரை

**4] மிசை - கீழ்**

**குறிப்பு** :- மிசை என்பதன் சரியான சொற்பொருள் மேல்.

**24] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] நேர்ந்தார் - இசைந்தார்

2] தங்கள் சேயவர் - தங்களின் குழந்தைகள்

3] பொற்குருத்து - மிக இளமையான வாழைக்குருத்து

**4] ஒல்லை - மெதுவாக**

**குறிப்பு** :- ஒல்லை என்பதன் சரியான சொற்பொருள் விரைவு.

**25] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] மல்லல் - வளமான

2] அம் - அழகிய

3] வாள் - கூரிய

**4] அரா - தேள்**

**குறிப்பு** :- அரா என்பதன் சரியான சொற்பொருள் பாம்பு.

**26] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] அழுங்கி - மிக வருந்தி

2] அங்கை - உள்ளங்கை

**3] உதிரம் - மோதிரம்**

4] மேனி - உடல்

**குறிப்பு** :- உதிரம் என்பதன் சரியான சொற்பொருள் குருதி.

**27] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] வீந்தான் - இறந்தான்

2] மறைநூல் - நான்மறை

**3] செய் - சிற்றூர்**

4] பூதி - திருநீறு

**குறிப்பு** :- செய் என்பதன் சரியான சொற்பொருள் குழந்தை.

**28] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] அங்கணர் - அழகிய நெற்றிக்கண்ணையுடைய சிவன்

**2] பொறாது - ஏற்கும்**

3] மெய் - உண்மை

4] பணிவிடம் - பாம்பின் நஞ்சு

**குறிப்பு** :- பொறாது என்பதன் சரியான சொற்பொருள் ஏற்காது.

**29] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] சவம் - பிணம்

2] பாற்றுவித்தார் - போக்குவித்தார்

3] நவ்வி - மான்

**4] கேழல் - யானை**

**குறிப்பு** :- கேழல் என்பதன் சரியான சொற்பொருள் பன்றி.

**30] பொருந்தாதது எது? இலக்கணக்குறிப்பு தருக.**

1] செலவொழியா வழி - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

2] வழிக்கரை - ஆறாம் வேற்றுமைத்தொகை

**3] உறுவேனில் - வினைத்தொகை**

4] நீர்த்தடம் - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகை

**குறிப்பு** :- உறுவேனில் என்பதன் சரியான இலக்கணக்குறிப்பு உரிச்சொற்றொடர்.

**31] பொருந்தாதது எது? இலக்கணக்குறிப்பு தருக.**

1] பந்தர் - பந்தல் என்பதன் கடைப்போலி

**2] அணைந்த வாகீசர் - வினையெச்சம்**

3] பொங்குகடல் - வினைத்தொகை

4] பெருமையறிந்து - இரண்டாம் வேற்றுமைத்தொகை

**குறிப்பு** :- அணைந்த வாகீசர் என்பதன் சரியான இலக்கணக்குறிப்பு பெயரெச்சம்.

**32] அறிந்து, அடைந்து - இலக்கணக்குறிப்பு தருக.**

**1] வினையெச்சம்**

2] பெயரெச்சம்

3] வினைத்தொகை

4] இரண்டாம் வேற்றுமைத்தொகை

**33] பொருந்தாதது எது? இலக்கணக்குறிப்பு தருக.**

1] கரகமலம் - உருவகம்

2] பொழிந்திழிய - வினையெச்சம்

3] தேசம் - இடவாகுபெயர்

**4] வந்தவர் - வினைமுற்று**

**குறிப்பு** :- வந்தவர் என்பதன் சரியான இலக்கணக்குறிப்பு வினையாலணையும் பெயர்.

**34] நற்கறிகள், இன்னமுதம் - இலக்கணக்குறிப்பு தருக.**

1] வினைத்தொகை

**2] பண்புத்தொகை**

3] ஆகுபெயர்

4] உருவகம்

**35] பொருந்தாதது எது? இலக்கணக்குறிப்பு தருக.**

**1] தாய்தந்தை - எண்ணும்மை**

2] மல்லலம் குருத்து - உரிச்சொற்றொடர்

3] தீண்டிற்று - ஒன்றன்பால் வினைமுற்று

4] துளங்குதல் - தொழிற்பெயர்

**குறிப்பு** :- தாய்தந்தை என்பதன் சரியான இலக்கணக்குறிப்பு உம்மைத்தொகை

**36] பூதி சாத்த - இலக்கணக்குறிப்பு தருக**

1] ஒன்றன்பால் வினைமுற்று

2] வினைத்தொகை

3] பண்புத்தொகை

**4] இரண்டாம் வேற்றுமைத்தொகை**

**37] அங்கணர் - இலக்கணக்குறிப்பு தருக**

1] ஒன்றன்பால் வினைமுற்று

2] வினைத்தொகை

3] பண்புத்தொகை

**4] அன்மொழித்தொகை**

**38] நோக்கி - இலக்கணக்குறிப்பு தருக**

1] ஒன்றன்பால் வினைமுற்று

2] வினைத்தொகை

3] பண்புத்தொகை

**4] வினையெச்சம்**

**39] பொருந்தாதது எது? இலக்கணக்குறிப்பு தருக.**

1] எழுந்து, சென்று - வினையெச்சம்

**2] பணிவிடம் - இரண்டாம் வேற்றுமைத்தொகை**

3] கேளா - செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம்

4] அங்கணர் - அன்மொழித்தொகை

**குறிப்பு** :- பணிவிடம் என்பதன் சரியான இலக்கணக்குறிப்பு ஆறாம் வேற்றுமைத்தொகை.

**40] பொருந்தாதது எது? பிரித்தறிதல்.**

**1] செலவொழியா = செல + ஒழியா**

2] வழிக்கரை = வழி + கரை

3] வந்தணைந்த = வந்து + அணைந்த

4] எம்மருங்கும் = எ + மருங்கும்

**குறிப்பு** :- செலவொழியா என்பதன் சரியான பிரித்தறிதல் = செலவு + ஒழியா.

**41] பொருந்தாதது எது? பிரித்தறிதல்.**

1] எங்குறைவீர் = எங்கு + உறைவீர்

2] கண்ணருவி = கண் + அருவி

3] உடம்பெல்லாம் = உடம்பு + எல்லாம்

**4] திருவமுது = திருவ + முது**

**குறிப்பு** :- திருவமுது என்பதன் சரியான பிரித்தறிதல் = திரு + அமுது.

**42] பொருந்தாதது எது? பிரித்தறிதல்.**

1] மனந்தழைப்ப = மனம் + தழைப்ப

2] நற்கறிகள் = நன்மை + கறிகள்

**3] இன்னமுது = இன்ன + முது**

4] வாளரா = வாள் + அரா

**குறிப்பு** :- இன்னமுது என்பதன் சரியான பிரித்தறிதல் = இனிமை + அமுது.

**43] பொருந்தாதது எது? பிரித்தறிதல்.**

1] அங்கை = அகம் + கை

**2] நான்மறை = நான் + மறை**

3] விதிர்ப்புற்றஞ்சி = விதிர்ப்பு + உற்று + அஞ்சி

4] பாவிசை = பா + இசை

**குறிப்பு** :- நான்மறை என்பதன் சரியான பிரித்தறிதல் = நான்கு + மறை.

**44] பெரியபுராணத்தை இயற்றியவர்?**

1] சீத்தலைச் சாத்தனார்

2] கம்பர்

3] மாணிக்கவாசகர்

**4] சேக்கிழார்**

**45] சேக்கிழார், தற்போதைய ---------- மாவட்டத்திலுள்ள குன்றத்தூரில் பிறந்தவர்.**

1] தஞ்சாவூர்

2] திருச்சி

3] மதுரை

**4] காஞ்சிபுரம்**

**46] சேக்கிழார் அவர்களின் இயற்பெயர் -------------?**

1] முருகானந்தன்

2] இராமதேவன்

**3] அருண்மொழித் தேவர்**

4] இவற்றில் ஏதுமில்லை

**47] அநபாயச்சோழனிடம் தலைமை அமைச்சராய்த் திகழ்ந்தவர் யார்?**

1] சீத்தலைச் சாத்தனார்

2] கம்பர்

3] மாணிக்கவாசகர்

**4] சேக்கிழார்**

**48] உத்தமசோழப் பல்லவர் என்னும் பட்டம் பெற்றவர் யார்?**

1] சீத்தலைச் சாத்தனார்

2] கம்பர்

3] மாணிக்கவாசகர்

**4] சேக்கிழார்**

**49] தெய்வச் ---------- என்றும் தொண்டர்சீர் பரவுவார் என்றும் போற்றப்படுபவர் யார்?**

1] சீத்தலைச் சாத்தனார்

2] கம்பர்

3] மாணிக்கவாசகர்

**4] சேக்கிழார்**

**50] சேக்கிழார் அவர்களின் காலம் ----------- நூற்றாண்டு.**

1] கி.பி. பத்தாம்

2] கி.பி. பதினொன்றாம்

**3] கி.பி.பன்னிரண்டாம்**

4] கி.பி. பதின்மூன்றாம்

**51] தனியடியார் அறுபத்துமூவரும், தொகையடியார் ஒன்பதின்மரும் ஆக எழுபத்திருவர் ------------ ஆவர்.**

1] சமண அடியார்

2] புத்த அடியார்

**3] சிவனடியார்**

4] வைணவ அடியார்

**52] ----------------- வரலாற்றைக் கூறுவதால், பெருமை பெற்ற புராணம் என்னும் பொருளில் " பெரிய புராணம்" என்னும் பெயர் பெற்றது.**

1] சமண அடியார்

2] புத்த அடியார்

**3] சிவனடியார்**

4] வைணவ அடியார்

**53] பெரிய புராணம் நூலுக்கு, சேக்கிழார் இட்ட பெயர் ---------------.**

1] ஞான தேசிக புராணம்

2] சிவனடி புராணம்

**3] திருத்தொண்டர் புராணம்**

4] இவற்றில் ஏதுமில்லை

**54] பெரிய புராணம் நூலை, தில்லை நடராசப்பெருமான் "--------------------" என்று அடியெடுத்துக் கொடுக்கப் பாடப்பெற்றதெனவும் கூறுவர்.**

1] ஓம் நமச்சிவாய

2] சிவனடி போற்றி

**3] உலகெலாம்**

4] இவற்றில் ஏதுமில்லை

**55] மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனார், “பத்திச் சுவைநனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவ” என ---------- என்பவரை புகழ்ந்துரைத்துள்ளார்.**

1] சீத்தலைச் சாத்தனார்

2] கம்பர்

3] மாணிக்கவாசகர்

**4] சேக்கிழார்**

**56] உலகம், உயிர், கடவுள் ஆகிய மூன்றையும் ஒருங்கே காட்டும் காவியந்தான், ” பெரியபுராணம் ” என்பார் ---------------.**

1] அண்ணா

2] கண்ணதாசன்

3] பெரியார்

**4] திரு.வி.க**

**57] அன்பைப் பெருக்கி எனது ஆருயிரைக் காக்க வந்த; இன்பப் பெருக்கே இறையே பராபரமே - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] வள்ளலார்

**2] தாயுமானவர்**

3] நாமக்கல் கவிஞர்

4] வாணிதாசன்

**58] ஒளிப்படம் எடுக்கும் முறை கண்டுபிடிக்கப்பட்ட ஆண்டு?**

1] 1810 2] 1820 **3] 1830** 4] 1840

**59] ------------ என்ற, அங்கிலேயர் முதலில் ஓடும் குதிரையை இயக்கப்படமாக எடுத்து வெற்றி பெற்றார்.**

1] எடிசன்

**2] எட்வர்டு மைபிரிட்சு**

3] ஈஸ்ட்மன்

4] பிரான்சிஸ் சென்கின்சு

**60] ----------- என்பார் படச்சுருள் உருவாக்கும் முறையை கண்டுபிடித்தார்.**

1] எடிசன்

2] எட்வர்டு மைபிரிட்சு

**3] ஈஸ்ட்மன்**

4] பிரான்சிஸ் சென்கின்சு

**61] ---------- என்பவர் ஒருவர் மட்டும் பார்க்கும் படக்கருவியைக் கண்டுபிடித்தார்.**

**1] எடிசன்**

2] எட்வர்டு மைபிரிட்சு

3] ஈஸ்ட்மன்

4] பிரான்சிஸ் சென்கின்சு

**62] பிரான்சிஸ் சென்கின்சு என்ற அமெரிக்கர் ------------- இல் ரிச்மண்ட் என்னுமிடத்தில் இயக்கப்படத்தைப் பலரும் பார்க்கும் வகையில் வடிவமைத்தார்.**

**1] 1894** 2] 1884 3] 1874 4] 1864

**63] ---------------------- என்ற அமெரிக்கர் 1894 இல் ரிச்மண்ட் என்னுமிடத்தில் இயக்கப்படத்தைப் பலரும் பார்க்கும் வகையில் வடிவமைத்தார்.**

1] எடிசன்

2] எட்வர்டு மைபிரிட்சு

3] ஈஸ்ட்மன்

**4] பிரான்சிஸ் சென்கின்சு**

**64] பிரான்சிஸ் சென்கின்சு என்ற -------------- நாட்டுக்காரர் 1894 இல் ரிச்மண்ட் என்னுமிடத்தில் இயக்கப்படத்தைப் பலரும் பார்க்கும் வகையில் வடிவமைத்தார்.**

1] சுவிட்சர்லாந்து

2] கனடா

**3] அமெரிக்கா**

4] ஜப்பான்

**குறிப்பு** :- இவ்வியக்கப்படத்தில் நாட்டியம், கடல் அலைகள் கரையில் மோதுதல் முதலிய கட்சிகளைக் காண முடிந்தது. இவற்றை ஆயிரக்கணக்கான இடங்களில் படம் காட்டிக் கட்டணம் வசூலிக்கத் தொடங்கினர். இவை பேசும் படங்கள் அல்ல, ஊமை படங்களே.

**65] புதிய படவீழ்த்திகள் உருவாக, இவருடைய கருத்துகளே அடிப்படையாக அமைந்தன?**

1] எடிசன்

2] எட்வர்டு மைபிரிட்சு

3] ஈஸ்ட்மன்

**4] பிரான்சிஸ் சென்கின்சு**

**66] ஒரு மொழிப்படத்தை மற்ற மொழியில் மாற்றி அமைக்கும் முறைக்கு ---------- என்று பெயர்**

1] குரல் மற்றம்

2] கதை மற்றம்

**3] மொழி மாற்றம்**

4] இவற்றில் ஏதுமில்லை

**67] நடிப்பாற்றலை எடுத்துக்கூறிச் சில நேரங்களில் தாமே நடித்தும், காட்சிகள் அமைத்தும் படம் முடியும் வரை உழைக்கும் நுண்மாண் நுழைபுலம் உடையாரை -------------------- என்பர்.**

1] விநியோகஸ்தர்

2] தயாரிப்பாளர்

**3] இயக்குநர்**

4] நடிகர்

**68] -------------- வாயிலாக உலக நிகழ்வுகளை நம் இருப்பிடத்திலேயே, காணும் வாய்ப்புகள் உருவாகி உள்ளன.**

**1] செய்திப்படங்கள்**

2] கருத்துப்படங்கள்

3] கல்விப்படங்கள்

4] இவற்றில் ஏதுமில்லை

**69] ------------- வாயிலாக ஒருநாட்டு மக்களின் வாழ்க்கை முறைகளை உள்ளவாறு அறியலாம்.**

1] செய்திப்படங்கள்

2] கருத்துப்படங்கள்

3] கல்விப்படங்கள்

**4] விளக்கப் படங்கள்**

**70] திரைப்படம் எடுக்கப் பயன்படும் படச்சுருள் --------------- என்னும் பொருளால் ஆனது.**

1] ஆக்டினாயிடு

**2] செல்லுலாய்டு**

3] மேக்னைடு

4] இவற்றில் ஏதுமில்லை

**71] படம் எடுக்கப் பயன்படும் சுருள், ------------------ எனப்படும்.**

**1] எதிர்ச்சுருள்**

2] ஒளி நாடா

3] ஒலி நாடா

4] இவற்றில் ஏதுமில்லை

**குறிப்பு** :- ஒலி, ஒளிப்பதிவுகளைத் தனித்தனிப் படச்சுருள்களில் அமைப்பர்.

**72] படப்பிடிப்புக் கருவியில் ஓரடி நீளமுள்ள படச்சுருளில் --------- படங்கள் வீதம் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ச்சியாக எடுக்கப்படும்.**

1] 14 2] 15 **3] 16** 4] 17

**73] நடிகர்களின் நடிப்பையும், பாடும் பாடல்களையும், உரையாடல்களையும் -------------- செய்வர்.**

**1] ஒலிப்பதிவு**

2] ஒளிப்பதிவு

3] ஒழிப்பதிவு

4] இவற்றில் ஏதுமில்லை

**74] உரையாடலில் எழும் ஒலி அலைகள் ஒரு நுண்ணொலிபெருக்கியைத் தாக்கும். நுண்ணொலிபெருக்கி ஒலியலைகளை மின் அதிர்வுகளாக்கும். மின் அதிர்வுகள் பெருக்கப்பட்டு ஒருவகை விளக்கினுள் செலுத்தப்படுகின்றன. அம்மின்னோட்டத்திற்குத் தக்கவாறு விளக்கின் ------------- மாறும்.**

**1] ஒளி** 2] ஒழி 3] ஒலி 4] இவற்றில் ஏதுமில்லை

**75] ------------- கருவி என்னும் கருவி திரையரங்குகளில் திரைப்படம் காட்டப் பயன்படுகிறது.**

1] ஒழிஒலிப்படக்

**2] ஒளிஒலிப்படக்**

3] ஒளிஒழிப்படக்

4] இவற்றில் ஏதுமில்லை

**76] ஒளிமிகு விளக்குகளுக்கும், உருப்பெருக்கிகளுக்கும் இடையில் படம் வரும். முன்புறம் ஒரு மூடி இருக்கும். மூடிக்கு இரண்டு கைகள் உண்டு. அந்த மூடி நொடிக்கு --------------- முறை சுழலும். அதன் கைகள் நொடிக்குப் --------- முறை சுழலும்.**

1] ஆறு, பன்னிரண்டு

2] ஏழு, பதினான்கு

**3] எட்டு, பதினாறு**

4] ஒன்பது, பதினெட்டு

**77] கருத்துப்படம் அமைக்கத் தொடங்கியவர் --------------- என்பவர் ஆவார்.**

1] எடிசன்

2] எட்வர்டு மைபிரிட்சு

3] ஈஸ்ட்மன்

**4] வால்ட் டிஸ்னி**

**குறிப்பு** :- வால்ட் டிஸ்னி ஓவியர். ஒரே செயலைக் குறிக்கும் பல்லாயிரக்கணக்கான படங்களை வரைவார். ஒன்றுக்கொன்று சிறிது சிறிதாக மாறுவனவாக இருக்கும். இப்படங்களை வரிசைப்படி அடுக்கி வைத்துவிட்டு மிக வேகமாக ஏடுகளைப் புரட்டினால், அவை வெவ்வேறு படங்களாகத் தோன்றாமல் ஒரே நிகழ்வாகத் தோன்றும்.

**78] கருத்துப் படம் ---------- என்று அழைக்கப்படும்.**

1] விளக்கப்படம்

2] செய்திப்படம்

**3] இயங்குரு படம்**

4] இவற்றில் ஏதுமில்லை

**79] உலகில் பல்வேறு பகுதிகளில் நடக்கும் நிகழ்ச்சிகளையே படமாக்கிக் காட்டுவது ---------------?**

1] விளக்கப்படம்

**2] செய்திப்படம்**

3] இயங்குரு படம்

4] இவற்றில் ஏதுமில்லை

**80] ஒரு நிகழ்வை மட்டும் எடுத்துக்கொண்டு, அதைப்பற்றிய முழு விளக்கத்தினையும் தருவது ------------?**

**1] விளக்கப்படம்**

2] செய்திப்படம்

3] இயங்குரு படம்

4] இவற்றில் ஏதுமில்லை

**81] உலகத்தமிழ் மாநாட்டு நிகழ்வை மட்டும் காட்டும் படம் -------------- எனப்படும்.**

**1] விளக்கப்படம்**

2] செய்திப்படம்

3] இயங்குரு படம்

4] இவற்றில் ஏதுமில்லை

**82] வாழ்க்கையில் நேரில் காண முடியாத பல இடங்களையும் நேரில் பார்ப்பதனைப் போலவே காட்டுவதற்குக் ---------- வழி செய்கிறது.**

**1] கல்விப்படம்**

2] விளக்கப்படம்

3] செய்திப்படம்

4] இயங்குரு படம்

**83] சந்திப்பிழை நீக்கி எழுதுக.**

1] திரைப்படம் எடுக்க பயன்படும் படசுருள் செல்லுலாய்டு என்னும் பொருளால் ஆனது

**2] திரைப்படம் எடுக்கப் பயன்படும் படச்சுருள் செல்லுலாய்டு என்னும் பொருளால் ஆனது**

3] திரைபடம் எடுக்கப் பயன்படும் படசுருள் செல்லுலாய்டு என்னும் பொருளால் ஆனது

4] திரைபடம் எடுக்க பயன்படும் படச்சுருள் செல்லுலாய்டு என்னும் பொருளால் ஆனது

**84] சந்திப்பிழை நீக்கி எழுதுக.**

**1] திரைப்படம் மக்களைத் தன்பால் ஈர்த்துக் கட்டிப்போட வல்லது**

2] திரைபடம் மக்களைத் தன்பால் ஈர்த்துக் கட்டிபோட வல்லது

3] திரைப்படம் மக்களை தன்பால் ஈர்த்துக் கட்டிபோட வல்லது

4] திரைபடம் மக்களைத் தன்பால் ஈர்த்து கட்டிப்போட வல்லது

**85] ஒருமைப் பன்மைப் பிழை நீக்கி எழுதுக :-**

1] ஈஸ்ட்மன் என்பார் படச்சுருள் தயாரிக்கும் முறையைக் கண்டுபிடித்தனர்

2] ஈஸ்ட்மன் என்பார் படச்சுருள் தயாரிக்கும் முறையைக் கண்டுபிடித்தார்கள்

3] ஈஸ்ட்மன் என்பார் படச்சுருள் தயாரிக்கும் முறையைக் கண்டுபிடித்தனர்கள்

**4] ஈஸ்ட்மன் என்பார் படச்சுருள் தயாரிக்கும் முறையைக் கண்டுபிடித்தார்**

**86] ஒருமைப் பன்மைப் பிழை நீக்கி எழுதுக :-**

1] இயங்குரு படங்களைக் குழந்தைகள் விரும்பிப் பார்க்கின்றனர்

2] இயங்குரு படங்களைக் குழந்தைகள் விரும்பிப் பார்க்கின்றது

3] இயங்குரு படங்களைக் குழந்தைகள் விரும்பிப் பார்க்கின்றார்கள்

**4] இயங்குரு படங்களைக் குழந்தைகள் விரும்பிப் பார்க்கின்றன**

**87] பொருந்தாதது எது?**

1] ஈஸ்ட்மன் - படச்சுருள்

2] எடிசன் - ஒருவர் மட்டும் பார்க்கும் படக்கருவி

3] எட்வர்டு மைபிரிட்சு - இயக்கப்படம்

**4] வால்ட் டிஸ்னி - புதிய படவீழ்த்திகள்**

**குறிப்பு** :- வால்ட் டிஸ்னி என்பது கருத்துப்படத்துடன் தொடர்புடையது.

**88] பொருந்தாதது எது?**

1] persistence of vision - பார்வை நிலைப்பு

**2] Dubbing - ஒளிச்சேர்க்கை**

3] Director - இயக்குநர்

4] Shooting - படப்பிடிப்பு

**குறிப்பு** :- Dubbing - ஒலிச்சேர்க்கை.

**89] பொருந்தாதது எது?**

1] cartoon - கருத்துப் படம்

2] Negative - எதிர்ச்சுருள்

3] Camera - படப்பிடிப்புக்கருவி

**4] Trolly - ஒளி நாடா**

**குறிப்பு** :- Trolly - நகர்த்தும் வண்டி

**90] பொருந்தாதது எது?**

1] Microphone - நுண்ணொலிபெருக்கி

**2] Projector - எதிர்ச்சுருள்**

3] Lense - உருப்பெருக்கி

4] Motion Pictures - இயங்குருப் படங்கள்

**குறிப்பு** :- Projector - படவீழ்த்தி

**91] பாரதரத்னா எம். ஜி. இராமச்சந்திரன் இலங்கையிலுள்ள கண்டியில் ------------- ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் பதினேழாம்நாள் பிறந்தார்.**

1] 1907 **2] 1917** 3] 1927 4] 1937

**92] பாரதரத்னா எம். ஜி. இராமச்சந்திரன் கோபாலமேனன் - சத்யபாமா இணையருக்கு -------- மகன் ஆவார்.**

1] மூன்றாவது

2] நான்காவது

**3] ஐந்தாவது**

4] ஆறாவது

**93] பாரதரத்னா எம். ஜி. இராமச்சந்திரன் - இவரது இரண்டாவது அகவையில் தந்தை காலமானார். இராமச்சந்திரனுடைய குடும்பம் தமிழ்நாட்டில் உள்ள -------------------- நகருக்குக் குடிபெயர்ந்தது.**

1] சாத்தூர்

2] மன்னார்குடி

3] செங்கல்பட்டு

**4] கும்பகோணம்**

**94] பாரதரத்னா எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களின் அன்னை சத்யபாமா, அங்குள்ள ------------ பள்ளியில் சக்கரபாணியையும், இராமச்சந்திரனையும் சேர்த்தார்.**

1] திண்ணைப்

**2] ஆனையடிப்**

3] காஞ்சிப்

4] இவற்றில் ஏதுமில்லை

**95] ----------------- என்பவரின் பேச்சாற்றல், பழகும் பண்பு, உண்மை, நேர்மை, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு முதலியவற்றால் இராமச்சந்திரன் கவரப்பட்டார்.**

1] தந்தை பெரியார்

**2] அறிஞர் அண்ணா**

3] திரு.வி.க

4] இவர்களில் யாருமில்லை

**96] கடின உழைப்பே ஒரு நாட்டுக்கு வளர்ச்சியைக் கொடுக்கும் என்று நம்பியவர்?**

1] தந்தை பெரியார்

2] அறிஞர் அண்ணா

3] திரு.வி.க

**4] எம்.ஜி.ஆர்**

**97] மக்கள் --------------- என்பவரை புரட்சி நடிகர், மக்கள் திலகம் என்றும் போற்றினார்.**

1] தந்தை பெரியார்

2] அறிஞர் அண்ணா

3] திரு.வி.க

**4] எம்.ஜி.ஆர்**

**98] எம்.ஜி.ஆர் அவர்களை இதயக்கனி என்று போற்றியவர்?**

1] தந்தை பெரியார்

**2] அறிஞர் அண்ணா**

3] திரு.வி.க

4] இவர்களில் யாருமில்லை

**99] எம்.ஜி.ஆர் அவர்கள் -------- ஆம் ஆண்டு சென்னை மாநிலச் சட்டமன்ற மேலவை உறுப்பினரானார்.**

1] 1960 2] 1961 3] 1962 **4]1963**

**100] எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்கள் 1967 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலின் போது ------------ தொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெற்றார்.**

1] சாத்தூர்

2] ஆர்.கே.நகர்

3] ராயபுரம்

**4] பரங்கிமலை**

**101] எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்கள் -------- ஆம் ஆண்டில், தாமிருந்த இயக்கத்திலிருந்து விலகிப் புதிய கட்சியைத் தொடங்கினார்.**

1] 1970 2] 1971 **3] 1972** 4] 1973

**102] எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்கள் ---------- ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழகச் சட்டமன்றத் தேர்தலில் பெரு வெற்றி பெற்று முதல்வராகப் பதவி ஏற்றார்.**

1] 1975 2] 1976 **3] 1977** 4] 1978

**103] எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்கள் ----------- ஆண்டுகள் தமிழ்நாட்டின் முதல்வராகப் பணியாற்றினார்.**

1] 9 2] 10 **3] 11** 4] 12

**104] எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்களது பணிகளைப் பாராட்டி, டாக்டர் பட்டம் வழங்கியது யார்?**

1] திருச்சி பல்கலைக்கழகம்

**2] சென்னைப் பல்கலைக்கழகம்**

3] மதுரைப் பல்கலைக்கழகம்

4] அண்ணா பல்கலைக்கழகம்

**குறிப்பு** :- இந்திய அரசு சிறந்த நடிகருக்கான பாரத் பட்டத்தை வழங்கி, அவருக்குச் சிறப்புச் சேர்த்தது.

**105] காமராசர் காலத்தில் அறிமுகப்படுத்திய மதிய உணவுத் திட்டத்தைத் தொடக்கப்பள்ளியில் படிக்கும் குழந்தைகள் அனைவருக்கும் பயனளிக்கும் வகையில் சத்துணவு வழங்கும் திட்டமாகச் செயல்படுத்தியவர் யார்?**

1] அண்ணா

2] கருணாநிதி

**3] எம்.ஜி. இராமச்சந்திரன்**

4] ஜெயலலிதா

**106] புரட்சித் தலைவர் என்று மக்களால் போற்றப்பட்ட எம்.ஜி. இராமச்சந்திரன் --------------- அன்று இயற்கை எய்தினார்.**

**1] 24.12.1987**

2] 24.12.1986

3] 24.12.1989

4] 24.12.1988

**107] எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்களின் பணியைப் பாராட்டி இந்தியாவின் உயரிய விருதான பாரதரத்னா விருது (இந்திய மாமணி) ---------- ஆம் ஆண்டு அவருடைய மறைவுக்குப் பின் குடியரசுத் தலைவரால் வழங்கப்பட்டது.**

1] 1991  2] 1990  **3] 1988**  4] 1989

**108] உவமை, உவமேயம் ஆகிய இரண்டனுக்கும் இடையில் வரும் உருபு, ----------- எனப்படும்.**

1] ஆகுபெயர்

2] பொருள்கோள்

3] இலக்கணம்

**4] உவம உருபு**

**விளக்கம்** :- தமிழ்ச்செல்வி குயில்போலப் பாடினாள்.

இத்தொடர் குரலினிமையை உணர்த்துகிறது. குரலினிமைக்குக் குயிலின் குரல் ஒப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளது. இவ்வாறு ஒருபொருளைச் சிறப்பித்துக்கூற, அதனைவிடச் சிறந்த வேறொரு பொருளோடு ஒப்பிடுவதே உவமித்துக் கூறுதல் எனப்படும். இவ்வாறு, உவமித்துக் கூறுவதனால் புரியாதன எளிதில் புரியும். கேட்டார்க்கு இன்பம் பயக்கும். சிறப்பிக்கப்படும் பொருள் உவமேயம் எனப்படும். அதற்கு ஒப்பாகக் காட்டப்படும் பொருள் உவமை எனப்படும். இதனை உவமானம் எனவும் கூறுவர். உவமை, உவமேயம் ஆகிய இரண்டனுக்கும் இடையில் வரும் உருபு, உவம உருபு எனப்படும். தமிழ் தேன்போல இனிமையானது. இத்தொடரில் போல என்பது உவம உருபு, உவம உருபுகள் பல, அவற்றையும், அவை தொடரில் அமைந்து வருவதனையும் காண்போம்.

**உவம உருபு - தொடர்**

1 . போல - கிளிபோலப் பேசினாள்.

2 . புரைய - வேய்புரை தோள்

3 . ஒப்ப - தாயொப்பப் பேசும் மகள்.

4 . உறழ - முழவு உறழ் தடக்கை.

5 . அன்ன - மலரன்ன சேவடி.

மேற்கண்டவை போன்ற உவம உறுகள் பல உள்ளன.

**109] உவமை, உவமேயம் (உவமிக்கப்படும் பொருள்) ஆகிய இரண்டையும் பொருத்துகின்ற உவம உருபு வெளிப்படையாக வருவது விரியுவமை. இஃது -------------- எனப்படும்.**

1] உவமேயத் தொடர்

2] உருவக தொடர்

**3] உவமைத் தொடர்**

4] இவற்றில் ஏதுமில்லை

**விளக்கம்** :- **(எ.கா.)** : தேன்போன்ற மொழி.

இத்தொடரில் தேன் - உவமை, மொழி - உவமேயம், போன்ற - உவமஉருபு. உவம உருபு, இத்தொடரில் வெளிப்பட வந்துள்ளதனால் இது, விரியுவமை எனப்படும். இஃது உவமைத் தொடராகும்.

**110] தேன்மொழி - இதில் உவமை உவமேயம் ஆகிய இரண்டனுக்கும் இடையில் உவம உருபு மறைந்து வந்துள்ளது. எனவே, இதனைத் தொகையுவமை என்பர். இதனை, ––––––––– எனவும் கூறுவர்.**

1] உவமேயத் தொடர்

2] உருவக தொடர்

**3] உவமத் தொகை**

4] இவற்றில் ஏதுமில்லை

**111] ஒருபொருளை அதனைவிடச் சிறந்த மற்றொரு பொருளோடு ஒப்பிட்டுக் கூறுவது -------------- எனப்படும்.**

1] உருவகம்

**2] உவமை**

3] உவமேயம்

4] இவற்றில் ஏதுமில்லை

**விளக்கம்:- உவமை உருவாக மாற்றம் :**

**(எ.கா.) : பவளவாய் (பவளம் போன்ற வாய்).**

இத்தொடரில் வாய் பவளத்தோடு ஒப்பிட்டுக் கூறப்பட்டுள்ளது. பவளம் - உவமை, வாய் - உவமேயம் (உவமையை ஏற்கும் பொருள்). இவ்வாறு ஒருபொருளை அதனைவிடச் சிறந்த மற்றொரு பொருளோடு ஒப்பிட்டுக் கூறுவது உவமை எனப்படும்.

**(எ.கா.) : வாய்ப்பவளம்.**

இத்தொடரில் வாயே பவளம் எனப் பொருள் கொள்ளுமாறு கூறப்பட்டுள்ளது. உவமைத்தொகையில் முதல் பகுதி (பவளம்) உவமானமாகவும் அதன் அடுத்த பகுதி உவமேயமாகவும் (வாய்) அமையும். உருவகத்தில், உவமேயம் முதல் பகுதி, உவமை அடுத்த பகுதியாக இருக்கும். இவ்வாறு உவமானத்தையும் உவமேயத்தையும் வேறுபடுத்தாது, இரண்டும் ஒன்றே என ஒற்றுமைபடுத்திக் காட்டுவதே உருவகம்.

**உவமை : உருவகம்**

அமுதமொழி - மொழியமுது

கயற்கண் - கண்கயல்

தேன்தமிழ் - தமிழ்த்தேன்

பூவிரல் - விரல்பூ

மதிமுகம் - முகமதி

மலரடி - அடிமலர்

முத்துப்பல் - பல்முத்து

விற்புருவம் - புருவவில்

மலர்ப்பாதம் - பாதமலர்

**112] பொருந்தாதது எது? மரபுத்தொடர்களுக்கான பொருள்.**

1] ஆயிரங் காலத்துப் பயிர் - நீண்ட காலத்திற்குரியது

2] எடுப்பார் கைப்பிள்ளை - தன் சிந்தனையின்றிச் சொல்பவர் பேச்சைக் கேட்டு நடப்பவர்

3] ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது - பட்டறிவில்லாத படிப்பறிவு

**4] அவலை நினைத்து உரலை இடித்தல் - பொய்யழுகை**

**குறிப்பு** :- அவலை நினைத்து உரலை இடித்தல் - எண்ணமும் செயலும் ஒத்துவராமை

**113] பொருந்தாதது எது? மரபுத்தொடர்களுக்கான பொருள்.**

1] முதலைக்கண்ணீர் - பொய்யழுகை

2] அவசரக்குடுக்கை - எண்ணித் துணியாதார்

**3] ஆகாயத்தாமரை - அலைந்து திரிதல்**

4] கம்பி நீட்டல் - சொல்லிக் கொள்ளாமல் செல்லல்

**குறிப்பு** :- ஆகாயத்தாமரை - இல்லாத ஒன்று

**114] பொருந்தாதது எது? மரபுத்தொடர்களுக்கான பொருள்.**

1] தாளம்போடுதல் - எதைச் சொன்னாலும் அப்படியே ஏற்றுக்கொள்ளல்

2] கானல் நீர் - இருப்பது போல் தோன்றும் ஆனால் இராதது

3] பஞ்சாய்ப் பறத்தல் - அலைந்து திரிதல்

**4] குட்டிச்சுவர் - பொய்யழுகை**

5] கொட்டியளத்தல் - மிகுதியாகப் பேசுதல்

**குறிப்பு** :- குட்டிச்சுவர் - பயனின்றி இருத்தல்

**115] ஒருமை பன்மைப் பிழைகளை நீக்கி எழுதுக. தவறானது எது?**

1] திரையரங்குகளில் திரைப்படம் காட்ட ஒளி - ஒலிப்படக் கருவி என்ற கருவி பயன்படுகின்றது

2] நமது சமுதாயத்தில் அறிவியலும் தொழில்நுட்பமும் ஆங்காங்கு ஒளிபரப்பும் மின்விளக்குகள் போல் இருக்கின்றது

3] இன்று பேருந்துகள் ஓடா

4] ஓர் அணில் மரத்தில் ஏறியது

**5] நான் வாங்கிய நூல் இஃது இல்லை**

**குறிப்பு**:- நான் வாங்கிய நூல் இஃது அன்று.

**116] இந்திய அரசியலில் சாணக்கியர் என்று போற்றப்பட்ட மூதறிஞர் யார்?**

1] பெரியார்

2] காமராசர்

3] அண்ணா

**4] இராசகோபாலாச்சாரியார்**

**117] இணையான தமிழ்ப்பழமொழிகளை அறிக. Birds of the same feather flock together**

**1] இனம் இனத்தோடு சேரும்**

2] வீட்டில் எலி வெளியில் புலி

3] தோல்வியே வெற்றிக்கு அடிப்படை

4] கல்வி கரையில, கற்பவர் நாள் சில

**118] இணையான தமிழ்ப்பழமொழிகளை அறிக. Every cock will crow upon his own dunghill**

1] இனம் இனத்தோடு சேரும்

**2] வீட்டில் எலி வெளியில் புலி**

3] தோல்வியே வெற்றிக்கு அடிப்படை

4] கல்வி கரையில, கற்பவர் நாள் சில

**119] இணையான தமிழ்ப்பழமொழிகளை அறிக. - Failure is the stepping stone to success**

1] இனம் இனத்தோடு சேரும்

2] வீட்டில் எலி வெளியில் புலி

**3] தோல்வியே வெற்றிக்கு அடிப்படை**

4] கல்வி கரையில, கற்பவர் நாள் சில

**120] இணையான தமிழ்ப்பழமொழிகளை அறிக. - Art is long and life is short**

1] இனம் இனத்தோடு சேரும்

2] வீட்டில் எலி வெளியில் புலி

3] தோல்வியே வெற்றிக்கு அடிப்படை

**4] கல்வி கரையில, கற்பவர் நாள் சில**

**121] இணையான தமிழ்ப்பழமொழிகளை அறிக.**- Look before you leap

**1] ஆழம் அறியாமல் காலைவிடாதே**

2] வீட்டில் எலி வெளியில் புலி

3] தோல்வியே வெற்றிக்கு அடிப்படை

4] கல்வி கரையில, கற்பவர் நாள் சில

## பத்தாம் வகுப்பு - பொதுத்தமிழ் பாடக்குறிப்புகள் பகுதி - 6

**1] அரியா சனமுனக்கே யானால் உனக்குச்; சரியாரும் உண்டோ தமிழே - விரிவார்; திகழ்பா ஒருநான்குஞ் செய்யுள்வரம் பாகப்; புகழ்பா வினங்கள்மடைப் போக்கா - நிகழவே - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், குமர குருபரர்

2] திருவானைக்கா உலா, காளமேகப்புலவர்

3] முதுமொழிக் காஞ்சி, மதுரை கூடலூர் கிழார்

**4] தமிழ்விடு தூது, ஆசிரியர் பெயர் தெரியவில்லை**

**2] நல்லேரி னால்செய்யுள் நாற்கரணத் தேர்பூட்டிச் ; சொல்லேர் உழவர் தொகுத்தீண்டி - நல்லநெறி ; நாலே விதையா நனிவிதைத்து நாற்பொருளும் ; மேலே பலன்பெறச்செய் விக்குநாள் மேலோரில் - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், குமர குருபரர்

2] திருவானைக்கா உலா, காளமேகப்புலவர்

3] முதுமொழிக் காஞ்சி, மதுரை கூடலூர் கிழார்

**4] தமிழ்விடு தூது, ஆசிரியர் பெயர் தெரியவில்லை**

**3] பாத்தனதாக் கொண்டபிள்ளைப் பாண்டியன் வில்லி ஒட்டக்; கூத்தனிவர் கல்லாது கோட்டிகொளும் - சீத்தையரைக்; குட்டிச் செவியறுத்துக் கூட்டித் தலைகளெல்லாம் வெட்டிக் களைபறிக்க மேலாய்த்தூர் - கட்டி - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், குமர குருபரர்

2] திருவானைக்கா உலா, காளமேகப்புலவர்

3] முதுமொழிக் காஞ்சி, மதுரை கூடலூர் கிழார்

**4] தமிழ்விடு தூது, ஆசிரியர் பெயர் தெரியவில்லை**

**4] வளர்ந்தனை பால்முந்திரிகை வாழைக் கனியாய்க் ; கிளர்ந்தகரும் பாய்நாளி கேரத்து - இளங்கனியாய்த் ; தித்திக்குந் தெள்ளமுதாய்த் தெள்ளமுதின் மேலான; முத்திக் கனியேஎன் முத்தமிழே - புத்திக்குள் - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், குமர குருபரர்

2] திருவானைக்கா உலா, காளமேகப்புலவர்

3] முதுமொழிக் காஞ்சி, மதுரை கூடலூர் கிழார்

**4] தமிழ்விடு தூது, ஆசிரியர் பெயர் தெரியவில்லை**

**5] உண்ணப் படுந்தேனே உன்னோ டுவந்துரைக்கும்; விண்ணப்பம் உண்டு விளம்பக்கேள் - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், குமர குருபரர்

2] திருவானைக்கா உலா, காளமேகப்புலவர்

3] முதுமொழிக் காஞ்சி, மதுரை கூடலூர் கிழார்

**4] தமிழ்விடு தூது, ஆசிரியர் பெயர் தெரியவில்லை**

**6] வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்னும் நால்வகைப் பாக்களும் வயலின் ------------ ஆக கூறப்பட்டுள்ளன.**

**1] வரப்புகள்**

2] மடைகள்

3] ஏர்கள்

4] விதைகள்

**7] துறை, தாழிசை, விருத்தம் என்னும் பாவினங்கள் -------- ஆக கூறப்பட்டுள்ளன.**

1] வரப்புகள்

**2] மடைகள்**

3] ஏர்கள்

4] விதைகள்

**8] மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் நாற்கரணங்கள் ----------- ஆக கூறப்பட்டுள்ளன.**

1] வரப்புகள்

2] மடைகள்

**3] ஏர்கள்**

4] விதைகள்

**9] வைதருப்பம், கௌடம், பாஞ்சாலம், மாகதம் ஆகிய செய்யுள் நன்னெறிகள் ---------- ஆக கூறப்பட்டுள்ளன.**

1] வரப்புகள்

2] மடைகள்

3] ஏர்கள்

**4] விதைகள்**

**10] அறம், பொருள், இன்பம், வீடு ஆகியன ---------- ஆக கூறப்பட்டுள்ளன.**

1] வரப்புகள்

2] மடைகள்

**3] விளைபொருள்கள்**

4] விதைகள்

**11] பயிர்களின் இடையே வளரும் களைகளாகிய போலிப் புலவர்கள் கூட்டம் பெருகாமல் குட்டுவதற்கு அதிவீரராம பாண்டியனும், செவியை அறுப்பதற்கு வில்லிபுத்தூரனும் தலையை வெட்டுவதற்கு ------------ என்பவரும் இருந்தமையால், தமிழே நீ கிளைத்துச் செழித்து வளர்ந்தாய்.**

1] கம்பர்

2] புகழேந்திப் புலவர்

3] ஔவையார்

**4] ஒட்டக்கூத்தர்**

**12] தமிழே! பால், முந்திரி, வாழை, கரும்பு, இளநீர்போல் பல்வகையான சுவைகளையும் தருகின்றாய். தெளிந்த அமுதமாகவும், மேன்மையான வீடு பேற்றை அளிக்கும் கனியாகவும், அறிவினால் உண்ணப்படும் தேனாகவும் விளங்கும் தமிழே! உம்மிடத்து மகிழ்ந்து உரைக்கும் ஒரு விண்ணப்பம் உண்டு; கேட்பாயாக. - என்று கூறும் பாடல் இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

1] மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், குமர குருபரர்

2] திருவானைக்கா உலா, காளமேகப்புலவர்

3] முதுமொழிக் காஞ்சி, மதுரை கூடலூர் கிழார்

**4] தமிழ்விடு தூது, ஆசிரியர் பெயர் தெரியவில்லை**

**13] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] அரியாசனம் - சிங்காதனம்

2] பா ஒரு நான்கு - வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா

**3] வரம்பு - வயல்**

4] ஏர் - அழகு

**குறிப்பு** :- வரம்பு என்பதன் சரியான சொற்பொருள் வரப்பு.

**14] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] நாற்கரணம் - மனம், புத்தி, சித்தம், அகங்காரம்

2] நெறிநாலு - வைதருப்பம் (ஆசுகவி), கௌடம் (மதுரகவி), பாஞ்சாலம் (சித்திரகவி, மாகதம் (வித்தாரகவி) ஆகிய செய்யுள் நெறிகள். இவை விதையாய் உருவகம் செய்யப்பட்டன.

3] நாற்பொருள் - அறம், பொருள், இன்பம், வீடு; இவை வயலின் விளைவாக உருவகம் செய்யப்பட்டுள்ளன.

**4] கேழல் - யானை**

**குறிப்பு** :- கேழல் என்பதன் சரியான சொற்பொருள் பன்றி.

**15] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] கோட்டிகொளும் - கூட்டமாகக் கூடும்

2] சீத்தையர் - கீழானவர் (போலிப்புலவர்)

3] தூர்கட்டி - பயிர் அடி பருத்து வளர்தல்

**4] நாளிகேரம் - வாழை**

**குறிப்பு** :- நாளிகேரம் என்பதன் சரியான சொற்பொருள் தென்னை.

**16] பொருந்தாதது எது? பிரித்தறிதல்**

1] நாற்கரணம் - நான்கு + கரணம்

2] கரணத்தேர் - கரணத்து + ஏர்

3] நாற்பொருள்- நான்கு + பொருள்

**4] செவியறுத்து - செவி + யறுத்து**

**குறிப்பு** :- செவியறுத்து - செவி + அறுத்து

**17] பொருந்தாதது எது? பிரித்தறிதல்**

1] இளங்கனி - இளமை + கனி

2] விண்ணப்பமுண்டு - விண்ணப்பம் + உண்டு

3] பைந்தமிழ் - பசுமை + தமிழ்

**4] கண்ணிரண்டு = கண்ணி + ரண்டு**

**குறிப்பு** :- **கண்ணிரண்டு = கண் + இரண்டு.**

**18] -------------- வகைச் சிற்றிலக்கியங்களுள் தூதும் ஒன்று.**

1] அறுபத்து நான்கு

2] நூற்றி ஆறு

**3] தொண்ணூற்றாறு**

4] இருபத்தி மூன்று

**19] ------------ இல் உயர்திணைப் பொருளையோ அஃறிணைப் பொருளையோ தூது அனுப்புவதாகப் பாடுவது தூது இலக்கியம்.**

1] ஆசிரியப்பா

2] வஞ்சிப்பா

**3] கலிவெண்பா**

4] இவற்றில் ஏதுமில்லை

**20] --------------- இல் கோவில் கொண்டிருக்கும் சொக்கநாதர் மேல் காதல் கொண்ட பெண்ணொருத்தி, தன் காதலைக் கூறி வருமாறு தமிழ் மொழியைத் தூது விடுவதாகப் பொருளமைந்தது தமிழ்விடு தூது.**

1] சிதம்பரம்

2] சதுரகிரி

**3] மதுரை**

4] திருவண்ணாமலை

**21] தமிழ் விடு தூது என்ற நூலின் ஆசிரியர் ?**

1] ஒட்டக்கூத்தர்

2] காளமேகப் புலவர்

3] கூடலூர் கிழார்

**4] இயற்றியவர் பெயர் அறிய இயலவில்லை**

**22] இலக்கணக்குறிப்பு தருக. - செவியறுத்து (செவியை அறுத்து)**

1] வினைத்தொகை

2] பண்புத்தொகை

3] ஆறாம் வேற்றுமைத்தொகை

**4] இரண்டாம் வேற்றுமைத்தொகை**

**23] முதல் மாந்தன் தோன்றிய இலெமுரியாவை --------------- என்பர்.**

1] தமிழன் பிறப்பிடம்

2] உயிரின பிறப்பிடம்

3] உலக பிறப்பிடம்

**4] மனித நாகரிகத் தொட்டில்**

**24] தமிழகம் இன்று போல் இல்லாது, குமரி முனைக்குத் தெற்கே இன்னும் விரிந்து, குமரிமலை, பஃறுளி ஆறு முதலியவற்றை உள்ளடக்கி இருந்தது. இச்செய்தியைப் பின்வரும் ------------------ பாடல் வரிகள் தெளிவாக உணர்த்தும். "பஃறுளி ஆற்றுடன் பன்மலை அடுக்கத்துக் குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள."**

1] மணிமேகலை

2] கம்பராமாயணம்

**3] சிலப்பதிகாரம்**

4] குறுந்தொகை

**25] ------------------ என்பவர், தமிழின் பழஞ்சிறப்பினைப் பெருமிதம் பொங்கப் பின் வருமாறு பாடுகிறார். "திங்களொடும் செழும்பரிதி தன்னோடும் விண்ணோடும் உடுக்க ளோடும் மங்குல்கடல் இவற்றோடும் பிறந்த தமிழுடன் பிறந்தோம் நாங்கள்"**

1] தமிழ் நாட்டின் வோர்ட்ஸ் வொர்த் வாணிதாசன்

2] பாரதியார்

**3] புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன்**

4] உவமைக் கவிஞர் சுரதா

**26] கீழ்க்கண்ட கூற்றில் தவறானது எது?**

1] கடல் வாணிகத்தில் தமிழர் சிறந்திருந்தனர்

2] பொன்னும், மணியும், முத்தும், துகிலும் கொண்டு கடல்கடந்து வாணிகம் செய்தனர்

**3] பண்டைத் தமிழகத்தில் துறைமுகப் பட்டினங்கள் இல்லை**

4] பூம்புகார் முதலான பெருநகரங்கள், வணிகர் வாழும் இடங்களாய் இருந்தன

**குறிப்பு** :- பண்டைத் தமிழகத்தில் துறைமுகப் பட்டினங்கள் பலவிருந்தன.

**27] கீழ்க்கண்ட கூற்றில் தவறானது எது?**

1] கிறித்து பிறப்பதற்கு முன்பே கிரேக்கம், உரோமாபுரி, எகிப்து ஆகிய நாடுகளுக்கு அரிசியும், மயில் தோகையும், சந்தனமும் தமிழகத்திலிருந்து அனுப்பப்பட்டன

**2] கி.பி. பதினாறாம் நூற்றாண்டில் அரசன் சாலமனுக்கு யானைத் தந்தமும், மயில்தோகையும், வாசனைப் பொருள்களும் தமிழகத்திலிருந்து அனுப்பப்பட்டன**

3] தமிழர்களுக்குச் சாவக நாட்டுடனும் கடல் வாணிகத்தொடர்பு இருந்தது

4] கடல் வாணிகத்தில் தமிழர் சிறந்திருந்தனர்

**குறிப்பு** :- கி.மு. பத்தாம் நூற்றாண்டில் அரசன் சாலமனுக்கு யானைத் தந்தமும், மயில்தோகையும், வாசனைப் பொருள்களும் தமிழகத்திலிருந்து அனுப்பப்பட்டன.

**28] கீழ்க்கண்ட கூற்றில் தவறானது எது?**

1] வரலாற்றாசிரியர் பலரும் கிறித்துவ ஊழித் தொடக்கத்துக்கு முன்பே மதுரையில் தமிழ்ச் சங்கம் இருந்திருக்க வேண்டும் என்று நவில்கின்றனர்

**2] தமிழ்ச்சங்கம் இருந்தது என்ற மரபுச் செய்தி இடைவிடாது இருந்து வருகிறது. இந்தியாவில் இத்தகைய மரபுச் செய்தி வேறெங்குமில்லை என்ற பாரதியார் அவர்களின் கூற்று, அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடியதே**

3] உலக நாகரிகத்திற்கும் பண்பாட்டிற்கும் சிறந்த பங்களிப்பினைத் தமிழ்மொழி அளித்திருக்கிறது.

4] உலகில் உள்ள உயரிய மனித இனத்தின் மரபுச் செல்வமாகத் தமிழ் மொழி விளங்குகிறது.

**குறிப்பு:-** தமிழ்ச்சங்கம் இருந்தது என்ற மரபுச் செய்தி இடைவிடாது இருந்து வருகிறது. இந்தியாவில் இத்தகைய மரபுச் செய்தி வேறெங்குமில்லை என்ற தனிநாயகம் அடிகளின் கூற்று, அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடியதே.

**29] தமிழ்கெழு கூடல் என்று புறநானூறும், தமிழ்வேலி என்று -------------- நூலும் மதுரைத் தமிழ்ச் சங்கத்தனையே குறிக்கின்றன.**

1] குறுந்தொகை

2] நற்றிணை

**3] பரிபாடல்**

4] திருவாசகம்

**30] 'கூடலில் ஆய்ந்த ஒண்தீந் தமிழின்' என்று --------------- நூலும் பழந்தமிழ்ச் சங்கத்தனையும் சங்கமிருந்து தமிழாய்ந்ததனையும் குறிப்பிடுகிறது.**

1] குறுந்தொகை

2] நற்றிணை

3] பரிபாடல்

**4] மணிவாசகம் ( திருவாசகம் )**

**31] பண்டைக் காலத்து வாணிகப் பொருள்கள் துறைமுக நகரங்களிலிருந்து ஏற்றுமதியாயின. ----------------, ---------- நூல்கள் அவற்றை அழகுறக் கூறும்.**

1] சிலப்பதிகாரம், மணிமேகலை

2] கம்பராமாயணம், திருக்குறள்

**3] பட்டினப்பாலை, மதுரைக்காஞ்சி**

4] இவற்றில் ஏதுமில்லை

**32] காவிரிப் பூம்பட்டினத் துறைமுகத்தில் பொருள்கள் மண்டியும் மயங்கியும் கிடந்ததனைப் பின்வரும் ---------------- நூலின் வரிகள் விளக்கும். " நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்; காலின் வந்த கருங்கறி மூடையும்; வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்; குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்; மயங்கிய நனந்தலை மறுகு"**

1] பரிபாடல்

2] புறநானூறு

**3] பட்டினப்பாலை**

4] கலித்தொகை

**33] கீழ்க்கண்ட கூற்றில் தவறானது எது?**

1] உலகில் மொழி உருவம் பெறுவதற்கு முன் இசை பிறந்துவிட்டதென்பர். மனிதன், தன் உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதற்கு இசையே கருவியாயிற்று

2] பண்டைக்காலத் தமிழர்களின் வாழ்வில் இசை சிறந்த இடத்தைப் பெற்றிருந்தது. பண்கள், இசைக் கருவிகள், இசைக்கலைஞர்கள், இசைப்பாடல்கள் என இசை பற்றிய ஏராளமான குறிப்புகள் இலக்கியங்களில் உள்ளன

3] தொல்காப்பியமும், சங்க இலக்கியமும், சிலப்பதிகாரமும் இசை மரபுகளை வெளிப்படுத்துகின்றன

**4] 'நரம்பின் மறை' என்று பாரதியார் உரைப்பதன் மூலம் இசை இலக்கணநூல் உண்டென உணரமுடிகிறது**

**குறிப்பு** :- 'நரம்பின் மறை' என்று தொல்காப்பியர் உரைப்பதன் மூலம் இசை இலக்கணநூல் உண்டென உணரமுடிகிறது.

**34] கீழ்க்கண்ட கூற்றில் தவறானது எது?**

**1] பாணன், பாடினி, கூத்தன், விறலி என்று பல மன்னர்கள் இருந்தமையையும் அறிய முடிகிறது**

2] தமிழர் வாழ்வில் பிறப்பிலிருந்து இறப்பு வரைக்கும் இசையே முதன்மை பெறுகிறது

3] தாலாட்டு என்பது குழந்தையைத் தொட்டிலிலிட்டுப் பாடுவது

4] ஒப்பாரி என்பது, இவருக்கு ஒப்பார் ஒருவருமிலர் என்று இறந்தவரைப் பற்றிப்பாடுவது

**குறிப்பு** :- பாணன், பாடினி, கூத்தன், விறலி என்று இயலிசை நாடகக் கலைஞர்கள் இருந்தமையையும் அறிய முடிகிறது.

**35] இன்றைய கருநாடக இசைக்குத் தாய் நம் தமிழிசையே. "பண்ணொடு தமிழொப்பாய்" என்னும் ------------ நூல், பண்ணும் தமிழும் பிரிக்க முடியாததொன்று என்று நவிலும்.**

1] திருவாசகம்

**2] தேவாரம்**

3] குறுந்தொகை

4] புறநானூறு

**36] கீழ்க்கண்ட கூற்றில் தவறானது எது?**

1] தமிழர், ஐவகை நிலத்திற்கும் ஐந்திணைக்கும் ஏற்ற பண்ணிசை வகுத்தனர்

2] தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி எனப் பல்வேறு இசைக்கருவிகளைப் பயன்படுத்தி இன்புற்றனர்

**3] குழலினிது யாழினிது என்று இசைபொழியும் கருவிகளை புறநானூறு குறிக்கின்றது**

4] இதன் மூலம் தமிழிசை தொன்மையும் சிறப்பும் பெற்றிருந்ததனை அறியலாம்

**குறிப்பு** :- குழலினிது யாழினிது என்று இசைபொழியும் கருவிகளை வள்ளுவம் குறிக்கின்றது.

**37] கீழ்க்கண்ட கூற்றில் தவறானது எது?**

**1] பழந்தமிழகத்தில் உழுபவரே உயர்ந்தோராக மதிக்கப்பட்டனர். உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் என்பது குறுந்தொகை**

2] தமிழர், உழுது பயிர் செய்து உலகைக் காக்கும் இத்தொழிலைப் பெரிதும் போற்றினர்

3] உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே என்னும் அன்றைய புகழ்மொழி இன்றும் தமிழரால் போற்றப்படுகிறது

4] உழவுக்குச் சிறப்புப்பெற்ற மருதநிலம் வயலும் வயல் சார்ந்த இடமாக வகைப்படுத்தப்பட்டு இருந்தது. மருதநிலத்தின் பெருமை கருதியே வேந்தனை முதன்மைப்படுத்தினர் தமிழர்

**குறிப்பு** :- பழந்தமிழகத்தில் உழுபவரே உயர்ந்தோராக மதிக்கப்பட்டனர். உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் என்பது திருக்குறள்

**38] அக்காலத்தே அறம், பொருள், இன்ப வாழ்வைத் தமிழர் பெற்றிருந்தனர். அறத்தினைக்கைக் கொண்டதனால் ----------- என ஒன்று வேண்டாததாயிற்று.**

1] காடு

**2] வீடு**

3] உறவு

4] இவற்றில் ஏதுமில்லை

**39] “களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே' என்னும் ---------- பாடல், வீரத்தினை முதற் கடமையாக்குகிறது.**

1] நற்றிணை

2] குறுந்தொகை

3] பதிற்றுப்பத்து

**4] புறநானூறு**

**40] வீரமற்ற ஆடவரை அக்காலப் பெண்டிர் மணந்துகொள்ள விழையார். --------------- என்ற பெண்பாற்புலவர், பெண்களின் பெருவீரத்தினைப் பாடுகிறார். முதல் நாள் போரில் தந்தையைப் பறிகொடுத்தாள். இரண்டாம் நாள் போரில் கணவனை இழந்தாள். மூன்றாம் நாளும் போர் தொடர்கிறது. மறக்குடியில் பிறந்த மாண்புடையவள் அப்பெண். நெஞ்சம் துடித்த அவள், பால்மணம் மாறாச் சிறுமகன் தன்னைச் செருக்களம் நோக்கிப் பகைத்திறம் மாய்க்க விடுத்தாள். என்னே, அவள்துணிவு!**

1] நக்கண்ணையார்

2] ஔவையார்

**3] ஒக்கூர் மாசாத்தியார்**

4] இவற்றில் ஏதுமில்லை

**41] சந்திப்பிழை நீக்கி எழுதுக. சரியானது எது?**

**1] மனித இனத்தின் மரபுச் செல்வமாகத் தமிழ்மொழி விளங்குகிறது**

2] மனித இனத்தின் மரபு செல்வமாகத் தமிழ்மொழி விளங்குகிறது

3] மனித இனத்தின் மரபுச் செல்வமாக தமிழ்மொழி விளங்குகிறது

4] மனித இனத்தின் மரபு செல்வமாக தமிழ்மொழி விளங்குகிறது

**42] ஒருமை பன்மைப் பிழை நீக்கி எழுதுக : சரியானது எது?**

1] காவிரிபூம்பட்டினத்தில் வாணிகப் பொருள்கள் மண்டிக் கிடக்கின்றன

2] காவிரிபூம்பட்டினத்தில் வாணிகப் பொருள்கள் மண்டிக் கிடக்கும்

**3] காவிரிபூம்பட்டினத்தில் வாணிகப் பொருள்கள் மண்டிக் கிடந்தன**

4] காவிரிபூம்பட்டினத்தில் வாணிகப் பொருள்கள் மண்டிக் கிடந்தது

**43] ஒருமை பன்மைப் பிழை நீக்கி எழுதுக : சரியானது எது?**

1] தமிழர்கள் வாழ்வில் இசை சிறந்த இடத்தைப் பெற்றிருந்தன

**2] தமிழர்கள் வாழ்வில் இசை சிறந்த இடத்தைப் பெற்றிருந்தது**

3] தமிழர்கள் வாழ்வில் இசை சிறந்த இடத்தைப் பெற்றிருக்கும்

4] தமிழர்கள் வாழ்வில் இசை சிறந்த இடத்தைப் பெற்றது

**44] திருவண்ணாமலையில் கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டில் எழுதப்பெற்ற கல்வெட்டு வரிகள், சங்ககால மன்னன் நன்னனையும், பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் பாடிய ---------------- நூலைப் பற்றியும் கூறுகிறது.**

1] பட்டினப்பாலை

**2] மலைபடுகடாம்**

3] நற்றிணை

4] குறுந்தொகை

**குறிப்பு** :- "நல்லிசைக் கடாம்புனை நன்னன் வெற்பில் ; வெல்புக ழனைத்தும் மேம்படத் தங்கோன்; வாகையும் குரங்கும் விசைய முந்தீட்டிய அடல்புனை நெடுவேல் ஆட்கொண்ட தேவன்"

45] **தொல்பழங்காலத்தைப் பற்றி ஆய்வு செய்தலையே தொல்லியல் அல்லது தொல்பொருளியல் என்கிறோம். தொன்மையான காலத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறை, தொழில்கள், வாணிகம், வேளாண்மை, அரசியல், நுண்கலைகள் முதலியவை பற்றி அவர்கள் விட்டுச் சென்ற எச்சங்களான கல்வெட்டுகள், கட்டடங்கள், காசுகள், செப்பேடுகள் முதலியவற்றின் அடிப்படையில் ஆய்ந்தறிதலே தொல்லியலின் முதன்மையான நோக்கம். தொல்லியலை ஆங்கிலத்தில் ------------ எனக் குறிப்பிடுவர்.**

1] கிலேஸியாலஜி

2] இன்ரேடியாலஜி

3] கார்டியாலஜி

4] **ஆர்க்கியாலஜி**

46] **---------------- ஆய்வு இன்றேல், மனிதன் கடந்துவந்த பாதையையும் அவனுடைய வரலாற்றையும் அறிய இயலாது.**

1] உயிரியல்

2] புவியியல்

3] வணிகவியல்

4] **தொல்லியல்**

47] **மணிமேகலை, சிலப்பதிகாரம் முதலிய இலக்கியங்களில் இடம் பெற்றிருந்த காவிரிப்பூம்பட்டினம் ஒரு துறைமுக நகரம். அது சோழர்களின் கடற்கரை நகரம். இந்நகரம் இருந்ததற்கான ஆதாரங்கள் கிடைக்கவில்லை. இந்தியத் தொல்லியல்**

**துறையினர் ------------- ஆம் ஆண்டு ------------- அருகில் உள்ள கீழார்வெளி என்னும் இடத்தில் மேற்கொண்ட கடல் அகழாய்வின் போது கி.மு. மூன்றாம் நூற்றாண்டைச் சார்ந்த கட்டட இடிபாடுகள் கண்டறியப்பட்டன. இந்த ஆய்வில் செங்கற்களால் கட்டப்பட்ட படகுத் துறை, அரைவட்ட வடிவ நீர்த்தேக்கம், புத்தவிஹாரம் (புத்தபிக்குகள் தங்குமிடம்), வெண்கலத்தாலான புத்தர் பாதம் முதலிய எச்சங்கள் கிடைத்தன.**

1] 1953, ஆதிச்சநல்லூர்

2] 1972, அரியலூர்

3] 1983, திருநெல்வேலி

**4] 1963, பூம்புகார்**

**48] தருமபுரி, கரூர், மதுரை ஆகிய மாவட்டங்களில், ------------------ நூற்றாண்டு முதல் பல்வேறு காலக்கட்டங்களைச் சார்ந்த தங்கம், வெள்ளி, செம்பு, இரும்பு உலோகங்களினால் செய்யப்பட்ட காசுகள் கண்டறியப்பட்டுள்ளன. இவற்றின் ஒரு பக்கத்திலோ இரு பக்கங்களிலோ முத்திரைகள் பொறிக்கப்பட்டுள்ளன. இக்காசுகளில் சூரியன் மலைமுகடு, ஆறு, காளை, ஸ்வஸ்திகம், கும்பம் முதலிய சின்னங்கள் முத்திரைகளாகப் பொறிக்கப்பட்டுள்ளன.**

1] கி.மு. இரண்டாம்

**2] கி.மு. மூன்றாம்**

3] கி.மு. நான்காம்

4] கி.மு. ஐந்தாம்

**49] பண்டைய காலத்தில் இறந்தோரை, அவர்கள் பயன்படுத்திய பொருள்களுடன் ஒரு தாழியிலிட்டுப் புதைக்கும் வழக்கம் இருந்தது. இவ்வகைத் தாழிகளையே முதுமக்கள் தாழிகள் என்கிறோம். தூத்துக்குடி மாவட்டம் ஆதிச்சநல்லூரில்------------, ---------- ஆகிய ஆண்டுகளில் நடத்தப்பட்ட அகழாய்வுகளில் ஏராளமான முதுமக்கள் தாழிகள் கண்டு பிடிக்கப்பட்டன. கி.மு.300 முதல் கி.பி. 300**

**வரையிலான காலக்கட்டத்தைச் சார்ந்த இத்தாழிகளில் இறந்தோரின் எலும்புகளுடன் தங்கத்தினாலான நெற்றிப் பட்டம், செம்பினாலான ஆண், பெண் தெய்வ உருவங்கள், மற்றும் இரும்பினாலாள கத்திகள், விளக்குத் தாங்கிகள் முதலிய பொருள்களும் கிடைத்துள்ளன.**

1] 1873, 2001

**2] 1876, 2003**

3] 1896, 2009

4] 1886, 2005

**50] நிலைமொழியின் ஈற்றெழுத்தும் வருமொழியின் முதல் எழுத்தும் சேர்வது --------------------- எனப்படும்.**

1] ஆகுபெயர்

2] பொருள்கோள்

3] வழுவமைதி

**4] புணர்ச்சி**

**51] பொன் + வளையல் = பொன்வளையல் - இது எந்த புணர்ச்சியின் சரியான எடுத்துக்காட்டு?**

**1] இயல்புப் புணர்ச்சி**

2] விகாரப் புணர்ச்சி

3] திசைப்பெயர்ப் புணர்ச்சி

4] பண்புப்பெயர்ப் புணர்ச்சி

**விளக்கம்:-** இருசொற்கள் சேரும்போது எவ்வித மாற்றமும் இன்றி, இயல்பாகச் சேர்வது இயல்புப் புணர்ச்சி.

**(எ.கா) : பொன் + வளையல் = பொன்வளையல்.**

**52] இருசொற்கள் சேரும்போது தோன்றல், கெடுதல், திரிதல் ஆகிய மாற்றங்கள் ஏற்படுமாயின் அவற்றை ---------- என்பர்.**

1] இயல்புப் புணர்ச்சி

**2] விகாரப் புணர்ச்சி**

3] திசைப்பெயர்ப் புணர்ச்சி

4] பண்புப்பெயர்ப் புணர்ச்சி

**விளக்கம் :- விகாரப்புணர்ச்சி :- (எ.கா.) :**

1 . வாழை + பழம் = வாழைப்பழம் - தோன்றல்.

2. மரம் + வேர் = மரவேர் - கெடுதல்.

3 . பொன் + குடம் = பொற்குடம் - திரிதல்.

**53] முதன்மைத் திசைகள் நான்கு. அவை கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு ஆகியன. திசைப்பெயர்களோடு திசைப்பெயரும், பிறபெயரும் சேர்வது ------------ எனப்படும்.**

1] இயல்புப் புணர்ச்சி

2] விகாரப் புணர்ச்சி

**3] திசைப்பெயர்ப் புணர்ச்சி**

4] பண்புப்பெயர்ப் புணர்ச்சி

**விளக்கம் :- திசைப்பெயர்ப் புணர்ச்சி** : முதன்மைத் திசைகள் நான்கு. அவை கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு ஆகியன. திசைப்பெயர்களோடு திசைப்பெயரும், பிறபெயரும் சேர்வது திசைப்பெயர்ப் புணர்ச்சி எனப்படும்.

**(எ.கா.) :-**

1 . வடக்கு + கிழக்கு = வடகிழக்கு.

2 . வடக்கு + மேற்கு = வடமேற்கு.

வடக்கு என்னும் நிலைமை கிழக்கு, மேற்கு என்னும் வருமொழிகளோடு சேரும்போது நிலைமொழியின் இறுதி எழுத்துகளான க், கு நீங்கிப் புணர்ந்தது.

**(எ.கா.) :**

3 . தெற்கு + மேற்கு = தென்மேற்கு.

4 . தெற்கு + கிழக்கு = தென்கிழக்கு.

தெற்கு என்னும் திசைப்பெயரோடு மேற்கு, கிழக்கு என்னும் திசைப்பெயர்கள் சேரும்போது, நிலைமொழியின், இறுதியிலுள்ள கு நீங்கும், பிறகு றகர மெய் னகரமாகிப் புணரும்.

**திசைப்பெயரோடு பிற பெயர்களின் புணர்ச்சி :**

(எ.கா.) :

1 . வடக்கு + மலை = வடமலை.

இதில் நிலைமொழியின் இறுதி எழுத்துகளான க், கு ஆகியன இரண்டும் நீங்கிப் புணர்ந்தது.

2 . தெற்கு + திசை = தென்திசை.

இதில் நிலைமொழியின் இறுதியாகிய கு நீங்கியது, அதன் அயல் எழுத்தான ற் - ன் ஆக மாறிப் புணர்ந்தது.

3 . கிழக்கு + நாடு = கீழ்நாடு.

இதில் நிலைமொழியின் இறுதியாகிய க்கு நீங்கி, ழ என்னும் உயிர்மெய்யில் (ழ் + அ) அகரம் நீங்கி, கி என்னும் முதல் எழுத்து கீ என நீண்டு, கீழ் + நாடு = கீழ்நாடு எனப் புணர்ந்தது.

4 . மேற்கு + நாடு = மேல்நாடு, மேனாடு.

நிலைமொழியில் கு, நீங்கியது. அதன் அயலெழுத்தான ற் - ல் ஆக மாறி மேல் + நாடு = மேல்நாடு எனவும், ற் - ன் ஆக மாறி மேல் + நாடு = மேனாடு எனவும் இருவகையில் புணர்ந்தன.

**54] கருவிழி = கருமை + விழி = கரு + விழி = கருவிழி. ------------------ என்னும் விதிப்படி நிலைமொழியின் இறுதி எழுத்து மை நீங்கிப் புணர்ந்தது.**

1] உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே

**2] ஈறுபோதல்**

3] இடைஉகரம் இஆதல்

4] இவற்றில் ஏதுமில்லை

**விளக்கம் :- பண்புப்பெயர்ப் புணர்ச்சி :-** நிறம், சுவை, அளவு, வடிவம் ஆகியன குறித்து வரும் சொற்கள் பண்புப் பெயர்களாம். செம்மை, சிறுமை, சேய்மை, நன்மை, இளமை, புதுமை போல்வனவும் இவற்றுக்குரிய எதிர்ச்சொற்களும் இவைபோன்ற பிறவும் மையீற்றுப் பண்புப்பெயர்கள் எனப்படும்.

**(எ.கா.) :**

1 . கருவிழி = கருமை + விழி = கரு + விழி = கருவிழி.

ஈறுபோதல் என்னும் விதிப்படி நிலைமொழியின் இறுதி எழுத்து மை நீங்கிப் புணர்ந்தது.

2 . பெரியன் = பெருமை + அன் - பெரு + அன்; பெரி + அன்; பெரி + ய் + அன் = பெரியன்.

ஈறுபோதல் என்னும் விதிப்படி நிலைமொழியின் இறுதி எழுத்து, மை நீங்கிப் பின் பெரு என்பதன் இறுதி உகரம் இடைஉகரம் இஆதல் எனும் விதிப்படி பெரி யாகிப் பின் யகர உடும்படுமெய் பெற்றுப் பெரி + ய் + அன் என்பது 'உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி, ய் + அ = ய என்றாகிப் பெரியன் எனப் புணர்ந்தது.

**55] பாசிலை = பசுமை + இலை - பசு + இலை; பாசு + இலை; பாச் + இலை = பாசிலை. நிலைமொழி ஈறுகெட்டு ---------------- என்னும் விதிப்படி, பாசு + இலை என்றாகியது. "உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்", என்னும் விதிப்படி, பாச் + இலை என்றாகிப் பின், "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" என்னும் விதிப்படி பாசிலை எனப் புணர்ந்தது.**

**1] ஆதி நீடல்**

2] ஈறுபோதல்

3] இடைஉகரம் இஆதல்

4] இவற்றில் ஏதுமில்லை

**56] பைங்கூழ் = பசுமை + கூழ் - பசு + கூழ், பைசு + கூழ், பை + கூழ்; பைங் + கூழ் = பைங்கூழ். 'ஈறுபோதல்' என்னும் விதிப்படி மை நீங்கியது. (பசு + கூழ்) 'அடிஅகரம்' ஐ ஆதல் எனும் விதிப்படி ப - பை ஆனது. 'இனையவும்' என்னும் விதிப்படி உயிர்மெய் (சு) கெட்டது. '-----------' என்னும் விதிப்படி வருமொழியின் முதல் எழுத்தான க் எழுத்துக்கு இனமான ங் மிகுந்து பைங்கூழ் எனப் புணர்ந்தது.**

**1] இனமிகல்**

2] ஆதி நீடல்

3] ஈறுபோதல்

4] இடைஉகரம் இஆதல்

**57] சிற்றோடை = சிறுமை + ஓடை - சிறு + ஓடை; சிற்று + ஓடை; சிற்ற் + ஓடை = சிற்றோடை. 'ஈறுபோதல்' என்னும் விதிப்படி மை கெட்டது. ------------ என்னும் விதிப்படி பகுதியாகிய சிறு என்பதன் றகரம் இரட்டித்துச் சிற்று என ஆகியது. பின் 'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்' என்னும் விதிப்படி, உகரம் கெட்டு, சிற்ற் என்றாகியது. பின்னர் 'உடல்மேல் உயர் வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி வருமொழி உயிர் ஏறிப் புணர்ந்து சிற்றோடை என்றாயிற்று.**

1] இனமிகல்

2] ஆதி நீடல்

3] ஈறுபோதல்

**4] தன்னொற்று இரட்டல்**

**58] சேதாம்பல் = செம்மை + ஆம்பல் - செம் + ஆம்பல்; சேம் + ஆம்பல்; சேத் + ஆம்பல் = சேதாம்பல். 'ஈறுபோதல்' என்னும் விதிப்படி, மை கெட்டு, செம் + ஆம்பல் ஆயிற்று. பின்னர் '------------------' விதிப்படி - சேம் + ஆம்பல் ஆயிற்று, பின் "முன்னின்ற மெய் திரிதல்" என்னும் விதிப்படி மகரமெய் தகரமெய் ஆகத் திரிந்து சேத் + ஆம்பல் என்றாகி, 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி சேதாம்பல் என்றாயிற்று.**

1] இனமிகல்

**2] ஆதி நீடல்**

3] ஈறுபோதல்

4] தன்னொற்று இரட்டல்

**59] கருங்குயில் = கருமை + குயில் - கரு + குயில் = கருங்குயில். ஈறுபோதல் விதிப்படி மை கெட்டது. ----------- என்னும் விதிப்படி வருமொழி ககரத்திற்கு (கு) இனமான மெல்லெழுத்து ங் மிகுந்து, கருங்குயில் எனப் புணர்ந்தது.**

**1] இனமிகல்**

2] ஆதி நீடல்

3] ஈறுபோதல்

4] தன்னொற்று இரட்டல்

**60] வட்டம் + கல் = வட்டக்கல் எனப் புணரும் - இது எந்த புணர்ச்சியின் சரியான எடுத்துக்காட்டு?**

1] பண்புப்பெயர் புணர்ச்சி

2] திசைபெயர் புணர்ச்சி

**3] மகரஈற்றுப் புணர்ச்சி**

4] இவற்றில் ஏதுமில்லை

**விளக்கம்** :- **மகரஈற்றுப் புணர்ச்சி** :

1. மகர ஈற்றுச் சொற்கள் வருமொழியோடு சேரும்பொழுது, இறுதி மகரம் (ம்) கெட்டு, உயிரீறுபோல நின்று, உயிர்முதல் மொழியோடு உடம்படுமெய் பெற்றுப் புணரும்.

(எ.கா.) : மரம் + அடி; மர + அடி; மர + வ் + அடி = மரவடி.

2. நிலைமொழியின் மகர ஈறுகெட்டு வருமொழி முதலில் உள்ள வல்லின எழுத்து மிக்குப் புணரும்.

(எ.கா.) :- வட்டம் + கல் = வட்டக்கல் எனப் புணரும்.

3. நிலைமொழியின் மகர ஈறு வருமொழி முதலிலுள்ள வல்லினத்திற்கு இனமான மெல்லினமாகத் திரிந்து புணரும்.

(எ.கா.) : நிலம் + கடந்தான் = நிலங்கடந்தான்.

**61] வடக்கு என்னும் திசைப்பெயரோடு பிற திசைகள் வந்து சேரும்போது --------- ?**

1] நிலைமொழி ஈறு நீங்கும்

**2] நிலைமொழி ஈறும் மெய்யும் நீங்கும்**

3] வருமொழி முதல் கெடும்

4] இவற்றில் ஏதுமில்லை

**62] மேற்கு + நாடு என்பது --------- எனச் சேரும்.**

1] மேற்கு நாடு

2] மேநாடு

**3] மேனாடு**

4] இவற்றில் ஏதுமில்லை

**63] கருமை + குழி என்பது ---------- எனும் விதிகளின் படி புணர்ந்தது.**

1] ஆதி நீடல், இனமிகல்

2] தன்னொற்றிரட்டல், இடையுகரம் இ ஆதல்

**3] ஈறு போதல், இனமிகல்**

4] இவற்றில் ஏதுமில்லை

**64] பொருந்தாதது எது? புணர்ச்சி விதிகள்.**

1] அடி அகரம் ஐ ஆதல் - பைங்கூழ்

2] ஆதி நீடல் - மூதூர்

3] இனமிகல் - கரும்பலகை

**4] தன்னொற்றிரட்டல் - மேநாடு**

**குறிப்பு** :- தன்னொற்றிரட்டல் - வெற்றிலை

**65] வலி - என்பதன் பொருள் ?**

1] காற்று

2] பாதை

3] **வல்லினம்**

4] இவற்றில் ஏதுமில்லை

**குறிப்பு** :- நிலைமொழிச் சொற்களுக்குப் பின், வருமொழிச் சொற்கள் வந்து புணரும்போது க், ச், த், ப், ஆகிய வல்லொற்றுகளின் வருக்க எழுத்துகள் வந்தால், அவ்வல்லொற்றுகள் சில இடங்களில் மிகுந்தும், சில இடங்களில் மிகாமலும் வரும். இவற்றையே வலிமிகுமிடங்கள் வலிமிகா இடங்கள் என்பர் (வலி - வல்லினம்).

**66] பொருந்தாதது எது? வல்லினம் மிகுமிடங்கள்.**

1] நிலைமொழி உயிரீற்றுச் சொல்லின்பின் வல்லினம் (க், ச், த், ப்) மிகும்

கறி + குழம்பு = கறிக்குழம்பு

பலா + சுளை = பலாச்சுளை

வழி + தடம் = வழித்தடம்

பாட்டு + போட்டி = பாட்டுப்போட்டி

2] அ, இ, உ என்னும் சுட்டெழுத்துகளின் பின்னும், எ என்னும் வினா எழுத்தின் பின்னும் வல்லினம் மிகும்

அ + கடை = அக்கடை

இ + சட்டை = இச்சட்டை

உ + பக்கம் = உப்பக்கம் (செய்யுள் வழக்கு)

எ + பாடம் = எப்பாடம்

3] அந்த, இந்த, எந்த என்னும் சொற்களின்பின் வரும் வல்லினம் மிகும்

அந்த + கோவில் = அந்தக்கோவில்

இந்த + சட்டி = இந்தச் சட்டி

எந்த + தோட்டம் = எந்தத் தோட்டம்

**4] உம்மைத்தொகையில் வரும் வல்லினம் மிகும்.**

**காய் + கனி = காய்க்கனி.**

**தாய் + தந்தை = தாய்த்தந்தை.**

**முத்து + பவளம் = முத்துப்பவளம்.**

**குறிப்பு** :- உம்மைத்தொகையில் வரும் வல்லினம் மிகாது.

காய் + கனி = காய்கனி.

தாய் + தந்தை = தாய்தந்தை.

முத்து + பவளம் = முத்துபவளம்.

67] **பொருந்தாதது எது? வல்லினம் மிகுமிடங்கள்.**

1] அப்படி, இப்படி, எப்படி என்னும் சொற்களின் பின் வரும் வல்லினம் மிகும்

அப்படி + கூறினான் = அப்படிக் கூறினான்

இப்படி + தாவினான் = இப்படித் தாவினான்

எப்படி + சொன்னான் = எப்படிச் சொன்னான்

2] இரண்டாம் வேற்றுமை (ஐ) விரியின் பின் வரும் வல்லினம் மிகும்

பாரியை + கண்டான் = பாரியைக் கண்டான்

பொருளை + சேர்த்தான் = பொருளைச் சேர்த்தான்

அவனை + தடுத்தான் = அவனைத் தடுத்தான்

நிலவை + பார்த்தான் = நிலவைப் பார்த்தான்

3] நான்காம் வேற்றுமை (கு) விரியில் வரும் வல்லினம் மிகும்

எனக்கு + கொடு = எனக்குக் கொடு

குழந்தைக்கு + சோறு = குழந்தைக்குச் சோறு

அவளுக்கு + தா = அவளுக்குத் தா

பாப்பாவுக்கு + பட்டு = பாப்பாவுக்குப் பாட்டு

**4] வினைத்தொகையில் வரும் வல்லினம் மிகும்**

**விடு + கணை = விடுக்கணை**

**விரி + சுடர் = விரிச்சுடர்**

**தோய் + தயிர் = தோய்த்தயிர்**

**பாய் + புலி = பாய்ப்புலி**

**குறிப்பு :- வினைத்தொகையில் வரும் வல்லினம் மிகாது.**

விடு + கணை = விடுகணை

விரி + சுடர் = விரிசுடர்

தோய் + தயிர் = தோய்தயிர்

பாய் + புலி = பாய்புலி

**68] பொருந்தாதது எது? வல்லினம் மிகுமிடங்கள்.**

**1] இரண்டாம் வேற்றுமைத் தொகையில் வல்லினம் மிகும்**

**கதை + சொன்னார் = கதைச் சொன்னார்**

**கடல் + தாவினான் = கடல்த் தாவினான்**

**புகழ் + பெற்றார் = புகழ்ப் பெற்றார்**

2] ஒரெழுத்து ஒருமொழியில் வரும் க், ச், த், ப் மிகும்

ஈ + கால் = ஈக்கால்

தீ + சட்டி = தீச் சட்டி

கை + தடி = கைத் தடி

தை + பொங்கல் = தைப் பொங்கல்

3] வன்றொடர்க் குற்றியலுகரத்தின் பின் வரும் வல்லினம் மிகும்

கொக்கு + கால் = கொக்குக் கால்

4] இகர ஈற்றுச் "செய்து" என்னும் எச்சத்தின்பின் வரும் வல்லினம் மிகும்

ஓடி + போனான் = ஓடிப் போனான்

**குறிப்பு :- இரண்டாம் வேற்றுமைத் தொகையில் வல்லினம் மிகாது.**

கதை + சொன்னார் = கதை சொன்னார்.

கடல் + தாவினான் = கடல் தாவினான்.

புகழ் + பெற்றார் = புகழ் பெற்றார்

69] **பொருந்தாதது எது? வல்லினம் மிகுமிடங்கள்.**

1] அகராஈற்றுச் செய என்னும் எச்சத்தின் பின் வரும் வல்லினம் மிகும்

பாட + கேட்டேன் = பாடக் கேட்டேன்

தேட + சென்றான் = தேடச் சென்றான்

பாட + தெரியுமா? = பாடத் தெரியுமா ?

ஓட + பார்த்தான் = ஓடப் பார்த்தான்

2] சால, தவ என்னும் உரிச்சொற்களின் பின் வரும் வல்லினம் மிகும்

சால + பசித்தது = சாலப் பசித்தது

தவ + சிறிது = தவச் சிறிது

3] ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் முன் வல்லினம் மிகும்

காணா + கண்கள் = காணாக் கண்கள்

கேளா + செவி = கேளாச் செவி

ஓடா + தேர் = ஓடாத் தேர்

நாறா + பூ = நாறாப்பூ

**4] வியங்கோள் வினைமுற்றை அடுத்து வரும் வல்லினம் மிகும்.**

**கற்க + கசடற = கற்கக்கசடற.**

**வளர்க + சிந்தனை = வளர்கச்சிந்தனை.**

**வாழ்க + தமிழ் = வாழ்கத்தமிழ்.**

**காண்க + படம் = காண்கப்படம்.**

**குறிப்பு :- வியங்கோள் வினைமுற்றை அடுத்து வரும் வல்லினம் மிகாது.**

கற்க + கசடற = கற்க கசடற

வளர்க + சிந்தனை = வளர்க சிந்தனை

வாழ்க + தமிழ் = வாழ்க தமிழ்

காண்க + படம் = காண்க படம்

**70] பொருந்தாதது எது? வல்லினம் மிகா இடங்கள்.**

**1] வன்றொடர்க் குற்றியலுகரத்தின்பின் வரும் வல்லினம் மிகாது**

**கொக்கு + கால் = கொக்கு கால்**

2] இரட்டைக்கிளவியில் வல்லினம் மிகாது

கடகட, தடதட, சடசட, படபட

3] அவை, இவை என்னும் சுட்டுச்சொற்கள், எவை என்னும் வினாச்சொல் ஆகியவற்றை அடுத்துவரும் வல்லினம் மிகாது

அவை + பறவைகள் = அவை பறவைகள்

இவை + சட்டைகள் = இவை சட்டைகள்

அவை + தடங்கள் = அவை தடங்கள்

எவை + படங்கள் = எவை படங்கள்

4] அது, எது எனும் சுட்டுச்சொற்களை அடுத்துவரும் வல்லினம் மிகாது

அது + கடை = அது கடை

இது + சட்டி = இது சட்டி

அது + தோணி = அது தோணி

இது + பாடம் = இது பாடம்

**குறிப்பு :- வன்றொடர்க் குற்றியலுகரத்தின்பின் வரும் வல்லினம் மிகும்.**

கொக்கு + கால் = கொக்குக் கால்

**71] பொருந்தாதது எது? வல்லினம் மிகா இடங்கள்.**

1] பெயரெச்சத்தொடர், வினையெச்சத்தொடர் (படித்து என்பதுபோல் வன்றொடர்க் குற்றியலுகரச் சொல் அல்லாதவை) ஆகியவற்றை அடுத்து வரும் வல்லினம் மிகாது

வந்த + கயல்விழி = வந்த கயல்விழி

தைத்த + சட்டை = தைத்த சட்டை

வந்து + தந்தான் = வந்து தந்தான்

செய்து + பார்த்தான் = செய்து பார்த்தான்

2] எழுவாய்த்தொடரில் வரும் வல்லினம் மிகாது

கண்ணகி + பார்த்தாள் = கண்ணகி பார்த்தாள்

தங்கை + கேட்டாள் = தங்கை கேட்டாள்

பூவிழி + தந்தாள் = பூவிழி தந்தாள்

3] வினைத்தொகையில் வரும் வல்லினம் மிகாது

விடு + கணை = விடுகணை

விரி + சுடர் = விரிசுடர்

தோய் + தயிர் = தோய்தயிர்

பாய் + புலி = பாய்புலி

**4] ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் முன் வல்லினம் மிகாது**

**காணா + கண்கள் = காணா கண்கள்**

**கேளா + செவி = கேளா செவி**

**ஓடா + தேர் = ஓடா தேர்**

**நாறா + பூ = நாறாபூ**

**குறிப்பு :- ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின்முன் வல்லினம் மிகும்.**

காணா + கண்கள் = காணாக் கண்கள்.

கேளா + செவி = கேளாச் செவி.

ஓடா + தேர் = ஓடாத் தேர்.

நாறா + பூ = நாறாப்பூ.

**72] தமிழில் அக்கலை இல்லையே; இக்கலை இல்லையே; சிறப்பாக விஞ்ஞானம் என்னும் அறிவுக்கலை இல்லையே என்று சிலர் கூக்குரலிடுகிறார். ஆங்கிலத்தில் முதல் நூல்களாகவா எல்லாக் கலைகளும் பிறந்தன என்பதனை அந்த அன்பர்கள் நினைப்பார்களாக. - இந்த கூற்று யாருடையது?**

1] மு.வரதராசனார்

2] பெரியார்

3] அண்ணா

**4] திரு.வி.க**

**73] வேறு மொழிகளிலிருந்தும் ஆங்கில அறிஞர் தம் மொழியில் பல கலைகளைப் பெயர்த்தெழுதியுள்ளனர். இதுகாறும் உலகில் காணப்பட்டுள்ள புதுமைகள் எல்லாவற்றையும் ஆங்கிலேயர் மட்டுமா கண்டனர் ? இல்லை,**

**இல்லை. சில பிரெஞ்சுக்காரர்களால் காணப்பட்டன, சில ஜெர்மனியர்களால் காணப்பட்டன. மற்றுஞ்சில வெவ்வேறு நாட்டினரால் காணப்பட்டன. - இந்த கூற்று யாருடையது?**

1] மு.வரதராசனார்

2] பெரியார்

3] அண்ணா

**4] திரு.வி.க**

**74] அவ்வம் மொழிகளுக்கே சிறப்பாக விளங்கும் நூல்களும் உண்டு. அவற்றை மொழிபெயர்ப்பதனால் பயன் விளையாது. அவை யாவை? அவையே காவியங்கள் என்பன. காவியங்கள் போக, மற்றக் கலைகளெல்லாம் உலகிலுள்ள அனைவருக்கும் பொது உடைமை. - இந்த கூற்று யாருடையது?**

1] மு.வரதராசனார்

2] பெரியார்

3] அண்ணா

**4] திரு.வி.க**

**75] Man proposes; god disposes - இணையான தமிழ்ப் பழமொழிகளை அறிக.**

**1] நாம் ஒன்று நினைக்க, தெய்வம் ஒன்று நினைக்கும்**

2] காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்

3] பழகப் பழகப் பாலும் புளிக்கும்

4] அரசன் அன்று கொல்வான், தெய்வம் நின்று கொல்லும்

**76] Strike the road while it is hot - இணையான தமிழ்ப் பழமொழிகளை அறிக.**

1] நாம் ஒன்று நினைக்க, தெய்வம் ஒன்று நினைக்கும்

**2] காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்**

3] பழகப் பழகப் பாலும் புளிக்கும்

4] அரசன் அன்று கொல்வான், தெய்வம் நின்று கொல்லும்

**77] Familiarity breeds contempt - இணையான தமிழ்ப் பழமொழிகளை அறிக.**

1] நாம் ஒன்று நினைக்க, தெய்வம் ஒன்று நினைக்கும்

2] காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்

**3] பழகப் பழகப் பாலும் புளிக்கும்.**

4] அரசன் அன்று கொல்வான், தெய்வம் நின்று கொல்லும்

**78] The mills of god grind slow but sure - இணையான தமிழ்ப் பழமொழிகளை அறிக.**

1] நாம் ஒன்று நினைக்க, தெய்வம் ஒன்று நினைக்கும்

2] காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்

3] பழகப் பழகப் பாலும் புளிக்கும்

**4] அரசன் அன்று கொல்வான், தெய்வம் நின்று கொல்லும்**

**79] The Face is the index of the mind - இணையான தமிழ்ப் பழமொழிகளை அறிக.**

1] நாம் ஒன்று நினைக்க, தெய்வம் ஒன்று நினைக்கும்

**2] அகத்தின் அழகு முகத்தில் தெரியும்**

3] பழகப் பழகப் பாலும் புளிக்கும்

4] அரசன் அன்று கொல்வான், தெய்வம் நின்று கொல்லும்

**80] பாசிலை = பசுமை + இலை - பசு + இலை; பாசு + இலை; பாச் + இலை = பாசிலை. நிலைமொழி ஈறுகெட்டு ஆதி நீடல் என்னும் விதிப்படி, பாசு + இலை என்றாகியது. "உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்", என்னும் விதிப்படி, பாச் + இலை என்றாகிப் பின், "----------------" என்னும் விதிப்படி பாசிலை எனப் புணர்ந்தது.**

1] ஆதி நீடல்

2] ஈறுபோதல்

3] இடைஉகரம் இஆதல்

**4] உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே**

**81] பாசிலை = பசுமை + இலை - பசு + இலை; பாசு + இலை; பாச் + இலை = பாசிலை. நிலைமொழி ஈறுகெட்டு ஆதி நீடல் என்னும் விதிப்படி, பாசு + இலை என்றாகியது. "----------------", என்னும் விதிப்படி, பாச் + இலை என்றாகிப் பின், "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" என்னும் விதிப்படி பாசிலை எனப் புணர்ந்தது.**

1] ஆதி நீடல்

2] ஈறுபோதல்

**3] உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்**

4] உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே

**82] பைங்கூழ் = பசுமை + கூழ் - பசு + கூழ், பைசு + கூழ், பை + கூழ்; பைங் + கூழ் = பைங்கூழ். '-------------' என்னும் விதிப்படி மை நீங்கியது. (பசு + கூழ்) 'அடிஅகரம்' ஐ ஆதல் எனும் விதிப்படி ப - பை ஆனது. 'இனையவும்' என்னும் விதிப்படி உயிர்மெய் (சு) கெட்டது. 'இனமிகல்' என்னும் விதிப்படி வருமொழியின் முதல் எழுத்தான க் எழுத்துக்கு இனமான ங் மிகுந்து பைங்கூழ் எனப் புணர்ந்தது.**

1] இனமிகல்

2] ஆதி நீடல்

**3] ஈறுபோதல்**

4] இடைஉகரம் இஆதல்

**83] பைங்கூழ் = பசுமை + கூழ் - பசு + கூழ், பைசு + கூழ், பை + கூழ்; பைங் + கூழ் = பைங்கூழ். 'ஈறுபோதல்' என்னும் விதிப்படி மை நீங்கியது. (பசு + கூழ்) '------------------' எனும் விதிப்படி ப - பை ஆனது. 'இனையவும்' என்னும் விதிப்படி உயிர்மெய் (சு) கெட்டது. 'இனமிகல்' என்னும் விதிப்படி வருமொழியின் முதல் எழுத்தான க் எழுத்துக்கு இனமான ங் மிகுந்து பைங்கூழ் எனப் புணர்ந்தது.**

1] இனமிகல்

**2] அடிஅகரம் ஐ ஆதல்**

3] ஈறுபோதல்

4] இடைஉகரம் இஆதல்

**84] சிற்றோடை = சிறுமை + ஓடை - சிறு + ஓடை; சிற்று + ஓடை; சிற்ற் + ஓடை = சிற்றோடை. '------------' என்னும் விதிப்படி மை கெட்டது. தன்னொற்று இரட்டல் என்னும் விதிப்படி பகுதியாகிய சிறு என்பதன் றகரம் இரட்டித்துச் சிற்று என ஆகியது. பின் 'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்' என்னும் விதிப்படி, உகரம் கெட்டு, சிற்ற் என்றாகியது. பின்னர் 'உடல்மேல் உயர் வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி வருமொழி உயிர் ஏறிப் புணர்ந்து சிற்றோடை என்றாயிற்று.**

1] இனமிகல்

2] ஆதி நீடல்

**3] ஈறுபோதல்**

4] தன்னொற்று இரட்டல்

85] சிற்றோடை = சிறுமை + ஓடை - சிறு + ஓடை; சிற்று + ஓடை; சிற்ற் + ஓடை = சிற்றோடை. 'ஈறுபோதல்' என்னும் விதிப்படி மை கெட்டது. தன்னொற்று இரட்டல் என்னும் விதிப்படி பகுதியாகிய சிறு என்பதன் றகரம் இரட்டித்துச் சிற்று என ஆகியது. பின் '----------------------' என்னும் விதிப்படி, உகரம் கெட்டு, சிற்ற் என்றாகியது. பின்னர் 'உடல்மேல் உயர் வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி வருமொழி உயிர் ஏறிப் புணர்ந்து சிற்றோடை என்றாயிற்று.

1] இனமிகல்

**2] உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்**

3] ஈறுபோதல்

4] தன்னொற்று இரட்டல்

86] சிற்றோடை = சிறுமை + ஓடை - சிறு + ஓடை; சிற்று + ஓடை; சிற்ற் + ஓடை = சிற்றோடை. 'ஈறுபோதல்' என்னும் விதிப்படி மை கெட்டது. தன்னொற்று இரட்டல் என்னும் விதிப்படி பகுதியாகிய சிறு என்பதன் றகரம் இரட்டித்துச் சிற்று என ஆகியது. பின் 'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்' என்னும் விதிப்படி, உகரம் கெட்டு, சிற்ற் என்றாகியது. பின்னர் '--------------' என்னும் விதிப்படி வருமொழி உயிர் ஏறிப் புணர்ந்து சிற்றோடை என்றாயிற்று.

1] இனமிகல்

2] உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்

**3] உடல்மேல் உயர் வந்து ஒன்றுவது இயல்பே**

4] தன்னொற்று இரட்டல்

87] சேதாம்பல் = செம்மை + ஆம்பல் - செம் + ஆம்பல்; சேம் + ஆம்பல்; சேத் + ஆம்பல் = சேதாம்பல். '---------------' என்னும் விதிப்படி, மை கெட்டு, செம் + ஆம்பல் ஆயிற்று. பின்னர் 'ஆதி நீடல்' விதிப்படி - சேம் + ஆம்பல் ஆயிற்று, பின் “முன்னின்ற மெய் திரிதல்” என்னும் விதிப்படி மகரமெய் தகரமெய் ஆகத் திரிந்து

**சேத் + ஆம்பல் என்றாகி, 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி சேதாம்பல் என்றாயிற்று.**

1] இனமிகல்

2] ஆதி நீடல்

**3] ஈறுபோதல்**

4] தன்னொற்று இரட்டல்

**88] சேதாம்பல் = செம்மை + ஆம்பல் - செம் + ஆம்பல்; சேம் + ஆம்பல்; சேத் + ஆம்பல் = சேதாம்பல். 'ஈறுபோதல்' என்னும் விதிப்படி, மை கெட்டு, செம் + ஆம்பல் ஆயிற்று. பின்னர் 'ஆதி நீடல்' விதிப்படி - சேம் + ஆம்பல் ஆயிற்று, பின் "------------------------" என்னும் விதிப்படி மகரமெய் தகரமெய் ஆகத் திரிந்து சேத் + ஆம்பல் என்றாகி, 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி சேதாம்பல் என்றாயிற்று.**

1] இனமிகல்

2] ஆதி நீடல்

**3] முன்னின்ற மெய் திரிதல்**

4] தன்னொற்று இரட்டல்

**89] சேதாம்பல் = செம்மை + ஆம்பல் - செம் + ஆம்பல்; சேம் + ஆம்பல்; சேத் + ஆம்பல் = சேதாம்பல். 'ஈறுபோதல்' என்னும் விதிப்படி, மை கெட்டு, செம் + ஆம்பல் ஆயிற்று. பின்னர் 'ஆதி நீடல்' விதிப்படி - சேம் + ஆம்பல் ஆயிற்று, பின் "முன்னின்ற மெய் திரிதல்" என்னும் விதிப்படி மகரமெய் தகரமெய் ஆகத் திரிந்து சேத் + ஆம்பல் என்றாகி, '-----------------' என்னும் விதிப்படி சேதாம்பல் என்றாயிற்று.**

1] இனமிகல்

2] ஆதி நீடல்

**3] உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே**

4] தன்னொற்று இரட்டல்

**90] கருங்குயில் = கருமை + குயில் - கரு + குயில் = கருங்குயில். ------------ விதிப்படி மை கெட்டது. இனமிகல் என்னும் விதிப்படி வருமொழி ககரத்திற்கு (கு) இனமான மெல்லெழுத்து ங் மிகுந்து, கருங்குயில் எனப் புணர்ந்தது.**

1] இனமிகல்

2] ஆதி நீடல்

**3] ஈறுபோதல்**

4] தன்னொற்று இரட்டல்

**91] இருசொற்களைச் சேர்த்து எழுதும் போது இடையில் சில இடங்களில் எந்த வல்லின மெய் எழுத்துக்கள் ---------- மிக்கு வரும்.**

1] ( க், ச், ட், ப் )

2] ( க், ச், ட், த் )

**3] ( க், ச், த், ப் )**

4] ( க், ச், த், ற் )

**92] பொருந்தாதது எது?**

1] அ, இ, உ என்னும் சுட்டெழுத்துகளை அடுத்தும், எ என்னும் வினாவை அடுத்தும் வரும் வல்லினங்களாகிய க், ச், த், ப் மிகும்

2] அந்த, இந்த, எந்த, அங்கு, இங்கு, எங்கு, அப்படி, இப்படி, எப்படி, என்னும் சுட்டு வினாச்சொற்களை அடுத்து வல்லினம் மிகும்

3] இரண்டாம் வேற்றுமை விரியில் வல்லினம் மிகும்

**4] ஐந்தாம் வேற்றுமை விரியில் வல்லினம் மிகும்.**

**விளக்கம்** :- நான்காம் வேற்றுமை விரியில் வல்லினம் மிகும்.

**93] பொருந்தாதது எது?**

1] இரண்டு, மூன்று, நான்கு, ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையில் வல்லினம் மிகும்

2] பண்புத்தொகையில் வல்லினம் மிகும். மற்றும் இருபெயரொட்டுப் பண்புத்தொகையில் வல்லினம் மிகும்

3] உவமைத்தொகை மற்றும் ஒரேழுத்து ஒரு மொழி, ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சத்தின் பின் வல்லினம் மிகும்

**4] மென்தொடர்க் குற்றியலுகரத்தின் பின் வல்லினம் மிகும்**

**குறிப்பு** :- வன்தொடர்க் குற்றியலுகரத்தின் பின் வல்லினம் மிகும்.

**94] பொருந்தாதது எது?**

1] ட, ற ஒற்று இரட்டிக்கும் உயிர், நெடில் தொடர்க் குற்றியலுகரங்களின் பின் வல்லினம் மிகும்

**2] குற்றியலுகரத்தின் பின் வல்லினம் மிகும்**

3] சால, தவ முதலிய உரிச்சொற்களின் பின் வல்லினம் மிகும்

4] ஆய், என, இனி, ஆக முதலிய இடைச்சொற்களின் பின் வல்லினம் மிகும்.

**விளக்கம்** :- முற்றியலுகரத்தின் பின் வல்லினம் மிகும்.

**95] பொருந்தாதது எது?**

1] அது, இது, அவை, இவை என்னும் சுட்டுச் சொற்களின் பின்னும் எது, எவை என்னும் வினாச்சொற்களின் பின்னும் வல்லினம் மிகாது

2] ஆ, ஏ, ஓ என்னும் வினா எழுத்துகள் மற்றும் எழுவாய்த்தொடரில் வல்லினம் மிகாது

3] அத்தனை, இத்தனை, எத்தனை என்னும் சொற்களுக்குப் பின் மற்றும் வினைத்தொகை, உம்மைத்தொகையில் வல்லினம் மிகாது.

**4] இரண்டாம் வேற்றுமைத்தொகையில் வல்லினம் மிகும்**

**விளக்கம்** :- இரண்டாம் வேற்றுமைத்தொகையில் வல்லினம் மிகாது.

**96] பொருந்தாதது எது?**

1] மூன்றாம் வேற்றுமை உருபுகளின் பின் (ஒடு, ஓடு) வல்லினம் மிகாது

2] எட்டு, பத்து தவிரப் பிற எண்களுக்குப்பின் வல்லினம் மிகாது

3] வியங்கோள் வினைமுற்றுக்குப் பின் மற்றும் இரட்டைக் கிளவி, அடுக்குத் தொடர்களில் வல்லினம் மிகாது

**4] ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் தவிரப் பிறபெயரெச்சங்களின் பின் வல்லினம் மிகும்.**

**விளக்கம்** :- ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் தவிரப் பிறபெயரெச்சங்களின் பின் வல்லினம் மிகாது.

**97] 'பாடு' எனக் கூறியவுடன் பாடுபவர் ?**

**1] ஆசுகவி**

2] மதுரகவி

3] சித்திரகவி

4] வித்தாரக்கவி

**98] செவிக்கினிய ஓசைநலம் சிறக்கப் பாடுபவர் யார்?**

1] ஆசுகவி

**2] மதுரகவி**

3] சித்திரகவி

4] வித்தாரக்கவி

**99] சொல்லணி அமைத்துச் சுவைவளம் செழிக்கப் பாடுபவர்?**

1] ஆசுகவி

2] மதுரகவி

**3] சித்திரகவி**

4] வித்தாரக்கவி

**100] தொடர்நிலைச் செய்யுளும், தூய காப்பியங்களும் இயற்றுபவர் ?**

1] ஆசுகவி

2] மதுரகவி

3] சித்திரகவி

**4] வித்தாரக்கவி**

## பத்தாம் வகுப்பு - பொதுத்தமிழ் பாடக்குறிப்புகள் பகுதி - 7

**1] அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை**

**------------- ---------- ------------- - விடுபட்டதை தேர்வு செய்க.**

**1] திறனறிந்து தீர்த்து கொளல்**

2] பெற்றியார்ப் பேணிக் கொளல்

3] பேணித் தமராக் கொளல்

4] வன்மையுள் எல்லாம் தலை

**2] உற்றநோய் நீக்கி உறாஅமை முற்காக்கும்**

**------------- ----------- -------------- - விடுபட்டதை தேர்வு செய்க.**

1] திறனறிந்து தீர்த்து கொளல்

**2] பெற்றியார்ப் பேணிக் கொளல்**

3] பேணித் தமராக் கொளல்

4] வன்மையுள் எல்லாம் தலை

**3] அரியவற்றுள் எல்லாம் அரிதே, பெரியாரைப்**

**----------- --------------- ----------- - விடுபட்டதை தேர்வு செய்க.**

1] திறனறிந்து தீர்த்து கொளல்

2] பெற்றியார்ப் பேணிக் கொளல்

**3] பேணித் தமராக் கொளல்**

4] வன்மையுள் எல்லாம் தலை

**4] தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்**

**------------ ----------------- ------------ - விடுபட்டதை தேர்வு செய்க.**

1] திறனறிந்து தீர்த்து கொளல்

2] பெற்றியார்ப் பேணிக் கொளல்

3] பேணித் தமராக் கொளல்

**4] வன்மையுள் எல்லாம் தலை**

**5] சூழ்வார்கண் ணாக ஒழுகலான் மன்னவன்**

**---------------- ---------------- ---------- - விடுபட்டதை தேர்வு செய்க.**

**1] சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்**

2] செற்றார் செயக்கிடந்த தில்

3] கெடுக்குந் தகைமை யவர்

4] கெடுப்பார் இலானுங் கெடும்

**6] தக்கார் இனத்தனாய்த் தானொழுக வல்லானைச்**

**---------------- ---------------- ---------- - விடுபட்டதை தேர்வு செய்க.**

1] சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்

**2] செற்றார் செயக்கிடந்த தில்**

3] கெடுக்குந் தகைமை யவர்

4] கெடுப்பார் இலானுங் கெடும்

**7] இடிக்குந் துணையாரை ஆள்வாரை யாரே**

**--------------- --------------- ---------- - விடுபட்டதை தேர்வு செய்க.**

1] சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்

2] செற்றார் செயக்கிடந்த தில்

**3] கெடுக்குந் தகைமை யவர்**

4] கெடுப்பார் இலானுங் கெடும்

**8] இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்**

**--------------- --------------- ---------- - விடுபட்டதை தேர்வு செய்க.**

1] சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்

2] செற்றார் செயக்கிடந்த தில்

3] கெடுக்குந் தகைமை யவர்

**4] கெடுப்பார் இலானுங் கெடும்**

**9] முதலிலார்க்(கு) ஊதிய மில்லை, மதலையாம்**

**--------------- --------------- ---------- - விடுபட்டதை தேர்வு செய்க.**

**1] சார்பிலார்க் கில்லை நிலை**

2] செற்றார் செயக்கிடந்த தில்

3] கெடுக்குந் தகைமை யவர்

4] கெடுப்பார் இலானுங் கெடும்

**10] பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே**

**--------------- --------------- ---------- - விடுபட்டதை தேர்வு செய்க.**

1] சார்பிலார்க் கில்லை நிலை

2] செற்றார் செயக்கிடந்த தில்

**3] நல்லார் தொடர்கை விடல்**

4] கெடுப்பார் இலானுங் கெடும்

**11] பொருந்தாதது எது. சொற்பொருள் தருக.**

1] மூத்த - முதிர்ந்த

2] கேண்மை - பகைமை.

3] தேர்ந்து - ஆராய்ந்து

4] உறாஅமை - துன்பம் வராமல்

**குறிப்பு** :- கேண்மை - நட்பு

**12] பொருந்தாதது எது. சொற்பொருள் தருக.**

1] நோய் - துன்பம்

2] பெற்றியார் - பெருமையுடையார்

3] பேணி - போற்றி

4] தமர் - பகைவர்.

**குறிப்பு** :- தமர் - உறவினர்

**13] பொருந்தாதது எது. சொற்பொருள் தருக.**

1] வன்மை - வலிமை

2] ஒழுகுதல் - ஏற்று நடத்தல்

3] தலை - சிறப்பு

4] சூழ்வார் - அறிவிலார்.

**குறிப்பு** :- சூழ்வார் - அறிவுடையார்

**14] பொருந்தாதது எது. சொற்பொருள் தருக.**

1] சூழ்ந்துகொளல் - நட்பாக்கிக் கொள்ளுதல்

2] தக்கார் - தகுதியுடைய பெரியோர்

3] செற்றார் - நண்பர்.

4] இல் - இல்லை

**குறிப்பு** :- செற்றார் - பகைவர்

**15] பொருந்தாதது எது. சொற்பொருள் தருக.**

1] இடிக்கும் - எடுத்துரைக்கும்.

2] தகைமை - தன்மை

3] இடிப்பார் - கடிந்து அறிவுரை கூறும் பெரியோர்

4] ஏமரா - பாதுகாவல் இல்லாத

**குறிப்பு** :- இடிக்கும் - கடிந்துரைக்கும்

**16] பொருந்தாதது எது. சொற்பொருள் தருக.**

1] மதலை - துணை

2] பத்தடுத்த - பத்து மடங்கு

3] தலை - சிறப்பு

4] சூழ்வார் - அறிவிலார்.

**குறிப்பு** :- சூழ்வார் - அறிவுடையார்

**17] பொருந்தாதது எது. இலக்கணக்குறிப்பு தருக.**

1] அறனறிந்து (அறத்தை + அறிந்து), திறனறிந்து (திறனை + அறிந்து) - இரண்டாம் வேற்றுமைத்தொகைகள்

2] தேர்ந்து கொளல் - வினையெச்சம்

3] கொளல் - அல் ஈற்று வியங்கோள் வினைமுற்று

**4] உற்றநோய் - வினையெச்சம்**

**குறிப்பு** :- உற்றநோய் - பெயரெச்சம்

**18] பொருந்தாதது எது. இலக்கணக்குறிப்பு தருக.**

1] உறாஅமை - செய்யுளிசை அளபெடை

2] பெற்றியார் - வினையாலணையும் பெயர்

3] கொளல் - தொழிற்பெயர்

**4] வன்மை - பண்புத்தொகை**

**குறிப்பு** :- வன்மை - பண்புப்பெயர்

**19] பொருந்தாதது எது. இலக்கணக்குறிப்பு தருக.**

1] ஒழுகுதல் - தொழிற்பெயர்

2] சூழ்வார், தக்கார், செற்றார் - வினையாலணையும் பெயர்

3] இல்லை - குறிப்பு வினைமுற்று

**4] தேர்ந்து கொளல் - பெயரெச்சம்**

**குறிப்பு** :- தேர்ந்து கொளல் - வினையெச்சம்

**20] முதலிலார்க்(கு) ஊதிய மில்லை, மதலையாம்**

**சார்பிலார்க் கில்லை நிலை - என்ற குறளில் பயின்று வந்துள்ள அணி?**

1] உவமையணி

2] இல்பொருள் உவமையணி

3] உருவக அணி

**4] எடுத்துக்காட்டு உவமை அணி**

**21] பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்**

**----------- -------------- ---------- - விடுபட்டதை நிரப்புக.**

**1] பொருளல்ல தில்லை பொருள்**

2] எல்லாரும் செய்வர் சிறப்பு

3] எண்ணிய தேயத்துச் சென்று

4] தீதின்றி வந்த பொருள்

**22] இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை**

**----------- -------------- ---------- - விடுபட்டதை நிரப்புக.**

1] பொருளல்ல தில்லை பொருள்

**2] எல்லாரும் செய்வர் சிறப்பு**

3] எண்ணிய தேயத்துச் சென்று

4] தீதின்றி வந்த பொருள்

**23] பொருளென்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கும்**

**------------ --------------- ----------- - விடுபட்டதை நிரப்புக.**

1] பொருளல்ல தில்லை பொருள்

2] எல்லாரும் செய்வர் சிறப்பு

**3] எண்ணிய தேயத்துச் சென்று**

4] தீதின்றி வந்த பொருள்

**24] அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து**

**------------ --------------- ----------- - விடுபட்டதை நிரப்புக.**

1] பொருளல்ல தில்லை பொருள்

2] எல்லாரும் செய்வர் சிறப்பு

3] எண்ணிய தேயத்துச் சென்று

**4] தீதின்றி வந்த பொருள்**

**25] அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்**

**------------ --------------- ----------- - விடுபட்டதை நிரப்புக.**

**1] புல்லார் புரள விடல்**

2] தெறுபொருளும் வேந்தன் பொருள்

3] செல்வச் செவிலியால் உண்டு

4] றுண்டாகச் செய்வான் வினை

**26] உறுபொருளும் உல்கு பொருளுந்தன் ஒன்னார்த்**

**------------ --------------- ----------- - விடுபட்டதை நிரப்புக.**

1] புல்லார் புரள விடல்

**2] தெறுபொருளும் வேந்தன் பொருள்**

3] செல்வச் செவிலியால் உண்டு

4] றுண்டாகச் செய்வான் வினை

**27] அருளென்னும் அன்பீன் குழவி பொருளென்னுஞ்**

**------------ --------------- ----------- - விடுபட்டதை நிரப்புக.**

1] புல்லார் புரள விடல்

2] தெறுபொருளும் வேந்தன் பொருள்

**3] செல்வச் செவிலியால் உண்டு**

4] றுண்டாகச் செய்வான் வினை

**28] குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்**

**------------ --------------- ----------- - விடுபட்டதை நிரப்புக.**

1] புல்லார் புரள விடல்

2] தெறுபொருளும் வேந்தன் பொருள்

3] செல்வச் செவிலியால் உண்டு

**4] றுண்டாகச் செய்வான் வினை**

**29] செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்**

**------------ --------------- ---------- - விடுபட்டதை நிரப்புக.**

**1] எஃ கதனிற் கூரிய தில்**

2] தெறுபொருளும் வேந்தன் பொருள்

3] செல்வச் செவிலியால் உண்டு

4] றுண்டாகச் செய்வான் வினை

**30] ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க் கெண்பொருள்**

**------------ --------------- ---------- - விடுபட்டதை நிரப்புக.**

**1] ஏனை யிரண்டும் ஒருங்கு**

2] தெறுபொருளும் வேந்தன் பொருள்

3] செல்வச் செவிலியால் உண்டு

4] றுண்டாகச் செய்வான் வினை

**31] பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்**

**பொருளல்ல தில்லை பொருள் - என்ற குறளில் பயின்று வந்துள்ள அணி?**

1] உவமையணி

**2] சொல் பின்வருநிலையணி**

3] உருவக அணி

4] எடுத்துக்காட்டு உவமை அணி

**32] அருளென்னும் அன்பீன் குழவி பொருளென்னுஞ்**

**செல்வச் செவிலியால் உண்டு - என்ற குறளில் பயின்று வந்துள்ள அணி?**

1] உவமையணி

2] இல்பொருள் உவமையணி

**3] உருவக அணி**

4] எடுத்துக்காட்டு உவமை அணி

**33] குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்**

**றுண்டாகச் செய்வான் வினை - என்ற குறளில் பயின்று வந்துள்ள அணி?**

**1] உவமையணி**

2] இல்பொருள் உவமையணி

3] உருவக அணி

4] எடுத்துக்காட்டு உவமை அணி

**34] பொருந்தாதது எது. சொற்பொருள் தருக.**

1] பொருளல்லவர் - தகுதியற்றவர்

2] பொருள் - செல்வம்

**3] எள்ளுவர் - மகிழ்வர்**

4] பொய்யா விளக்கு - அணையா விளக்கு

**குறிப்பு** :- எள்ளுவர் - இகழ்வர்.

**35] பொருந்தாதது எது. சொற்பொருள் தருக.**

1] இருள் - பகை

2] ஈனும் - தரும்

**3] தீதின்றி - தீங்குடன்**

4] புல்லார் - பற்றார்

**குறிப்பு** :- தீதின்றி - தீங்கின்றி

**36] பொருந்தாதது எது. சொற்பொருள் தருக.**

1] உறுபொருள் - அரசு உரிமையால் வரும் பொருள்

2] உல்கு பொருள் - வரியாக வரும் பொருள்

3] தெறு - பகை

**4] கேழல் - சிங்கம்**

**குறிப்பு** :- கேழல் - பன்றி

**37] பொருந்தாதது எது. சொற்பொருள் தருக.**

1] குழவி - குழந்தை

2] செவிலி - வளர்ப்புத்தாய்

**3] குன்று - கடல்**

4] கைத்தொன்று - கைப்பொருள்

**குறிப்பு** :- குன்று - மலை

**38] பொருந்தாதது எது. சொற்பொருள் தருக.**

**1] செருக்கு - சிறப்பு**

2] ஒண்பொருள் - சிறந்த பொருள்

3] எண்பொருள் - இயல்பாய்க் கிடைக்கும் பொருள்

4] இரண்டும் - அறனும் இன்பமும்

**குறிப்பு** :- செருக்கு - இறுமாப்பு

39] **பொருந்தாதது எது? இலக்கணக்குறிப்பு தருக.**

1] பொய்யா விளக்கம் - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

2] இருளறுக்கும் (இருளை அறுக்கும்) - இரண்டாம் வேற்றுமைத் தொகை

3] **வந்த பொருள் - வினையெச்சம்**

4] அறன், திறன் - கடைபோலிகள்

**குறிப்பு** :- வந்த பொருள் - பெயரெச்சம்

40] **பொருந்தாதது எது? இலக்கணக்குறிப்பு தருக.**

1] **அறனீனும், திறனறிந்து - மூன்றாம் வேற்றுமைத்தொகைகள்**

2] வாராப் பொருளாக்கம் - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

3] விடல் - அல் ஈற்று வியங்கோள் வினைமுற்று

4] தன்ஒன்னார், வேந்தன் பொருள் - ஆறாம் வேற்றுமைத் தொகைகள்

**குறிப்பு** :- அறனீனும், திறனறிந்து - இரண்டாம் வேற்றுமைத் தொகைகள்

41] **பொருந்தாதது எது? இலக்கணக்குறிப்பு தருக.**

1] ஈன் குழவி - வினைத்தொகை

2] செல்வச் செவிலி - உருவகம்

3] **குன்றேறி - ஆறாம் வேற்றுமைத்தொகை**

4] செய்க - வியங்கோள் வினைமுற்று

**குறிப்பு** :- குன்றேறி - ஏழாம் வேற்றுமைத்தொகை

**42] பொருந்தாதது எது? இலக்கணக்குறிப்பு தருக.**

1] செறுநர் செருக்கு - ஆறாம் வேற்றுமைத் தொகை

2] ஒண்பொருள், எண்பொருள் - பண்புத்தொகைகள்

**3] காழ்ப்ப இயற்றியார் - வினையெச்சம்**

4] விடல் - அல் ஈற்று வியங்கோள் வினைமுற்று

**குறிப்பு** :- காழ்ப்ப இயற்றியார் - பெயரெச்சம்

**43] திறனறிந்து தேர்ந்து கொள்ள வேண்டியவர் ---------------?**

1] அன்புள்ள பெற்றோர்

2] ஆர்வமுள்ள நண்பர்

**3] மூத்த அறிவுடையார்**

4] இவற்றில் ஏதுமில்லை

**44] அரியவற்றுள் எல்லாம் அரிது ____ பேணித்தமராக் கொளல்.**

**1] பெரியார்**

2] சிறியவர்

3] உறவினர்

4] இவற்றில் ஏதுமில்லை

**45] முதலிலார்க்கு _____ இல்லை.**

**1] ஊதியம்**

2] நட்பு

3] பகை

4] இவற்றில் ஏதுமில்லை

**46] திருக்குறள் ஒரு வகுப்பார்க்கோ ஒரு மதத்தார்க்கோ ஒரு நிறத்தார்க்கோ ஒரு மொழியார்க்கோ ஒரு நாட்டார்க்கோ உரியன அல்ல. அவை மன்பதைக்கு - உலகுக்குப் பொது - என்று கூறியவர் யார்?**

1] கால்டுவெல்

2] ஜி.யு.போப்

**3] திரு.வி.க**

4] மறைமலையடிகள்

**47] திருவள்ளுவர் தோன்றியிராவிட்டால் , தமிழன் என்னும் ஓர் இனம் இருப்பதாக உலகத்தார்க்குத் தெரிந்திருக்காது. திருக்குறள் என்னும் ஒரு நூல் தோன்றியிராவிட்டால், தமிழ்மொழி என்னும் ஒருமொழி இருப்பதாக உலகத்தார்க்குத் தெரிந்திருக்காது. - என்று கூறியவர் யார்?**

1] தேவநேய பாவாணர்

**2] கி.ஆ.பெ.விசுவநாதம்**

3] ஜி.யு.போப்

4] ஈராஸ் பாதிரியார்

**48] நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்; நரகத்தில் இடர்ப்படோம் நடலை இல்லோம்; ஏமாப்போம் பிணியறியோம் பணிவோம் அல்லோம்;**

**இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை - இந்த பாடல் வரி இடம் பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] சிலப்பதிகாரம், இளங்கோவடிகள்

2] மணிமேகலை, சீத்தலைச்சாத்தனார்

3] கம்பராமாயணம், கம்பர்

**4] தேவாரம், திருநாவுக்கரசர்**

**குறிப்பு** :- நமக்குப் பாடமாக அமைந்துள்ள பாடல் திருநாவுக்கரசர் அருளிய ஆறாந் திருமுறையில் உள்ளது.

**49] தாமார்க்கும் குடியல்லாத் தன்மை யான; சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதிற்; கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்; கொய்ம்மலர்ச்சே வடிஇணையே குறுகி னோமே - இந்த பாடல் வரி இடம் பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] சிலப்பதிகாரம், இளங்கோவடிகள்

2] மணிமேகலை, சீத்தலைச்சாத்தனார்

3] கம்பராமாயணம், கம்பர்

**4] தேவாரம், திருநாவுக்கரசர்**

**குறிப்பு** :- நமக்குப் பாடமாக அமைந்துள்ள பாடல் திருநாவுக்கரசர் அருளிய ஆறாந் திருமுறையில் உள்ளது.

**50] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

**1] இடர் - இன்பம்**

2] ஏமாப்பு - பாதுகாப்பு

3] பிணி - நோய்

4] சேவடி - இறைவனின் செம்மையான திருவடிகள்

**குறிப்பு** :- இடர் - துன்பம்

**51] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] நடலை - துன்பம்

2] நமன் - எமன்

3] கேழல் - பன்றி

**4] நவ்வி - எருமை**

**குறிப்பு** :- நவ்வி - மான்

**52] பொருந்தாதது எது? இலக்கணக்குறிப்பு தருக.**

1] நற்சங்கு, வெண்குழை - பண்புத்தொகை

**2] மலர்ச்சேவடி - உருவகம்**

3] மீளா ஆள் - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

4] வந்த கந்தன் - பெயரெச்சம்

**குறிப்பு** :- மலர்ச்சேவடி - உவமைத்தொகை

**53] பொருந்தாதது எது? பிரித்தறிதல்.**

1] பிணியறியோம் = பிணி + அறியோம்

**2] எந்நாளும் = எந் + நாளும்**

3] நாமென்றும் = நாம் + என்றும்

4] நலன்கருதி - நலன் + கருதி

**குறிப்பு** :- எந்நாளும் = எ + நாளும்

**54] திருநாவுக்கரசர் ---------- ஊரில் பிறந்தவர்.**

1] திருவெண்ணெய் நல்லூர்

2] திருவழுந்தூர்

3] திருச்சுழி

**4] திருவாமூர்**

**55] திருநாவுக்கரசர் பெற்றோர் பெயர்?**

1] சாத்தப்பன், விசாலாட்சி

2] வெங்கட்ராமன், அம்மணி அம்மாள்

3] செங்கல்வராயன், கோவர்த்தகி

**4] புகழனார், மாதினியார்**

**56] திருநாவுக்கரசர் தமக்கையார் பெயர்?**

1] கோப்பெருந்தேவி

2] ஆண்டாள்

**3] திலகவதியார்**

4] பத்மாவதியார்

**57] திருநாவுக்கரசருக்கு பெற்றோர் இட்ட பெயர்?**

1] தருமசேனர்

2] அப்பர்

3] தாண்டவராயன்

**4] மருணீக்கியார்**

**58] ------------ என்பவருக்கு, தருமசேனர், அப்பர், வாகீசர் என்னும் வேறு பெயர்களும் உண்டு. இவரது நெறி தொண்டு நெறி.**

1] சுந்தரர்

2] மாணிக்கவாசகர்

**3] திருநாவுக்கரசர்**

4] சேக்கிழார்

**59] சைவ அடியார்களை --------------- என்றும் வழங்குவர். இவர்கள் அறுபத்து மூவர்.**

**1] நாயன்மார்கள்**

2] ஆழ்வார்கள்

3] தீர்த்தங்கரர்கள்

4] சுவேதம்பரர்கள்

**60] சைவ சமயக் குரவர் -------------- ஒருவர் திருநாவுக்கரசர். இவர்தம் பாடல்கள் தேவாரம் எனப் போற்றப்படுகிறது.**

1] இருவர் (இருவருள்)

2] மூவர் (மூவருள்)

**3] நால்வர் (நால்வருள்)**

4] ஐவர் (ஐவருள்)

**61] ------------ என்பவர், தாண்டகம் பாடுவதில் வல்லவர். ஆதலால், இவர் தாண்டகவேந்தர் எனவும் வழங்கப்படுகிறார்.**

1] சுந்தரர்

2] மாணிக்கவாசகர்

**3] திருநாவுக்கரசர்**

4] சேக்கிழார்

**62] திருநாவுக்கரசர் அவர்களின் காலம்?**

1] கி.பி. நான்காம் நூற்றாண்டு

2] கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு

3] கி.பி. ஆறாம் நூற்றாண்டு

**4] கி.பி. ஏழாம் நூற்றாண்டு**

**63] திருநாவுக்கரசர் அவர்கள் பிறந்த திருவாமூர், ------------------ மாவட்டம் -------------- அடுத்து உள்ளது.**

1] தூத்துக்குடி, கோவில்பட்டி

2] விருதுநகர், சாத்தூர்

3] திருவாரூர், மன்னார்குடி

**4] கடலூர், பண்ணுருட்டி**

**64] தேவாரம் என்னும் சொல்லைத் ------------ எனப் பிரித்துத் தெய்வத்தன்மையை உடைய இசைப்பாடல்கள் என்றும், ------------- எனப் பிரித்துத் தெய்வத்திற்குச் சூட்டப் பெற்ற பாமாலை என்றும் கூறுவர்.**

1] தேன் + ஆரம், தேன் + வாரம்

2] தேன் + வாரம், தேன் + ஆரம்

3] தே + ஆரம், தே + வாரம்

**4] தே + வாரம், தே + ஆரம்**

**65] சைவத் திருமுறைகள் ----------?**

1] 10 2] 11 **3] 12** 4] 13

**66] சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் முதல் ஏழும் மூவர் தேவாரம், திருநாவுக்கரசர் பாடி அருளிய பாடல்கள் ---------, --------, --------- திருமுறைகள்.**

1] ஒன்று, இரண்டு, மூன்று

2] இரண்டு, மூன்று, நான்கு

3] மூன்று, நான்கு, ஐந்து

**4] நான்கு, ஐந்து, ஆறாம்**

**67] " நாமார்க்கும் குடியல்லோம் " என்னும் பாடல் ------------ ' அச்சமில்லை அச்சமில்லை ' எனப் பாடத் தூண்டியது.**

1] பாரதிதாசன்

2] சுரதா

3] வாணிதாசன்

**4] பாரதியார்**

**68] 'அறிவு அற்றம் காக்கும் கருவி' என்று கூறியவர்?**

1] திரு.வி.க

2] பாரதிதாசன்

3] பாரதியார்

**4] திருவள்ளுவர்**

**69] அறிவின் நுண்ணிலை வளர்ச்சியே ----------------?**

1] மொழியியல்

2] வணிகவியல்

3] புவியியல்

**4] அறிவியல்**

**70] உலகம் உருண்டை என்பதனைப் ---------- நூற்றாண்டிற்குப் பிறகே மேலை நாட்டினர் உறுதி செய்தனர்.**

1] பதின்மூன்றாம்

2] பதினான்காம்

3] பதினைந்தாம்

**4] பதினாறாம்**

**71] அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்; அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி; ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்; நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன; ---------- வரிகள் தெளிந்த வானியல் அறிவை வெளிப்படுத்துகின்றன.**

**பெருவெடிப்புக் கொள்கையின் படி, இப்பேரண்டம் விரிவடைந்து நிற்பதை இப்பாடல் ஆழமாக விளக்குகிறது.**

1] மணிமேகலை

2] பரிபாடல்

3] குறுந்தொகை

**4] திருவாசகம்**

**குறிப்பு** :- ஆன்மஇயல் பேசும் திருவாசகம் விண்ணியலையும் சொல்கிறது.

**72] உலகம் என்னும் தமிழ்ச்சொல் "----------" என்னும் சொல்லின் அடியாகப் பிறந்தது.**

1] உலகு

**2] உலவு**

3] உளது

4] உலா

**குறிப்பு** :- உலவு என்பது சுற்றுதல் என்ற பொருளைத் தரும்.

**73] 'ஞால்' என்பதற்குத் -------------- என்பது பொருள் .**

1] அறிவு

2] செயல்

3] பொங்குதல்

**4] தொங்குதல்**

**குறிப்பு** :- ஞாலம் என்னும் தமிழ்ச் சொல் "ஞால்" என்னும் சொல்லடியாகத் தோன்றியது என்பர்.

**74] வானத்தில் காற்றில்லாப் பகுதியும் உண்டு. இதனையும் பண்டைய தமிழர் அறிந்திருந்தனர். இதனை “வறிது நிலைஇய காயமும்” என்னும் ---------- பாடல் வரி விளக்குகிறது.**

1] கலித்தொகை

2] பரிபாடல்

3] குறுந்தொகை

**4] புறநானூறு**

**75] 'வலவன் ஏவா வானூர்தி' என்னும் ---------- பாடல் வரி வலவனால் ஏவப்படாத வானூர்தியைப் பழந்தமிழர்கள் விண்ணில் செலுத்தி இருக்கலாம் என உணர்த்துகிறது. இது தற்போதைய செயற்கைக் கோளைப் போன்றது எனக் கருத இடமுண்டு.**

1] கலித்தொகை

2] பரிபாடல்

3] குறுந்தொகை

**4] புறநானூறு**

**76] பண்டைத் தமிழகத்தில் கரும்பைப் பிழிவதற்கும் எந்திரங்கள் உருவாக்கப்பட்டிருந்தன. இதனைத் 'தீம்பிழி எந்திரம் பந்தல் வருந்த' என ------------- பாடல் வரி குறிப்பிடும்.**

1] புறநானூறு

**2] பதிற்றுப்பத்து**

3] பரிபாடல்

4] குறுந்தொகை

**77] நிலத்தில் இருந்து நீரை உறிஞ்சி இறைக்கும் ஆழ்துளைக் கிணறு, அக்காலத்தில் இருந்திருக்கலாம் என்பதனை, 'அந்தக் கேணியும் எந்திரக் கிணறும்' என்னும் ---------- நூலின் வரியின் வாயிலாக அறிய முடிகிறது.**

**1] பெருங்கதை**

2] பதிற்றுப்பத்து

3] பரிபாடல்

4] குறுந்தொகை

**78] ------------ நூலில் வரும் எந்திரயானை கிரேக்கத் தொன்மத்தில் குறிப்பிடப்படும் 'டிராய்' போருடன் இணைத்துப் பேசப்படும் எந்திரக்குதிரையுடன் ஒத்தது.**

**1] பெருங்கதை**

2] பதிற்றுப்பத்து

3] பரிபாடல்

4] குறுந்தொகை

**79] ---------------- நூல் பல்வகை மணிகளையும், அதன் தன்மைகளையும் விளக்குகிறது. ஊர்காண் காதையில், "ஒருமைத் தோற்றத்து ஐவேறு வனப்பின் இலங்குகதிர் விடூஉம் நலங்கெழு மணிகளும்" - என்னும் இவ்வடிகள் ஆழ்ந்த பொருளுடையது.**

**1] சிலப்பதிகாரம்**

2] மணிமேகலை

3] புறநானூறு

4] குறுந்தொகை

**குறிப்பு** :- ஐவகை மணிகளும் ஒளிவிடும் திறத்தினால் வெவ்வேறு பெயர்களைக் கொண்டுள்ளன. ஆனால், அவற்றின் மூலப்பொருள் ஒன்றே. இவ்வறிவியல் சிந்தனை, தற்போதைய வேதியியல் கூறுகளுடன் ஒப்புநோக்கத்தக்கது.

**80] நிறத்தின் அடிப்படையில் செம்மண் நிலம் எனவும், சுவையின் அடிப்படையில் உவர்நிலம் எனவும், தன்மையின் அடிப்படையில் களர்நிலம் எனவும் நிலத்தைத் தமிழர் வகைப்படுத்தினர். தமிழர், செம்மண் நிலத்தை அதன் பயன் கருதி போற்றினர். இதனைச் 'செம்புலப் பெயல் நீர்போல' என்னும் ------------ வரி உணர்த்துகிறது.**

1] திருவாசகம்

2] மணிமேகலை

3] புறநானூறு

**4] குறுந்தொகை**

**81] உவர்நிலம், மிகுந்த நீரைப் பெற்றிருந்தும் பயன் தருவதில்லை. இதனை, "அகல்வயல் பொழிந்தும் உறுமிடத் துதவா உவர்நிலம்" என்னும் ----------- வரிகள் புலப்படுத்துகின்றன.**

1] திருவாசகம்

2] மணிமேகலை

**3] புறநானூறு**

4] குறுந்தொகை

**82] எதற்கும் பயன்படாத நிலம் களர்நிலம். இதனைப் 'பயவாக் களரனையர் கல்லாதவர்' என்பார் -------------?.**

1] பாரதியார்

2] கம்பர்

3] ஔவையார்

**4] திருவள்ளுவர்**

**83] இன்றைய அறிவியல், அணுவைப் பிளக்கவும் சேர்க்கவும் முடியும் என ஆய்ந்திருக்கிறது. --------------- என்பவர் ' அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டி ' என்று சொல்கிறார்.**

1] பாரதியார்

2] கம்பர்

**3] ஔவையார்**

4] திருவள்ளுவர்

**84] 'ஓர் அணுவினைச் சத கூறிட்ட கோணினும் உளன்' என ---------- கூறுவார்.**

1] பாரதியார்

**2] கம்பர்**

3] ஔவையார்

4] திருவள்ளுவர்

**85] நெடுங்கடலும் தன்னீர்மை குன்றும் தடிந்தெழிலி தான்நல்கா தாகி விடின் - என்று கூறுபவர் யார்?**

1] பாரதியார்

2] கம்பர்

3] ஔவையார்

**4] திருவள்ளுவர்**

**86] மழையை அமிழ்தம் என்று கூறியவர் யார்?**

1] பாரதியார்

2] கம்பர்

3] ஔவையார்

**4] திருவள்ளுவர்**

**87] 'உடம்பார் அழியின் உயிரார் அழிவர்' என்பார் -------------.**

1] பாரதியார்

2] கம்பர்

3] ஔவையார்

**4] திருமூலர்**

**88] ---------- என்பவர் மருந்து என்னும் ஓர் அதிகாரத்தையே படைத்துள்ளார்.**

1] பாரதியார்

2] கம்பர்

3] ஔவையார்

**4] திருவள்ளுவர்**

**89] 'மருந்தாகித் தப்பா மரத்தற்றால்' - என்று கூறும் நூல்?**

1] புறநானூறு

2] கலித்தொகை

**3] திருக்குறள்**

4] பழமொழி நானூறு

**90] மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது அற்றது போற்றி உணின் - இந்த பாடல் வரியின் ஆசிரியர்?**

1] பாரதியார்

2] கம்பர்

3] ஔவையார்

**4] திருவள்ளுவர்**

**91] கண்ணிடந் தப்பிய கண்ணப்பன் வரலாறு ஊனுக்கு ஊன் என்னும் செய்தியும், உடம்பிடை தோன்றிற் றொன்றை அறுத்ததன் உதிரம் ஊற்றி அடல்உறச் சுட்டு வேறோர் மருந்தினால் துயரம் தீர்வர். என்னும் ---------------- வாக்கும் அறுவை மருத்துவத்தை மெய்ப்பிக்கின்றன.**

1] திருமூலர்

**2] கம்பர்**

3] ஔவையார்

4] திருவள்ளுவர்

**92] மணிமேகலையின் தோழி சுதமதியின் தந்தையை மாடுமுட்டியதால், அவரின் குடல் சரிந்தது. சரிந்த குடலைப் புத்தத் துறவியர் சரிசெய்த செய்தியை ------------ எடுத்துரைக்கிறது.**

1] சிலப்பதிகாரம்

2] வளையாபதி

3] சீவக சிந்தாமணி

**4] மணிமேகலை**

**93] 'புல்லாகிப் பூடாய்' எனத் தொடங்கும் ------------ வரிகள் பல்வகை உயிர்களின் பரிணாம வளர்ச்சியை விரிவாய்க் கூறுகின்றன.**

**1] திருவாசகம்**

2] திருக்குறள்

3] புறநானூறு

4] கலித்தொகை

**94] 'மானுடப் பிறப்பினுள் மாதா உதரத்து ஈனமில் கிருமி செருவினில் பிழைத்தும்' எனத் தொடரும் ---------- நூலின் பாடலடிகள் கருவியல் அறிவை நன்கு தெரிவிக்கின்றன.**

**1] திருவாசகம்**

2] திருக்குறள்

3] புறநானூறு

4] கலித்தொகை

**95] சந்திப்பிழை நீக்கி எழுதுக.**

**1] தமிழில் வரலாற்றுக் கருத்துகளையும், பண்பாட்டுக் கூறுகளையும் காண முடியும்**

2] தமிழில் வரலாற்று கருத்துகளையும், பண்பாட்டுக் கூறுக்களையும் காண முடியும்

3] தமிழில் வரலாற்றுக் கருத்துகளையும், பண்பாட்டு கூறுக்களையும் காண முடியும்

4] தமிழில் வரலாற்று கருத்துக்களையும், பண்பாட்டு கூறுகளையும் காண முடியும்

**96] குறட்டை ஒலி - என்ற கதையின் ஆசிரியர் யார்?**

1] ராஜம் கிருஷ்ணா

2] லட்சுமி

3] திரு.வி.க

**4] மு.வரதாசனார்**

**97] பொருளிலக்கணம் -------- வகைப்படும்.**

**1] 2** 2] 3 3] 4 4] 5

**குறிப்பு** :- பொருளிலக்கணம் அகம், புறம் என இருவகைப்படும்.

**98] அகத்திணைகள் எத்தனை வகைப்படும்?**

1] 5 2] 6 **3] 7** 4] 8

**குறிப்பு** :- அன்புடைய தலைவன் தலைவி பற்றிய ஒழுக்கத்தினைக் கூறுவது அகத்திணை எனப்படும். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, கைக்கிளை, பெருந்திணை என அகத்திணைகள் எழு வகைப்படும். அவற்றுள் முதலைந்தும் அன்பின் ஐந்திணை என்று வழங்கப்படும். அகப்பொருளுக்குரிய பொருள்கள் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்பன.

**99] அகவொழுக்கம் நிகழ்தற்குக் காரணமான நிலமும் பொழுதும் ------------ எனப்படும்.**

**1] முதற்பொருள்**

2] உரிப்பொருள்

3] கருப்பொருள்

4] இவற்றில் ஏதுமில்லை

**100] நிலம் எத்தனை வகைப்படும்?**

1] 4 **2] 5** 3] 6 4] 7

**குறிப்பு :- ஐவகை நிலங்கள் :-**

1 . குறிஞ்சி - மலையும் மலைசார்ந்த இடமும்.

2 . முல்லை - காடும் காடுசார்ந்த இடமும்.

3 . மருதம் - வயலும் வயல்சார்ந்த இடமும்.

4 . நெய்தல் - கடலும் கடல்சார்ந்த இடமும்.

5 . பாலை - மணலும் மணல்சார்ந்த இடமும்.

**101] பொழுது எத்தனை வகைப்படும்?**

1] 1 **2] 2** 3] 3 4] 4

**குறிப்பு:-** பொழுது - [1] பெரும்பொழுது , [2] சிறுபொழுது என இருவகைப்படும்.

**102] குறிஞ்சி - உடன் தொடர்புடையது எது?**

**1] மலையும் மலைசார்ந்த இடமும்**

2] காடும் காடுசார்ந்த இடமும்

3] வயலும் வயல்சார்ந்த இடமும்

4] கடலும் கடல்சார்ந்த இடமும்

**103] மருதம் - உடன் தொடர்புடையது எது?**

1] மலையும் மலைசார்ந்த இடமும்

2] காடும் காடுசார்ந்த இடமும்

**3] வயலும் வயல்சார்ந்த இடமும்**

4] கடலும் கடல்சார்ந்த இடமும்

**104] முல்லை - உடன் தொடர்புடையது எது?**

1] மலையும் மலைசார்ந்த இடமும்

**2] காடும் காடுசார்ந்த இடமும்**

3] வயலும் வயல்சார்ந்த இடமும்

4] கடலும் கடல்சார்ந்த இடமும்

**105] நெய்தல் - உடன் தொடர்புடையது எது?**

1] மலையும் மலைசார்ந்த இடமும்

2] காடும் காடுசார்ந்த இடமும்

3] வயலும் வயல்சார்ந்த இடமும்

**4] கடலும் கடல்சார்ந்த இடமும்**

**106] பாலை - உடன் தொடர்புடையது எது?**

1] மலையும் மலைசார்ந்த இடமும்

**2] மணலும் மணல் சார்ந்த இடமும்**

3] வயலும் வயல்சார்ந்த இடமும்

4] கடலும் கடல்சார்ந்த இடமும்

## பத்தாம் வகுப்பு - பொதுத்தமிழ் பாடக்குறிப்புகள் பகுதி - 8

**1] படர்ந்த தெண்டிரைப் பெருக்கெடுத் தெறிநதிப் பரப்பைக்; கடந்து கான்பல கடந்தரு நெறிசெலுங் காலை; கொடுந்த டக்கரித் திரளெனும் குழுவினுள் ஒருவன்; அடைந்து சீரகு மதினடி தொழுதறை குவனால் - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] சிலப்பதிகாரம், இளங்கோவடிகள்

2] மணிமேகலை, சீத்தலைச்சாத்தனார்

3] கம்பராமாயணம், கம்பர்

**4] சீறாப்புராணம், உமறுப்புலவர்**

**2] நிகழுந் தாரையில் காவதத் துள்ளுறை நெடுநீர்; அகழி போன்றவோர் ஓடையுண் டதனினுக் கணித்தாய்; புகலு தற்கரி தடவியுண் டவ்வழிப் பொருந்தி; உகளு மாங்கொரு பாதகக் கொடுவரி உழுவை - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] சிலப்பதிகாரம், இளங்கோவடிகள்

2] மணிமேகலை, சீத்தலைச்சாத்தனார்

3] கம்பராமாயணம், கம்பர்

**4] சீறாப்புராணம், உமறுப்புலவர்**

**3] நீண்ட வால்நிலம் புடைத்திடக் கிடந்துடல் நிமிர்ந்து; கூண்ட கால்மடித் திருவிழி கனல்கள் கொப்பளிப்பப்; பூண்ட வெள்ளெயி றிலங்கிட வாய்புலால் கமழ; வீண்டு முட்செறி வனத்திடை சினத்தொடும் இருக்கும் - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] சிலப்பதிகாரம், இளங்கோவடிகள்

2] மணிமேகலை, சீத்தலைச்சாத்தனார்

3] கம்பராமாயணம், கம்பர்

**4] சீறாப்புராணம், உமறுப்புலவர்**

**4] நிரம்பும் வள்ளுகிர் மடங்கலின் இனங்களில் நிணமுன்; டிரும்ப னைக்கைமும் மதகரிக் கோட்டினை யீழ்த்திட; டுரம்பி எந்துதி ரங்களை மாந்திநின் றுறங்கா; தரும்பெ ருங்கரி பிதிர்ந்திட வுருமினும் அலறும் - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] சிலப்பதிகாரம், இளங்கோவடிகள்

2] மணிமேகலை, சீத்தலைச்சாத்தனார்

3] கம்பராமாயணம், கம்பர்

**4] சீறாப்புராணம், உமறுப்புலவர்**

**5] அதிர்ந்தி டுத்தொனி செவியுற அடவியல் அடைந்த; முதிரிந்த மேதியும் கவையடிக் கேழலும் முழுதும்; பொதிந்த மெய்மயி ரெண்கினங் களுமரைப் போத்தும்; பதிந்த கால்தடு மாறிட வீழ்ந்துடல் பதைக்கும் - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] சிலப்பதிகாரம், இளங்கோவடிகள்

2] மணிமேகலை, சீத்தலைச்சாத்தனார்

3] கம்பராமாயணம், கம்பர்

**4] சீறாப்புராணம், உமறுப்புலவர்**

**6] என்ற வாசகம் செவிபுக எழிலிரு புயமும்; குன்று போலுற வீங்கின முறுவல்கொண் டிடராய்; நின்ற வேங்கையெவ் வுழியென நிகழ்த்தினர் அவனும்; வென்றி வாளர சேயணித் தெனவிளம் பினனே - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] சிலப்பதிகாரம், இளங்கோவடிகள்

2] மணிமேகலை, சீத்தலைச்சாத்தனார்

3] கம்பராமாயணம், கம்பர்

**4] சீறாப்புராணம், உமறுப்புலவர்**

**7] மாதி ரத்துறை கேசரி நிகர்முகம் மதுதம்; பூத ரப்புயம் அசைதரப் புளகிதத் தோடும்; காது செங்கதிர் வேல்வலக் கரத்திடை கவின; வீதி வாய்வரக் கண்டது பெருவரி வேங்கை - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] சிலப்பதிகாரம், இளங்கோவடிகள்

2] மணிமேகலை, சீத்தலைச்சாத்தனார்

3] கம்பராமாயணம், கம்பர்

**4] சீறாப்புராணம், உமறுப்புலவர்**

**8] கண்ட போதினில் வால்குழைத் தரியமெய் கலங்கிக்; கொண்டு மென்மெல நடந்துதன் பெருஞ்சிரங் குனித்துத்; தண்ட ளிர்ப்பதத் தெரிசனைக் கெனச்சலாம் உரைத்துத்; தெண்டன் இட்டது வள்ளுகிர் திண்டிறல் புலியே - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] சிலப்பதிகாரம், இளங்கோவடிகள்

2] மணிமேகலை, சீத்தலைச்சாத்தனார்

3] கம்பராமாயணம், கம்பர்

**4] சீறாப்புராணம், உமறுப்புலவர்**

**9] வந்து தெண்டனிட் டெழுந்துவாய் புதைத்துற வணங்கிப்; புந்தி கூர்தரப் போற்றிய வள்ளுகிர்ப் புலியை; மந்த ராசல முகம்மது நனிமனம் மகிழ்ந்து; சந்த**

**மென்மணிக் கரத்தினால் சிரமுகம் தடவி; - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] சிலப்பதிகாரம், இளங்கோவடிகள்

2] மணிமேகலை, சீத்தலைச்சாத்தனார்

3] கம்பராமாயணம், கம்பர்

**4] சீறாப்புராணம், உமறுப்புலவர்**

**10] இன்று தொட்டிவண் நெறியினில் உயிர்செகுத் திடுவ; தன்று வேறொரு காட்டினிற் புகுகவென் றறைந்த; மன்றல் உன்றிய முகம்மதின் மலரடி வணங்கி; நன்று நன்றெனப் போற்றியே நடந்தது வேங்கை;- இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] சிலப்பதிகாரம், இளங்கோவடிகள்

2] மணிமேகலை, சீத்தலைச்சாத்தனார்

3] கம்பராமாயணம், கம்பர்

**4] சீறாப்புராணம், உமறுப்புலவர்**

**11] படுகொ லைப்புலி மெய்யுறப் பணிந்திவர் பாதத்து; அடிவ ணங்கிய காரண வதிசயம் அதனால்; உடைய வன்திருத் தூதரே உண்மையென் றுன்னித்; தினமு டைத்தநெஞ் சாயினார் அறிவினில் தெளிந்தோர் - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

1] சிலப்பதிகாரம், இளங்கோவடிகள்

2] மணிமேகலை, சீத்தலைச்சாத்தனார்

3] கம்பராமாயணம், கம்பர்

**4] சீறாப்புராணம், உமறுப்புலவர்**

**12] நபிமுகம்மது அவர்களின் திருப்பெயர் ------------?**

1] மரைக்காயர்

2] நாயகம் பிள்ளை

**3] அகமது**

4] இவற்றில் ஏதுமில்லை

**13] பொருந்தாதது எது? சொற்பொருள் :-**

1] தெண்டிரை - தெளிந்த அலைகள்

**2] கான் - மலை**

3] தடக்கரி - பெரிய யானை

4] திரள் - கூட்டம்

**குறிப்பு :- கான் - காடு**

**14] பொருந்தாதது எது? சொற்பொருள் :-**

1] அறைகுவன் - சொல்லுவான்

2] தாரை - வழி

3] அணித்தாய் - அண்மையில்

**4] அடவி - விலங்கு**

**குறிப்பு :- அடவி - காடு**

**15] பொருந்தாதது எது? சொற்பொருள் :-**

**1] உழுவை - சிங்கம்**

2] கூண்ட - சேர்ந்த

3] கனல் - நெருப்பு

4] வெள்ளெயிறு - வெண்ணிறப் பற்கள்

**குறிப்பு :- உழுவை - புலி**

**16] பொருந்தாதது எது? சொற்பொருள் :-**

1] புலால் - இறைச்சி

2] வனம் - காடு

3] வள்ளுகிர் - கூர்மையான நகம்

**4] மடங்கல் - புலி**

**குறிப்பு :- மடங்கல் - சிங்கம்**

**17] பொருந்தாதது எது? சொற்பொருள் :-**

1] நிணம் - கொழுப்பு (இறைச்சி)

2] மதகரி - மதம் பொருந்திய யானை

**3] கோடு - மலை**

4] கிரி - மலை

**குறிப்பு :- கோடு - தந்தம்**

**18] பொருந்தாதது எது? சொற்பொருள் :-**

1] இரும்பனை - பெரிய பனை

2] உரும் - இடி

3] அலறும் - முழங்கும்

**4] தொனி - படகு**

**குறிப்பு :- தொனி - ஓசை**

**19] பொருந்தாதது எது? சொற்பொருள் :-**

1] மேதி - எருமை

2] கவை - பிளந்த

3] கேழல் - பன்றி

**4] எண்கு - புலி**

**குறிப்பு :- எண்கு - கரடி**

**20] பொருந்தாதது எது? சொற்பொருள் :-**

**1] மரை - புலி**

2] எழில் - அழகு

3] புயம் - தோள்

4] முறுவல் - புன்சிரிப்பு

**குறிப்பு :- மரை - மான்**

**21] பொருந்தாதது எது? சொற்பொருள் :-**

**1] இடர் - இன்பம்**

2] வேங்கை - புலி

3] வென்றி - வெற்றி

4] அணித்து - அருகில்

**குறிப்பு :- இடர் - துன்பம்**

**22] பொருந்தாதது எது? சொற்பொருள் :-**

1] விளம்பினான் - சொன்னான்

2] மாதிரம் - மலை

3] கேசரி - சிங்கம்

**4] புளகிதம் - கோபம்**

**குறிப்பு :- புளகிதம் - மகிழ்ச்சி**

**23] பொருந்தாதது எது? சொற்பொருள் :-**

1] காது - கொல்லுதல்

2] கவின் - அழகு

**3] பூதரம் - விலங்கு**

4] வீதிவாய்வர - பாதையில் வர

**குறிப்பு :- பூதரம் - மலை**

**24] பொருந்தாதது எது? சொற்பொருள் :-**

1] பெருஞ்சிரம் - பெரியதலை

2] தெண்டனிட்டது - வணங்கியது

**3] வள்ளுகிர் - விளம்பியது**

4] தெரிசனம் - காட்சி

**குறிப்பு :- வள்ளுகிர் - கூர்மையான நகம்**

**25] பொருந்தாதது எது? சொற்பொருள் :-**

1] சலாம் - வணக்கம்

2] திண்திறல் - உறுதியான வலிமை

**3] புந்தி - அறிவின்மை**

4] மந்தராசலம் - மந்தரமலை

**குறிப்பு :- புந்தி - அறிவு**

**26] பொருந்தாதது எது? சொற்பொருள் :-**

1] சந்தம் - அழகிய

**2] சிரம் - கால்**

3] இவண்நெறியில் - இவ்வழியில்

4] செகுத்திடுவது - உயிர்வதை செய்வது

**குறிப்பு :- சிரம் - தலை**

**27] பொருந்தாதது எது? சொற்பொருள் :-**

1] அறைந்த - சொன்ன

2] அதிசியம் - வியப்பு

**3] உன்னி - விளம்பியது**

4] தெளிந்தார் - தெளிவு பெற்றார்

**குறிப்பு :- உன்னி - நினைத்து**

28] **பொருந்தாதது எது? இலக்கணக்குறிப்பு :-**

1] கொலைப்புலி (கொலையை விரும்பும் புலி) - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகை

2] உயிர்செகுத்து - இரண்டாம் வேற்றுமைத்தொகை

3] புகுக - வியங்கோள் வினைமுற்று

4] **மலரடி - உருவகம்**

**குறிப்பு :- மலரடி - உவமைத்தொகை**

29] **எழுந்து, புதைத்து, வணங்கி - இலக்கணக்குறிப்பு தருக :-**

1] பெயரெச்சம்

2] வினைத்தொகை

3] **வினையெச்சம்**

4] பண்புத்தொகை

30] **பொருந்தாதது எது? இலக்கணக்குறிப்பு :-**

1] நன்று நன்று - அடுக்குத் தொடர்

2] வள்ளுகிர்ப்புலி (கூர்மையான நகத்தை உடைய புலி) - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகை

3] **நனிமனம் - உருவகம்**

4] சிரமுகம் (சிரமும் முகமும்) - உம்மைத்தொகை

**குறிப்பு :- நனிமனம் - உரிச்சொல்தொடர்**

**31] பெருஞ்சிரம், தண்டளி, திண்டிறல் - இலக்கணக்குறிப்பு தருக :-**

1] பெயரெச்சம்

2] வினைத்தொகை

3] வினையெச்சம்

**4] பண்புத்தொகை**

**32] பொருந்தாதது எது? இலக்கணக்குறிப்பு :-**

1] வால்குழைத்து - இரண்டாம் வேற்றுமைத்தொகை

2] செங்கதிர், பெருவரி - பண்புத்தொகை

3] பூதரப்புயம் - உவமைத்தொகை

**4] நின்ற வேங்கை - வினையெச்சம்**

**குறிப்பு :- நின்ற வேங்கை - பெயரெச்சம்**

**33] பொருந்தாதது எது? இலக்கணக்குறிப்பு :-**

**1] செவிபுக - ஆறாம் வேற்றுமைத்தொகை**

2] முதிர்ந்தமேதி, பொதிந்தமெய் - பெயரெச்சம்

3] கவையடிக்கேழல் - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை

4] பெருங்கிரி - பண்புத்தொகை

**குறிப்பு :- செவிபுக - ஏழாம் வேற்றுமைத்தொகை**

**34] புடைத்து, நிமிர்ந்து, கிடந்தது, மடித்து - இலக்கணக்குறிப்பு தருக :-**

1] பண்புத்தொகை

2] பெயரெச்சம்

**3] வினையெச்சம்**

4] வினைத்தொகை

**35] பொருந்தாதது எது? இலக்கணக்குறிப்பு :-**

1] கால் மடித்து - இரண்டாம் வேற்றுமைத்தொகை

2] வெள்ளெயிறு - பண்புத்தொகை

**3] நெடுநீர் - வினைத்தொகை**

4] பொருந்தி - வினையெச்சம்

**குறிப்பு :- நெடுநீர் - பண்புத்தொகை**

**36] பொருந்தாதது எது? இலக்கணக்குறிப்பு :-**

1] வரி உழுவை (வரிகளைக்கொண்ட புலி) - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகை

**2] படர்ந்த தெண்டிரை - வினையெச்சம்**

3] நதிப்பரப்பு - ஆறாம் வேற்றுமைத்தொகை

4] தொழுது அறைகுவன் - வினையெச்சம்

**குறிப்பு :- படர்ந்த தெண்டிரை - பெயரெச்சம்**

**37] தடக்கரி - இலக்கணக்குறிப்பு தருக :-**

1] இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகை

2] ஆறாம் வேற்றுமைத்தொகை

3] பெயரெச்சம்

**4] உரிச்சொற்றொடர்**

**38] பொருந்தாதது எது? பிரித்தறிதல் :**

1] தெண்டிரை = தென்மை + திரை

2] பெருக்கெடுத்து = பெருக்கு + எடுத்து

**3] உள்ளுறை = உள் + ளுறை**

4] நெடுநீர் = நெடுமை + நீர்

**குறிப்பு :- உள்ளுறை = உள் + உறை**

**39] பொருந்தாதது எது? பிரித்தறிதல் :**

1] அவ்வழி = அ + வழி

2] இருவிழி = இரண்டு + விழி

3] வெள்ளெயிறு = வெண்மை + எயிறு

**4] கரிக்கோடு = கரிக் + கோடு**

**குறிப்பு :- கரிக்கோடு = கரி + கோடு**

**40] பொருந்தாதது எது? பிரித்தறிதல் :**

1] பெருங்கிரி = பெருமை + கிரி

**2] எண்கினங்கள் = எண் + கினங்கள்**

3] வீழ்ந்துடல் = வீழ்ந்து + உடல்

4] மாதிரத்துறை = மாதிரத்து + உறை

**குறிப்பு :- எண்கினங்கள் = எண்கு + இனங்கள்**

**41] பொருந்தாதது எது? பிரித்தறிதல் :**

1] செங்கதிர் = செம்மை + கதிர்

2] பெருவரி = பெருமை + வரி

3] பெருஞ்சிரம் = பெருமை + சிரம்

**4] தண்டளிர்ப்பதம் = தண்டளிர் + பதம்**

**குறிப்பு :- தண்டளிர்ப்பதம் = தண்மை + தளிர் + பதம்**

**42] பொருந்தாதது எது? பிரித்தறிதல் :**

1] திண்டிறல் = திண்மை + திறல்

**2] சிரமுகம் - சிர + முகம்**

3] பணிந்திவர் = பணிந்து + இவர்

4] பெருவரி = பெருமை + வரி

**குறிப்பு :- சிரமுகம் - சிரம் + முகம்**

**43] சீறாப்புராணத்தினை இயற்றியவர் ------------**

1] கடிகை முத்துப் புலவர்

2] சீதக்காதி

**3] உமறுப்புலவர்**

4] இவர்களில் யாருமில்லை

**44] -------------- என்பவர் எட்டயபுரம் கடிகை முத்துப்புலவரின் மாணவர்.**

1] பாரதியார்

2] பாரதிதாசன்

3] மீனாட்சி சுந்தரனார்

**4] உமறுப்புலவர்**

**45] ------------ என்ற வள்ளல் சீதக்காதியின் வேண்டுகோளின் வண்ணமே உமறுப்புலவர் சீறாப்புராணம் எழுதத் தொடங்கினார்.**

1] சடையப்ப வள்ளல்

2] அடியார்க்கு நல்லார்

**3] அப்துல்காதிர் மரைக்காயர்**

4] இவர்களில் யாருமில்லை

**46] நூல் முற்றும் முன்னமே சீதக்காதி மறைந்தார். அவருக்குப்பின், ----------- என்ற வள்ளல் உதவியால் சீறாப்புராணம் நிறைவுற்றுது.**

**1] அபுல்காசிம்**

2] கலீல் ரகுமான்

3] அபுதாகீர்

4] இவர்களில் யாருமில்லை

**47] உமறுப்புலவர் -------- பாக்களால் ஆகிய முதுமொழிமாலை என்னும் நூலையும் படைத்தளித்துள்ளார்.**

1] அறுபது

2] எழுபது

**3] எண்பது**

4] தொண்ணூறு

**48] உமறுப்புலவர் அவர்களின் காலம்?**

1] பதினைந்தாம் நூற்றாண்டு

2] பதினாறாம் நூற்றாண்டு

**3] பதினேழாம் நூற்றாண்டு**

4] பதினெட்டாம் நூற்றாண்டு

**49] இறைவனின் திருத்தூதர் ---------- என்பவரின் சீரிய வரலாற்றினை எடுத்தியம்பும் இனிய நூல் சீறாப்புராணம். சீறா - வாழ்க்கை. புராணம் - வரலாறு எனப் பொருள்படும்.**

1] அக்பர்

2] பாபர்

**3] நபிகள் நாயகம்**

4] இவர்களில் யாருமில்லை

**50] சீறாப்புராணம் விலாதத்துக் காண்டம், நுபுவ்வத்துக் காண்டம். ஹிஜ்ரத்துக் காண்டம் என்னும் முப்பெரும் பிரிவுகளைக் கொண்டது. ---------- விருத்தப்பாக்களால் ஆனது. நம் பாடப்பகுதி விலாதத்துக் காண்டத்தில் உள்ளது.**

1] 3055

**2] 5027**

4] 4053

4] 4035

**51] இசுரேல் - எகிப்து நாடுகளுக்கிடையே கடும்போர் நடந்த நேரம். அமெரிக்க இதழ் இபான் ஆசிரியர் இசுரேலுக்குச் சென்றார். விடியற்காலை மணி இரண்டு. கட்டடங்களின்மேல் போர் விமானங்கள் குண்டுமழை பொழிந்தன. தாம் தங்கியிருந்த இல்லத்தில் அந்நிலையிலும் ஓர் இளம்பெண் ஒரு நூலை விரும்பிப் படித்துக் கொண்டிருந்தார். அந்த நூலின் பெயர் சத்திய சோதனை. இந்த நூலின் ஆசிரியர் பெயர்?**

1] நேரு

**2] காந்தி**

3] அண்ணா

4] ராஜாஜி

**52] காந்தியடிகள் சிறுவனாக இருந்தபோது, ---------- பாடல் ஒன்றனைக் கேட்டார். தாகத்திற்கு நீர் தருவதில் ஒன்றுமில்லை, தீமை செய்தவர்க்கும் நன்மையே செய், உண்மைப் பொருண்மை உண்டு என்ற அப்பாடல் இன்னா செய்யாமை (அகிம்சை) என்னும் கருத்தினை அவருள் விதைத்தது.**

1] மலையாள

2] வங்க மொழி

**3] குஜராத்தி**

4] தமிழ்

**53] காந்தியடிகள் பள்ளியில் படித்துக் கொண்டிருந்த போது --------------- என்ற ஒரு நாடக நூலைப் படித்தார். அந்நூலில் சிரவணன் என்ற இளைஞன் பார்வையற்ற தன் தாய் தந்தையரைக் காவடியில் தூக்கிச் செல்லும் ஒரு காட்சிப்படம் இருந்தது. அதனைப் பார்த்தது முதல், தாமும் பெற்றோரிடம் அன்பு செலுத்த விரும்பினார்.**

**1] சிரவண பிதுர்பத்தி**

2] அரிச்சந்திரா

3] கந்தன் கருணை

4] திருவிளையாடல்

**54] அரிச்சந்திரன் நாடகத்தை காந்தி ஒரு முறை பார்த்தார். அதில் உண்மையை மட்டுமே பேசும் அரசன் அரிச்சந்திரனை பல்வேறு முறைகளில் சோதித்தவர் யார்? -------------------.**

1] அடியார்க்கு நல்லார்

2] அகத்தியர்

**3] விசுவாமித்திரர்**

4] கொங்கணர்

**55] ஒருமுறை காந்தியடிகள், --------------- என்பவரின் மலைச்சொற்பொழிவைப் பற்றிய நூலைப் படித்தார். தீயவனை எதிர்க்காதே, அவனிடமுள்ள தீமையை எதிர்த்து நில், பகைவனிடமும் அன்பு பாராட்டு என்னும் கருத்துகள் அவரிடம் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது.**

1] கௌதம புத்தர்

2] அகத்தியர்

**3] இயேசுநாதர்**

4] நபிகள் நாயகம்

**56] காந்தியடிகள் ----------- படித்ததன் மூலம் மனஉறுதியைப் பெற்றார்.**

**1] பகவத் கீதை**

2] பைபிள்

3] குரான்

4] திருக்குறள்

**57] உருசிய அறிஞர் ----------- என்பவர் எழுதிய, உன்னுள் இருக்கும் ஆண்டவனின் அரசு என்னும் நூல் அவருள் (காந்தியடிகள்) தாக்கத்தினை ஏற்படுத்தியது. ---------- என்பவர் தம் நூலில் "இன்னா செய்தார்க்கும்" என்னும் திருக்குறளையே மொழிபெயர்த்து எழுதியிருந்தார். அதனைப் படித்த காந்தியடிகள் திருக்குறள் மீதும், தமிழ் மீதும் பற்றுக் கொண்டார்.**

1] சேக்சுபியர்

**2] தால்சுதாய்**

3] வால்ட் விட்மன்

4] அமீர் குஸ்ரூ

**58] மனிதனின் நோக்கம் உயர்ந்ததாகவும், தூய்மையானதாகவும் இருந்தால் மட்டும் போதாது. அதனை அடையும் வழிமுறைகளும் தூய்மையானதாகப் பிறருக்குத் துன்பம் தராததாக இருக்க வேண்டும் - என்று கூறியவர் யார்?**

1] அண்ணா

2] ராஜாஜி

3] மு.வரதராசனார்

**4] காந்தி**

**59] ஆங்கிலேயரைத் துன்புறுத்தி விடுதலை பெறுவதனை விட, அமைதியான முறையில் அவர்களை எதிர்த்து, மனம் மாறச் செய்து விடுதலை பெறுவதே சிறந்தது - என்று கூறியவர் யார்?**

1] நேதாஜி

2] ராஜாஜி

3] நேரு

**4] காந்தி**

**60] வன்முறையை வன்முறையால் வெல்ல நினைப்பது, தீயைத் தீயால் அணைக்க முற்படுவது போன்றது - என்று கூறியவர் யார்?**

1] நேதாஜி

2] ராஜாஜி

3] நேரு

**4] காந்தி**

**61] நெருப்பை நீரால் தான் அணைக்க முடியும். வன்முறையை அன்பு, அருள் ஆகிய அறவழிகளில் தான் தடுக்க முடியும். அறவழியைப் பின்பற்றிப் பெறுகிற விடுதலையே நிலைக்கும் - என்று கூறியவர் யார்?**

1] நேதாஜி

2] ராஜாஜி

3] நேரு

**4] காந்தி**

**62] வலிய போரில் சாகின்றவர்களின் எண்ணிக்கையை விட, அறவழிப்போரில், இறப்போரின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே இருக்கும் என்றும், மற்ற உலக நாடுகள் இதனை ஏற்காவிடினும் இந்தியா அதனை ஏற்று நடத்தி ஏனைய நாடுகளுக்கு ஒரு வழிகாட்டியாகத் திகழவேண்டும் என்றும் விரும்பியவர்?**

1] நேதாஜி

2] ராஜாஜி

3] நேரு

**4] காந்தி**

**63] கழிப்பறை கழுவுதல் ஒரு கலை என்றார். தம் கழிவுகளை வேறு ஒருவர் அகற்ற விடாமல் தாமே அகற்றினார். எழுதித் தேய்ந்த பென்சிலாக இருந்தாலும் அதனை இழக்க மனம் வராமல் தேடுவார். சிறு காகிதத்தையும் வீணாக்காமல் அதில் கடிதங்களுக்கு மறுமடல் எழுதுவார். பகட்டான வாழ்க்கையைப் பாவம் என்று கருதினார். - இந்த கூற்று யாருடன் தொடர்புடையது?**

1] பெரியார்

2] ராஜாஜி

3] நேரு

**4] காந்தி**

**64] காந்தியடிகள் தமிழ்நாட்டுக்கு வந்தபோது, ஏழை உழவர்கள் வறுமையால் அரையாடை உடுத்தியதைக் கண்டார். அன்றுமுதல் மேலாடை அணிவதனை நிறுத்திக்கொண்டார். இங்கிலாந்தில் நடந்த வட்டமேசை மாநாட்டில் கலந்துகொள்ளச் சென்றபோது, அப்போதைய இங்கிலாந்து முதன்மையமைச்சர் ---------------, அரை நிருவாணப் பக்கிரி என்று ஏளனம் செய்த போதும், காந்தியடிகளின் முகத்தில் புன்னகை தவழ்ந்தது.**

1] வில்லியம் ஹெரால்டு

2] முதலாம் சார்லசு

**3] சர்ச்சில்**

4] இவர்களில் யாருமில்லை

65] மனிதரோடு மனிதராக வாழ்ந்து, மனிதருக்காக வாழ்ந்து 'மகாத்மா' வாக உயர முடியும் என்பதனை மெய்ப்பித்தவர் உலக உத்தமர் ---------------.

1] நேதாஜி

2] ராஜாஜி

3] நேரு

**4] காந்தியடிகள்**

66] மனிதனின், பெருமையை மனிதனுக்கு உணர்த்தி, எளியவர்களிடம் மறைந்திருக்கும் அருமையை உணர்த்தி அவர்களை வரலாற்று நாயகர்களாக மாற்றியவர்?

1] நேதாஜி

2] ராஜாஜி

3] நேரு

**4] காந்தியடிகள்**

67] என்னைப் பொருத்தவரை தேசாபிமானமும், மனிதாபிமானமும் ஒன்று தான். நான் ஒரு தேச பக்தன். அதற்கு அடிப்படைக் காரணம் நான் மனிதனாக இருப்பதும், அதற்கு மேல் மனிதாபிமானியாக இருப்பதும் தான் - என்று கூறியவர்?

1] நேதாஜி

2] ராஜாஜி

3] நேரு

**4] காந்தியடிகள்**

**68] உலகோர் அனைவரும் குறிக்கோளுடைய மனிதராக இருந்தால், உலகமே ஒரு நல்ல சமுதாயமாக உருவாகும் என்று கூறியவர்?**

1] நேதாஜி

2] ராஜாஜி

3] நேரு

**4] காந்தியடிகள்**

**69] ------------------ நாட்டில், இந்தியருக்கு எதிரான கறுப்புச் சட்டங்களைக் காந்தியடிகள் கொளுத்தியதால், சிறையில் அடைக்கபட்டார்.**

**1] தென் ஆப்பிரிக்கா**

2] இங்கிலாந்து

3] இலங்கை

4] கனடா

**70] காந்தியடிகள் சிறையில் செருப்புத் தைத்தார். முதல் இணைச் செருப்பே சிறப்பாக அமைந்தது. அதனை யாருக்காவது அன்பளிப்பாக அளிக்க விரும்பினார். அவர் நினைவிற்கு வந்த முதல் மனிதர் --------------. அவர் காந்தியடிகளைச் சிறையில் அடைத்த ஆளுநர். சிறையிலிருந்து விடுதலை ஆனதும் அவரை சந்தித்து தாம் தைத்த காலணிகளை வழங்கினார். அதற்கு ஈடாக ----------, காந்திக்கு விவிலியம் சார்ந்த இரு நூல்களைப் பரிசாகக் கொடுத்தார்.**

**1] ஸ்மட்ஸ்**

2] ஸ்டாலின்

3] டொனால்ட்

4] கிளைவ் லாயிட்

**71] காந்தியடிகள் சுட்டுக் கொல்லப்பட்ட நாள்?**

**1] 30.1.1948**

2] 13.1.1947

3] 03.1.1948

4] 23.1.1947

**72] காந்தி சிறையில் தாமே தயாரித்த காலணியை, எனக்கு அன்பளிப்பாக அளித்தார். அதனை ஆர்வத்தோடு வாங்கி அணிந்தேன். என் கால்கள் நடுங்கின, நிற்க முடியவில்லை. உடனே அதனை எடுத்துச் சென்று என் பூசை அறையில் வைத்து வணங்கி வருகிறேன் - என்று கூறியவர்?**

**1] ஸ்மட்ஸ்**

2] ஸ்டாலின்

3] டொனால்ட்

4] கிளைவ் லாயிட்

**73] நாட்டில் வளர்ந்து வரும் அனைத்து வறுமை நிலைகளையும் ஆராய்தல் வேண்டும். இளைஞர்களின் உள்ளத்தில் நாட்டுப்பற்று, தெய்வப்பற்று, மொழிப்பற்று வளரும் வகையில் கல்வி அமைய வேண்டும் - என்று கூறியவர்?**

1] நேதாஜி

2] ராஜாஜி

3] நேரு

**4] காந்தியடிகள்**

**74] நமது நாட்டிற்கே உரிய கிராமத் தொழில்களையும் நாட்டுப்புறக் கலைகளையும் வளர்க்க இளைஞர்கள் முன்வருதல் வேண்டும். இந்தியாவின் வாழ்வு என்பது இலட்சக்கணக்கான கிராமங்களின் வாழ்வுதான். அந்தக் கிராமங்களின் வாழ்வு, அந்த நாட்டின் உழவர்கள், இளைஞர்கள் ஆகியோர் கையில் தான் உள்ளது - என்று கூறியவர்?**

1] நேதாஜி

2] ராஜாஜி

3] நேரு

**4] காந்தியடிகள்**

**75] "தன்னாட்டுப் பொருள் இயக்கமான சுதேசி இயக்கத்தை வளர்க்கும் கடமை இளைஞர்களுக்கே உரியது" என்று கூறினார். வளர்ந்து வரும் வெளிநாட்டவர் பொருள் வரவேற்கத் தக்கதன்று என்று கண்டித்தார். - என்று கூறியவர்?**

1] நேதாஜி

2] ராஜாஜி

3] நேரு

**4] காந்தியடிகள்**

**76] ஆங்கிலேயரது மேலாண்மை மூலம் நாம் அடைந்த அடிமைத்தனம் மிக மிக இழிவானது. இதனை நம் நாட்டு இளைஞர்கள் விளங்கிக் கொள்ளும் வகையில் எடுத்துக் கூறுதல் வேண்டும். தீண்டாமைக் கொடுமையை வலுவுடன் எதிர்த்து நிற்குமாறு இளைஞர்களைக் கேட்டுக்கொண்டார். - இந்த கூற்று யாருடன் தொடர்புடையது?**

1] நேதாஜி

2] ராஜாஜி

3] நேரு

**4] காந்தியடிகள்**

**77] கொள்கை இல்லாத அரசியல், உழைப்பில்லாத ஊதியம், நாணயம் இல்லாத இன்பம், மனிதநேயமில்லாத அறிவியல், அறமில்லாத வழிபாடு ஆகியவற்றால் பயனில்லை - என்று கூறியவர்?**

1] நேதாஜி

2] ராஜாஜி

3] நேரு

**4] காந்தியடிகள்**

**78] ஈகத்தின் (தியாகம்) உச்சியில் நின்றவர் -----------. அவருடைய வாழ்வு முழுவதும் ஈகந்தான் மிகவும் நிறைந்திருந்தது. உப்புக்காக, உரிமைக்காக, ஒற்றுமைக்காக, சமத்துவத்திற்காக, வன்முறைக்கும் தீண்டாமைக்கும் எதிராகத் தொடர்ந்து போராடியவர் -----------.**

1] நேதாஜி

2] ராஜாஜி

3] நேரு

**4] காந்தியடிகள்**

**79] வீட்டுக்குள் முடங்கிக் கிடந்த பெண்களையும், சமுக நீதிக்கான போராளிகளாக ஆக்கியவர் அவர். இறுதியில் தம்முயிரையே நாட்டுக்காக ஈந்து அமர வாழ்வு பெற்றுவிட்டார். உலக உத்தமர் இவர். உள்ளத்தால் பொய்யாது ஒழுகி உலகத்தார் உள்ளத்தில் என்றும் நிலைத்து நிற்கின்றார். - இந்த கூற்று யாருடன் தொடர்புடையது?**

1] நேதாஜி

2] ராஜாஜி

3] நேரு

**4] காந்தியடிகள்**

**80] பகைவனிடமும் அன்பு காட்டு - எனக் கூறிய நூல்?**

1] பகவத்கீதை

2] குரான்

3] நன்னூல்

**4] பைபிள்**

**81] அறநெறியாய்ப் போற்றப்பட வேண்டியவை?**

1] ஆடம்பரம், வீண்செலவு

**2] எளிமை, சிக்கனம்**

3] அன்பு, அருள்

4] இவற்றில் ஏதுமில்லை

**82] ஒருமை பன்மைப் பிழைகளை நீக்கி எழுதுக?**

**1] ஓர் இளம் பெண் நூலொன்றை விரும்பிப் படித்துக் கொண்டிருந்தாள்**

2] ஓர் இளம் பெண் நூலொன்றை விரும்பிப் படித்துக் கொண்டிருந்தது

3] ஓர் இளம் பெண் நூலொன்றை விரும்பிப் படித்துக் கொண்டிருந்தார்கள்

4] ஓர் இளம் பெண் நூலொன்றை விரும்பிப் படித்துக் கொண்டிருந்தனர்

**83] ஒருமை பன்மைப் பிழைகளை நீக்குக**

1] மனிதனின் நோக்கம் உயர்வானதாகவும் தூய்மை யானதாகவும் இருந்தால் மட்டும் போதா

2] மனிதனின் நோக்கம் உயர்வானதாகவும் தூய்மை யானதாகவும் இருந்தால் மட்டும் போதுமா?

**3] மனிதனின் நோக்கம் உயர்ந்ததாகவும் தூய்மையானதாகவும் இருந்தால் மட்டும் போதாது**

4] மனிதனின் நோக்கம் உயர்வானதாகவும் தூய்மை யானதாகவும் இருந்தால் மட்டும் போதுமே

**84] பகவத் கீதை - என்பது கீழ்க்கண்ட எதனுடன் தொடர்புடையது ?**

1] சைவ சமய நூல்

**2] இந்து சமய நூல்**

3] கிறித்துவ சமய நூல்

4] புத்த சமய நூல்

**85] திருக்குறள் - என்பது கீழ்க்கண்ட எதனுடன் தொடர்புடையது ?**

1] திருமூலர்

2] கம்பர்

**3] திருவள்ளுவர்**

4] மாணிக்கவாசகர்

**86] பைபிள் - என்பது கீழ்க்கண்ட எதனுடன் தொடர்புடையது ?**

1] இந்து சமய நூல்

2] வைணவ சமய நூல்

3] புத்த சமய நூல்

**4] கிறித்துவச் சமய நூல்**

**87] சோவியத்து அறிஞர் தால்சுதாய் வழிகாட்டுதலால், திருக்குறள் மூலத்தை நேரடியாகப் படிக்க விரும்பியே தமிழ் பயிலத் தொடங்கினேன் - என்று கூறியவர் யார்?**

1] நேதாஜி

2] ராஜாஜி

**3] காந்திஜி**

4] நேருஜி

**88] "அடித்தளம்" - என்ற துணைப்பாட கதை நூலின் ஆசிரியர் யார்?**

**1] பேர் லாகர்க்விஸ்ட் சிறுகதைகள் - தமிழில் (ஜி.குப்புசாமி)**

2] பேர் லாகர்க்விஸ்ட் சிறுகதைகள் - தமிழில் (சுஜாதா)

3] பேர் லாகர்க்விஸ்ட் சிறுகதைகள் - தமிழில் (கல்கி)

4] பேர் லாகர்க்விஸ்ட் சிறுகதைகள் - தமிழில் (ராஜம் கிருஷ்ணன்)

**89] புறத்திணைகள் வெட்சி முதலாகப் ---------- வகைப்படும்**

**1] பன்னிரண்டு**

2] பதின்மூன்று

3] பதினான்கு

4] பதினைந்து

**90] பகைநாட்டின்மீது போர் தொடங்குமுன், அந்நாட்டிலுள்ள ஆநிரைகளுக்குத் தீங்கு நேரக்கூடாது எனக் கருதும் மன்னன், தன் வீரர்களை அனுப்பி அவற்றைக் கவர்ந்து வரச்செய்வது ----------. அவ்வீரர்கள் ---------------- பூவைச் சூடிச் செல்வார்கள்.**

**1] வெட்சித்திணை**

2] கரந்தைத் திணை

3] வஞ்சித்திணை

4] காஞ்சித்திணை

**91] வெட்சி வீரர்களால் கவர்ந்து செல்லப்பட்ட தம் ஆநிரைகளைக் ---------- பூவைச் சூடிச்சென்று மீட்பது, -------------.**

1] வெட்சித்திணை

**2] கரந்தைத் திணை**

3] வஞ்சித்திணை

4] காஞ்சித்திணை

**92] மண்ணாசை காரணமாகப் பகைவர் நாட்டைக் கைப்பற்றக் கருதி -------பூவை சூடிப் போருக்குச் செல்வது ----------?**

1] வெட்சித்திணை

2] கரந்தைத் திணை

**3] வஞ்சித்திணை**

4] காஞ்சித்திணை

**93] தன் நாட்டைக் கைப்பற்ற வந்த மாற்றரசனோடு --------- பூவைச் சூடி எதிர்த்துப் போரிடல் -------------?**

1] வெட்சித்திணை

2] கரந்தைத் திணை

3] வஞ்சித்திணை

**4] காஞ்சித்திணை**

**94] பகையரசனால் முற்றுகையிடப்பட்ட தம் மதிலைக் காத்தல் வேண்டி, உள்ளிருந்தே வெளியே இருக்கும் பகையரசனோடு --------- பூவைச் சூடிப் போரிட்டு, அம்மதிலைக் காப்பது -------------**

**1] நொச்சித்திணை**

2] உழிஞைத்திணை

3] தும்பைத் திணை

4] வாகைத்திணை

**95] -------------- பூவைச் சூடிய தன் வீரர்களுடன் மாற்றரசன் கோட்டைக்குள் புகுந்து மதிலைச் சுற்றி வளைத்தல் ---------------.**

1] நொச்சித்திணை

**2] உழிஞைத்திணை**

3] தும்பைத் திணை

4] வாகைத்திணை

**96] பகைவேந்தர் இருவரும் வெற்றி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, தம் வீரர்களுடன் போரிடுவது -------------. இவ்வீரர்கள் ------------- பூவைச்சூடிப் போரிடுவர்**

1] நொச்சித்திணை

2] உழிஞைத்திணை

**3] தும்பைத் திணை**

4] வாகைத்திணை

**97] வெற்றிபெற்ற மன்னன் ------------- பூவைச் சூடி மகிழ்வது, --------------?**

1] நொச்சித்திணை

2] உழிஞைத்திணை

3] தும்பைத் திணை

**4] வாகைத்திணை**

**98] பாடுவதற்குத் தகுதியுடைய ஓர் ஆண்மகனின் கல்வி, வீரம், செல்வம், புகழ், கருணை முதலியவற்றைப் போற்றிப் பாடுவது, ------------?**

**1] பாடாண்திணை**

2] பொதுவியல் திணை

3] கைக்கிளைத் திணை

4] பெருந்திணை

**குறிப்பு :- (பாடு+ ஆண் + திணை = பாடாண்திணை)**

**99] வெட்சிமுதல் பாடாண்வரை உள்ள புறத்திணைகளின் பொதுவானவற்றையும், அவற்றுள் கூறப்படாதனவற்றையும் கூறுவது -----------?**

1] பாடாண்திணை

**2] பொதுவியல் திணை**

3] கைக்கிளைத் திணை

4] பெருந்திணை

**100] ---------------- என்பது ஒருதலைக் காமம். இஃது ஆண்பால் கூற்று, பெண்பால் கூற்று என இருவகைப்படும்.**

1] பாடாண்திணை

2] பொதுவியல் திணை

**3] கைக்கிளைத் திணை**

4] பெருந்திணை

**101] ----------- என்பது பொருந்தாக் காமம், இதுவும் ஆண்பாற் கூற்று, பெண்பாற் கூற்று என இருவகைப்படும்.**

1] பாடாண்திணை

2] பொதுவியல் திணை

3] கைக்கிளைத் திணை

**4] பெருந்திணை**

**102] பொருள்களை எண்ணும் நிலை, விளி, வினையெச்சம், மேற்கோள் குறிகளுக்கு முன், ஆதலால்,ஆகவே முதலிய சொற்களின் பின், முகவரியில் இறுதி வரி தவிர்த்த பிற இடங்களில் ------------ இடுதல் வேண்டும்.**

**1] காற்புள்ளி (,)**

2] அரைப்புள்ளி (;)

3] முக்காற்புள்ளி (:)

4] முற்றுப்புள்ளி(.)

**குறிப்பு :- (எ.கா) (1) நிலம், நீர், காற்று, தீ, வான் என்பன ஐம்பூதங்கள்.**

**(2) மகனே, நான் சொல்வதைக் கேள்**

**103] ஒரே எழுவாயில் பல தொடர்கள் தொடர்ந்து வருகின்ற இடங்களிலும், ஒரே எழுவாய்க்குரிய உடன்பாட்டுக் கருத்தும் எதிர்மறைக் கருத்தும் தொடர்ந்து வருகின்ற இடங்களிலும் ---------------- இடுதல் வேண்டும்.**

1] காற்புள்ளி (,)

**2] அரைப்புள்ளி (;)**

3] முக்காற்புள்ளி (:)

4] முற்றுப்புள்ளி(.)

**குறிப்பு :- (எ.கா) (1) சிலப்பதிகாரம், செந்தமிழ்க் காப்பியம்; முத்தமிழ்க் காப்பியம்; மூவேந்தரையும் பாடும் காப்பியம்.**

**(2) இளமுருகு என்பானிடம் நிறைய அறிவுண்டு; பொறுமை இல்லை.**

**104] ஒருவர் கூற்றை விளக்குதல், சிறு தலைப்பு, நூற்பகுதி எண் முதலிய விவரங்களை பட்டியல் முறையில் ஒன்றன் பின் ஒன்றாகத் தரும்போது ------------ இடுதல் வேண்டும்.**

1] காற்புள்ளி (,)

2] அரைப்புள்ளி (;)

**3] முக்காற்புள்ளி (:)**

4] முற்றுப்புள்ளி(.)

**குறிப்பு :- (எ.கா) (1) முப்பால் என்பன பின்வருமாறு : அறம், பொருள், இன்பம்.**

**(2) மத்தேயு, 8:6**

**(3) பெயர் : மணிமேகலை**

**105] சொற்றொடர் இறுதி, முகவரி இறுதி, நாள் இறுதி, சொற்குறுக்கம், பெயர் தலைப்பெழுத்து முதலிய இடங்களில் --------- இட வேண்டும்.**

1] காற்புள்ளி (,)

2] அரைப்புள்ளி (;)

3] முக்காற்புள்ளி (:)

**4] முற்றுப்புள்ளி(.)**

**குறிப்பு :- (எ.கா) (1) உருவு கண்டு எள்ளாமை வேண்டும்.**

**106] ஒருவினாத்தொடர் முற்றுத்தொடராகவும் நேர்கூற்றுத்தொடராகவும் இருப்பின், இறுதியில் -------------- இடுதல் வேண்டும்**

**1] வினாக்குறி(?)**

2] உணர்ச்சிக் குறி(!)

3] ஒற்றை மேற்கோள்குறி (')

4] இரட்டை மேற்கோள் குறி (")

**குறிப்பு :- (எ.கா) (1) அங்கே படிப்பவர் யார்?**

**(2) நீ வருவாயா?**

**107] வியப்பு, அவலம், வாழ்த்து, வரவேற்றல், வைதல் ஆகிய உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் தொடர்களின் பின் ------------ இடுதல் வேண்டும்.**

1] வினாக்குறி(?)

**2] உணர்ச்சிக் குறி(!)**

3] ஒற்றை மேற்கோள்குறி (')

4] இரட்டை மேற்கோள் குறி (")

**குறிப்பு :- (எ.கா) (1) என்னே, இதன் அருமை!**

**(2) வாழ்க வாழ்க!**

**(3) பாம்பு பாம்பு !**

**(4) வருக வருக!**

**[ !!, !!! இவ்வாறு ஒன்றுக்கு மேற்பட்ட குறிகளை இடுதல் கூடாது ]**

**108] இக்குறி, தற்சுட்டின் கண்ணும் ( ஓர் எழுத்தேனும் சொல்லேனும் சொற்றொடரேனும் தன்னையே குறித்தல் ), பிறர் கூற்றாக வரும் இடத்தும், கட்டுரைப் பெயரும், நூற்பெயர் வருமிடத்தும் --------------- வரும்**

1] வினாக்குறி(?)

2] உணர்ச்சிக் குறி(!)

**3] ஒற்றை மேற்கோள்குறி (')**

4] இரட்டை மேற்கோள் குறி (")

**குறிப்பு :- (எ.கா) (1) 'ஏ' என்று சொன்னான்**

**(2) 'செய்யும்' என்பது பெயரெச்ச வாய்ப்பாடுகளுல் ஒன்று**

**109] நேர்க் கூற்றுத் தொடர்களிலும் மேற்கோள் தொடர்களிலும் ---------------- இடப்படும்.**

1] வினாக்குறி(?)

2] உணர்ச்சிக் குறி(!)

3] ஒற்றை மேற்கோள்குறி (')

**4] இரட்டை மேற்கோள் குறி (“)**

**குறிப்பு :- (எ.கா) (1) இராமன், “நாளை வருகிறேன்” என்றான்**

**(2) “ஒழுக்கமுடைமை குடிமை” என்றார் திருவள்ளுவர்**

**110] பண்டைக் காலத்தில் புறா, கிளி, நாய் முதலியவற்றின் மூலமாகக் கடிதப் போக்குவரத்து நடைபெற்றது. இதனைத் 'தூது' என்பர். பாடல்கள் மூலமாகக் கடிதம் எழுதியதும் உண்டு. இதனை ------------ என்பர்.**

1] ஓலைத்தூக்கு

2] பாசுரம்

**3] சீட்டுக்கவி**

4] இவற்றில் ஏதுமில்லை

**111] அன்னைக்கு, தம்பிக்கு, தங்கைக்கு - என கடிதங்கள் எழுதியவர் யார்?**

1] அண்ணா

2] காந்தி

3] நேரு

**4] மு. வரதராசனார்**

**112] சில காலம் எட்டையபுரம் அரசவைக் கவிஞராக விளங்கினார். பின்னர், மதுரைச் சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணிபுரிந்தார். சென்னையில் இதழாசிரியராகவும் பணிபுரிந்தார். - இவர் யார்?**

**1] பாரதியார்**

2] பாரதிதாசன்

3] வாணிதாசன்

4] இராமலிங்கனார்

**113] "ஆயிரம் உண்டிங்கு சாதி எனில் அன்னியர் வந்து புகலென்ன நீதி" என வீர முழக்கமிட்டவர் யார்?**

**1] பாரதியார்**

2] பாரதிதாசன்

3] வாணிதாசன்

4] இராமலிங்கனார்

**114] "பாருக்குள்ளே நல்ல நாடு" "நாமிருக்கும் நாடு நமது என்பதறிந்தோம்" - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

**1] பாரதியார்**

2] பாரதிதாசன்

3] வாணிதாசன்

4] இராமலிங்கனார்

**115] 'தேசியக் கவிஞர்' என அழைக்கப்படுபவர் யார்?**

**1] பாரதியார்**

2] பாரதிதாசன்

3] வாணிதாசன்

4] இராமலிங்கனார்

**116] 'எல்லாரும் ஓர் குலம், எல்லாரும் ஓர் நிறை, எல்லாரும் இந்நாட்டு மன்னர்' எனத் தேசிய ஒருமைப்பாட்டுணர்வை ஊட்டியவர்?**

**1] பாரதியார்**

2] பாரதிதாசன்

3] வாணிதாசன்

4] இராமலிங்கனார்

**117] "முப்பது கோடி முகமுடை யாள்உயிர் மொய்ம்புற வொன்றுடை யாள்-இவள் செப்பு மொழிபதி னெட்டுடை யாள், எனிற் சிந்தனை ஒன்றுடையாள்" - என்ற பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

**1] பாரதியார்**

2] பாரதிதாசன்

3] வாணிதாசன்

4] இராமலிங்கனார்

**118] விடுதலை அடைதற்கு முன்பாகவே, எதிர்காலத்தில் நிகழவிருக்கும் நிகழ்வுகளைத் தாம் வாழும் காலத்திலேயே பாடி மகிழ்ந்த முன்னறி புலவர் -------------------?**

**1] பாரதியார்**

2] பாரதிதாசன்

3] வாணிதாசன்

4] இராமலிங்கனார்

**119] "ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே, ஆனந்த சுதந்தரம் அடைந்துவிட்டோமென்று " - என்ற பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

**1] பாரதியார்**

2] பாரதிதாசன்

3] வாணிதாசன்

4] இராமலிங்கனார்

**120] "வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிகையால் மையத்து நாடுகளில் பயிர் செய்குவோம்" - என்ற பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

**1] பாரதியார்**

2] பாரதிதாசன்

3] வாணிதாசன்

4] இராமலிங்கனார்

**121] "காசி நகர்ப்புலவர் பேசும் உரைதான் காஞ்சியில் கேட்பதற்கோர் கருவி செய்வோம்" - என்ற பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

**1] பாரதியார்**

2] பாரதிதாசன்

3] வாணிதாசன்

4] இராமலிங்கனார்

**122] 'குலத் தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்' எனக் குழந்தை மனத்தில் ஆழப் பதித்தவர் ----------?**

**1] பாரதியார்**

2] பாரதிதாசன்

3] வாணிதாசன்

4] இராமலிங்கனார்

**123] 'மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்' என்பதன் மூலம் பெண்கள் நலன் பேண விரும்பியவர் ?**

**1] பாரதியார்**

2] பாரதிதாசன்

3] வாணிதாசன்

4] இராமலிங்கனார்

**124] "தனியொருவனுக் குணவிலை யெனில் சகத்தினை அழித்திடுவோம்" - என்ற பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

**1] பாரதியார்**

2] பாரதிதாசன்

3] வாணிதாசன்

4] இராமலிங்கனார்

**125] "வாழிய செந்தமிழ்; வாழ்கநற் றமிழர்" - என்ற பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

**1] பாரதியார்**

2] பாரதிதாசன்

3] வாணிதாசன்

4] இராமலிங்கனார்

**126] "செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே" - என்ற பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

**1] பாரதியார்**

2] பாரதிதாசன்

3] வாணிதாசன்

4] இராமலிங்கனார்

**127] 'பாரதநாடு பார்க்கெலாம் திலகம்' எனப் பாடிய பைந்தமிழ் பாவலன் ---------------?**

**1] பாரதியார்**

2] பாரதிதாசன்

3] வாணிதாசன்

4] இராமலிங்கனார்

**128] பாண்டி நாட்டின் சிறந்த நதியாகிய வைகையைப் புலவர் நாவிற் பொருந்திய பூங்கொடி என்றும் பொய்யாக் குலக்கொடி என்றும் ------------ புகழ்ந்துரைத்துள்ளார்.**

**1] இளங்கோவடிகள்**

2] சீத்தலைச்சாத்தனார்

3] கம்பர்

4] ஔவையார்

**129] மகாத்மா காந்தியின் நினைவாக, காந்தி என்னும் பெயரில் திரைப்படம் எடுக்கப்பட்டபோது, காந்தியாக நடிக்க ---------------- என்னும் நடிகர் தேர்வு செய்யப்பட்டார்.**

1] சான் மைக்கேல்

2] வின்சென்ட்

**3] பென் கிங்ஸ்லி**

4] லால் பென்னட்

130] A friend in need is a friend indeed - **இணையான தமிழ்ப் பழமொழிகளை அறிக.**

**1] உயிர் கொடுப்பான் தோழன்**

2] தன் கையே தனக்கு உதவி

3] முயற்சி திருவினையாக்கும்

4] வாழு, வாழவிடு

131] Self help is the best help - **இணையான தமிழ்ப் பழமொழிகளை அறிக.**

1] உயிர் கொடுப்பான் தோழன்

**2] தன் கையே தனக்கு உதவி**

3] முயற்சி திருவினையாக்கும்

4] வாழு, வாழவிடு

132] Efforts never fail - **இணையான தமிழ்ப் பழமொழிகளை அறிக.**

1] உயிர் கொடுப்பான் தோழன்

2] தன் கையே தனக்கு உதவி

**3] முயற்சி திருவினையாக்கும்**

4] வாழு, வாழவிடு

133] Live and let live - **இணையான தமிழ்ப் பழமொழிகளை அறிக.**

1] உயிர் கொடுப்பான் தோழன்

2] தன் கையே தனக்கு உதவி

3] முயற்சி திருவினையாக்கும்

**4] வாழு, வாழவிடு**

134] Think everybody alike - **இணையான தமிழ்ப் பழமொழிகளை அறிக.**

**1] உன்னைப்போல் பிறரையும் நேசி**

2] தன் கையே தனக்கு உதவி

3] முயற்சி திருவினையாக்கும்

4] வாழு, வாழவிடு

## பத்தாம் வகுப்பு - பொதுத்தமிழ் பாடக்குறிப்புகள் பகுதி - 9

**1] ஆற்றுதல் என்பதுஒன்று அலந்தவர்க்கு உதவுதல்; போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை; பண்பெனப் படுவது பாடுஅறிந்து ஒழுகுதல்; அன்பெனப் படுவது தன்கிளை செறாஅமை - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

1] புறநானூறு, கண்ணகனார்

2] மணிமேகலை, சீத்தலைச்சாத்தனார்

3] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

**4] கலித்தொகை, நல்லந்துவனார்**

**2] அறிவெனப் படுவது பேதையார் சொல்நோன்றல்; செறிவெனப் படுவது கூறியது மறாஅமை - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

1] புறநானூறு, கண்ணகனார்

2] மணிமேகலை, சீத்தலைச்சாத்தனார்

3] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

**4] கலித்தொகை, நல்லந்துவனார்**

**3] நிறையெனப் படுவது மறைபிறர் அறியாமை; முறையெனப் படுவது கண்ணோடாது உயிர்வௌவல்; பொறையெனப் படுவது போற்றாரைப் பொறுத்தல் - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

1] புறநானூறு, கண்ணகனார்

2] மணிமேகலை, சீத்தலைச்சாத்தனார்

3] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

**4] கலித்தொகை, நல்லந்துவனார்**

**4] இல்வாழ்வென்பது -------------?**

**1] வருந்தி வந்தோர்க்கு உதவுதல்**

2] அன்புடையோரைப் பிரியாது வாழ்தல்

3] சான்றோர் வழி அறிந்து ஒழுகுதல்

4] சுற்றம் தழுவி வாழ்தல்

**5] பாதுகாப்பதென்பது -------------?**

1] வருந்தி வந்தோர்க்கு உதவுதல்

**2] அன்புடையோரைப் பிரியாது வாழ்தல்**

3] சான்றோர் வழி அறிந்து ஒழுகுதல்

4] சுற்றம் தழுவி வாழ்தல்

**6] பண்பெனப்படுவது ----------------?**

1] வருந்தி வந்தோர்க்கு உதவுதல்

2] அன்புடையோரைப் பிரியாது வாழ்தல்

**3] சான்றோர் வழி அறிந்து ஒழுகுதல்**

4] சுற்றம் தழுவி வாழ்தல்

**7] அன்பெனப்படுவது -------------?**

1] வருந்தி வந்தோர்க்கு உதவுதல்

2] அன்புடையோரைப் பிரியாது வாழ்தல்

3] சான்றோர் வழி அறிந்து ஒழுகுதல்

**4] சுற்றம் தழுவி வாழ்தல்**

**8] அறிவெனப்படுவது ---------------?**

**1] அறிவிலார் சொல் பொறுத்தல்**

2] கொடுத்த வாக்கைக் காத்து நிற்றல்

3] பிறர் அறியாது மறைபொருள் காத்தல்

4] ஒருபால் கோடாது ஒறுத்தல்

**9] நெருக்கம் எனப்படுவது -------------?**

1] அறிவிலார் சொல் பொறுத்தல்

**2] கொடுத்த வாக்கைக் காத்து நிற்றல்**

3] பிறர் அறியாது மறைபொருள் காத்தல்

4] ஒருபால் கோடாது ஒறுத்தல்

**10] நிறைவு எனப்படுவது -------------------?**

1] அறிவிலார் சொல் பொறுத்தல்

2] கொடுத்த வாக்கைக் காத்து நிற்றல்

**3] பிறர் அறியாது மறைபொருள் காத்தல்**

4] ஒருபால் கோடாது ஒறுத்தல்

**11] நீதிமுறைமை எனப்படுவது -----------------?**

1] அறிவிலார் சொல் பொறுத்தல்

2] கொடுத்த வாக்கைக் காத்து நிற்றல்

3] பிறர் அறியாது மறைபொருள் காத்தல்

**4] ஒருபால் கோடாது ஒறுத்தல்**

**12] பொறுமை எனப்படுவது --------------?**

1] அறிவிலார் சொல் பொறுத்தல்

**2] இகழ்வாரையும் பொறுத்துக் கொள்ளல்**

3] பிறர் அறியாது மறைபொருள் காத்தல்

4] ஒருபால் கோடாது ஒறுத்தல்

**13] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] கேழல் - பன்றி

**2] நவ்வி - புலி**

3] கிளை - சுற்றம்

4] நோன்றல் - பொறுத்தல்

**குறிப்பு :- நவ்வி - மான்**

**14] ஒழுகுதல், நோன்றல், பொறுத்தல் - இலக்கணக்குறிப்பு தருக.**

1] வினைத்தொகை

2] பண்புப்பெயர்

3] பெயரெச்சம்

**4] தொழிற்பெயர்**

**15] நல்லந்துவனார் சங்க காலத்தவர். இவரைப் பற்றிய குறிப்புகள் ஏதும் கிடைக்கப்பெறவில்லை. இவர், நெய்தல் கலியில் ------------- பாடல்களைப் பாடியுள்ளார். கலித்தொகையைத் தொகுத்தவரும் இவரே என்பர்.**

1] 13

2] 23

**3] 33**

4] 43

**16] எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் சங்க இலக்கியங்கள். எட்டுத்தொகையுள் ஒன்றான கலித்தொகை, கலிப்பாக்களால் அமைந்தது. இது நாடகப் பாங்கில் அமைந்துள்ளது. இசையோடு பாடுவதற்கேற்றது. கலித்தொகையில் கடவுள் வாழ்த்தையும் சேர்த்து ------------- பாடல்கள் உள்ளன.**

1] 123

2] 143

**3] 150**

4] 180

**17] கலித்தொகை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐம்பெரும்பிரிவுகளை உடையது. கலிப்பா துள்ளல் ஓசையைக் கொண்டது. நமக்குப் பாடமாக அமைந்துள்ள பகுதி, நெய்தற்கலியாகும். இதனை இயற்றியவர் -------------------.**

1] கண்ணகனார்

2] ஔவையார்

**3] நல்லந்துவனார்**

4] மாணிக்கவாசகர்

**18] "கற்றறிந்தார் ஏத்தும் கலி" எனச் சிறப்பித்துக் கூறப்படும் நூல்?**

1] நற்றிணை

**2] கலித்தொகை**

3] பரிபாடல்

4] புறநானூறு

**19] நெய்தல் கலியைப் பாடியவர்?**

1] ஓரம்போகியார்

2] கபிலர்

3] பேயனார்

**4] நல்லந்துவனார்**

**20] கலித்தொகை ------------ நூல்களில் ஒன்று.**

1] பத்துப்பாட்டு

**2] எட்டுத்தொகை**

3] பதினெண்கீழ்க்கணக்கு

4] ஐம்பெருங்காப்பியம்

**21] 'போற்றாரைப் பொறுத்தல்' என்பது ----------?**

1] குறை

**2] பொறை**

3] முறை

4] நிறை

22] **பொருந்தாதது எது?**

1] பண்பு - பாடுஅறிந்து ஒழுகுதல்

2] அன்பு - தன்கிளை செறாஅமை

3] அறிவு - பேதையார் சொல்நோன்றல்

**4] செறிவு - கண்ணோடாது உயிர்வெளவல்**

**குறிப்பு :- செறிவு - கூறியது மறாஅமை**

**23] பதிதொறு புயல்பொழி தருமணி பணைதரு பருமணி பகராநெற் கதிர்தொரு வருபுனல் கரைபொரு திழிதரு காவிரி வளநாடா - இந்த பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

**1] நந்திக்கலம்பகம், ஆசிரியர் பெயர் தெரியவில்லை**

2] புறநானூறு, கண்ணகனார்

3] மணிமேகலை, சீத்தலைச்சாத்தனார்

4] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

**24] நிதிதரு கவிகையும் நிலமகள் உரிமையும் இவையினை யுடைநந்தி மதியிலி அரசர்நின் மலரடி பணிகிலர் வானகம் ஆள்வாரே - இந்த பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர்?**

**1] நந்திக்கலம்பகம், ஆசிரியர் பெயர் தெரியவில்லை**

2] புறநானூறு, கண்ணகனார்

3] மணிமேகலை, சீத்தலைச்சாத்தனார்

4] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

**25] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] புயல் - மேகம்

**2] பணை - இலை**

3] பகரா - கொடுத்து

4] பொருது - மோதி

**குறிப்பு :- பணை - மூங்கில்**

**26] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] நிதி - செல்வம்

**2] புனல் - காற்று**

3] கவிகை - குடை

4] வானகம் - தேவருலகம்

**குறிப்பு :- புனல் - நீர்**

**27] பொழிதருமணி, பணைதருபருமணி, வருபுனல், நிதிதருகவிகை - இலக்கணக்குறிப்பு தருக.**

**1] வினைத்தொகை**

2] இரண்டாம் வேற்றுமைத்தொகை

3] ஆறாம் வேற்றுமைத்தொகை

4] தொழிற்பெயர்

**28] இவை இவை - இலக்கணக்குறிப்பு தருக.**

1] வினைத்தொகை

**2] அடுக்குத்தொடர்**

3] இரட்டைக்கிளவி

4] தொழிற்பெயர்

**29] பதிதொறு புயல்பொழி தருமணி பணைதரு பருமணி பகராநெற் கதிர்தொரு வருபுனல் கரைபொரு திழிதரு காவிரி வளநாடா - இப்பாடல் எந்த திணையைச் சார்ந்தது?**

1] நொச்சித் திணை

2] தும்பைத் திணை

3] வாகைத் திணை

**4] பாடாண் திணை**

**30] நிதிதரு கவிகையும் நிலமகள் உரிமையும் இவையினை யுடைநந்தி மதியிலி அரசர்நின் மலரடி பணிகிலர் வானகம் ஆள்வாரே - இப்பாடல் எந்த திணையைச் சார்ந்தது?**

1] நொச்சித் திணை

2] தும்பைத் திணை

3] வாகைத் திணை

**4] பாடாண் திணை**

**31] நந்திவர்மனின் பெருமையைப் போற்றும் நூலாக, இது திகழ்கிறது. பல்லவ மன்னன் ---------------- நந்திவர்மனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பெற்ற கலம்பகம் ஆதலின், நந்திகலம்பகம் எனப் பெயர் பெற்றது.**

1] முதலாம்

2] இரண்டாம்

**3] மூன்றாம்**

4] நான்காம்

**32] நந்திகலம்பகம் - நூலின் காலம்?**

1] கி.பி. ஆறாம் நூற்றாண்டு

2] கி.பி. ஏழாம் நூற்றாண்டு

3] கி.பி. எட்டாம் நூற்றாண்டு

**4] கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு**

**33] கலம்பக நூல்களில் --------------- நூலே, முதல் நூல் என்பர்.**

**1] நந்திக் கலம்பகம்**

2] காசிக் கலம்பகம்

3] திருவரங்கக் கலம்பகம்

4] மதுரைக் கலம்பகம்

**34] கலம்பகம் என்பது ---------- வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று.**

1] 66

2] 76

3] 86

**4] 96**

**35] பலவகைப் பொருள்களைப் பற்றிப் பலவகைப் பாடல்களைக் கலந்து இயற்றப்பெறும் நூல் ------------- எனப்படும்.**

**1] கலம்பகம்**

2] தூது

3] குறவஞ்சி

4] பள்ளு

**36] கலம் + பகம் = கலம்பகம். கலம் - ----------. பகம் - ---------. பதினெட்டு உறுப்புகளைக் கொண்டதால் (புயவகுப்பு, அம்மானை, கார், ஊசல், இரங்கல், மறம், தழை, தவம், சித்து, பாண், கைக்கிளை, தூது, வண்டு, குறம், காலம், மாதங்கி, களி, சம்பிரதம்) கலம்பகம் என்னும் பெயர் வந்தது எனவும் கூறுவர்.**

**1] பன்னிரண்டு, ஆறு**

2] ஆறு, பன்னிரண்டு

3] பத்து, எட்டு

4] எட்டு, பத்து

**37] பணை என்னும் சொல்லின் பொருள்?**

1] அரசு

2] ஆல்

**3] மூங்கில்**

4] இவற்றில் ஏதுமில்லை

**38] மீன்நோக்கும் நீள்வயல்சூழ் வித்துவக்கோட் டம்மாஎன் பானோக்கா யாகிலுமுன் பற்றல்லால் பற்றில்லேன் - என்ற பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

1] புறநானூறு, கண்ணகனார்

2] மணிமேகலை, சீத்தலைச்சாத்தனார்

3] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

**4] நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம், குலசேகர ஆழ்வார்**

**39] தானோக்கா தெத்துயரம் செய்திடினும் தார்வேந்தன் கோனோக்கி வாழுங் குடிபோன் றிருந்தேனே - என்ற பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர் பெயர் என்ன?**

1] புறநானூறு, கண்ணகனார்

2] மணிமேகலை, சீத்தலைச்சாத்தனார்

3] பழமொழி நானூறு, முன்றுறை அரையனார்

**4] நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம், குலசேகர ஆழ்வார்**

**40] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.**

1] மீன்நோக்கும் - மீன்கள் வாழும்

**2] என்பால் - அவரிடம்**

3] தார்வேந்தன் - மாலையணிந்த அரசன்

4] கோல்நோக்கி - செங்கோல் செய்யும் அரசனை நோக்கி

**குறிப்பு :- என்பால் - என்னிடம்**

**41] பொருந்தாதது எது? இலக்கணக்குறிப்பு தருக.**

1] நோக்காய் - முன்னிலை ஒருமை வினைமுற்று

2] கோல்நோக்கி - இரண்டாம் வேற்றுமைத்தொகை.

3] தார்வேந்தன் (தாரை அணிந்த அரசன்) - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகை.

**4] வாழும்குடி - செய்யும் என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சம்**

**குறிப்பு :- வாழும்குடி - பெயரெச்சம்**

**42] குலசேகர ஆழ்வார், ---------------------- மாநிலத்திலுள்ள திருவஞ்சைக்களத்தில் பிறந்தவர்.**

1] தமிழ்நாடு

**2] கேரளா**

3] குஜராத்

4] கருநாடகம்

**43] குலசேகர ஆழ்வார், ---------------- பக்தி மிகுதியாக வாய்க்கப்பெற்ற காரணத்தால், இவர், குலசேகரப் பெருமாள் எனவும் அழைக்கப்பட்டார்.**

**1] ராமபிரானிடம்**

2] சிவனிடம்

3] பிரம்மனிடம்

3] காளியிடம்

**44] குலசேகர ஆழ்வார், ------------------- ஆழ்வார்களுள் ஒருவர்.**

**1] 12**

2] 63

3] 75

4] 96

**45] ------------- என்பவர், அருளிய பெருமாள் திருமொழி, நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் ஒன்று.**

1] சுந்தரர்

2] மாணிக்கவாசகர்

**3] குலசேகர ஆழ்வார்**

4] அடியார்க்கு நல்லார்

**46] குலசேகர ஆழ்வார், அருளிய பெருமாள் திருமொழி, நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் ஒன்று. இதில் ----------------- பாசுரங்கள் உள்ளன.**

1] 100

**2] 105**

3] 110

4] 115

**47] இவர் வடமொழி, தென்மொழி இரண்டிலும் வல்லவர். இவர் தமிழில் பெருமாள் திருமொழியையும், வடமொழியில் முகுந்தமாலை என்னும் நூலையும் இயற்றியுள்ளார். இவர், திருவரங்கத்தின் மூன்றாவது மதிலைக் கட்டியதால்,**

**அதற்குக் இவர் பெயரில் அமைந்த வீதி எனும் பெயர் இன்றும் வழுங்கி வருகிறது. - இந்த கூற்று யாருடன் தொடர்புடையது?**

1] சுந்தரர்

2] மாணிக்கவாசகர்

**3] குலசேகர ஆழ்வார்**

4] அடியார்க்கு நல்லார்

**48] குலசேகர ஆழ்வார் அவர்களின் காலம் ----------------.**

**1] கி.பி ஒன்பதாம் நூற்றாண்டு**

2] கி.பி பத்தாம் நூற்றாண்டு

3] கி.பி பதினொன்றாம் நூற்றாண்டு

4] கி.பி பன்னிரண்டாம் நூற்றாண்டு

**49] தமிழகத்தின் பழம்பெரும் சமயங்களுள் ஒன்று வைணவம். வைணவம் திருமாலை முழுமுதற் கடவுளாய்க்கொண்டு போற்றும், பன்னிரு ஆழ்வார்கள் பாடியருளிய தேனினும் இனிய தீந்தமிழ்ப் பனுவல் --------------------. நம் பாடப்பகுதி குலசேகர ஆழ்வார் பாடிய பெருமாள் திருமொழியின் முதலாயிரத்தில் உள்ளது.**

**1] நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்**

2] திருவாசிரியம்

3] நாச்சியார் திருமொழி

4] திருப்பாவை

**50] குலசேகர ஆழ்வார் பாடல் ----------------- தொகுப்பில் உள்ளது.**

1] திருவியற்பா

**2] முதலாயிரம்**

3] பெரிய திருமொழி

4] இவற்றில் ஏதுமில்லை

**51] 'உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்' - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல்?**

1] சிலப்பதிகாரம்

2] மணிமேகலை

**3] பெரியபுராணம்**

4] திருவருட்பா

**52] சமரச சுத்த சன்மார்க்கப்பாதை அமைத்தவர்?**

1] சேக்கிழார்

**2] வள்ளலார் என்னும் இராமலிங்க அடிகள்**

3] ஔவையார்

4] அயோத்திதாசப் பண்டிதர்

**53] ----------- ஆம் நூற்றாண்டைத் தமிழரின் மறுமலர்ச்சிக் காலம் என அறிஞர் போற்றுவர்.**

1] 18 **2] 19** 3] 20 4] 21

**54] ------------ மாவட்டம் சிதம்பரம் வட்டத்தில் உள்ள மருதூரில் வள்ளலார் என்னும் இராமலிங்க அடிகள் பிறந்தார்.**

**1] கடலூர்**

2] திருச்சி

3] திருவாரூர்

4] தஞ்சாவூர்

**55] வள்ளலார் என்னும் இராமலிங்க அடிகள் பிறந்த ஆண்டு?**

**1] 05.10.1823**

2] 15.10.1823

3] 05.10.1833

4] 05.01.1823

**56] வள்ளலார் என்னும் இராமலிங்க அடிகள் அவர்களின் பெற்றோர் பெயர்?**

1] முத்தையா - விசாலட்சுமி

2] மருதநாயகம் - ராஜம்மாள்

**3] இராமையா - சின்னம்மை**

4] வெங்கட்ராமன் - அம்மணியம்மாள்

**57] இராமையா - சின்னம்மை இணையர்க்கு ---------- மகவாக வள்ளலார் என்னும் இராமலிங்க அடிகள் பிறந்தார்.**

1] இரண்டாவது

2] மூன்றாவது

3] நான்காவது

**4] ஐந்தாவது**

**58] தில்லையில் இறைவழிபாட்டின்போது விழியசைக்காமல் இறைவனைப் பார்த்து சிரித்ததைக் கண்ட ஆலய அந்தணர். இக்குழந்தை இறையருள் பெற்ற திருக்குழந்தை என்று பாராட்டினார். அந்த 'இறையருள் பெற்ற திருக்குழந்தை' யார்?**

1] மாணிக்கவாசகர்

2] சுந்தரர்

**3] வள்ளலார் என்னும் இராமலிங்க அடிகள்**

4] இராமானுஜர்

**59] 'அகத்தே கறுத்துப் புறத்து வெளுத்து இருந்த உலகர் அனைவரையும் சகத்தே திருத்த' என்று இறைவன் தம்மை வருவிக்க உற்றதாகக் கூறியவர்?**

1] மாணிக்கவாசகர்

2] சுந்தரர்

**3] வள்ளலார் என்னும் இராமலிங்க அடிகள்**

4] இராமானுஜர்

**60] இராமலிங்கர் பிறந்த ஆறாவது திங்களில் தந்தையார் மறைந்தார். குடும்பத்தினர் ------------ நகருக்கு குடிபெயர்ந்தனர்.**

1] மதுரை

2] திருச்சி

**3] சென்னை**

4] சேலம்

**61] வள்ளலார் என்னும் இராமலிங்க அடிகள் அவர்களுக்கு 5 வயது ஆன உடன், கல்வி கற்க அவரைத் தம் ஆசிரியர் ---------- அவர்களிடம், அண்ணன் அனுப்பி வைத்தார். வள்ளலார் என்னும் இராமலிங்க அடிகள் அவர்களுக்கு படிப்பில் நாட்டமில்லாமல் இருந்தாலும் 9 வயதிலே பாடல் புனையும் திறன் பெற்றிருந்தார்.**

1] இராமன்

**2] சபாபதி**

3] சுடர்மதி

4] ராஜன்

**62] திருவொற்றியூர்ச் சன்னதி வீதியில் ஒரு வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்திருந்த திகம்பர சாமியார், அவ்வழிச் செல்லும் மனிதர்களைக் கண்டு, "அதோ மாடு போகிறது; அதோ ஆடு போகிறது, நாய், நரி போகிறது என்று, அவரவர்களின் குணத் தன்மைகளுக்கேற்ப ஏற்ப விலங்குகளின் பெயர்களால் கூறுவார். ஆனால், ---------------- அவ்வழியே சென்ற போது 'இதோ ஓர் உத்தம மனிதர் போகிறார்' என்று கூறினார்.**

1] மாணிக்கவாசகர்

2] சுந்தரர்

**3] வள்ளலார் என்னும் இராமலிங்க அடிகள்**

4] இராமானுஜர்

**63] இந்த கூற்று யாருடன் தொடர்புடையது?**

**தருமமிகு சென்னையிலுள்ள கந்தகோட்டத்து இறைவனை இவர் வணங்கி மனமுருகப் பாடி மகிழ்வார். இப்பாடல்களின் தொகுப்பே தெய்வமணிமாலை. "ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற உத்தமர்தம் உறவு வேண்டும் உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்" - என்பன போன்ற அற்புதமான பாடல்கள் கற்போரை மனமுருகச் செய்யும்.**

**வடிவுடை மாணிக்கமாலை என்னும் நூலையும் திருவொற்றியூர்ச் சிவபெருமான் மீது, எழுத்தறியும் பெருமான் மாலை என்னும் நூலையும் பாடினார்.**

1] மாணிக்கவாசகர்

2] சுந்தரர்

**3] வள்ளலார் என்னும் இராமலிங்க அடிகள்**

4] இராமானுஜர்

**64] மூடநம்பிக்கைகளாலும் சாதி மத வேறுபாடுகளாலும் மக்கள் துன்புறுவதனைக் கண்டு மனம் பதைத்த வள்ளற்பெருமான், "கலையுரைத்த கற்பனையே நிலையெனக் கொண்டாடும் கண்மூடி வழக்கமெலாம் மண்மூடிப் போக" எனப் பாடியவர் யார்?**

1] மாணிக்கவாசகர்

2] சுந்தரர்

**3] வள்ளலார் என்னும் இராமலிங்க அடிகள்**

4] இராமானுஜர்

**65] ஒருமைவாழ்வு, ஒருமையரசு, ஒருமையுலகம் காண விரும்பிய இவர், “ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் எவரும் ஒருமையுளர் ஆகிஉல கியல்நடத்தல் வேண்டும்” என பாடினார் ? இவர் யார்?**

1] மாணிக்கவாசகர்

2] சுந்தரர்

**3] வள்ளலார் என்னும் இராமலிங்க அடிகள்**

4] இராமானுஜர்

**66] “சங்கடம் விளைவிக்கும் சாதியையும் மதத்தையும் தவிர்த்தேன்” என்றும், இவையெல்லாம் சிறுபிள்ளை விளையட்டு என்றும் இகழ்ந்தவர் யார்?**

1] மாணிக்கவாசகர்

2] சுந்தரர்

**3] வள்ளலார் என்னும் இராமலிங்க அடிகள்**

4] இராமானுஜர்

**67] “பெண்ணினுள் ஆணும், ஆணினுள் பெண்ணும் அண்ணுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி” - என ஆணும் பெண்ணும் சமமென்று அன்றே உரைத்தவர் யார்?**

1] மாணிக்கவாசகர்

2] சுந்தரர்

**3] வள்ளலார் என்னும் இராமலிங்க அடிகள்**

4] இராமானுஜர்

**68] சங்ககாலத்தில் ஒரு முல்லைக்கொடியின் துயர் நீங்க, பாரிவள்ளல் தன் தேரையே ஈந்தார். பல நூற்றாண்டுகள் கழித்துப் பாரி வள்ளலைப்போல ------------------------- என்பவர், “வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்” என்று பயிர்வாடத் தாம் வாடினார்.**

1] மாணிக்கவாசகர்

2] சுந்தரர்

**3] வள்ளலார் என்னும் இராமலிங்க அடிகள்**

4] இராமானுஜர்

**69] கீழ்க்கண்டவர்களுள் பசிப்பிணி மருத்துவர் யார்?**

1] மாணிக்கவாசகர்

2] சுந்தரர்

**3] வள்ளலார் என்னும் இராமலிங்க அடிகள்**

4] இராமானுஜர்

**70] வீடுதோறும் இரந்தும் பசியறாது அயர்ந்தவரையும், நீடியபிணியால் வருந்துவோரையும், ஈடில் மானிகளாய், ஏழைகளாய் நெஞ்சு இளைத்தோரையும் கண்டு வருத்தத்தால் உயிர் இளைத்தவர் யார்?**

1] மாணிக்கவாசகர்

2] சுந்தரர்

**3] வள்ளலார் என்னும் இராமலிங்க அடிகள்**

4] இராமானுஜர்

**71] வள்ளலார் என்னும் இராமலிங்க அடிகள் ---------- என்னும் இடத்தில் சத்திய தருமச்சாலையை நிறுவிச் சாதி, மத வேறுபாடின்றிப் பசித்தோர்க்கெல்லாம் உணவிட்டார். அங்கு அவர் ஏற்றி வைத்த அடுப்பின் கனல், இன்றும் பல்லோர் பசிப்பிணியை போக்கி வருகின்றது.**

1] கூடலூர்

2] கடலூர்

**3] வடலூர்**

4] வண்டலூர்

**72] ஆணும் பெண்ணும் சமம் என்பதனையும், மக்கள் அனைவரும் சாதி, சமயம், கோத்திரம், குலம், உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்னும் வேறுபாடற்றுச் சமரச மனப்பான்மை கொண்டு, மனித நேயத்துடன் வாழவேண்டுமென்றும் மன்பதைக்கு உணர்த்தினார். இவர் யார்?**

1] மாணிக்கவாசகர்

2] சுந்தரர்

**3] வள்ளலார் என்னும் இராமலிங்க அடிகள்**

4] இராமானுஜர்

**73] "எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும்; தம்முயிர்போல் எண்ணி உள்ளே; ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார்; யாவர்அவர் உளந்தான் சுத்த" - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] மாணிக்கவாசகர்

2] சுந்தரர்

**3] வள்ளலார் என்னும் இராமலிங்க அடிகள்**

4] இராமானுஜர்

**74] "சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும்; இடம்எனநான் தெரிந்தேன் அந்த வித்தகர்தம் அடிக்குஏவல் புரிந்திடஎன் சிந்தைமிக விழைந்த தாலோ." - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] மாணிக்கவாசகர்

2] சுந்தரர்

**3] வள்ளலார் என்னும் இராமலிங்க அடிகள்**

4] இராமானுஜர்

**75] "உயிரிரக்கமே பேரின்ப வீட்டின் திறவுகோல்" - என்று கூறியவர்?**

1] மாணிக்கவாசகர்

2] சுந்தரர்

**3] வள்ளலார் என்னும் இராமலிங்க அடிகள்**

4] இராமானுஜர்

**76] கடவுளின் பெயரால் உயிர்க்கொலை செய்வதனை அறவே வெறுத்தார். பலிகொள்ளும் சிறுதெய்வக் கோவிலைக் கண்டு நடுங்கினார். போரினால் உண்டாகும் கொடுமைகளை அறிந்து வருந்தினார். போரில்லா உலகைப் படைக்க விழைந்தார்.- இந்த கூற்று கீழ்க்கண்டவர்களுள் யாருடன் தொடர்புடையது?**

1] மாணிக்கவாசகர்

2] சுந்தரர்

**3] வள்ளலார் என்னும் இராமலிங்க அடிகள்**

4] இராமானுஜர்

**77] "அழுது அடியடைந்த அன்பர்" யார்?**

**1] மாணிக்கவாசகர்**

2] சுந்தரர்

3] வள்ளலார் என்னும் இராமலிங்க அடிகள்

4] இராமானுஜர்

**78] கீழ்க்கண்டவர்களுள் "தம்பிரான் தோழர்" யார்?**

1] மாணிக்கவாசகர்

**2] சுந்தரர்**

3] வள்ளலார் என்னும் இராமலிங்க அடிகள்

4] இராமானுஜர்

**79] "… … … …உலகரசு ஆள்வோர்; உறைமுடி வாள்கொண்டு ஒருவரை ஒருவர்; உயிர்அறச் செய்தனர் எனவே; தறையுறச் சிறியேன் கேட்டபோ தெல்லாம்; தளர்ந்துஉளம் நடுங்கிநின்று அயர்ந்தேன் " - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

1] மாணிக்கவாசகர்

2] சுந்தரர்

**3] வள்ளலார் என்னும் இராமலிங்க அடிகள்**

4] இராமானுஜர்

**80] ------------ என்பவர், அன்பின் ஊற்று. அன்பே அவர் உயிர். அன்பே அவர் வடிவம், மண்ணுலகத்திலே உயிர்கள்படும் வருத்தத்தைக் கண்டும் கேட்டும் அவர் பொறுத்திட மாட்டாமல், "அப்பாநான் வேண்டுதல்கேட்டு அருள்புரிதல் வேண்டும் ஆருயிர்கட்கு எல்லாம்நான் அன்புசெயல் வேண்டும்" - என்று உளமுருக வேண்டினார். அவ்வுயிர்களின் வருத்தத்தை நீக்கிடவே துடித்தார்.**

1] மாணிக்கவாசகர்

2] சுந்தரர்

**3] வள்ளலார் என்னும் இராமலிங்க அடிகள்**

4] இராமானுஜர்

**81] ---------- என்பவர், இறைவன் ஒருவனே, அவன் ஒளி வடிவினன் என்பதனையும் அருட்பெருஞ்ஜோதியாக விளங்கும் இறைவனை அடைவதற்குத்**

**தனிப்பெருங்கருணையே கருவி என்பதனையும் உலகோர்க்கு உணர்த்த சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தினை வடலூரில் நிறுவினார்.**

1] மாணிக்கவாசகர்

2] சுந்தரர்

**3] வள்ளலார் என்னும் இராமலிங்க அடிகள்**

4] இராமானுஜர்

**82] வள்ளலார் என்னும் இராமலிங்க அடிகள் அருளிய பாடல்கள் அருட்கருணை நிறைந்தவை. ஆறு தொகுதிகள் கொண்ட இவரது பாடல்களைத் ---------------- என மக்கள் போற்றுகின்றனர்.**

1] திருக்கயிலாய நூல்

2] பராபர நூல்

3] இறைவனின் ஆசி பெற்ற நூல்

**4] திருவருட்பா**

**83] வள்ளலார் என்னும் இராமலிங்க அடிகள் உருவ வழிபாட்டை நீக்கி, ஒளி வழிபாட்டை மக்கள் பின்பற்றச் செய்தார். அதற்காகவே வடலூரில் சத்திய ஞானசபையை நிறுவினார். மேலும், மக்கள் அறியாமை நீங்கி அறிவு ஒளிபெற, அங்கே சோதி தரிசனப் புதுமையைப் புகுத்தினார். இதனால்தான் -------------- இவரைப் "புதுநெறிகண்ட புலவர்" என்று போற்றினார்.**

1] திரு.வி.க

2] பாரதிதாசன்

3] மறைமலையடிகள்

**4] பாரதியார்**

**84] தமிழ்மொழியே இறவாத நிலை தரும் என்று கருதினார். பயில்வதற்கும் அறிதற்கும் மிகவும் இலேசுடையதாய், பாடுதற்கும் துதித்தற்கும் மிகவும் இனிமையுடையதாய், சாகாக் கல்வியை மிகவும் எளிமையாக அறிவிப்பதாய், திருவருள் வலத்தால் கிடைத்த தென்மொழி ஒன்றினிடத்தே மனம்பற்றச் செய்து, அத்தென்மொழியால் பல்வகைத் தோத்திரப் பாட்டுகளைப் பாடுவித்தருளினீர். என்று உண்மை உரைத்தவர் ?**

1] மாணிக்கவாசகர்

2] சுந்தரர்

**3] வள்ளலார் என்னும் இராமலிங்க அடிகள்**

4] இராமானுஜர்

**85] உலகெலாம் உய்ய உயரிய நெறிகண்ட அருட்பிரகாச வள்ளலார் ---------- ஆம் ஆண்டு தைப்பூசத் திருநாளன்று இறவாநிலை எய்தினார்.**

1] 1844 2] 1854 3] 1864 **4] 1874**

**86] பொருந்தாதது எது? வளரும் பிள்ளைகளுக்கு வள்ளலார் வழங்கிய அறிவுரைகள்:-**

1] தந்தை தாய் மொழியைத் தள்ளி நடக்காதே

2] குருவை வணங்கக் கூசி நிற்காதே

**3] உறவினரிடம் வாதம் செய்யாதே**

4] வெயிலுக்கு ஒதுங்கும் விருட்சம் அழிக்காதே

**87] பொருந்தாதது எது? வளரும் பிள்ளைகளுக்கு வள்ளலார் வழங்கிய அறிவுரைகள்:-**

1] மனமொத்த நட்புக்கு வஞ்சகம் செய்யாதே

2] நல்லோர் மனத்தை நடுங்கச் செய்யாதே

3] பொருளை இச்சித்துப் பொய் சொல்லாதே

**4] கடவுளுக்கு காணிக்கை செய்யாதே**

**88] பொருந்தாதது எது? வளரும் பிள்ளைகளுக்கு வள்ளலார் வழங்கிய அறிவுரைகள்:-**

1] ஏழைகள் வயிறு எரியச் செய்யாதே, பசித்தோர் முகத்தைப் பாராதிராதே

2] இரப்போர்க்குப் பிச்சை இல்லை என்னாதே

3] தானம் கொடுப்போரைத் தடுத்து நிறுத்தாதே

**4] சாதி, மதங்களை பாராதிராதே**

**89] பொருந்தாதது எது? வள்ளலார் என்னும் இராமலிங்க அடிகள் பதிப்பித்த நூல்கள்.**

1] சின்மய தீபிகை

2] ஒழிவிலொடுக்கம்

3] தொண்டமண்டல சதகம்

**4] நளவெண்பா**

**குறிப்பு :- வள்ளலாரின் பன்முக ஆற்றல்கள்:- 1 . சிறந்த சொற்பொழிவாளர் . 2 . போதகாசிரியர். 3 . உரையாசிரியர். 4 . சித்த மருத்துவர். 5 . பசிப் பிணி போக்கிய அருளாளர் . 6 . பதிப்பாசிரியர். 7 . நூலாசிரியர். 8 . இதழாசிரியர். 9 . இறையன்பர். 10 . ஞானாசிரியர். 11 . அருளாசிரியர்.**

**90] மனுமுறை கண்ட வாசகம், ஜீவகாருண்ய ஒழுக்கம், திருவருட்பா (ஆறு திருமுறைகள் ) ஆகிய நூல்களின் ஆசிரியர் யார்?**

1] மாணிக்கவாசகர்

2] சுந்தரர்

**3] வள்ளலார் என்னும் இராமலிங்க அடிகள்**

4] இராமானுஜர்

**91] சந்திப்பிழை நீக்கி எழுதுக.**

1] வள்ளலார் அருளிய வழிகளை கடைபிடித்து ஒழுகினால் மனித நேயம் மலரும்

2] வள்ளலார் அருளிய வழிகளை கடைப்பிடித்து ஒழுகினால் மனித நேயம் மலரும்

**3] வள்ளலார் அருளிய வழிகளைக் கடைப்பிடித்து ஒழுகினால் மனித நேயம் மலரும்**

4] வள்ளலார் அருளிய வழிகளைக் கடைபிடித்து ஒழுகினால் மனித நேயம் மலரும்

**92] சந்திப்பிழை நீக்கி எழுதுக.**

**1] அறிவு ஒளிபெற அங்கே சோதி தரிசனப் புதுமையைப் புகுத்தினார்**

2] அறிவு ஒளிபெற அங்கே சோதித் தரிசன புதுமையைப் புகுத்தினார்

3] அறிவு ஒளிப்பெற அங்கே சோதித் தரிசன புதுமையைப் புகுத்தினார்

4] அறிவு ஒளிபெற அங்கே சோதித் தரிசனப் புதுமையைப் புகுத்தினார்

**93] தென்னிந்தியச் சமூகச் சீர்திருத்தத்தின் தந்தை என்று போற்றப்பட்டவர் யார்?**

**1] காத்தவராயன் என்னும் அயோத்திதாசப் பண்டிதர்**

2] பெரியார்

3] மபொ. சிவஞானம்

4] பாம்பன் சுவாமிகள்

**94] காத்தவராயன் என்னும் அயோத்திதாசப் பண்டிதர் சென்னை ஆயிரம் விளக்கில் உள்ள, மக்கிமா நகரில் -------------- ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆம் நாள் பிறந்தார்.**

**1] 20.05.1845**

2] 20.05.1844

3] 20.05.1843

4] 20.05.1846

**95] காத்தவராயன் என்னும் அயோத்திதாசப் பண்டிதரின் தந்தையார் பெயர் -------------------?**

1] ராமசாமி

2] குப்புசாமி

**3] கந்தசாமி**

4] மாடசாமி

**96] அயோத்திதாசப் பண்டிதர் அவர்களுக்கு பெற்றோர் இட்ட பெயர்?**

1] ராமராஜன்

2] தனஞ்செயன்

**3] காத்தவராயன்**

4] வீரமணிகண்டன்

**97] -------------- என்பாரிடம் காத்தவராயன் கல்வி கற்றார். சித்த மருத்துவமும் பயின்றார்.**

**1] அயோத்திதாசப் பண்டிதர்**

2] மீனாட்சி சுந்தரனார்

3] சுத்தானந்த பாரதி

4] இவர்களில் யாருமில்லை

**98] காத்தவராயன் என்னும் அயோத்திதாசப் பண்டிதர் தொடங்கிய இதழின் பெயர்?**

1] அயோத்தியா

2] கேசரி

**3] ஒரு பைசாத் தமிழன்**

4] தினமலர்

**99] ----------------- என்பவர், நீலகிரி மலைப் பகுதியில் வாழும் தோடர் இனப்பிரிவில் கலப்புத்திருமணம் செய்துகொண்டு பத்து ஆண்டுகள் இரங்கூன் சென்று வாழ்ந்தார். அக்காலத்தில் தேயிலை பறிப்போர், விவசாயக் கூலிவேலை செய்வோர், மரம் அறுப்போர் ஆகியோரின் முன்னேற்றத்திற்காக அரும்பாடுபட்டார்.**

**1] காத்தவராயன் என்னும் அயோத்திதாசப் பண்டிதர்**

2] பெரியார்

3] மபொ. சிவஞானம்

4] பாம்பன் சுவாமிகள்

**100]** ------------- இந்து மதக் கருத்துகளை ஆழ்ந்து கற்றவர். புத்தநெறியால் கவரப் பெற்றார். அதனால் புத்தமதக் கருத்துகளை எல்லாருக்கும் எடுத்துரைத்தார். தமக்குப் பிறந்த மகன்களுக்குப் பட்டாபிராமன், மாதவராம், சானகிராமன், இராசாராம் என்று பெயர் சூட்டி மகிழ்ந்தார். புத்தரை விரும்பிச்

**சார்ந்த இவர், தம் மகள்களுக்கு அம்பிகாவதி என்றும் மாயாவதி என்றும் பெயரினைச் சூட்டினார்.**

**1] காத்தவராயன் என்னும் அயோத்திதாசப் பண்டிதர்**

2] பெரியார்

3] மபொ. சிவஞானம்

4] பாம்பன் சுவாமிகள்

**101] சித்த மருத்துவத்தில் கைதேர்ந்ததால், மருத்துவர் என்றும் பண்டிதர் என்றும் அழைக்கப் பெற்றவர் யார்?**

**1] காத்தவராயன் என்னும் அயோத்திதாசப் பண்டிதர்**

2] பெரியார்

3] மபொ. சிவஞானம்

4] பாம்பன் சுவாமிகள்

**102] தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கல்வி கற்க அனுமதி மறுக்கப்பட்ட சூழலில் பிரம்ம ஞானசபை ஆல்காட் (1832 - 1907) தொடர்பால், சென்னையில் முக்கியமான ஐந்து இடங்களில் ஆல்காட் பஞ்சமர் பள்ளிகள் எனத் தலித்துகளுக்கு இலவசப் பள்ளிகளை நிறுவியவர் யார்?**

**1] காத்தவராயன் என்னும் அயோத்திதாசப் பண்டிதர்**

2] பெரியார்

3] மபொ. சிவஞானம்

4] பாம்பன் சுவாமிகள்

**103] தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கல்வி வசதியோடு கல்வி உதவித்தொகை அளிக்கவும், கல்வியில் தேர்ச்சி பெற்றவருக்கு அரசு வேலையும், உள்ளாட்சி அமைப்புகளில் வாய்ப்பும், பொது இடங்களில் நுழைய உரிமையும், கிராம அலுவலராய்ப் பணியமர்த்த ஆணைகளும் வேண்டுமென்று துணிவோடு வலியுறுத்தி வெற்றி பெற்றார். - இந்த கூற்று கீழ்க்கண்டவர்களில் யாருடன் தொடர்புடையது?**

**1] காத்தவராயன் என்னும் அயோத்திதாசப் பண்டிதர்**

2] பெரியார்

3] மபொ. சிவஞானம்

4] பாம்பன் சுவாமிகள்

**104] காத்தவராயன் என்னும் அயோத்திதாசப் பண்டிதர் அவர்கள், அன்றைய காலணா விலையில் ஒருபைசாத் தமிழன் என்ற இதழை வெளியிட்டார். அது, ------------------- முதல் சென்னை இராயப்பேட்டையில் இருந்து புதன்தோறும் நான்கு பக்கங்களுடன் வெளிவந்தது.**

1] 19.06.1904

2] 19.06.1905

3] 19.06.1906

**4] 19.06.1907**

**105] தீபங்களின் வரிசை தீபாவளி. கண்ணன் நரகாசுரனைக் கொன்று வெற்றி பெற்ற நாளே இத்திருநாள் என்றும், மகாவீரர் முக்தி அடைந்த நாளே தீபாவளி என்றும் இன்றுவரை பேசப்படுகிறது. ஆனால், பௌத்த சமயத்தில் ஆழங்கால்பட்டவரான ---------------------, தமது மருத்துவ ஆராய்ச்சியின்படி, எள்செடியின் விதையிலிருந்து நெய் கண்டுபிடித்த திருநாளே தீபாவளி என்று புதியதோர் விளக்கம் தந்தார். அதற்கு ஆதாரமாக சப்பான் நாட்டில் இன்றும்**

**நுகர்பொருள் கண்டுபிடிப்புத் திருநாளாகத்தான் தீபாவளியைக் கொண்டாடுகிறார்கள் என்று சான்று காட்டியவர் யார்?**

**1] காத்தவராயன் என்னும் அயோத்திதாசப் பண்டிதர்**

2] பெரியார்

3] மபொ. சிவஞானம்

4] பாம்பன் சுவாமிகள்

**106] புத்தரது ஆதிவேதம் என்னும் நூலை இருபத்தெட்டுக் காதைகள் கொண்ட பெருநூலாக எழுதினார். இதற்குச் சான்றாக பெருங்குறவஞ்சி, வீரசோழியம், நன்னூல் விளக்கம், நாயனார் திரிகுறள், சித்தர் பாடல்கள், வைராக்கிய சதகம், மச்சமுனிவர் ஞானம் முதலிய நூல்களைத் துணை நூல்களாகக் கொண்டார். ஆதிவேதத்தைப் பாலி, ஆங்கிலம் முதலிய மொழிகளின் துணையுடன் எழுதினார். - இவர் யார்?**

**1] காத்தவராயன் என்னும் அயோத்திதாசப் பண்டிதர்**

2] பெரியார்

3] மபொ. சிவஞானம்

4] பாம்பன் சுவாமிகள்

**107] இந்திரதேச சரித்திரம் - என்ற நூலின் ஆசிரியர் பெயர்?**

**1] காத்தவராயன் என்னும் அயோத்திதாசப் பண்டிதர்**

2] பெரியார்

3] மபொ. சிவஞானம்

4] பாம்பன் சுவாமிகள்

108] இருபத்தைந்துக்கும் மேற்பட்ட சிறு நூல்களை வெளியிட்டார். வீரமாமுனிவரைப் போல் எழுத்துச் சீர்திருத்தம் செய்துள்ளார். இவர் திருவாசகத்திற்கும் உரை எழுதியுள்ளார். - இவர் யார்?

**1] காத்தவராயன் என்னும் அயோத்திதாசப் பண்டிதர்**

2] பெரியார்

3] மபொ. சிவஞானம்

4] பாம்பன் சுவாமிகள்

109] நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியது ஒன்றே. அதாவது, உங்களுடைய தருமமும் கருமமுமே உங்களைக் காக்கும் என்று முத்தாய்ப்பாய், நம் உள்ளத்தில் நறுந்தேனைப் பெய்வித்தவர் யார்?

**1] காத்தவராயன் என்னும் அயோத்திதாசப் பண்டிதர்**

2] பெரியார்

3] மபொ. சிவஞானம்

4] பாம்பன் சுவாமிகள்

110] காத்தவராயன் என்னும் அயோத்திதாசப் பண்டிதர் அவர்கள் இயற்கை எய்திய தினம்?

**1] 05.05.1914**

2] 08.07.1915

3] 09.06.1915

4] 15.05.1913

## பத்தாம் வகுப்பு - பொதுத்தமிழ் பாடக்குறிப்புகள் பகுதி - 10

**1] சீக்கிரம் செல்லுக நேர்வழியில் - அதைச்; செத்தைகள் கூடியே தூர்க்கு முன்னே நோக்கிய அத்திசை நேர்த்திசையில் - துளிச்; சோம்பலு மின்றி நடைஎடுநீ - இந்த கவிதை வரி இடம்பெற்றுள்ள கவிதை தொகுப்பு மற்றும் ஆசிரியர் பெயர்?**

**1] பூத்தது மானுடம் (நிற்க நேரமில்லை), சாலை இளந்திரையன்**

2] ஒரு பைசா தமிழன், அயோத்திதாச பண்டிதர்

3] குழந்தை இலக்கியம், அழ.வள்ளியப்பா

4] குழந்தைகள் பாடல்கள், வாணிதாசன்

**2] கால்கள் இரண்டு படைத்தவன்நீ - பெருங்; கல்லும் மலையும் கடப்பதற்கே; மேலிரு கைகள் அவைகளுண்டே - அங்கு; விம்மும் புதர்கள் அறுப்பதற்கே - இந்த கவிதை வரி இடம்பெற்றுள்ள கவிதை தொகுப்பு மற்றும் ஆசிரியர் பெயர்?**

**1] பூத்தது மானுடம் (நிற்க நேரமில்லை), சாலை இளந்திரையன்**

2] ஒரு பைசா தமிழன், அயோத்திதாச பண்டிதர்

3] குழந்தை இலக்கியம், அழ.வள்ளியப்பா

4] குழந்தைகள் பாடல்கள், வாணிதாசன்

**3] கண்ணிரண் டுள்ளன முன்னடக்க - இரு; காதுகள் உண்டு துணை வரவே; விண்களைக் கீறிவழி சமைக்க - உன்றன்; வீர மனமுண்டு செல்லுகவே ! - இந்த கவிதை வரி இடம்பெற்றுள்ள கவிதை தொகுப்பு மற்றும் ஆசிரியர் பெயர்?**

**1] பூத்தது மானுடம் (நிற்க நேரமில்லை), சாலை இளந்திரையன்**

2] ஒரு பைசா தமிழன், அயோத்திதாச பண்டிதர்

3] குழந்தை இலக்கியம், அழ.வள்ளியப்பா

4] குழந்தைகள் பாடல்கள், வாணிதாசன்

**4] இன்றிளைப் பாறுவம் என்றிருந்தால் - வழி; என்னென்ன வாகுமோ ஓரிரவில்; சென்றிளைப் பாறுக முற்றிடத்தே - தம்பி; தேன்வந்து பாயும் உன் நெஞ்சிடத்தே! - இந்த கவிதை வரி இடம்பெற்றுள்ள கவிதை தொகுப்பு மற்றும் ஆசிரியர் பெயர்?**

**1] பூத்தது மானுடம் (நிற்க நேரமில்லை), சாலை இளந்திரையன்**

2] ஒரு பைசா தமிழன், அயோத்திதாச பண்டிதர்

3] குழந்தை இலக்கியம், அழ.வள்ளியப்பா

4] குழந்தைகள் பாடல்கள், வாணிதாசன்

**5] சாதனைப் பூக்களை ஏந்துமுன்னே - இங்கு; நல்லசெடி இளைப் பாறிடுமே?; வேதனை யாவும் மறந்ததுபார் - செடி; வெற்றி கொண்டேந்திய பூவினிலே - இந்த கவிதை வரி இடம்பெற்றுள்ள கவிதை தொகுப்பு மற்றும் ஆசிரியர் பெயர்?**

**1] பூத்தது மானுடம் (நிற்க நேரமில்லை), சாலை இளந்திரையன்**

2] ஒரு பைசா தமிழன், அயோத்திதாச பண்டிதர்

3] குழந்தை இலக்கியம், அழ.வள்ளியப்பா

4] குழந்தைகள் பாடல்கள், வாணிதாசன்

**6] சாலை. இளந்திரையன் அவர்களின் பெற்றோர் பெயர்?**

1] சாத்தப்பன் , விசாலாட்சி

2] முருகேசன், கண்ணகி

3] வெங்கட்ராமன், அம்மணி அம்மாள்

**4] இராமையா, அன்னலட்சுமி**

**7] சாலை. இளந்திரையன் அவர்கள் பிறந்த ஊர்?**

1] திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள வத்தலக்குண்டு

2] திருவாரூர் மாவட்டத்திலுள்ள மன்னார்குடி

3] விருதுநகர் மாவட்டத்திலுள்ள சாத்தூர்

**4] திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள சாலைநயினார் பள்ளிவாசல்**

**8] கீழ்க்கண்டவர்களுள் யார், தில்லிப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறை விரிவுரையாளராகித் தமிழ்த்துறைத் தலைவரானார்?**

1] வாணிதாசன்

2] பாவலரேறு பெருஞ்சித்திரனார்

3] ராசேந்திரன்

**4] சாலை. இளந்திரையன்**

**9] உலகத்தமிழ் ஆராய்ச்சிக் கழகம், இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், தில்லித் தமிழ் எழுத்தாளர் சங்கம், உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் தோன்றக் காரணமானவர் யார்?**

1] வாணிதாசன்

2] பாவலரேறு பெருஞ்சித்திரனார்

3] ராசேந்திரன்

**4] சாலை. இளந்திரையன்**

**10] 1991 இல் தமிழக அரசின் பாவேந்தர் விருது பெற்றவர் யார்?**

1] வாணிதாசன்

2] பாவலரேறு பெருஞ்சித்திரனார்

3] ராசேந்திரன்

**4] சாலை. இளந்திரையன்**

**11] சாலை. இளந்திரையன் அவர்கள் வாழ்ந்த காலம்?**

1] 06.10.1930 - 04.10.1995

2] 06.08.1930 - 04.10.1996

3] 06.07.1930 - 04.10.1997

**4] 06.09.1930 - 04.10.1998**

**12] "புரட்சி முழக்கம்" "உரை வீச்சு" ஆகிய நூல்கள் தமிழக அரசின் சிறந்த நூலுக்கான பரிசுகள் பெற்றுள்ளன. ஆகிய நூல்களின் ஆசிரியர்?**

1] வாணிதாசன்

2] பாவலரேறு பெருஞ்சித்திரனார்

3] ராசேந்திரன்

**4] சாலை. இளந்திரையன்**

**13] "வினையே ஆடவர்க்குயிர்" என்கிறது ----------------?**

1] பரிபாடல்

2] புறநானூறு

3] கலித்தொகை

**4] குறுந்தொகை**

**14] "முந்நீர் வழக்கம் மகடுஉ வோடில்லை" என்கிறது -----------?**

**1] தொல்காப்பியம்**

2] புறநானூறு

3] கலித்தொகை

4] குறுந்தொகை

**15] தற்போது ----------------கல்வியில் தேர்ச்சி என்பதுதான் பெரும்பாலான பணிகளுக்கும் அடிப்படையாக உள்ளது.**

1] இடைநிலை

2] தொழில்துறை

**3] மேல்நிலை**

4] பட்டப்படிப்பு

**16] தமிழ்வழியில் பயிலும் மாணவர்களுக்கு அரசுப் பணிகளில் ------------ விழுக்காடு ஒதுக்கித் தமிழக அரசு ஆணை வெளியிட்டுள்ளது.**

**1] இருபது**

2] பதினைந்து

3] முப்பது

4] பத்து

**17] ------------ வகுப்புப் பொதுத்தேர்வில் தேர்ச்சி பெற்றோர் இராணுவம், காவல் முதலிய துறைகளில் சேர்வதற்கும் வாய்ப்புண்டு.**

1] பத்தாம்

**2] பன்னிரண்டாம்**

3] எட்டாம்

4] தொழிற்கல்வி

**18] உடம்பை வளர்த்தேன், உயிர் வளர்த்தேனே - என்பது யாருடைய கூற்று?**

**1] திருமூலர்**

2] மாணிக்கவாசகர்

3] திருவள்ளுவர்

4] சேக்கிழார்

**19] " வெறுங்கை என்பது மூடத்தனம் விரல்கள் பத்தும் மூலதனம்" - என்ற பாடல் வரியின் ஆசிரியர் யார்?**

**1] தாரா பாரதி**

2] வாணிதாசன்

3] மறைமலையடிகள்

4] பூங்குன்றனார்

**20] ஒருமை பன்மைப் பிழை நீக்கி எழுதுக :**

1] தமிழகத்தில் எண்ணற்ற தொழில்நுட்பப் பயிலகங்கள் உளது

2] தமிழகத்தில் எண்ணற்ற தொழில்நுட்பப் பயிலகங்கள் உள்ளது

3] தமிழகத்தில் எண்ணற்ற தொழில்நுட்பப் பயிலகங்கள் இருக்கின்றன

**4] தமிழகத்தில் எண்ணற்ற தொழில்நுட்பப் பயிலகங்கள் உள்ளன**

**21] ஒருமை பன்மைப் பிழை நீக்கி எழுதுக :**

1] பெண்கள் எல்லாத் துறையிலும் பணிபுரிகிறாள்

2] பெண்கள் எல்லாத் துறையிலும் பணிபுரிகின்றாள்

3] பெண்கள் எல்லாத் துறையிலும் பணிபுரிவாள்

**4] பெண்கள் எல்லாத் துறையிலும் பணிபுரிகின்றனர்**

**22] சந்திப்பிழை நீக்கி எழுதுக**

1] கை தொழில் ஒன்றைக் கற்றுக் கொள்

**2] கைத்தொழில் ஒன்றைக் கற்றுக் கொள்**

3] கைத்தொழில் ஒன்றை கற்றுக் கொள்

4] கைத்தொழில் ஒன்றைக் கற்று கொள்

**23] சந்திப்பிழை நீக்கி எழுதுக**

**1] பெண்கள் குடும்பத்தைப் பொறுப்புடன் நடத்த வேண்டுமெனவும், கடல் கடந்து செல்லக் கூடாதெனவும் கூறி வந்தனர்**

2] பெண்கள் குடும்பத்தை பொறுப்புடன் நடத்த வேண்டுமெனவும் கடல் கடந்து செல்லக் கூடாதெனவும் கூறி வந்தார்கள்

3] பெண்கள் குடும்பத்தை பொறுப்புடன் நடத்த வேண்டுமெனவும் கடல் கடந்து செல்ல கூடாதெனவும் கூறி வந்துள்ளனர்

4] பெண்கள் குடும்பத்தைப் பொறுப்புடன் நடத்த வேண்டுமெனவும் கடல் கடந்து செல்லக் கூடாதெனவும் கூறி வந்தவர்கள்

**24] உலக இலக்கியத் துறையில் நிகழ்ந்த ஒரு மாபெரும் புரட்சி ------------ கண்டுபிடிக்கப்பட்டது.**

1] எழுதுகோல்

2] அழிப்பான்

**3] காகிதம்**

4] இவற்றில் ஏதுமில்லை

**25] ஒரு மனிதன் ஆண்டுக்கு 2000 பக்கங்களாவது படித்தால் தான் அன்றாட உலக நடப்புகளை அறிந்த மனிதனாகக் (informative man) கருதப்படுவான் என ------------- கூறியுள்ளது.**

1] சென்னை பல்கலைக்கழகம்

2] ஐநா சபை

**3] யுனெஸ்கோ**

4] உலக நூலகக் கழகம்

**26] --------------- நகர அரசுகளே முதன்முதலாக மக்களுக்கான நூல் நிலையங்களை அமைத்தன.**

1] எகிப்து

**2] கிரீஸ்**

3] ஐரோப்பிய

4] இந்தியா

**27] புத்தகச்சாலை, ஏடகம், சுவடியகம், சுவடிச்சாலை, வாசக சாலை, படிப்பகம், நூல்நிலையம், பண்டாரம் என நூலகம் பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகிறது. ஆங்கிலத்தில் 'லைப்ரரி' என்னும் சொல் வழங்குகிறது. ----------------------- மொழியில் 'லிப்ரா' என்னும் சொல்லிற்குப் புத்தகம் என்பது பெயர்.**

1] கிரேக்க

2] ஆங்கில

**3] இலத்தீன்**

4] இந்தி

**28] இந்தியாவில் உள்ள நூலகங்களில் -------------- தேசிய நூலகம் முதன்மையானது. இதில், பத்து இலட்சத்திற்கும் மேற்பட்ட நூல்கள் உள்ளன.**

1] ராஜஸ்தான்

2] டெல்லி

**3] கல்கத்தா**

4] தமிழ்நாடு

**29] இந்தியாவிலேயே முதன்முறையாகத் தமிழக அரசுதான் ------------ ஆம் ஆண்டு சென்னைப் பொதுநூலகச் சட்டத்தை இயற்றி, நூலகப் பணிகளின் சீரான செயல்பாட்டிற்கு வித்திட்டது.**

**1] 1948**

2] 1950

3] 1945

4] 1963

**30] --------------- என்பது பாடநூல்களைக் கொண்டு அறிவை விதைக்கும் களம்.**

1] சமுதாயம்

**2] பள்ளி**

3] நூலகம்

4] இவற்றில் ஏதுமில்லை

**31] பள்ளியில் மாணவர்கள் ஓரிடம், நூலகம் வேறிடம் என்ற நிலையை மாற்ற, நம் பள்ளிக்கல்வித்துறை --------------- என்னும் வகுப்பறை நூலகத்திட்டத்தைத் தொடங்கியுள்ளது.**

1] பள்ளிநூலகம்

2] பள்ளிப்பறவைகள்

**3] புத்தகப் பூங்கொத்து**

4] நூலகப் பறவைகள்

**32] -------------------- இல் உள்ள நிப்பூர் என்ற ஊரில் கி.மு. 2000 ஆண்டிற்கு முந்தைய சுமார் 2500 களிமண் பலகைகளில் எழுதப்பட்டிருந்த நூல்களின் தொகுப்பு கண்டெடுக்கப்பட்டது.**

1] சிங்கப்பூர்

2] மலேசியா

**3] பாபிலோனியா**

4] கத்தார்

**33] நூலகப் பயன்பாட்டிற்கான விதிகளை உருவாக்கித் தந்த ----------------- இந்திய நூலகத் தந்தை எனப் போற்றப்படுகிறார்.**

1] ராஜம் கிருஷ்ணன்

**2] சீர்காழி சீ.இரா. அரங்கநாதன்**

3] கல்கி

4] இவர்களில் யாருமில்லை

**குறிப்பு :- தமிழகத்திலுள்ள மிகப் பழமையான நூலகங்கள் :-**

**சரசுவதி மகால் நூலகம், தஞ்சை (1820).**

**அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகம், சென்னை.**

**கன்னிமாரா நூலகம், சென்னை (1869)**

**சென்னை பல்கலைக்கழக நூலகம் (1907).**

**அண்ணாமலை பல்கலைக்கழக நூலகம், சிதம்பரம் (1929).**

**டாக்டர் உ. வே. சா. நூலகம், சென்னை (1947).**

**மறைமலை அடிகளார் நூலகம், சென்னை (1958).**

**மதுரை காமராசர் பல்கலைக்கழக நூலகம் (1966).**

**உலகத் தமிழ் ஆராய்ச்சி நூலகம், சென்னை (1970).**

**தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக நூலகம் (1981).**

**34] இயல்பாக நிகழும் நிகழ்ச்சியின்மீது, கவிஞர் தம் குறிப்பினை ஏற்றிக் கூறுவது -------------------**

1] வஞ்சப்புகழ்ச்சி அணி

2] இரட்டுறமொழிதல் அணி

3] பிறிதுமொழிதலணி

**4] தற்குறிப்பேற்ற அணி**

**விளக்கம் :- தற்குறிப்பேற்ற அணி** :- இயல்பாக நிகழும் நிகழ்ச்சியின்மீது, கவிஞர் தம் குறிப்பினை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்ற அணி. தற்குறிப்பேற்ற அணி - (தன் + குறிப்பு + ஏற்றம் + அணி)

தையல் துயர்க்குத் தரியாது தம்சிறகாம் கையால் வயிறலைத்துக் காரிருள்வாய், - வெய்யோனை வாவுபரித் தேரேறி வாவென் றழைப்பனபோல் கூவினவே கோழிக் குலம். விடியற்காலையில் கோழிகள் கூவுதல் இயல்பான நிகழ்ச்சி. ஆனால் கவிஞர்,

காட்டில் நள்ளிரவில் கணவனைப் பிரிந்து வருத்தமுற்ற தமயந்தியின், துயரைப் போக்க, இருளை நீக்குவதற்குத் தேரேறி விரைந்து வருமாறு ஞாயிற்றைக் கோழிக் கூட்டங்கள் கூவி அழைப்பதாகத் தன் குறிப்பை ஏற்றிக் கூறியுள்ளார். எனவே, இது தற்குறிப்பேற்ற அணி.

**35] புகழ்வதுப்போலப் பழிப்பதும், பழிப்பதுபோலப் புகழ்வதும் ------------ அணி எனப்படும்.**

**1] வஞ்சப்புகழ்ச்சி அணி**

2] இரட்டுறமொழிதல் அணி

3] பிறிதுமொழிதலணி

4] தற்குறிப்பேற்ற அணி

விளக்கம் :- வஞ்சப்புகழ்ச்சி அணி :- புகழ்வதுப்போலப் பழிப்பதும், பழிப்பதுபோலப் புகழ்வதும் வஞ்சப்புகழ்ச்சி அணி எனப்படும்.

தேவர் அனையர் கயவர் அவருந்தாம்

மேவன செய்தொழுக லான்.

இப்பாடலில், தீயவர்களைத் தேவர்களுக்கு இணையாகப் புகழ்ந்து கூறுவதுபோலக் கூறித், தீயவர்கள் தம் மனம்போன போக்கில் தீய செயல்களைச் செய்து அழிவார்கள் எனப் பழித்துக் கூறப்பட்டுள்ளது.

கல்லால் அடித்ததற்கோ காலால் உதைத்ததற்கோ

வில்லால் அடித்ததற்கோ வெட்கினீர் - சொல்வீரால்

மஞ்சுதனைச் சூழும் மதிலானைக் காவாரே

நஞ்சுதனைத் தின்றதென் முன். - இப்பாடலில், திருப்பாற்கடலைக் கடைந்தபோது உண்டாக்கிய நஞ்சினைச் சிவபெருமான் உண்டு தேவர்களைக் காத்தார் என்பது புராணக் கதை. இதனைக் காளமேகப் புலவர் சிறிது மாற்றி, ஒருவன் கல்லால் அடித்ததற்காகவும், இன்னொருவன் காலால் உதைத்ததற்காகவும், வேறொருவன் வில்லால் அடித்ததற்காகவும் வெட்கமடைந்து உயிர்வாழ விரும்பாமல் நஞ்சை

உண்டார் எனப் பழிப்பதுபோல் சிவபெருமானைப் புகழ்ந்துள்ளார். எனவே, இது வஞ்சப்புகழ்ச்சி அணி ஆயிற்று.

**36] ஒரு செய்யுளில் ஒரு சொல் பிரிவுபடாமல் நின்று, ஒன்றுக்கு மேற்பட்ட பொருளைத் தருவது -------------- எனப்படும்.**

**1] செம்மொழிச் சிலேடை**

2] பிரிமொழிச் சிலேடை

3] பிறிதுமொழிதலணி

4] தற்குறிப்பேற்ற அணி

**விளக்கம் :- இரட்டுறமொழிதல் அணி :-**

ஒருசொல் இருபொருள்பட அமைந்து வருதல் இரட்டுறமொழிதல் எனப்படும். இதனைச் சிலேடை எனவும் வழங்குவர். இது செம்மொழிச் சிலேடை, பிரிமொழிச் சிலேடை என இருவகைப்படும்.

**அ) செம்மொழிச்சிலேடை :-**

ஒரு செய்யுளில் ஒரு சொல் பிரிவுபடாமல் நின்று, ஒன்றுக்கு மேற்பட்ட பொருளைத் தருவது செம்மொழிச் சிலேடை எனப்படும்.

ஆடிக் குடத்தடையும் ஆடும்போ தேயிரையும்

மூடித் திறக்கின் முகங்காட்டும் - ஓடிமண்டை

பற்றின் பரபரெனும் பாரில்பிண் ணாக்குமுண்டாம்

உற்றிடுபாம் பௌளெனவே ஓது. - இப்பாடலில் பாம்பு, எள் ஆகிய இரண்டிற்கும் சிலேடை கூறப்பட்டுள்ளது. ஆடிக் குடத்தடையும் ஆடும்போ தேயிரையும் எனும் முதலடி, படமெடுத்து ஆடியபின் குடத்துள் சென்றடையும், படமெடுத்தாடும்போது, இரைச்சலிடும் எனப் பாம்பிற்கும், செக்காடியபின் எடுத்த எண்ணெயைக் குடத்தில் ஊற்றுவர். செக்காட்டும்போது இரைச்சல் உண்டாகும் என எள்ளிற்கும் சிலேடையாக வந்துள்ளது.

இப்பாடலில் சொற்கள் பிரிவில்லாமல் இருபொருள்கள் தந்தன. எனவே, இது செம்மொழிச்சிலேடை ஆயிற்று.

**37] ஒருசொல் தனித்து நின்று ஒருபொருளையும், அதுவே பிரித்து நின்று வேறொரு பொருளையும் தருமாறு அமைத்துப் பாடுவது, ------------------ ஆகும்.**

1] செம்மொழிச் சிலேடை

**2] பிரிமொழிச் சிலேடை**

3] பிறிதுமொழிதலணி

4] தற்குறிப்பேற்ற அணி

விளக்கம் :- பிரிமொழிச்சிலேடை :- ஒருசொல் தனித்து நின்று ஒருபொருளையும், அதுவே பிரித்து நின்று வேறொரு பொருளையும் தருமாறு அமைத்துப் பாடுவது, பிரிமொழிச்சிலேடை ஆகும்.

(எ.கா.) : செய்யுள் கிடைமறிக்கும் சேர்பலகை யிட்டுமுட்டும்

ஐயமற மேற்றா ளடர்க்குமே - துய்யநிலை

தேடும் புகழ்சேர் திருமலைரா யன்வரையில்

ஆடும் கதவுநிக ராம்.

**பொருள்** :- செய் - வயல், வீடு; பலகை - பல கைகள், பலகை; தாள் - முயற்சி, தாழ்ப்பாள்; துய்ய - தங்க, அழகான. இப்பாடலில், ஆடும்கதவும் ஒன்றற்கொன்று சமம். எங்ஙனமெனில்,

1 . ஆடு : செய்யுள் கிடைமறிக்கும் - வயலில் கிடையாக மறிக்கப்படும். சேர் பல கை யிட்டுமுட்டும் - பொருந்திய பல கைகளைக் கொம்பினால் முட்டும். ஐயமற மேல் தாள் அடர்க்கும் - ஐயமின்றி முயற்சியோடு போராடும். துய்ய நிலை தேடும் - தங்குதற்குத் தூய்மையான இடம் தேடும்.

2 . கதவு செய் உட்கிடை மறிக்கும் - வீட்டின் உள்ளிடத்தைத் தடுத்து மூடி இருக்கும். சேர் பலகை இட்டு முட்டும் - பலகைகளைக் கொண்டு செய்யப்பட்டிருக்கும். ஐயமற மேற்றாள் அடர்க்கும் - திண்ணமாக மூடப்படுவதோடன்றித் தாழ்ப்பாளிட்டும்

இருக்கும். துய்யநிலை தேடும் - அழகானவேலைப்பாடு (நனைல) உடையதாய் இருக்கும். எனவே, இது பிரிமொழிச் சிலேடை

**38] செய்யுளில் முன்னர் வந்த சொல், மீண்டும் மீண்டும் வந்து வெவ்வேறு பொருளைத் தருவது, -------------------------------?**

**1] சொல்பின்வருநிலையணி**

2] பொருள் பின்வருநிலையணி

3] சொற்பொருள் பின்வருநிலையணி

4] பிறிதுமொழிதலணி

விளக்கம் :- பின்வருநிலையணி:-செய்யுளில் முன்னர் வந்த சொல்லோ, பொருளோ, சொல்லும் பொருளோ மீண்டும் மீண்டும் வந்து அழகு சேர்க்கும். அவை, சொல்பின்வருநிலையணி, பொருள்பின்வருநிலையணி, சொற்பொருள் பின்வருநிலையணி என மூவகைப்படும்.

**அ) சொல்பின்வருநிலையணி:-**

செய்யுளில் முன்னர் வந்த சொல், மீண்டும் மீண்டும் வந்து வெவ்வேறு பொருளைத் தருவது, சொல்பின்வருநிலையணி.

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்

துப்பாய தூஉம் மழை. - இக்குறள்பாவில் துப்பு என்னும் ஒரேசொல் உண்பவர், உணவு, உண்ணும் பொருள் எனப் பல்வேறு பொருள்களில் வந்துள்ளது. எனவே, இது சொல்பின்வருநிலையணி.

**39] செய்யுளில் ஒரே பொருள்தரும் பல சொற்கள் வருவது, ---------------------------------------------?**

1] சொல்பின்வருநிலையணி

**2] பொருள் பின்வருநிலையணி**

3] சொற்பொருள் பின்வருநிலையணி

4] பிறிதுமொழிதலணி

விளக்கம் :- செய்யுளில் ஒரே பொருள்தரும் பல சொற்கள் வருவது, பொருள் பின்வருநிலையணி.

"அவிழ்ந்தன தோன்றி அலர்ந்தன - காயா,

நெகிழ்ந்தன நேர்முகை முல்லை - மகிந்திதழ்

விண்டன கொன்றை விரிந்த கருவிளை

கொண்டன காந்தள் குலை." - இப்பாடலில் மலர்தல் என்னும் ஒரு பொருளில் அவிழ்தல், அலர்தல், நெகிழ்தல், விள்ளல், விரிதல் ஆகிய சொற்கள் வந்துள்ளன. எனவே, இது பொருள் பின்வருநிலையணி

**40] செய்யுளில் முன்னர் வந்த சொல், மீண்டும் மீண்டும் வந்து ஒரே பொருளைத் தருவது, ---------------------------------?**

1] சொல்பின்வருநிலையணி

2] பொருள் பின்வருநிலையணி

**3] சொற்பொருள் பின்வருநிலையணி**

4] பிறிதுமொழிதலணி

**விளக்கம்** :- **சொற்பொருள் பின்வருநிலையணி** :- செய்யுளில் முன்னர் வந்த சொல், மீண்டும் மீண்டும் வந்து ஒரே பொருளைத் தருவது, சொற்பொருள் பின்வருநிலையணி.

தீயவை தீய பயத்தலால் தீயவை

தீயினும் அஞ்சப்படும்.

இப்பாடலில், தீய என்னும் சொல் தீமை என்னும் ஒரே பொருளில் பலமுறை வந்துள்ளது. எனவே, இது சொற்பொருள் பின்வருநிலையணி.

**41] உவமையைக் கூறிப் பொருளைப் பெற வைப்பது ------------------- அணி ஆகும்.**

1] சொல்பின்வருநிலையணி

2] பொருள் பின்வருநிலையணி

3] சொற்பொருள் பின்வருநிலையணி

**4] பிறிதுமொழிதலணி**

விளக்கம்:- உவமையைக் கூறிப் பொருளைப் பெற வைப்பது பிறிதுமொழிதல் அணி ஆகும்.

பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்

சால மிகுத்துப் பெயின் - மென்மையான மயில்தோகையே ஆயினும், அதனை அளவுக்கு விஞ்சி வண்டியிலேற்றின் அச்சு ஒடிந்துவிடும் என்பது உவமை. பகைவர்கள் தனித்தனியே நோக்கும்போது மிக எளியோராயினும் ஒன்றுகூடின், தனிப்பட்ட பகை மன்னன் எவ்வளவு வலிமை உடையவனாயினும் அவனை எளிதில் வென்றுவிடுவர் என்பது, இதனால் பெறப்படும் பொருள். எனவே, இது பிறிதுமொழிதலணி.

42] Small rudders guide great ships - **இணையான தமிழ்ப்பழமொழிகளை அறிக**

**1] சிறு துரும்பும் பல் குத்த உதவும்**

2] சிந்தித்துச் செயல்படு

3] இக்கரைக்கு அக்கரை பச்சை

4] அளவுக்கு மீறினால் அமுதமும் நஞ்சு

43] You must walk before run - **இணையான தமிழ்ப்பழமொழிகளை அறிக**

1] சிறு துரும்பும் பல் குத்த உதவும்

**2] சிந்தித்துச் செயல்படு**

3] இக்கரைக்கு அக்கரை பச்சை

4] அளவுக்கு மீறினால் அமுதமும் நஞ்சு

**44] Distance lends enchantment to the view - இணையான தமிழ்ப்பழமொழிகளை அறிக**

1] சிறு துரும்பும் பல் குத்த உதவும்

2] சிந்தித்துச் செயல்படு

**3] இக்கரைக்கு அக்கரை பச்சை**

4] அளவுக்கு மீறினால் அமுதமும் நஞ்சு

**45] Measure is a treasure - இணையான தமிழ்ப்பழமொழிகளை அறிக**

1] சிறு துரும்பும் பல் குத்த உதவும்

2] சிந்தித்துச் செயல்படு

3] இக்கரைக்கு அக்கரை பச்சை

**4] அளவுக்கு மீறினால் அமுதமும் நஞ்சு**

**46] Make hay while the sun shines - இணையான தமிழ்ப்பழமொழிகளை அறிக**

1] சிறு துரும்பும் பல் குத்த உதவும்

2] சிந்தித்துச் செயல்படு

**3] காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்**

4] அளவுக்கு மீறினால் அமுதமும் நஞ்சு